மனப் புயல்

★

கே. ஜி. இராதா மணாளன்

★

மக்கள் மன்றம்

பவழக்காரத் தெரு, :: சென்னை—1.

இரண்டாம் பதிப்பு
பிப்ரவரி 1951

உரிமை ஆசிரியருக்கு.

விலை ரூபா இரண்டு

Printed at
Free printers, Madaras.

'மன்றம்' நினைப்பது...

நெஞ்சை அள்ளும் சிறு கதைகள், சிறந்த இலட்சியங்களை நாட்டில் நடமாடவிடும் நாவல்கள், சிந்தனையைத் தூண்டிவிடும் சுவைமிகு அரசியல் புத்தகங்கள், உலகைத் திருத்திய உத்தமர்களின் வாழ்க்கை வரலாறுகள், சமதர்ம சங்க நாதத்தை முழங்கும் சுவடிகள் ஆகிய இத்தகு நூற்களை குறைந்த விலையில் அழகிய அமைப்பில் தமிழர் சமுதாயத்திற்கு அளிக்கவேண்டும்—அவ் வழியாக செந்தமிழகத்தில் சிந்தனைப் பண்ணை வளர்க்கவேண்டும். இதுதான் "மக்கள் மன்றம்" கொண்டுள்ள அடிப்படை நோக்கம்.

இந்த நோக்கத்தை நிறைவேற்றும் வகையில் நாங்கள் தொடுத்துள்ள முதல் முயற்சி தான், இதோ உங்கள் உள்ளத்திற்கு இன்பமளிக்கும் இச் சுவடி—"மணப்புயல்."

மிகச் சுருங்கிய காலத்தில், தமிழ் இளைஞர் உலகிலே மிகச் சிறந்த பெயர் பெற்றிருக்கும், நம் நண்பர் இராதாமணாளன், சுவை ததும்பும் தமிழில் இனிமை தவழும் முறையில் இந்த எழிலோவியத்தை உருவாக்கியிருக்கின்றார்.

ஓவியம் உங்களுக்கென்றே தீட்டப்பட்டிருப்பது; எடுத்துக் கொள்ளுங்கள்.

பதிப்பாளர்,

"மக்கள் மன்றத்தார்"

மனப் புயல்

முதற் பகுதி

தென்றலும் புயலும்

இயற்கை அன்னையின் மடியிலே தலை சாய்த்துப் படுத்துத் தூங்கும் தனி அழகு வாய்ந்தது மலர்புரி. மகிழ மரங்களும், புன்னை மரங்களும், மா பலா மரங்களும், முல்லை, மல்லி, ரோஜாக் காடுகளும், மலர்புரியில் செழித்து வளர்ந்திருந்தன.

அவ்வூரில், ஒவ்வொரு வீட்டின் பின்புறத்திலும் ஒரு சிறிய மலர்த் தோட்டமாவது இருக்கும்.

மலர் புரியில் நுழையும் பொழுதே, பூக்களின் நறு மணம் நம் உள்ளத்தை மகிழ்ச்சியில் ஆழ்த்தும். புலவர்கள் 'மலர் புரி' என்பது, அவ்வூருக்குக் காரணப் பெயர் தான் என்று வாதாடுவார்கள். காரணப் பெயரோ, இடுகுறிப்பெயரோ, ஆராய்ச்சி செய்ய நாம் விரும்பவில்லை. நமக்கு ஒய்வுமில்லை, அவ்வாராய்ச்சியில் இறங்க; ஆனால் அதன் வளப்பத்தையும், அழகையும் பார்க்கும் எவரும் அவ்வூருக்கு அப்பெயர்தான் பொருத்தம் என்று கூறாமல் இருக்க முடியாது.

ஒருநாள், அந்தி மயங்கும் நேரம். வானத்தில் மெள்ள மெள்ள கரு மேகங்களின் கூட்டம் காற்றில் மிதந்து வந்து

கொண்டிருந்தது. நேரம் செல்லச் செல்ல மின்னல், பளிச் பளிச் சென்று கண்களைப் பறித்தது. மழையின் வருகையை முரசறைந்து, தெரிவித்தது இடி. தூறல் சிறிது சிறிதாக ஆரம்பித்து, கனத்த மழை கொட்டியது! வானம் தெளித்த தேனைப் பருகி உலகம் உள்ளம் குளிர்ந்தது!

உலகத்தின் உள்ளம் குளிர்ந்ததே அன்றி, அறையினுள் உட்கார்ந்து கொண்டிருந்த குமாரின் உள்ளம் குளிரவில்லை! மெதுவாக எழுந்தான். தன் அத்தை தூங்குகிறாளா, இல்லையா என்பதைக் காண அறையை விட்டு வெளியே வந்தான். அத்தை குறட்டை விடுவதைக்கண்டதும் குடையை எடுத்துக்கொண்டு எதிர் வீட்டிற்குப் பறந்தான். காற்று சிறிது பலமாகவே வீசிக்கொண்டிருந்தது!

பறந்து வந்த ஆண் புறாவை, காதல் மொழிகளாலும், அன்பு சிந்தும் விழிகளாலும் வரவேற்றாள் குமுதம்!

காதலர் கை கோத்துக் கொண்டு களிப்போடு உள்ளே சென்றனர். தனியறை!

"உட்காருங்கள் அத்தான்!" என்றாள் குமுதம். இருவரும் அங்கிருந்த அழகிய கட்டிலின்மேல் அமர்ந்தார்கள்.

"என் மனதுடன் ஒவ்வொரு விநாடியும் போராடிக் கொண்டே இருக்கிறேன், குமுதம்!'

"ஏன் அத்தான்?"

"குமுதம், குமுதமென்று எந்நேரமும் அதே நினைவாக அமைதியின்றி, அலைந்து கொண்டேயிருக்கிறது என் மனம்........"

"போங்கள்! எப்பொழுதும் தங்களுக்குக் கேலி தான்."

" சதங்கை யொலி போன்ற உன் சிரிப்பு எல்லா சஞ் சலங்களேயும் போக்கி விடும். ஆனல் ஆசை அனலை மட்டும்......"

" சரி, சரி! அத்தான் கையை விடுங்கள்!"

" முடியாது கண்ணே! ஒரே ஒரு முத்தம்........."

" எவ்வளவு அவசரம்! கரத்தை விடுங்கள்."

" வரத்தைத் தந்த பின்னர் தானே, தேவி வளேக் கரத்தை விடமுடியும்!"

" அரிசியா என்ன அள்ளிப்போட, கேட்டதும்!"

" என்னைப் பிச்சைக்காரனுகக் காண உனக்கு ஆசையா குமுதம்!"

" இப்பொழுது மட்டும் என்ன வாழ்கிறதோ! 'தாயே தர்மலக்ஷ்மி, அகிலாண்டேஸ்வரி'—இது வறுமை யாளனது வாய்ச்சொற்கள்! 'ஆடும் மயிலே, ஓடும் மானே, கூவும் குயிலே, சேல் விழியாளே, சிவந்த மேனியாளே,' —இது வர்ணனையாகப் பேசும் தங்களது பேச்சு! அவன், பசியைப் போக்க அன்னமிடும்படிக் கெஞ்சுகிறுன். தாங் களும் தான் 'பசி' என்கிறீர்! சிறிது தணியச் சிங்காரியே முத்தம் தா என்கிறீர்! மற்றென்ன, பிச்சையென்று தானே இதற்குப் பெயர்!"

" சபாஷ் குமுதம்! ஊமையாக முதலில் இருந்தவள் இப்பொழுது பெரிய பேச்சாளி ஆகிவிட்டாயே! கண்ணே நான் களிக்க முத்தமளிக்க மாட்டாயா?............பெண் களுக்கே ஈரமில்லா நெஞ்சம் தானே!"

" ஆம், அத்தான்! முற்றும் உண்மை! ஆண்கள் செய் யும் கொடுமையால் பெண்களின் நெஞ்சத்திலுள்ள நீரெல்

லாம், கண்ணீராய் வெளியே வந்து விடுகிறதே, எப்படி அத்தான் அவர்கள் நெஞ்சம் ஈரமாயிருக்க முடியும்?.......

"உங்களுக்கேன் கோபம்...போதுமா....இன்னுமா? ...போதுமா?...இனி முடியாது."

"குமுதம்! என் கண்ணே! இப்படிப்பட்டதென்று விவரிக்க முடியாத இன்ப உணர்ச்சி என் உள்ளத்தில் பொங்குகிறது! தேன் மொழி உகுக்கும் உன் திறமையைக் கண்டு மகிழ்கிறேன்! குழலைவிட இனிமை வாய்ந்தது உன் குரல். உன் செக்கச் சிவந்த பவளம் போன்ற இதழ்களுக்கிடையே, வெண் முத்துக்களைப்போல் பிரகாசிக்கும்...."

"போதும், போதும்; என் கவியரசே போதும்! ஓவியரே, ஏதேது தாங்கள் காவியம் கூட இயற்றுவீர் போலிருக்கிறதே!"

"உயிரோவியத்தைக் கண்டு ரசித்துச் சுவைப்பவனுக்குச் சொற்காவியம் செய்வதா கடினம்?"

"போதும் அத்தான். போதும்...இது எத்தனையாவது முத்தம் தெரியுமா?"

"கண்களைச் சாய்த்துப் பார்த்து, அத்தான் விடுங்கள், என்றால் விட்டு விடுவேனா? பெண்களிடமே ஒரு தனிச் சக்தியிருக்கிறது. வீண் பெருமைக்காவது, உள்ளத்திலிருக்கும் ஆசையை அடக்கி வைத்துக் கொண்டு, வெளிக்குக் காட்டாமல் நடிப்பார்கள்! ஆனால் இரண்டு மட்டும் அவர்கள் கட்டுக்கே அடங்குவதில்லை! அவைகளைக் கண்டால் தான் எனக்கு மிகுந்த ஆசை!.'

"எவை, அத்தான் அவை?"

"வேல் போன்ற உன் விழிகள்! வைரம் போன்ற உன் உள்ளத்தில் வழிந்தோடும் உணர்ச்சியின் ஊற்று

அவைகளின் வழியாக வெளியே வந்து விடுகிறதே!.........
ஆம், எனக்குத் தெரிகிறது!"

"ஆம்! எனக்கும் நன்றாகத் தெரிகிறது உங்கள் கண்களில் குறும்புத்தனம் நர்த்தனம் செய்வது!"

"தெரிகிறதா?"

"உண்மையாகத் தான், அத்தான்!"

இப்படி இன்பமாகக் காதலர், உள்ளே பேசிக்கொண்டிருந்தனர். வெளியில் மழை 'சோ' வென்று பெய்து கொண்டிருந்தது.

மலர்புரியில் வையாபுரி தான் பெயர் பெற்ற சிறந்த வைத்தியர். வெளியூர்களில் எல்லா மிருந்து அவரது வைத்திய சாலைக்கு நோயாளிகள் வருவது வழக்கம். ஆகவே நல்ல வருவாயும் அவருக்குக் கிடைத்து வந்தது.

தங்கத்தில் வார்த்தெடுத்த சிலை போன்ற குமுதம், வையாபுரியின் ஒரே மகள். நல்ல அழகு. வைத்தியரின் மகளானதால், கவலையின் நிழலே படாமல், வளமாக வளர்ந்து வந்தாள்.

வைத்திய நிமித்தமாக அவள் தந்தை அடிக்கடி வெளியூர்களுக்குச் செல்வது வழக்கம். அந்த நேரங்களில் தான், அவளும் கலைஞன் குமாரும் குதூகலமாகக் கூடிப் பேசி, களிப்புக் கடலில் மூழ்குவார்கள்!

குமாரின் வீடு, குமுதத்தின் வீட்டிற்கெதிரேதானிருந்தது. குமாருக்கும் போதிய அளவு செல்வமிருந்தது, ஆனால் அவனுக்குத் தாயும் தகப்பனுமில்லை. அவனது அன்னையும் தந்தையும் ஆவி நீத்து ஆண்டுகள் சில ஆகின்றன. வீட்டில் அவனும், அவனது அத்தையும் தானிருந்தார்கள்.

குமார் ஓவியக் கலையை ஒழுங்காக, சித்திரக் கலா வித்தியாலயத்தில் பயின்று தேர்ச்சியும் பெற்றான். உயிரும் ஒளியும் பெற்ற உணர்ச்சி ததும்பும் ஓவியங்கள் வரைவதில் அவன் ஈடு இணையற்றவன். அவனுடைய சித்திரங்கள், காலத்தால் அழிக்கமுடியாத, நாட்டின் நிரந்தரமான கலைப் பொக்கிஷங்கள். நியாயப்படி-அவன் திறமைக்கு ஏற்றபடி, அவனுக்குச் சேரவேண்டிய பேரும் புகழும் கிடைத்திருக்கிறதா என்றால், இல்லை யென்றுதான் கூறவேண்டும். காரணம் அவன் ஒரு திராவிடனாகப் பிறந்ததுதான்!

மேல் நாடுகளில் மட்டும் அவன் பிறந்திருந்தால், நிச்சயம் மேதினி முழுவதும் அவன் கீர்த்தி பரவியிருக்கும். அல்லது ஆரிய குலத்திலாவது உதித்திருந்தால், அகில இந்தியப் புகழையாகிலும் அடைந்திருப்பான்.

தன் இனத்திற்குத் துரோகம் செய்து, துரோகத்தோடு மட்டும் நில்லாது இனத்தையே காட்டிக்கொடுத்து ஆரியதாசனாகி யிருந்தால், இன்று அவனைச் சுதந்திரத்திற்கு உழைத்த வீரர், தேசீய ஓவியர் என்றெல்லாம் துதி பாடி, அவன் புகழைப் பரப்பி யிருப்பார்கள். பெரிய பெரிய நிதிகளெல்லாம் வசூலித்திருப்பார்கள். பிரதான நகரொன்றில், அலங்கரித்த ஒரு பெரிய மண்டபத்தில், அவனை அமர்த்தி அவனைச் சுற்றிலும் ஆரிய அணங்குகளும், தேசியவாதிகளும் புடைசூழ்ந்து, மலர் மாலைகள் பல அணிவித்து, வாழ்த்துக்கள் வழங்கி, வந்தவரெல்லாம் அவன் தலையில் ரோஜா மலரைத் தூவச்செய்து, பத்தாயிரம் இருபதாயிரம் கொண்ட பண முடிப்புகள் பல அவன் கையில் கொடுத்திருப்பார்கள்.

காகங்களுக்கும் இனப்பற் றிருக்கும்பொழுது, கலைஞனுக்கா இல்லாமல் போய்விடும். அவன் என்ன குள்ள

மனத்தானு குலத்தைக் காட்டிக் கொடுக்க? வீரமிக்க அவன் விபீடணனுகத் துணிவானு? கலையின் பெயரால் கம்பனுகத் திகழ இசைவானு? எப்படி இசைவான், வரலாற்றினை நன்குணர்ந்தவனுயிற்றே அவன்! நாட்டின் நலம் முன், தன் நலம் பின் என்று கருதுபவனுயிற்றே! தன்னை ஈன்றெடுத்த மாபெரும் திராவிடத்தைத் திருத்தும் கடமையை மேற்கொண்ட காளையாயிற்றே!

குமாரும், குமுதமும் வெறும் காதற் சுவையுள்ள பேச்சிலேயே பொழுதை யெல்லாம் போக்கமாட்டார்கள். சிரித்துக் களிக்கும் நேரங்களில், சீர்திருத்தக் கொள்கைகளையும் அடிக்கடி அவளுக்குக் கூறுவான் அவன். காதலொடு கலந்து காதலன் தரும் அரிய கருத்துகளை, அவளும் அன்றாட வாழ்க்கையில் அவளால் இயன்ற அளவு செயலில் காட்டி வருவாள்.

கோயிலுக்கு, முதலில், அவள் சென்றுகொண்டிருந்தாள். காரணம் காட்டி அவன் கண்டித்தான். "காமுகர்களின் கோட்டமாயிற்றே கோயில்! ஆரியர் கொழுப்பதற்கென்றல்லவா ஆலயங்கள் என்னும் ஆரியப் பண்ணைகள் வேலை செய்கின்றன! நீ அங்கே செல்வது அழகா? யோசித்துப்பார் கண்ணே!" என்று சீர்திருத்தக் கருத்துக் களென்ற மருந்தைக் காதலென்ற தேனில் குழைத்துத் தருவான்.

மருந்தும் நன்றாக வேலை செய்யும். "செய்தி தெரியாததால் சென்றேன் அத்தான், இனி அந்தக் கல் மண்டபத்துள் காலெடுத்து வைக்கமாட்டேன்!" என்று தேன் மொழியாள் தான் திருந்தியதையும் தன் தீர்மானத்தையும் தெரிவிப்பாள். இப்படி ஒத்த உள்ளமும், உருவமும், பருவமு முடையவர்கள் அவர்கள்.

குமார், குமுதத்தை வெறும் பெண்ணாக மணக்க விரும்பவில்லை. வீரமகளாக்கி, விவேகத்தின் சிகரமாக்கி விவாகம் செய்துகொள்ள ஆசைப் பட்டான்.

அறையில், இன்ப வெள்ளத்தில் மிதந்து கொண்டிருந்த காதலர்கள் பயங்கரமாக ஒரு இடி இடித்ததைக் கேட்டுச் சிறிது திடுக்கிட்டார்கள், விடாமல் மழை கொட்டிக்கொண்டே யிருந்தது! இடை இடையே மின்னலும் இடியும்! திடீரென்று புயல் வீசத் தொடங்கியது! புலி சீறுவதைப் போல, புயல் சீறிச்சீறி வீசியது! மரங்கள் வேரற்றுத் தரையில் சாய்ந்தன.

காதலர்கள் இவற்றை யெல்லாம் பொருட் படுத்தவே யில்லை! வெளியில் பயங்கரமான புயல் வீசிக்கொண்டிருந்தது. ஆனால் அவர்களின் காதல் உள்ளங்களில் இன்பத் தென்றல் வீசிக்கொண்டிருந்தது!

புயல் அங்கோரத்தில் அவர்களின் இன்பத்தை அதிகப் படுத்திற்றே அன்றி சிறிதும் கவலையையோ, அச்சத்தையோ உண்டாக்கவில்லை. பயமறியாத பருவம்! கவலை நெருங்க முடியாத நேரம்! எனவே அவர்கள் உள்ளத்தில் அச்சம் ஏன் உண்டாகப் போகிறது?

உலகத்தில் அப்போது புயல் வீசிக்கொண்டிருந்தது. ஆனால் எப்போதுமே புயல் வீசிக்கொண்டிருக்கும் என்பதில்லை. மந்தமாருதத் தென்றல் மெள்ளப் பாடி அசைந்து வரும் காலமும் உண்டு. சீறும் புயலும் சிரிக்கும் தென்றலும் மாறி-மாறி வரும் உலகில், இது சகஜம். ஆனால் உள்ளம்...?

உள்ளம் மட்டும் என்ன...அங்கு எப்போதுமே தென்றல் வீசும் என்பது என்ன நிச்சயம்? உள்ளம் என்றாலே ஒரு குட்டி உலகம் என்றுதானே பொருள்?

இரண்டாவது பகுதி

மறைந்து போங்கள்!

நாட்கள் உருண்டுகொண்டேயிருந்தன. ஒருநாள் குமார் தன் அறையில், சிந்தித்த வண்ணம் மேலும் கீழு மாக உலாவிக்கொண்டிருந்தான். அவன் கையில் ஒரு கடிதமிருந்தது. "கலை! கலை!"—இப்படி முணுமுணுத்தது அவன் வாய். பிறகு சாய்வு நாற்காலியில் சாய்ந்து கொண்டே யோசனையில் ஆழ்ந்தான். அவன் கண்கள் தனக்கு நேரே இருந்த தன்னால் தீட்டப்பட்ட ஓர் சித்தி ரத்தின்மேல் சென்று தங்கின. "கலைஞரே! கவிஞரே! புரட்சிக் கவிஞரே" என்று மேலும் அவன் வாயிலிருந்து வார்த்தைகள் உதிர்ந்தன.

"ஆஹா! எவ்வளவு கெம்பீரமான தோற்றம்! சுடர் முகம்! நிறைந்த அறிவைக் காட்டும் பரந்த நெற்றி! இயற் கையை உண்டு தெளிந்த குண்டு விழிகள்! அடர்ந்து வளர்ந்த அழகிய மீசை! குன்றையொத்த பெருந்தோள் கள்! கட்டமைந்த உடல்! புரட்சிக் கவிஞரே, நீர் நீடூழி வாழ்க!" என்று தனக்குத் தானே பெருமையும் கெம்பீ ரமுமான குரலிலே கூறினன். மின்னலைப்போல அவன் முகத்திலே மகிழ்ச்சியின் கோடு ஒன்று தோன்றி மறைந்தது.

திரும்பவும் ஒரு முறை அக் கடிதத்தைப் படித்துப் பார்த்தான். கண்களை மூடிக்கொண்டு, நெற்றியைத் தட விக்கொண்டே சிந்தித்தான். மேலும் மேலும் சிந்தித் தான். அந்தக் கடிதத்தை மற்றுமொருமுறை வாசித் தான்! தான் ஒரு முடிவுக்கும் வரமுடியவில்லையே என்ற ஏக்கம் அவன் முகத்தில் நன்கு தெரிந்தது. சிறிது நேரத்

தில் அவன் ஏதோ ஓர் தீர்மானத்திற்கு வந்தவனைப்போலச் சிரித்தான்! அக் கடிதத்தை உரக்கப் படித்தான்.

அன்புள்ள குமார்,

வணக்கம். பல நாட்களுக்குப் பிறகு உனக்கு இந்தக் கடிதத்தை எழுதுகிறேன்.

நீயும் நானும் சித்திரகலா வித்தியாலயத்தில் பயின்ற போது ஏதேதோ மனக்கோட்டைகளை யெல்லாம் கட்டினோம். இன்பக் கனவுகளாகக் கண்டோம். உண்மையாக, கலைக்காக உழைக்கவேண்டுமென்று உறுதி கொண்டோம். ஏழை எளியவர்களின் வாழ்க்கையைப் படங்களாகத் தீட்டி, நாட்டு மக்களிடம் அவற்றை நீட்டி, "பாருங்கள் உங்களைப்போலப் பிறந்த மனிதப் பிறவிகளை! அவர்கள் ஏழைகள், ஆனால் மனிதர்கள்தான்; மாடுகளைப்போல வண்டியிழுத்து இதோ செல்கிறார்களே, இது தகுமா?... இந்தப் படத்தைப் பாருங்கள். இதோ உருவம் நிற்கிறதே, இதைப் பாருங்கள்! எண்ணெயே அறியாத தலை, ஒட்டிய கன்னங்கள், ஒளி குன்றிய கண்கள், மெலிந்த கழுத்து, வெளியே தெரியும் விலா எலும்புகள், ஒடுங்கிய வயிறு, குச்சிகளைப் போன்ற கால்கள்—இவற்றைப் பாருங்கள். அவன் கையிலே ஓர் ஓடு இருக்கிறதே அதை உற்று நோக்குங்கள்! அதோ, அதோ ஒரு உருவம், மாடி வீட்டின் திண்ணையிலே, கொழுகொழுத்துத் தளதளத்து இருக்கிறதே அதனையும் நோக்குங்கள். அவனும் மனிதன்தான். அவன் கன்னங்கள் எவ்வளவு பருத்திருக்கின்றன. அவன் வயிறு அளவுக்கு மிஞ்சி எவ்வளவு பெரியதாகப் பெருத்திருக்கிறது பாருங்கள். நன்றாகக் காணுங்கள். தெருவிலே நிற்பவனையும், திண்ணையிலே உட்கார்ந்துகொண்டிருப்பவனையும் நன்றாகப் பாருங்கள். உங்கள் இரு கண்களையும்

நன்ருகத் திறந்து கொண்டு பாருங்கள்! ஒருவன் வயிறு முதுகெலும்போடு ஒட்டிக்கொண்டும், மற்ருெருவன் வயிறு சால்போலப் பருத்து மிருப்பதன் காரணமென்ன? ஏன் தயங்குகிறீர்கள் உண்மையைச் சொல்லுங்கள் என்று கேட்போம். பார்ப்போர் ஏழைகளுக்காகப் பரிந்து பேசுவார்கள். அப்படியே பலருடைய உள்ளங்களையும் மாற்றி, ஏழைகளையும் மனிதராக்கலாமென்று கனவுகள் கண்டோம்!

குமார்! அந்தக் கனவுகளும் புராணங்களும் ஒன்றே, அவ்வளவும் பொய். கலைஞனுய்த் திகழும் உனக்குக் கலையைக் குறை கூறுகிறேனே யென்று கோபம்வரலாம். நான் பழத்தூருக்கு வருவதற்கு முன்பு யாராவது இப்படி எழுதியிருந்தால், எனக்குக்கூடத்தான் கோபம் வந்திருக்கும். பழத்தூர் என் பழைய கனவுகளுக்குச் சமாதி கட்டியது.

முதலில் நான், ஏழைகளின் வீடு வீடாய்ச் சென்று அவர்களின் வாழ்க்கையைச் சித்திரங்களாகச் சித்தரிக்கலாமென்றுதான் தீர்மானித்தேன். அவ்வண்ணமே அவர்களது வீடுகளுக்கும் சென்றேன். சித்திரம் தீட்டினேனு? இல்லை! சிந்தனைத் தெளிவு பெற்றேன். அதுவரை கலை என்ற வர்ணக் கண்ணுடியின் வழியாக உலகைப் பார்த்துக் கொண்டிருந்த எனக்கு அன்று உண்மை உலகை உள்ளது உள்ள படி கண்டபோது வெட்கமும், கோபமும், சோகமும் பிறிட்டுக் கொண்டு வந்தன!

குமார், நான் கண்ட கோரமான சம்பவங்களை, அவற்றின் முழுப் பொருளும் தோன்றும்படி எழுத்தின்மூலம் விளக்கு மளவிற்கு எனக்கு ஆற்றலில்லை! ஆனுலும் கண்டவை எவை என்பதைமட்டும் சொல்கிறேன். பாலில்லையே என்றழும் பச்சிளங் குழந்தைகள்! அய்யோ உணவில்லையே,

உடலில் இரத்தமில்லையே, பத்து மாதங்கள் சுமந்து பெற்ற என் பாலகனுக்குப் பால் கொடுக்கலாமென்றாலும் பால் சுரக்கவில்லையே, என்று கதறும் தாய்மார்களின் ஏக்கம் நிறைந்த கண்கள். பாடுபட்டு உழைத்தும் ஜமீன்தார் கூலி தரவில்லையே என்று ஈனக்குரலில் அழும் உழவர்கள்! பகலெல்லாம் மாடு மேய்த்தாலும், பசி தணியுமளவிற்கு உணவு கிடைக்காத களைப்பால் படுத்துறங்கும் சிறுவர்கள்- இவர்களைக் கண்டேன். குடிசைகளையே தம் மாடமாளிகைகளாகக்கொண்டு வாழும் அந்த ஏழைகளின் அழுகுரலிலே கலையைக் கண்டேன். அவர்களது ஏக்கம் நிறைந்த கண்களிலே கலையைக் கண்டேன். தோல் மூடிக்கிடந்த எலும்புக் கூடுகளிலே கலையைக் கண்டேன். குழிவிழுந்த கன்னங்கள், மெலிந்த கைகள், முதுகெலும்போடு முத்த மிட்டுக் கொண்டிருந்த வயிறு, தள்ளாடி நடந்த கால்கள்—இவற்றிலெல்லாம் கலையைக் கண்டேன். ஓவியம் தீட்டுவதற்கு இவைகளெல்லாம் ஏற்றவை என்று மகிழ்ந்தேன். உடனே என் தலையில் பலமான ஒரு அடி விழுந்தது. என்ன வென்று அலறிக் கேட்டேன். "அடபாவி! உயிரோடு போராடும் இந்த உருவங்களிலா கலையைக் காண்கிறாய்! இந்தக் கோரத்தைக் கண்டு இரத்தம் கொதிப்பேறாமல், சாந்தமாக, அமைதியாக, ஆநந்தமாக, ஓவியத்திற்கு ஏற்ற கருப்பொருள்கள் என்று இவற்றையா எண்ணச் சொல்லுகிறது உன் கலையறிவு! கலை! ஓவியம்! கலை! ஓவியம்! நீயும் உன் கலையும் பாழாய்ப் போக!...கோபால்! மறுபடியும்பார் இந்தக் காட்சியை....ஏன் உன் முகத்தில் ஒரு மாற்றமும் ஏற்படவில்லை......ஓகோ! கலையென்ற கண்ணாடி உன் கண்களை மறைக்கிறது! அந்தக் கண்ணாடியை எடுத்துவிட்டுப்பார்!"

"நீ யார்?"

"உன் பகுத்தறிவு!"

பகுத்தறிவு சொல்லிய வண்ணம் பார்த்தேன். என் நெஞ்சம் பதை பதைத்தது. என் கண்களில் நீர் கப்பியது. உடனே கலையின்மேல் ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. அடுத்த கணம் கலையென்ற அந்த வர்ணக் கண்ணுடி தூள் தூளாகியது.........

குமார், இனி நான் ஏழைகளுக்காக உழைக்கப் போகி றேன்.

நீ யென்ன செய்யப்போகிருய்? அறையில் உட்கார்ந்த படியே கலை யென்ற கருவியால், நம் மக்களுக்கு நன்மை யைச் செய்ய முடியுமென்ற அந்தப் பழைய கனவிலேதான் மூழ்கிக் கிடக்கப்போகிருயா?

உரிமை, நல்வாழ்வு ஆகிய இவற்றின் கருத்துக்களை யெல்லாம் சொல்லிச் சொல்லி, இங்குள்ள உழவர்கள், ஜமீன்தாரிடம் உழைப்பிற்கேற்ற பலனுக்காகப் போரிடச் சித்தமாகிக் கொண்டிருக்கிருர்கள். நான் அவர்களின் தோளோடு தோளிருந்து உழைக்கப்போகிறேன். ஆனல் நீ?

அதிக மெழுதினுல் வெறுப் புண்டாகுமே என்று அஞ்சி இத்தோடு இக் கடிதத்தை முடிக்கிறேன்.

உன் தோழன்,

கோபால்.

இந்தக் கடிதத்தைப் படித்து முடித்ததும், அவன் உள் ளத்தில் பற்பல எண்ணங்கள் தோன்றின. "அரசியலிலே பங்கெடுத்துக்கொண்டு அல்லும் பகலும் அநேகர் உழைக் கிருர்களே, அந்த உழைப்புப் போதாதா? இன்னும் பலர் அதே வேலைக்கேன் செல்லவேண்டும்.........

"ஒருவேளை, அவ்வளவு பேரிலே, ஒரு சிலரைத் தவிர மற்றவர்கள் வேஷக்காரர்களா?.......ஆம் அப்படிதா

னிருக்க வேண்டும்! இல்லாவிட்டால் வறுமையும் வாட்டமும், நாட்டில் இன்னுமிருக்கக் காரணமென்ன?"...இப்படி யெண்ணினன். அந்த நினைவு அவன் உள்ளத்தை நிலை கலங்கச் செய்தது. பிறகுங்கூட அது அங்கேயே சுழன்று சுழன்று வட்டமிட்டுக்கொண்டே யிருந்தது. ஆயாசத்தோடு அவன் அப்படியே சாய்ந்து தூங்கிவிட்டான்.

ஒரு பரந்த வெளி! அதிலே குமார் உலாவிக்கொண்டிருந்தான். சிந்தனையின் கோடுகள் அவன் நெற்றியிலே நன்கு தெரிந்தன. "உண்மை உழைப்பு"—முணு முணுத்தது இப்படி அவன் வாய்! பின்புறமாகக் கைகளை வைத்துக் கொண்டு, தலை நிமிர்ந்து வானத்தைப் பார்த்துக்கொண்டு மெதுவாக நடக்கலானன்! "உழைக்கிறர்கள் பலர்" என உரக்கக் கத்தினன்.

மின்னல்! இடி! திடுக்கிட்டு கண்களை மூடிக்கொண்டான். சிறிது நேரம் கழித்துக், கண் திறந்தான். தன்னெதிரில் வரிசை வரிசையாகப் பலர்—மிகப்பலர் நின்றுகொண்டிருப்பதைக் கண்டு ஆச்சரியப்பட்டான்!

"நீங்களெல்லாம் யார்?"

"தேசத்திற்காக உழைப்பவர்கள்."

"உழைப்பவர்களா?" என்று கூறி உரக்கச் சிரித்தான்! உங்களிலே எவ்வளவு பேர் "உண்மை உழைப்பாளிகள்?"—ஆவேசம் வந்தவன் போல் கேட்டான். மறுபடியும் மின்னல்! இடி!

அவன் கண்கள் ஆச்சரியத்தால் விரிந்தன.

"நீங்கள் யார்?"

"தொண்டர்கள்"

"உண்மையிலேயே உழைத்தவர்களா?"

"ஆம், உழைத்தவர்கள். இனியும் உழைக்கப் போகிறவர்கள்"

"நான் உங்களின் பேச்சை யெப்படி நம்புவது?"

"இதோ, எங்களைப் பார்!"

"அய்யோ!" என்றலறினன், குமார்! அக்காட்சி அவன் உடலைத் தூக்கி வாரிப் போட்டது!

மேடையின் மேல் நின்றுகொண்டிருந்தவர்களின் உடல்களிலிருந்து இரத்தம் பீறிட்டுக் கொண்டு வெளியே வந்தது. அவர்களது உடல்களிலிருந்து நரம்பும் தசையும், அறுந்து அறுந்து கீழே விழுந்த வண்ணமிருந்தன. இரத்தம் மேடையின் நாலாப் பக்கங்களிலும் ஓடிக்கொண்டிருந்தது.

"பார்க்கச் சகிக்கவில்லையே," என்று கூறி கண்களை மூடிக்கொண்டு, கீழே சாய்ந்துவிட்டான். சிறிது நேரம் கழித்து எழுந்தான்.

பயத்தாலும், வியப்பாலும் அவன் கண்கள் விரிவதும் மூடுவதுமாய் இருந்தன! மேடையின் மிக அருகே சென்றான்.

மேடையின் மேலே நின்று கொண்டிருந்தவர்களின் முகங்கள் மட்டும் அப்படியேயிருந்தன. அவர்கள் கழுத்திலிருந்து கால்கள் வரைக்கும் சிறிது கூட் தசையே கிடையாது! வெறும் எலும்புக் கூடுகள்! மேடை முழுவதும், தசையும், நரம்பும் கும்பல் கும்பலாய் நிரம்பி யிருந்தன! இரத்தம் ஆறுபோல் கீழே ஓடிக்கொண்டிருந்தது!

அந்த உருவங்கள் குமாரைப் பார்த்துச் சிரித்தன!

"நீங்கள் தியாகிகள்! வீரர்கள்! ஏன் இப்படிக் கோரமாகி விட்டீர்கள்?"

"குமார்! நாங்கள் உண்மையாக உழைப்பவர்கள்! நாட்டிற்காக இரத்தம் சிந்துபவர்கள்! உடல் இளைக்க இளைக்கத் தொண்டாற்றுபவர்கள்! போர் முனையில் நிற்கும் போர் வீரர்கள் நாங்கள். இறுதி வரைக்கும் போரிடுவதென்ற உறுதி பெற்று, உரிமைக்காக முழக்கமிடுபவர்கள் நாங்கள்! ஆடையில் அழுக்குப் படியாமலும், அழகாக அரசியலைப் பேசியும், மக்கள் உள்ளத்திலே மகிழ்ச்சியைக் கிளப்பி, கரகோஷத்தைக் கேட்டுக் களிப்பெய்தி வீடு செல்லும் அரசியல் வாதிகள் அல்ல நாங்கள்! செயலிலேதான் எங்கள் நாட்டமிருக்கும்!...இதோ நிற்கிறார் வெண்தாடிக் கிழவர்—உனக்குத்தான் இவரைப் பற்றித் தெரியுமே! இவருடைய தீரமும், சிந்தனைத் தெளிவும், சீர்திருத்த நோக்கும், பேச்சும் நீ அறிந்தவை தானே! இதோ இவருக்கு அருகில், எனக்கு இந்தப் பக்கம், நிற்கிறாரே கொஞ்சம் குள்ளமான உருவுடன், தேனும், தென்றலும் போன்றது இவர் பேச்சு! செயலோ புயலும் எரிமலையும் போன்றது! இவரைப் போல் எங்களிலே மிகச் சிலர்தான் பேசுவார்கள்! செயல், செயல், செயல், புரட்சி, புரட்சி, புரட்சி! இதுதான் எங்கள் உள்ளத்தின் நாதம்!...

"இந்தக் கோரக் காட்சியின் கருத்தென்ன?"

"கலைஞரே! உமக்கு விளங்க வில்லையா?" எனக்கூறி சிரித்தார்கள்.

"இல்லை!"—இப்படிக் கூறியதும் அவன் உடல் சிலிர்த்தது.

"இனியும் நாங்கள் உழைக்கப் போகிறவர்கள்; மேலும், மேலும் உழைக்கப் போகிறவர்கள்; எங்கள் உடலில் தசையும், இரத்தமும் இருக்கும் வரைக்கும் உழைக்கப் போகிறோம். இதுதான் இந்தக் காட்சியின் கருத்து."

"உங்களில் பலரின் முகம் எனக்குப் புதிதாக இருக்கிறது. சிலரைத் தவிர, மற்றவரின் பெயரும் எனக்குத் தெரியவில்லையே!"

"நாங்கள் தொண்டர்கள்! உண்மைத் தொண்டர்கள். எங்கள் பெயரை நாங்கள் விளம்பரப் படுத்திக் கொள்வதில்லை. காரணம் எங்களுக்கு ஆசையுமில்லை, நேரமுமில்லை!"

"இதோ, கீழே ஒரு கும்பல் நிற்கிறார்களே, அரசியலிலே இவர்களின் தகுதியென்ன?"

"உழைக்கின்றேன் என்று சொல்லிக் கொண்டே ஊராரின் சொத்தைத் தின்பவர்களிவர்கள்! ஏழைகளின் இரத்தத்தை முதலாளி வெளிப்படையாக உறுஞ்சுகிறான்! இவர்கள் ஏழைகளுக்காகப்பாடுபடுவதாகக் கூறிக்கொண்டு இரக்கமின்றி இவர்களும் ஏழைகளின் இரத்தத்தை உறுஞ்சுகிறார்கள்!"

"உண்மையாகவா?"

'அதோ பார்!" என்று அந்தத் தியாகிகளில் ஒருவர் கூறினர்.

குமார் திரும்பிக் கீழேயிருந்தவர்களை நோக்கினன். ஒவ்வொருவர் கையிலேயும் ஓர் கண்ணாடிப் பாத்திரமிருந்தது. பாத்திரத்தில் சிவப்பாக ஏதோ இருந்தது. அவர்கள் பாத்திரத்திலிருந்ததை ஒரு சிறிய குழாயின் வழியாக உறிஞ்சிக் குடித்துக் கொண்டிருந்தார்கள்!

"பாத்திரத்திலிருப்பதென்ன?"

"ஏழைகளின் இரத்தம்! பொது நலம் புரிவதாகக் கூறிக் கொண்டு ஏழைகளின் இரத்தத்தை உறிஞ்சும் மிருகங்களிவர்கள்!"

குமாருக்குக் கோபம் பொங்கிக் கொண்டு வந்தது. ஏழைகளின் இரத்தத்தைக் குடித்துக் கொண்டிருந்தவர்களின் முகங்களிலே காரித் துப்பினான்.

மேடையிலே நின்றிருந்தவர்களைப் பார்த்து, "தியாகிகளே, உங்களுக்கு என் வணக்கம்!" என்று தன் தலை தாழ்த்தி வணக்கம் தெரிவித்தான்! மின்னல்! இடி! மேடையிலிருந்தவர்கள் மாயமாய் மறைந்தார்கள்! ஆனால் தரையில் நின்றுகொண்டிருந்த போலித் தொண்டர்கள் மட்டும் அப்படியே யிருந்தனர்.

"சீ, நீங்களேன் இங்கு நிற்கிறீர்! ஓடிப்போங்கள்! மறைந்து போங்கள்!"......................

"ஓடிப்போங்கள் மறைந்து போங்கள்" என்று குமார் கத்தியதைக் கேட்ட அவன் அத்தை, அவனை வந்து எழுப்பினாள்!

"குமார்! என்னடா பகலிலேயே கனவு கண்டு அலறுகிறாயே!" என்றாள் அவன் அத்தை.

குமார் விழித்துப் பார்த்தான். கண்டது கனவுதான். என்றாலும் புரட்சிக் கவிஞரின் கவிதைகளிலே பொருள். புதைந்திருப்பது போல, கனவிலும் உண்மை புதைந்திருப்பதை உணர்ந்தான்!

மூன்றாவது பகுதி

கை பற்றினான்

சோலையூர்! பெயருக்கேற்ற வண்ணம் செழுமையும் வளமையும் பொருந்திய எழில் மிக்க சிற்றூர். கண்ணுக் கெட்டிய வரைக்கும் பச்சைப் பசேலென்று செழிப்போடு வளர்ந்திருந்த நெல் வயல்களும், அடர்ந்த தென்னந

தோப்புகளும், முந்திரி மரங்களும் மனோரம்மியமாகக் காட்சி அளித்தன.

அந்த ஊரில் பழமையான குடும்ப மொன்றில் பிறந்தவன் சிவன். பழமையான பணக்காரக் குடும்பத்தில் சிவன் பிறந்திருந்தாலும், புதுமையான, புரட்சிகரமான கொள்கைகளைக் கொண்டவன். காளைப் பருவம். கடுகளவும் களங்கமற்றவன். தனக்குச் சரியென்று பட்டதை எவ்வளவுதான் எதிர்ப் பேற்பட்டாலும் செய்தே முடிப்பான்.

அவன், மனோரமாவை உயிரினும் மேலாக நேசித்தான். மனோரமா மாநிற மேனியாள், மலர்ந்த அழகிய முகத்தாள்! கொடி இடையாள்! கொஞ்சும் மொழியாள்! இளமையும் கட்டும் அமைந்த எழில் உடலாள்! ஆனால், ஒரே ஒரு குறை அவளிடம்! அவளோர் ஆரியப் பெண்.

சிவனின் வீட்டுத் தோட்டமும், மனோரமாவின் வீட்டுத் தோட்டமும் ஒன்றாகவிருந்தன. மனோரமா கிணற்றில் நீரெடுக்க அடிக்கடி தோட்டத்திற்குள் வருவாள்—சிவனும் வருவான்! அவளது அழகைத் தினந்தோறும் பார்த்துப் பார்த்து ரசித்து வந்தான். அவன் கடைசி வரைக்கும் ரசிகமணியாகவே யிருந்து விட வில்லை! நாளாக நாளாக இருவரது கண்களும், கலந்தன. முதலில் மிரண்டன, பிறகு பேசின! அவர்கள் உள்ளங்களில் ஆசை வளர்ந்தது. சிங்காரியின் பேரெழிலில் சித்தம் பறிகொடுத்தான்; காதலால் திறந்திருந்த மனோரமாவின் உள்ளத்தில் சிவன் புகுந்து விட்டான். வேற்றினப் பெண்ணுயிர்ப்பே என்று அவன் உள்ளம் எவ்வளவோ தடுத்துப் பார்த்தது—பயனில்லை!

சேற்றில் முளைப்பதால் செந்தாமரையைப் பறிக்காமலா விட்டு விடுகிறார்கள்? முள் செடியில் மலர்வதால் ரோஜாவை விரும்பாதவர்களுண்டா? அதனருகே பாம்பிருக்கும், பாம்பினிடத்தில் விஷமிருக்கும், தீண்டினால் உடலில் உயிர் நிலைக்காது; இவ்வளவும் தெரிந்திருந்தும், தாழம்பூவைப் பறித்துப் பயன் படுத்தாமலா விட்டு விடுகிறார்கள்?—இப்படியெல்லாம் அவன் அடிக்கடி கேள்விப் பட்ட உதாரணங்களை எண்ணி யெண்ணி, தன் உள்ளத்திற்குச் சமாதானம் கூறினான்!............கன்னியின் கை பற்றினான்!

"உயர்ந்த ஜாதி நான், அடுக்காது இது! முறையல்ல! தகாது! மகா பாதகம்! தீ நான்! தொடாதே! கையைவிடு" என்று அவள் கூறவில்லை. உள்ளத்தில் குடிபுகுந்தவன், உடலைத் தொட்டால் மறுப்பாளா? கைபற்றினான், களிப்போடு ஒப்பினாள்!

ஒரு நாள் அணைப்பினால் அவனது ஆசை தீர்ந்துவிடவில்லை.

திகட்டாத இன்பமான அவளே, தன் மனைவியாக வேண்டுமென்று ஆசைப்பட்டான். தீர்மானித்தும் விட்டான்.

அவன் தோழன் கண்ணன் எவ்வளவோ தடுத்துப் பார்த்தான். பயனில்லை. கடைசியில் தோல்வியடையவே, சிவனுக்குத் தைரியம் கூறும் கைங்கரியத்தில் இறங்கினான் கண்ணன்.

"சிவா! மனோரமாவும் நம் இனம்தான்!"

"எப்படிக் கண்ணா?"

"நீ படிப்பிற்காக வெளியூரிலேயே இருந்து விட்டதால், உள்ளூர்ச் செய்திகள் உனக்கு அவ்வளவாகத் தெரி

பாது. கோட்டீஸ்வரய்யர், கோயில் புரோகிதர்—அது தான் உனக்குத் தெரியுமே!"

"ஆமாம் தெரியும!......"

"நம்மூர்........." கண்ணன், சிவனின் காதில் மெதுவாக ஏதோ ரகசியமாகச் சிறிது நேரம் கூறினான். செய்தியைக் கேட்கக் கேட்க சிவனின் முகம் மலர்ந்து கொண்டே வந்தது.

"இதுதானா மனோரமாவின் வரலாறு?" என்று கூறிச் சிரித்தான் சிவன்.

"ஆமாம்"! என்று கூறி கண்ணன், சிவனின் முதுகில் தட்டிக் கொடுத்தான்.

அழகியின் வரலாற்றை அறிந்த பின்னர், எப்படியாவது அவளை மணந்துதானாகவேண்டுமென்ற அவனது முடிவு இன்னும் பலப்பட்டது. சிவனுக்குத் தந்தையில்லை; தாய் இருந்தாள் "வேண்டாம்—குலத்திற்கடுக்காது!" என்று தடுத்துப் பார்த்தாள். முடியவில்லை!

கோட்டீஸ்வரய்யர், ஊரிலில்லா நேரத்தில், இருந்திருந்தாலும் தடுத்திருக்க முடியாது—மனோரமாவிற்கும் சிவனுக்கும் சீர்திருத்தத் திருமணம் நடந்தேறியது.

ஊரிலிருந்து வந்த கோட்டீஸ்வரய்யர், 'ஜாதி போயிற்று, ஆச்சார அனுஷ்டானங்கள் போயிற்று, மதம் போயிற்று!" என்று, "மானம் போயிற்று!" என்பதைத் தவிர, மற்றதெல்லாம் போயிற்று என்று கத்தினார். கோபித்தார், சபித்தார் எப்படியாவது சிவனை வஞ்சம் தீர்த்துக்கொள்வதாகச் சபதம் செய்தார்! பணம் படைத்த சிவனை, பெயர் மட்டும் கோட்டீஸ்வரன் என்று வைத்துக் கொண்ட அய்யரால் என்ன செய்ய முடியும்? "செய்கி

றேன்பார்!" என்றுசினந்து கர்ஜித்தார் அய்யர். தான் பெற்று வளர்த்த பெண், தன் சம்மதமின்றிப் பறந்தாள். என்றால் வயிறு எரியாதா? ஆகவே அவர் கோபித்துத் திட்டியதில் தவறில்லை!

சோலையூரில் சுயமரியாதைத் தென்றல் அதிகமாக வீசத் தொடங்கியது. தென்றல் அய்யரின் உள்ளத்தை நோகச் செய்தது. நோயாளியினால், தென்றலின் குளிர்மையையும் இனிமையையும் உணர்ந்து, அனுபவிக்க முடியுமா?

மலர்த் தோட்டத்திலுள்ள முட் செடிகளை வெட்டி வெளியே வீசி விட்டு, கற்களையும் குப்பையையும் அப்புறப் படுத்தினால், பாம்பும் தேளும் பதுங்கிவாழ இடமின்றி வெளியே கிளம்பிப் போய்விடுவதைப் போல, ஊரும், காலமும் கெட்டுவிட்டதென்று கூறி, கோட்டீஸ்வரய்யர் சோலையூரை விட்டுப் பழத்தூருக்குக் குடியேறினார்! கோயில் புரோகிதராகக் காலம் தள்ளிவந்த அய்யர், 'காலம் கெட்டுவிட்டதால்' ஜமீன்தார் ஜம்புலிங்கம பிள்ளையிடம் கணக்கெழுதும் வேலையில் அமர்ந்தார்.

* * * *

மனோரமா தன் மடியில் சாய்ந்திருக்க, உள்ளத்தில் உவகை ஊற்று கொப்பளிக்க, இன்பமாகப் பேசிக்கொண்டிருந்தான் சிவன், ஒரு நாள்.

"கண்ணே! நம் மணத்திற்கு எவ்வளவு எதிர்ப்பிருந்தது! மனோரமா, பலையவ்வளவு எதிர்ப்பிருந்தும், எள்ளளவும் உறுதி குறையாமல் நம் உள்ளத்திற்கு உரம் தந்தது எது?"

"கடவுள்தான் கண்ணாளா!"

"சீ! உன் ஜாதி புத்தி போகவில்லையே! ஊரை ஏய்க்க உன் தாய்க்கு அப்பன், அவன் அப்பன், இப்படி உன் முன்னோர்கள் ஏற்படுத்தினர் கடவுளென்ற ஒன்றை!"

"அவர்கள் ஊரை ஏய்த்தால், தாங்கள் அவர்களை யெல்லாம் ஏய்த்தல்லவா என்னைக் கவர்ந்தீர்!"

"நானா ஏய்த்தேன்? ஆரியச் சேரியில் உன் அழகை அனுபவிக்க ஆள் இல்லை; மலர்ந்த மலரில் தேன்மொண்டு குடிக்க வண்டு இல்லை அங்கு! அங்குள்ள ஆண்களுக்குப் பணம், பரலோகம் இவற்றில் தான் பற்று. பெண்களுக்கு இவ்வுலக இச்சை! உண்மையை—இன்றைய நிலைமையை—கூறுவதற்காக என்மேல் கோபிக்காதே! என் தோள்களைக் கண்டு மயங்கி, ஆசையால் துவண்டாய்! என் தாளைப் பிடித்துக்கொண்டு காதல் காதலென்று கெஞ்சி னாய்!.........."

"போதும்! போதும்!" என்று தன் கையால், பேசும் அவன் வாயை மூடினாள், சிரித்துக்கொண்டே மனோரமா.

குளிர்ந்த மொழியாள், குதித்தோடத் தொடங்கி னாள். மடியிலிருந்தவள் தன் பிடியையும் மீறியோடி விடவே, அவளைத் தேடிக் கொண்டு, மாடிக்குச் சென்றான்.

மாடியில், மனோரமா, மலையமாருதம் இராகத்தில் பண்ணிசைத்தாள்! இசைத் தென்றல் அறைமுழுவதும் உலவியது. இசையின் 'பாவப் பொழிவில்' மெய்ம்மறந்து, தன் இனத்தொண்டையும் மறந்து, அவள் மடியில் சாய்ந்தான்.

வீட்டின் கதவை யாரோ பலமாகத் தட்டுவதைக் கேட்ட அவள், எழுந்து, மாடியிலிருந்தபடியே கீழே எட்

டிப் பார்த்தாள். சுமார் பத்துப் பேர் வீட்டின் முன்பு நின்றிருப்பதைக் கண்டு, சிவனிடம் செய்தியைக் கூறினாள்.

சாத்தித் தாளிடப்பட்டிருந்த மாடியின் கதவைத் திறந்து கொண்டு, வேகமாக இருவரும் கீழே வந்தார்கள்.

சிவன் தெருக் கதவைத் திறந்தான். கண்ணனின் முகத்தில் குறும்புப் புன்னகை தோன்றியது.

"சிவா, நேரமாகிறது புறப்படு!"

"கண்ணா! அச்சாகி விட்டதா?"

"எல்லாம் ஆகி விட்டது! உன்னால்தான் தாமதம்! புறப்படு!"

சிவன் திரும்பி மனோரமாவைப் பார்த்து, "போய் வரட்டுமா?" என்று கேட்டான்.

சரியென்று அவள் வாய் கூறியது. கண்கள் "விரைவாக வந்து விடுங்கள்" என்று கட்டளை யிட்டன!

நான்காவது பகுதி

நழுவி விட்டார்!

"சிவா, அனுமதியும் கிடைத்து விட்டது—புறப்படு." என்று சிரித்துக்கொண்டே கூறினான் கண்ணன். சிவனும் அவன் தோழர்களும் விரைவாக நடக்கத் தொடங்கினர்கள்.

காதலன் செல்வதை, கண்ணிமைக்காது பார்த்துக் கொண்டு நின்ற மனோரமா, அவன் உருவம் மறைந்ததும், வீட்டினுள் சென்றாள்.

'கண்ணா, கேள்வித் தாள்கள் எங்கே?"

"இந்நேரம் கூட்டத்தில் கொடுத்துக் கொண்டிருப்பார்கள். தாண்டவராயத் தம்பிரானும் புறப்பட்டு விட்டாராம். சிவா, விரைந்து நட!"

வேகமாக நடந்தார்கள். முருகன் கோயிலில் நடந்த புராணப் பிரசங்கத்திற்குச் சென்றார்கள். கதையைக் கேட்டுக் களிக்க அல்ல! ஆராய்ச்சிக் கேள்விகளைக் கேட்டு, அதன் மூலம் அங்குக் கூடியிருக்கும் பகுத்தறிவற்ற மக்களுக்குத் தெளிவு பிறக்கச் செய்யவேண்டுமென்ற நன்னோக்கத்துடன் தான்.

ஆலயத்தில், ஆண்களும் பெண்களுமாக ஒரே கூட்டமாயிருந்தனர். மேடையில் பட்டாடை அணிந்த பண்டாரத் தம்பிரான், "யாக்கை நிலையாமை" என்பதைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்தபோது சிவனும் அவன் நண்பர்களும் அங்குவந்து சேர்ந்தார்கள். மேடையின்மேல் சிவன் சென்று, ஒரு கேள்வித் தாளைத் தந்து இதற்குப் பதில் கூறுங்கள் என்று சொல்லிவிட்டுக் கீழே இறங்கி விட்டான்.

பார்த்தார் தம்பிரான். கையிலிருப்பது கேள்வித்தாள் என்பது தெரிந்ததும், அவர் உடல் முழுவதும் பூனைக் காய்ச்சல் இலைபட்டது போன்ற எரிச்சல் ஏற்பட்டது. நான்கு நாட்களுக்கு முன்னர்தானே வந்தையில் பதில் கூறமுடியாமல் பந்தலின் பின்புறமாக ஓடித் தப்பினோம், இங்குமா அவமான மடையவேண்டும் என்று எண்ணியதும், தம்பிரானின் தலையிலிருந்து பாதம் வரைக்கும் ஓர் ஆட்டம் கொடுத்தது.

சிங்கக் கூட்டத்திற்கு இடையே சிக்கிய எருதைப் போல ஏங்கமுற்றார். மிரள மிரள கூட்டத்தைப் பார்த்து விட்டு, மெதுவான குரலில் கூறினார் இப்படி: "அன்பர்

களே! உங்கள் கேள்வித்தாளைப் படித்துப் பார்த்தேன். மிக அருமையான கேள்விகள்தான். எல்லோரும் இதற்குப் பதில் தெரிந்து கொள்ள வேண்டியதும் அவசியம் தான். நீங்கள் விரும்பும் வண்ணமே, முதலிலேயே பதிலும் சொல்லி விடவேண்டும். ஆனால் கேள்விகளைக் கேட்ட நீங்கள் விடையைச் சொல்லிய உடனே வீட்டிற்குப் போய் விடுவீர்களே என்று அஞ்சுகிறேன். இன்று நான் கூறப் போவதை நீங்களும் ஏனைய பக்திமான்களோடு இருந்து கேளுங்கள். பரமன் செயல்களை இந்தப் பண்டாரம் கூறும்போது தாங்களும் மற்றவர்களுடனிருந்து பரவசமடைதல்வேண்டும். கடைசியில் தவறாமல் பதில் கூறுகிறேன்!"

இதைக் கூறி முடித்ததும், தம்பிரான் முகத்தில் முத்து முத்தாக வியர்வை காணப்பட்டது. அதைத் துடைத்துக்கொண்டு, சுண்டக் காய்ச்சி, சீனியும் குங்குமப் பூவுமிட்ட பசும்பாலை, வெள்ளிச் செம்பில் ஊற்றி, துணியைத் திரையாக்கிப் பருகினார்.

தொண்டையைக் கனைத்துக்கொண்டு, சுற்று முற்றும் பார்த்து, சுருதியை உயர்த்தி, விட்டதிலிருந்து கதையை விறு விறுப்பாகச் சொல்லிக்கொண்டே போனார்.

கண்ணன் (மெதுவாக):—

கள்ளப்பொருள் வியாபாரிக்குக் கண்ணில் ஒளியிருக்குமா? கருத்தில் உரமிருக்குமா?

தம்பிரான் :—

மாதர்கள் வலையில் மாட்டி வைக்காதே,
மண்பொரு ளாசையைக் காட்டிக் கொடாதே,

பாதகர் நேசத்திற் கூட்டி வைக்காதே,
பாவி என்னைக் கைவிட்டு விடாதே!

கண்ணன் (மெதுவாக) பார்த்தாயா சிவா, பண்டாரத்தின் பாட்டை! "மண்பொருளாசையைக் காட்டிக் கொடாதே" யாம். பார், கையிலே பச்சைக்கல் மோதிரம், கழுத்திலே பொன் கட்டிய உத்திராக்ஷம்! "பாவியென்னைக் கைவிட்டு விடாதே" என்கிறாரே, ஏன் தெரியுமா?

சிவன் :—கேள்வித்தாள் கொடுத் திருக்கிறோமே, அதற்கு.

தம்பிரான் :—

இருவர்மண் சேர்த்திட ஒருவர் பண்ண
ஐந்து மாதமாய் வைத்த சூளை
அருமையா யிருப்பினு மந்தச் சூளை
அரைக்காசுக் காகாதென் றாடாய் பாம்பே!

இப்படியாக, பாம்பாட்டிச் சித்தர்கூட, இப்பொழுது கவர்ச்சியோடும், அழகோடும் காணப்படும் இந்த ஊத்தைச் சடலம் அழியும் தன்மையது என்று கூறுகிறார்; அழியப்போகும் இந்த உடலுக்கு இன்பந்தர, மண்ணாகப் போகும் மற்றொரு உடலை நாடித் திரிவதேனோ? அழுகணிசித்தர் கூறுகிறார்.......

கண்ணன் (மெதுவாக) :—சிவா, இதுதான் 'சத்' பொருளோ? பதில் சொல்லச் சொல்லப்பா, நாம் போவோம்!

சிவன் (மெதுவாக):—கண்ணே, பொறு. தெரிந்ததை எல்லாம் சொல்லட்டுமே கேட்போம்!

தம்பிரான் :—

.........மற்றின்பம் யாவினும் சிற்றின்பமே சிறந்தது என்று கருதி மதியை யிழந்து மங்கையருக்காக அலைந்து, அழிந்தவர் பலர்.

ஒரு சமயம் தேவேந்திரன் கொலுமண்டபத்திற்குக் கங்கை வேகமாக வந்தாள். அவள் வந்த அவசரத்தில் காற்று பலமாக வீச, ஆடை விலகி மங்கையின் உள் அங்க மனைத்தும் வெளியே தெரிய, (தம்பிரானின் முகத்தில் புன்னகை தவழ்கிறது!) அதனைக் கண்டு சபையிலிருந்த அனைவரும் "சிவ! சிவ!" என்று தங்கள் கண்களை இரு கைகளாலும் மூடிக்கொண்டு, அவளுடைய மானத்தைக் காத்தார்கள்! சைவ மெய்யன்பர்களே, அங்குமொரு பெண்ணாசை பிடித்த கயவனிருந்தான்! துன்முகன் என்ற அந்தக் கீழ்மகன் மட்டும், ஆடை விலகிய மங்கையின் மேனியை, அகல விரித்த கண்களோடு, கூர்ந்து பார்த்துக் கொண்டிருந்தான்! காமுகன் செய்வதைக் கண்ட தேவேந்திரனுக்குச் சினம் பீறிட்டுக்கொண்டு வந்தது.

"பாபி! புனிதமான இந்தச் சபையில், கேவலமான பெண்ணாசை பிடித்த பித்தனே, மோகத்தில் மூழ்கிய கசடனே பிடி சாபம்......."

"தேவேந்திரா! அடியேனை மன்னிக்கவேண்டும்!"

"முடியவே முடியாது! பூமியில் யயாதி மகனாகப் பிறந்து, கங்கையை அடைந்து, கூடி வாழ்ந்து, உன் இச்சை தணிந்ததும் இங்குவா! போ! போ!" என்று சாபத்தை.........

கண்ணன் (உரக்க):—

பிரசங்கியாரே! தேவேந்திரனுக்குப் பெண்ணாசையே கிடையாதோ?

கூட்டத்தில் ஒருவர்:—ஆயிரம் கண் அவருக்கு வந்த கதையை மறந்துவிட்டீரா?

சிவன்:—தம்பிரான் அவர்களே! எல்லோரும் கண் மூடிக்கொண்டிருந்தார்கள் அல்லவா, துன்முகனைத் தவிர?

தம்பிரான் (நடுங்கும் குரலில்):—ஆமாம்!

சிவன்:—துன்முகன் கண் திறந்துகொண்டிருந்தது, கண்மூடிக்கொண்டிருந்த இந்திரனுக்கு எப்படித் தெரிந்தது?

தம்பிரான் (தைரியம் வந்தவரைப்போல்):—ஞானக் கண்ணால் பார்த்தார்!

கண்ணன்:—ஞானக் கண்ணிருக்க, ஊனக் கண்ணை மூடி என்ன பயன்? துன்முகனுக்கு ஞானக்கண்ணிருப்பது ஞாபகத்திற்கு வாராததினால், ஊனக் கண்ணாலேயே பார்த்துக்கொண்டிருந்தான். மற்றவர்கள் ஞானக் கண்ணால் துன்முகன் செய்வதையே செய்துகொண்டிருந்தார்கள், இதிலென்ன வித்தியாசமிருக்கிறது? துன்முகனுக்குச் சாபம் தருவது சரி, ஒரு பாவமும்—விலகிய ஆடையோடு வந்ததைத் தவிர—செய்யாத கங்கைக்குச் சாபம் தருவது சரியா?

கண்ணன்:—“ஆசைப் பட்டவளை அடைந்து, கூடி வாழ்ந்து, உன் இச்சை தணிந்ததும் வா” என்பது சாபமா அல்லது.......?”

தம்பிரான் பதில் கூற முடியாமல் தத்தளித்தார். அவர் கண்கள் உருண்டன! முகம் வாடியது!

ஒரு குரல் :—போதும் போதும், உங்கள் பிரசங்கம்! கேள்வித் தாளுக்குப் பதில்!

தர்ம கர்த்தா :—முடியாது, பதில் கிதில் கூற! தாண்டவராயத் தம்பிரானே நடத்துங்கள் கதையை; இதுகள் வேறே இப்போ தொந்தரவு, சுவாரசியமான கட்டத்தில் வந்து கெடுக்கிறானுங்கோ!

ஒரு குரல் :—முடியாது! முதலில் பதில் சொல்லித்தாகவேண்டும்.

இப்படியாகக் கூட்டத்தில் குழப்பம் அதிகரித்தது. திகைத்துக்கொண்டிருந்த "பாவியைப் பரமன் கைவிட்டு விடவில்லை." நல்ல சமயமிதுவே என்று நழுவி விட்டார் தம்பிரான்! தம்பிரான் ஓடிவிட்டார் பதில் கூற முடியாமல், என்பதை அறிந்ததும், அனைவரும் கலைந்தனர்.

காதலனின் வருகைக்காக வாட்டத்துடன் காத்துக் கொண்டிருந்த மனோரமா, இவனைக் கண்டதும் ஓடி அவன் உடலுக்குக் கொடியானாள்!

"வெற்றியா?"

"போருக்கா சென்றேன்?"

"இல்லை! நடந்ததைச் சொல்லுங்கள்!"

"தம்பிரான் நழுவிவிட்டார்!"

"எப்படி?"

"பின்புறமாக!"

"அப்பா! இதற்கா இவ்வளவு சிரமம்?"

"தம்பிரான் ஊரை விட்டோடி விட்டதாகக் கருதாதே! ஆரியப் பிரசாரமே அலறியடித்துக் கொண்டோ

டியது என்பதுதான் இதன் பொருள்! வெற்றியா தோல்வியா இப்பொழுது கூறு!"

"நிச்சயம் வெற்றிதான் கண்ணா!"

"வெற்றி பெற்ற எனக்குப் பரிசு இல்லையா கண்ணே?"

"காதல் உலகத்தில், பரிசுக்கா பஞ்சம்! கன்னத்தை இப்படி.........

வசந்தம் வரும்பொழுது சோலையிலுள்ள செடிகளிலும் மரங்களிலும் பூக்கள் மலர்ந்து, நறுமணத்தை அள்ளி வீசும். ஆனல் வந்த வசந்தம் நகர்ந்து போகாமலே இருந்து விடுமா? பூத்த மலர்களும், பச்சை இலைகளும் உதிராமல் என்றும் நிலைத்திருக்குமா? இயற்கையில் அழகும், அழிவும் மாறி மாறி வரும். அது போலவே மக்களின் உள்ளத்திலும் இன்பமும் துன்பமும் மாறி மாறி வரும். இந்த இயற்கையின் உண்மையை, காதல் அணைப்பில் தம்மை மறந்திருந்த சிவனும் மனோரமாவும் எப்படிப் பாபம் அறிவார்கள்?

ஐந்தாவது பகுதி

காதலர் பிரிவு

குமாரின் மனம், அன்று கண்ட கனவு, கோபாலின் கடிதம் இவை இரண்டையுமே சுற்றிச் சுற்றி வட்டமிட்ட வண்ணமிருந்தது.

"கலை என்ற வர்ணக் கண்ணாடியின் வழியாக உலகைப் பார்த்துக்கொண்டிருந்த எனக்கு, அன்று உண்மை உலகை உள்ளது உள்ளபடி கண்டபோது, வெட்கமும், கோபமும் சோகமும் பீறிட்டுக்கொண்டு வந்தன!"—

கோபாலின் கடிதத்திலிருந்த இந்தச் சொற்கள் அவன் நினைவிற்கு வந்தன.

"கலை என்ற போர்வாள் கொண்டே, சமுதாயத்தி லுள்ள வஞ்சகம், பொறாமை, சுரண்டல், அநீதி ஆகிய வற்றை வெட்டி வீழ்த்த முடியாதா?"

"முடியும்! காற்று எங்கும் பரவி நிலைத்திருப்பது போல, ஏழை, எளியவன், பணக்காரன், பிடிவாதக்காரன், கருத்தில் கபோதி முதலிய அனைவரின் கண்களிலும் உன் கலை பட வசதி யிருந்தால், கலை, போர்வாளாகும்!"

"படும்படிச் செய்தால் போகிறது!"

"முடியாது! நாட்டில், மிகமிகக்கொஞ்சமானவர்களே கல்வியின் வாசனையை அறிந்தவர்கள். மற்றுமுள்ள பெரும் பான்மையோர், கல்வியின் பயனும் அறியார், கலையையும் ரசிக்கத் தெரியார்!"

"அப்படியானல் கலை இன்று சிறிதும் பயனளிக் காதா?"

"ஓரளவிற்குப் பயன் நிச்சயம் அளிக்கும். ஆனல் பொதுத் தொண்டில் நேரடியாகக்குதித்து, சொல்லெனும் கூர்வாள் கொண்டு, பணியாற்றுபவர்களால் எளிதில், மிக விரைவில் மாற்றத்தை உண்டாக்க முடியும்."

"இன்று சொல் வீரர் பலர் இருக்கிறார்களே!"

"ஆமாம், இருக்கிறார்கள்! பலர் சொல்லில் வீரர்; ஆனல் உள்ளத்தில் கோழைகள்! கோழைகளாக இருந்தா லும் கெடுதியில்லை. பலர் நாவில் தேனும், நெஞ்சில் நஞ்சும் கொண்டவர்கள். இவர்களேமிக மோசமானவர்கள், ஆபத் தானவர்கள், இரட்டை நாக்குக் கொண்டவர்கள்! பொது வாழ்வில் இவர்கள் திடீர் சம்பவங்களை உண்டாக்குவார்

கள்! விஷப்பாம்புக் கூட்டம் நாளுக்கு நாள் பெருகிக் கொண்டே வருகிறது. போலிகள் கீழ்ச் செயல்கள் புரிந்தே தலை தூக்குகிறார்கள், பிறகு காட்டு தர்பார் செலுத்துகிறார்கள். உண்மை உழைப்பாளிகள்—ஆர்வங் கொண்ட சிங்க உள்ளங்கள்—மனமுடைந்து மாள்கிறார் கள். இன்றைய நிலைமையைத் தலைகீழாக மாற்றும் சக்தி கலைக்குக் கிடையாது. குமார், உன் பொறுப்பு பெரியது. கோபாலைப் பார்! அவன் பெற்ற ஆர்வத்தை நீயும் பெறு! அரசியலில் உள்ள போலிகளை—கனவில் கண்டாயே அவர் களை—விரட்டியடி! உண்மை உழைப்பாளிகளுக்கு வணக் கம் செலுத்து! அவர்களின் தோளோடு தோள் நின்று உழை! ஓடு! விரைந்தோடு! பாட்டைத் தலையும், கிழிந்த உடையும் கொண்ட ஏழையைப் பார், அதோ, உன்னை இருகையேந்தி அழைக்கின்றனர்! ஓடு! விரைந்தோடு''— இப்படி குமாரின் உள்ளத்தில் பற்பல எண்ணப் புயல்கள் வீசின! போராட்டம் நீண்ட நேரம் நடைபெற்றது! பொதுத்தொண்டில் புகவேண்டுமென்ற எண்ணம் பலப் பட்டுக்கொண்டே வந்தது. ஆனால் அவனால் விரைவில் ஒரு முடிவிற்கும் வர இயலவில்லை. அவன் உள்ளத்தில் மனப்புயல் வீசிக்கொண்டே இருந்தது.

அறையில் உலாவிக்கொண்டே தீவிரமாக யோசிக்கத் தொடங்கினான். அவன் முகத்தில் வழிந்த வியர்வையைத் துடைத்துக்கொண்டு, சாய்வு நாற்காலியில் உட்கார்ந் தான்.

''எங்கள் உடலில் தசையும், இரத்தமும் இருக்கும் வரைக்கும் உழைக்கப்போகிறோம்!'' கனவில் தோன்றிய தியாகியின் உருவம் அவன் அகக்கண் முன்னின்று, பேசியது!

"ஆம், உழைப்பீர்கள்! உறுதிபெற்ற உத்தமர்களே, நீங்கள் நிச்சயம் உழைப்பீர்கள்! நானும் உங்களில் ஒருவனாக ஆசைப்படுகிறேன், தீர்மானிக்கிறேன். என் இரத்தத்தைக் கலக்காகச் செலவழிப்பதைவிட, ஏழை எளியவர்களின் கவலையைப் போக்க, கண்ணீரைத் துடைக்க, வாழ்க்கையை உயர்த்தச் சிந்துவேன் இனி! என் தோழனின் தோளோடு தோள் நின்று, ஏழை உழவர்களின் பக்கம் நின்று போராடுவேன்! குன்றாத உணர்ச்சியும் குறையாத ஆர்வமும் பெற்று நேர்மையோடு உண்மையென்னும் பாதையில் சென்று, உயிரும் உடலும் தனித்தனியாகப் பிரியும் வரைக்கும் போராடுவேன்!"—நீண்டநேரம் சிந்தித்து இப்படி ஒரு முடிவிற்கு வந்துவிட்டான் குமார்.

குமார் தன் முடிவைக் குமுதத்தினிடம் கூறி, விடைபெற்றுச்செல்லவேண்டுமென்றுவிரும்பி, இரவின் வருகை நோக்கி, துடிதுடிக்கும் உள்ளத்தோடு காத்துக்கொண்டிருந்தான்.

இரவு! வெண்ணிலா குளிர்மையாகத் தன்பால் ஒளியைத் தெளித்துக்கொண்டிருந்தது. மாடியில் காதலர் மனமகிழ்ச்சியோடு பேசிக்கொண்டிருந்தனர்.

"காதலர் யாது பேசுகின்றனர்? எப்படிப் பேசுகின்றனர்? என்ன செய்கின்றனர்?" என்ற இரகசியங்களை அறிய ஒற்றனைப்போல, மெதுவாக, அசைந்தசைந்து அங்கு வந்தான் தென்றல்.

"தென்றல் வீசுவது இப்பொழுதுதான் அத்தான், இனிமையாக இருக்கிறது!"

"பொல்லாதவன் அவன்!"

"ஆமாம், தாங்களில்லாத நேரங்களில் களைக் கொண்டுவந்து மேலே கொட்டுகிறான்!" என்று கூறிக் கொண்டே அழகி, காதலனின் மார்பில் சாய்ந்தாள். சாய்ந்த இளவஞ்சியின் கன்னத்தை மெதுவாகத் தடவிக் கொடுத்துக்கொண்டே பேச ஆரம்பித்தான் குமார்.

"தென்றல் இப்பொழுது எங்கிருந்து, இங்கு ஏன் வந்திருக்கின்றான் தெரியுமா?"

"உங்களைப்போல நான் அவ்வளவு படிக்கவில்லையே, அத்தான்!"

"மலர்த் தோட்டத்திலிருந்து அவன் வருகிறான்."

"அங்கு என்ன வேலை அவனுக்கு!"

"எனக்கு இங்கென்ன வேலை! அதே வேலைதான் அவனுக்கும் அழகு!"

"ஏதேது அவனுக்கும், உங்களுக் கிருப்பதைப் போல......"

"எனக்கு நீ ஒரே ஒருத்திதான் காதலி! அவனுக்கோ பல காதலிகள்! தோட்டத்திலிருக்கும் மலர்ப் பெண்களின் மத்தியில் புரண்டுவிட்டு வந்திருக்கிறான்! அதனால்தான் அவன் உடலில் அவ்வளவு வாசனை வீசுகிறது!"

"ஆமாம், மிகவும் பொல்லாதவன்" என்றாள் குமுதம், புன்னகையோடு.

"பொல்லாதவன் மட்டுமல்ல, குறும்புக்காரனும்கூட. இதோ பாரேன், அவன் நம்மிடையே புகுந்து புகுந்து ஓடுகிறான்! அவனுக்கு நீதான் இடம் தருகிறாய்!"

"நானா?" இருவரும் கொல்லென்று சிரித்தார்கள். தென்றல் அவர்களிடையே புகுந்து செல்ல முயன்று

முயன்று பார்த்தான்! அவன் முயற்சி தோல்வியில் முடிந்தது!

காதலர் களிப்புக் கடலில் நீண்ட நேரம் மூழ்கியிருந்தனர்! களிப்புக் கடலுக்கு மிக அருகே கண்ணீர்க் கடலிருப்பது அவர்களுக்குத் தெரியாது!

"குமுதப்!"

"என், அத்தான்?"

"இனி நான் உரிமைக்காகப் போராடப்போகிறேன்".

"என் தந்தையிடந்தானே, மாமாதானே அவர், தாராளமாகச் சொத்திற்காகப் போரிடும்! ஆனால் ஒன்று, முன்பேயே சொத்து உமக்குச் சொந்தமாகிவிட்டதாக மட்டும் கூறிவிடாதீர்!...பிறகு என் தந்தையின் முன்பு செல்லவே வெட்கமாக இருக்கும்!"

"அதற்கு நானேன் போராடவேண்டும்? உன் தந்தையே, சொத்தை என்னிடம் கொண்டுவந்து தருவார். நான் வேண்டாமென்பேன். 'அப்படிச் சொல்லாதே! சொத்துக்கு நீதான் இனிச் சொந்தக்காரன்! கட்டாயம் அது இனி உன்னிடந்தான் இருக்கவேண்டும்! கெஞ்சுகிறேன், மறுக்காதே!' என்று கெஞ்சிக் கூத்தாடி எனனிடம் கொடுத்துவிடுவார்..."

"அப்படியா......"

"ஆமாம்!.......அந்தப் போரில்லை கண்ணே இப்பொழுது! பழத்தூரில் ஜமீன்தாருக்கும் உழவர்களுக்கும் போராட்டம் நடக்கப்போகிறது! அதிலே நான் ஏழைகளின் பக்கம் பரிந்து பேசப்போகிறேன்"

"கலைஞரே! தங்களுக்கேன் அந்த வேலையெல்லாம்" என்று குறும்பாகக் கேட்டாள் குமுதம். அந்த நேரத்தில், "பரிந்து பேசுவது" என்றால் சாதாரணமானது என்

றெண்ணினுள். குமார் தன் முடிவைப்பற்றி விபரமாக வும் தெளிவாகவும் எடுத்துக் கூறி, விடை தரும்படி வேண் டினன்.

"அவசியம் போய்த்தான் ஆகவேண்டுமா?"

"ஆமாம் கண்ணே!"

"திரும்பி வர எத்தனை நாட்கள் பிடிக்கும்?"

"இரண்டே வாரங்களில் வந்துவிடுவேன்"

"ஆபத்தொன்று மிருக்காதே, அத்தான்?"

"அதிலென்ன ஆபத்து, குமுதம்!"

"அப்படியானுல் சரி!.........

ஆனுல் ஒன்றே ஒன்று.........."

"என்ன?"

"கலைஞரே! அந்த ஊரில் எங்கேயாகிலும் அழகு இருந்தால், அந்த அழகிலே கலையைக் கண்டு, கண்ட கலையி லிருக்கும் இன்பத்தை உண்டு, அங்கேயே சொக்கியிருந்து விடப் போகிறீர்! நானெருத்தி, இங்குத் தனித்திருக்கி றேன், நினைவிருக்கட்டும் அத்தான்!"

"கலை கண்ணில் பட்டால், ரசிப்பவனே அன்றி சுவைக்க ஆசைப்படுபவன் அல்ல நான்!"

"ரசிக்கக்கூடக் கூடாதே!"

"அப்படியானுல், அதுவும் சரி" என்று கூறி அவள் மினுமினுத்த கன்னங்களைத் தட்டிக்கொடுத்தான் குமார்.

"தாங்கள் வரும் வரைக்கும், தனியாக எப்படி அத் தான் இருப்பேன்?"—சோகமான குரலில் கேட்டாள்.

"ராம்தன் பாடிக்கொண்டிரு" என்று குமார் கூறி யதும், இருவரும் விழுந்து சிரித்தார்கள்!

"முன்போல் பைத்தியக்காரியல்ல அத்தான் நான்!"

"ஈரோட்டில் புது முறையில் தயாரிக்கப்பட்டு, காஞ்சியில் சுவையும் பெருகும் தரப்பட்ட மாத்திரை, எப்படிப்பட்ட பரம்பரை பைத்தியத்தையும் ஓட்டிவிடும்! இன்னும் கொஞ்சம் உனக்குத் தரவேண்டும்! வந்து தருகிறேன்!.......வரட்டுமா கண்ணே!"

சேவல் கூவியது! ஒருவரை ஒருவர் குறும்பும், குறுநகையும் நிறைந்த பார்வையோடு பார்த்தனர்.

"நேரமாகிவிட்டது, குமுதம்!"

"நினைவிருக்கட்டும், விரைவில் வந்துவிடுங்கள்"

காதலர் பிரிவின்போது ஏற்படும். இலக்கிய நிகழ்ச்சிகள் நடைபெற்றன!

குமார் பிரிந்து செல்லப் புறப்பட்டான்! குமுதத்தின் உள்ளம் வேனே, அவ்வளவு விரைவில் வேதனைப்பட ஆரம்பித்தது! அவள் கண்களில், நீர்த்துளிகள் அரும்பின!

ஆறுவது பகுதி

மண் கோட்டை

மலர்புரியைவிட்டுப், பழத்தூருக்குப் புறப்பட்டான் குமார். வழி முழுவதும், முன்னாள் இரவு குமுதத்திடம் பேசிய காதல் பேச்சுக்கள் காதில் வந்தொலித்தபடியேயிருந்தன.

பழத்தூரில் ஒரு சிறிய மாடிவீடு. அதுதான் கோபாலின இல்லம். குமாரை ஆசையோடு வரவேற்றான் கோபால். குமாரும் கோபாலும் மாடியிலிருந்த ஒரு தனியறையில் அமர்ந்து பேசத்தொடங்கினர். கோபால், தான் அதுவரைக்கும் உழவர்களின் நலத்திற்காகச் செய்த வேலை

களைப்பற்றி விரிவாக எடுத்துக் கூறினான். தன் தோழன், விடாது செய்துவந்த தொண்டினைக் கேட்கக் கேட்க குமாருக்குச் சொலலொணு மகிழ்ச்சி யுண்டாயிற்று.

மாலை நேரம் வரவே அவர்களின் நீண்ட பேச்சு ஒரு விதமாக முடிந்தது.

"குமார்! எழுந்து முதலில் குளித்துவிட்டுத், தேநீர் அருந்திவிட்டு வெளியே செல்லலாம்," என்று கோபால் கூறியதும், குமார் எழுந்தான். இருவரும் மாடியை விட்டுக் கீழே யிறங்கினர். தோட்டத்திற்குச் சென்று குமார் குளித்தான். குளித்து முடிந்ததும், வேறு உடை அணிந்து கொண்டு இருவரும் திரும்பவும் மாடிக்கு வந்து உட்கார்ந்தனர்.

"அண்ணு" என்ற குரல் கேட்டது. "உள்ளே வரலாம் வேணி!" என்று கோபால் கூறினான்.

மெதுவாகச் சிறிது தலை குனிந்தபடி, உள்ளே வந்தாள் வேணி.

"குமார், இவள் என் தங்கை. பெயர் வேணி" என்று குமாரிடம் கூறிவிட்டு, வேணியைப் பார்த்து, "வேணி, இவரும் நானும் சித்திரக்கலா வித்தியாலயத்திலே ஒன்ருகக் கற்றவர்கள். இவ்வளவு நாட்களாகக் கலைத் தொண்டாற்றி வந்தார். இப்பொழுது உழவர்களின் போராட்டத்தில் பங்கு கொள்ள இங்கு வந்திருக்கிருர்" என்று கோபால் கூறினான். வேணி, சிறிது தலைநிமிர்ந்து குமாரைப் பார்த்து 'வணக்கம்" என்ருள்! "வணக்கம்" என்று குமார் பதிலுக்குக் கூறினான்.

வேணி தந்த சூடான தேநீரை இருவரும் குடித்து விட்டு வெளியே புறப்பட்டனர் உலாவ.

நண்பர்களிருவரும், ஊரின் அருகேயிருந்த நன்செய், புன்செய் நிலங்களைக் கடந்து, சிறிது தூரத்திலிருந்த மண் கோட்டையை நாடி நடந்தனர்.

“கோபால், இந்தக் கோட்டையில் எந்த அரசனிருந்து, ஆட்சி புரிந்தான்?”

“முகமதியர்கள் நம் நாட்டை ஆண்ட காலத்தில், இந்த ஊரை யாரோ ஒரு சிற்றரசன் ஆண்டானும்! அவனது கோட்டைதான் இது! இக் கோட்டையைச் சுற்றிலுமுள்ள நிலங்களை உழும்பொழுது, சிறுசிறு பொன் நாணயங்கள் அகப்படுவதாக இங்குள்ள உழவர்கள் கூறுகிறார்கள்!”

இருவரும் மண் கோட்டையின் அருகே வந்து சேர்ந்தனர். கோட்டையினருகேயிருந்த ஒரு கிணற்றிலிறங்கிக் கால்களை நன்ருகக் கழுவிக்கொண்டு, கோட்டையின் மீது ஏறினர்.

கோட்டையின் மீது நின்று நான்கு பக்கங்களையும் ஒரு முறை சுற்றிப்பார்த்தான் குமார். இயற்கைப் பெண், புன்னகை பூத்த முகத்தோடு நாலா பக்கங்களிலும் காட்சியளித்ததைப் பார்க்கப் பார்க்க, குமாரின் உள்ளம் உவகையில் ஆழ்ந்தது. “வணக்கம்” என்று வேணி கூறிய இனிய வார்த்தை ஏனே திடீரென்று குமாரின் கவனத்திற்கு வந்தது.

குமார், கோபாலைப் பார்த்துவிட்டுத் திரும்பவும் இயற்கைபழகை ரசிக்கத் தொடங்கினன்.

பிறகு இருவரும் மண் கோட்டையின் மீது உட்கார்ந்தனர்.

“இன்னுமென்ன இந்த ஊரில் அதிசயம்” என்று குமார் பேச்சை ஆரம்பித்தான்.

"இதோ தெரிகிறதே ஒரு தோப்பு, இதனைத் "தாசித் தோப்பு" என்றழைக்கிறார்கள்; சிற்றரசனுக்கு இன்பந்தந்த சிங்காரிகளின் வீடுகளிருந்த இடமாம் இது!"

குமார் அந்தத் தோப்பைப் பார்த்துச் சிரித்தான்.

"அதோ ஒரு பெரிய மண்மேடு தெரிகிறதே, அதனை "யானை மேடு" என்றழைக்கிறார்கள்!"

"ஏன் அப்படி யழைக்கிறார்கள்?"

"சிற்றரசன் ஆண்ட காலத்தில் அந்த இடத்தில் தான் யானைகளைக் கட்டி வைப்பார்களாம்!......"

"அதோ சிறிது தூரத்தில் ஒரு சிறிய தோப்புத் தெரிகிறதே, அதற்கு என்ன பெயர்?" என்று குமார் வினவினான்.

"குமார்! அதற்குப் "புலவர் காடு" என்று பெயர். சிறிய தோப்பாக அது இருந்தாலும், அதனைப் பழக்கத்தால் மக்கள், காடு என்றே அழைக்கிறார்கள்."

"புலவர் காடு—அழகான பெயர்......"

"ஒரு காலத்தில், இந்த ஊரில் ஒரு சிறந்த புலவரிருந்தாராம். சிற்றரசன், அப்புலவரை அடிக்கடி கண்டு அவரிடம் அறிவு உபதேசத்தைப் பெற்று, மக்களை அதன்படி ஆண்டு வந்தானாம். அந்தப் புலவர் வாழ்ந்து, இறந்து சமாதியான இடம்கூட இத்தோப்பில்தான் இருக்கிறதாம்!"

"அப்புலவரின் பெயர்?"

"யாருக்குத் தெரியும்?"

இருவரும் சிரித்தார்கள். சிறிது நேரம் மௌனமாகவே யிருந்தனர். கோட்டையின் அருகே, ஆடுகளும்

மாடுகளும் மந்தை மந்தையாக சென்றதை இரு கலைஞர்களும் ரசிக்கத் தொடங்கினர்.

"கோபால், இங்குக் காலநடைகள் வளமாக யிருக்கின்றன!"

"ஆமாய்! புல்தரை ஏராளம்!"

"இந்த ஜமீன்தார், உழவர்களின் கோரிக்கைகளுக்குச் செவி சாய்க்கவே மாட்டேனென்று கூறுகிறாரா?"

"முதலில் சிறிது சிறிதாகச் சமாசத்திற்கு வர ஆரம்பித்தார். அதற்குள் ஒரு வஞ்சகன் அவர் உள்ளத்தைக் கெடுத்து விட்டான்!......"

"யார் அவன்?"

"யாராக இருக்க முடியும்? கோட்டீஸ்வர அய்யர் என்ெருருவன், ஜமீன்தாரின் வீட்டில் கணக்கெழுதுகிறான். அவனால்தான் எல்லா முயற்சிகளும் தோல்வியடைகின்றன. அவன்தான் ஜமீன்தாருக்கு மந்திரி! சோலையூரில் கோயில் சிலைக்கு அவன் பூஜை செய்து கொண்டிருந்தானும். இப்பொழுது இங்கு ஜமீன்தாருக்குப் பூஜை செய்துகொண்டிருக்கிறான். கோட்டீஸ்வர அய்யரின் கையில் அடங்கியிருக்கும் சிறு பொம்மைதான் ஜமீன்தார்!"

"எப்படி அய்யருக்கு அவ்வளவு செல்வாக்குக் கிடைத்தது?"

"எனக்கொன்றும் சரியாகத் தெரியாது! ஆனால் ஊரில் ஏதேதோ பேசிக் கொள்கிறார்கள்!......" என்று கூறிவிட்டுக் கோபாலன் சிரித்தான்.

"ஜமீன்களில், எதிர்த்துப் பேசுபவர்களை, மரத்தில் கட்டித் தோல் உரிப்பார்கள் என்று கூறுவார்களே, அது இந்த ஜமீனில் கிடையாதா?"

"முன்பு இருந்தது அந்த வழக்கம். மக்களுக்குள் ஒற்றுமை யில்லாதிருந்த வரைக்கும், தனித்தனியாகப் பிரித்து மக்களுள் ஒரு சாராரைத் தண்டிக்க முடிந்தது. இப்பொழுது மக்கள் ஒற்றுமையாகவும் ஒரே மனத்தோடு மிருப்பதால், ஜமீன்தாரால் ஒன்றும் செய்ய முடிய வில்லை!"

இருள் மெள்ள மெள்ள உலகைக் கவ்வ ஆரம்பிக்கவே, இருவரும் வீடு திரும்ப எழுந்து, மண் கோட்டையை விட்டுக் கீழே யிறங்கினர்.

கோபாலும், குமாரும் வருவதைக் கண்டதும், வீட்டின் தெருக்கதவின் அருகே நின்றுகொண்டிருந்த வேணி உள்ளே சென்றாள்.

குமாரைக் காண்பதற்காக, ஊரிலிருந்த உழவர்கள் கோபால் வீட்டின் முன்பு வந்து கூடினர். கோபால், அவர்களுக்குக் குமாரை அறிமுகம் செய்து வைத்து, "இவ்வளவு நாட்களாக ஏழைகளின் முன்னேற்றத்திற்காகக் கலைத்தொண்டாற்றி வந்த குமார் நம்மூருக்கு வந்திருப்பதைக் கண்டு உங்களைப் போலவே நானும் மகிழ்ச்சி யடைகிறேன். குமார் அறையில் உட்கார்ந்த படியே அகிலம் முழுவதையும் கற்பனைக் கண்ணினால் காணும் வெறும் கலைஞன் அல்ல. இவர் உணர்ச்சியும் ஆர்வமும் கொண்ட இளம் சிங்கம்! தம்முடைய உயிருக்குயிரான கலையையும் ஒதுக்கிவிட்டு, இப்பொழுது உங்களின் நலத்திற்காக, என்னுடன் தொண்டாற்ற இங்கு வந்திருக்கிறார்........" என்று பேசினான்.

உழவர்கள் 'கோபால் வாழ்க! குமார் வாழ்க!' என்று வாழ்த்தொலி எழுப்பிவிட்டுத் தம்தம் வீடு திரும்பினர்.

வேணி சோறு படைக்கத் தோழர் இருவரும் பேசிக் கொண்டே சாப்பிட்டனர். வேணி அடிக்கடி நாணத் தோடு, இது வேண்டுமா, அது வேண்டுமா என்று கேட்டுக் கொண்டேயிருந்தது குமாரின் உள்ளத்தில் குமுதத்தின் நினைவை அதிகமாக்கிற்று.

"கலைஞரே! அந்த ஊரில் எங்கேயாகிலும் அழகு இருந்தால், அந்த அழகில் கலையைக் கண்டு, கண்டதிலிருக் கும் இன்பத்தை உண்டு அங்கேயே சொக்கியிருந்து விடப் போகிறீர்......"

குமுதத்தின் உணர்ச்சி ததும்பும் இவ்வார்த்தைகள் குமாரின் கவனத்திற்கு வந்தன.

புன்னகையோடு, தலையைத் தூக்கி வேணியை நோக்கி ஞன், வேணி தலை குனிந்தாள்!

ஏழாவது பகுதி

நிலவில் நிகழ்ந்தது!

"மனோரமா, நேரமாகிறது புறப்படு" என்று அவ சரப் படுத்தினன் சிவன். சிவனின் அன்னை தாயாரம் மாள் அன்றொருநாள் இரவில் வெளியில் சென்றதற்காகக் கோபித்துக் கொண்டாளே, அதுபோல இன்றும் கோபித் துத் திட்டுவாளே என்ற பயத்தினால் மனோரமா தயங்கி நின்றாள்.

"ஏன், மனோரமா, வர உனக்குச் சம்மதமில்லையா?" என்று அருகில் சென்று கேட்டான் சிவன்.

"விருந்துண்ண விரும்பாதவர்களும் உண்டா?"

"உண்டு, கண்ணே!"

"நான் பார்த்ததில்லை!"

"உன் இனத்தவர்கள் விருந்தென்றால், காததூரம் ஓடுவார்கள், ஆனால் என் இனத்தவர்கள்.........."

"பழைய பல்லவி! போதும் போதும்! தாங்களும் நானும் இன்னுமா வேறு வேறு இனம்?........"

உல்லாசமாக வெளியே செல்லலாமென்றால், அழ ஆரம்பித்து விட்டாயே!......கண்ணல்ல!..........கேலிக்குச் சொன்னால் யாராவது கோபித்துக் கொள்வார்களா?...... இதோ! இதோ!......."

"போதும் விடுங்கள்! கேலிக்கா பேசுகிறீர்! என்னை மணந்தது தவறென்று நீங்கள் அடிக்கடி நினைக்கிறீர்கள் போலிருக்கிறது! ஆகவேதான் உங்களையும் அறியாமல் உன் இனம், என் இனம், என்று பிறிட்டுக்கொண்டு வார்த்தைகள்........"

"பார்த்தாயா? என் மனதை நன்கறிந்த நீயே இப்படிச் சந்தேகித்தால்...' என்று கூறிக்கொண்டே அவளைத், தன் மார்பில் சாய்த்துக் கொண்டு, முதுகில் தட்டிக்கொடுத்தான், அன்பாக.

"நேரமாகிறது, வா, கண்ணே!"

"நான் வரவில்லை! நீங்கள் போகலாம்!"

"இதற்கெல்லாமா கோபித்துக்கொள்வது? என் உயிரல்ல!......"

அவளது கோவைக்கனி இதழை, மெதுவாக விரல்களால் நோகாமல் பிடித்து அசைத்தான்.

"குறும்பான செய்கை!"

"முரட்டுப் பிடிவாதம்!"

காதலனின் உடலிலிருந்து தன் உடலைப் பிரிக்க முயன்றாள்! சிவனா விடுபவன்? விடவில்லை! திமிறினாள் முடியவில்லை!

"முரட்டுக் குணம்!"

"வரட்டு ஜம்பம்!"

சிவனின் "முரட்டுக் குணம்" மனோரமாவிற்குப் பிடிக்காததல்ல. உள்ளத்தையும், உதட்டையும் தனித்தனியாக்கிக் காட்டுவதில் பெண்களுக்கு ஒரு அலாதியான இன்பம்! ஆனால் அவர்களால் அதில்தான் வெற்றி பெற முடிவதில்லை!

"என்ன மனோரமா?"

"வருவதற்கு எனக்கு ஆசைதான். ஆனால் மாமி திட்டுவார்கள்!"

"என்மேல் பழியைப் போட்டுவிட்டு புறப்படு, புறப்படு!"

"மகன் செய்வதெல்லாம் மருமகளின் தூண்டுதல் பேரில்தான் நடைபெறுகிறது என்பது மாமிகளின் முடிவு!"

சிறிது நேரத்தில், இருவரும் வெளியில் புறப்பட்டனர். நிலவு ஒளிவீசும் இரவுகளில், ஊரின் அருகேயுள்ள குளக்கரையில் அந்தக் காதலர் இருவரும் உட்கார்ந்து பேசிவிட்டு வருவது வழக்கம்.

சிவனும் மனோரமாவும் குளக்கரையில் உட்கார்ந்தார்கள். சிறு சிறு மேகக் கூட்டங்களுக்குள் நுழைந்து நுழைந்து வெளி வந்துகொண்டிருந்தது வெண்ணிலா. அக்குளக் கரையின் ஒரு பக்கத்தில் பெரியதொரு தோப்பு இருந்தது. அதில் நாலாவித மரங்கள் உயர்ந்தும் படர்ந்தும் வளர்ந்திருந்தன. பால்போல் நிலவு காய்ந்தாலும், இருள் அத்தோப்பை விட்டு வெளியே போவது கிடையாது. அந்தத் தோப்பை இரவு நேரங்களில் பார்த்தால் மனோரமாவின் உள்ளம் நடுநடுங்கும்.

அத் தோப்பில், இரவு நேரங்களில் கனிகளைத் தின்பதற்காகப் பறந்துவரும் வௌவால்களின் ஓசை ஒரு தனிப்பட்ட ஆறுதலை மனோரமாவிற்கு அளிக்கும்.

இருவரும் ஏதேதோ பேச ஆரம்பித்தனர். காதலர் தனித்துப் பேசும் பேச்சில், பெரும்பாலும் பொருள் இருக்காது, ஆனால் சுவை இருக்கும் என்பார்களே அது முற்றும் உண்மை!

சிவன் பேசிக்கொண்டிருந்ததைக் கேட்டு இன்பத் தென்றலில் மிதந்து கொண்டிருந்த மனோரமா யாரோ வரும் காலடிச் சத்தத்தைச் செவியுற்றுத், திரும்பிப் பார்த்தாள்:

"ஐயோ!" என்று உரக்கக் கூவினாள்! அவள் உடல் உதற ஆரம்பித்தது! "என்ன? மனோரமா?" என்று அவளை அணைத்துக்கொண்டு திரும்பிப் பார்த்தான் சிவன்! திடுக்கிட்டு, மனோரமாவை விட்டு விட்டு விரைவாக எழுந்தான்.

முரட்டுத் தோற்றமும், உயர்ந்த உடலும் கொண்ட ஒருவன் அவனை நோக்கி விரைவாக வந்து கொண்டிருந்தான். அவன் கையில் ஒரு கத்தி இருந்தது. கத்தி நிலவொளியில் "பளிச் பளிச்" என்று பிரகாசித்தது.

"யார் நீ?" என்று அதட்டிக் கேட்டான்.

"நானா யார்? இதோ இன்னும் சற்று நேரத்தில் தெரிகிறது!" என்று கூறிக்கொண்டே, கத்தியினால் குத்த விரைந்து வந்தான்.

பயத்தினால், மனோரமாவின் இதயம் படபடவென அடித்துக்கொண்டது. காண்பது கனவுதானா என்றுகூட அவள் எண்ணினாள். கண்களைக் கசக்கிக்கொண்டு பார்த்

தாள். அவளது அச்சம் கோடிக்கு கோடி அதிகமாகிக் கொண்டேபோயிற்று. இந்த நேரத்தில் தான் என்ன செய்தால், தன் கணவனை ஆபத்திலிருந்து காப்பாற்ற முடியுமென்று யோசிக்கக்கூட அவளால் முடியவில்லை.

முரடன் அருகில் வந்து, கத்தியை ஓங்கினன் குத்த! ஓங்கிய கரத்தைத் திறமையோடும் வலிவோடும் பிடித்துக் கொண்டான் சிவன். வந்தவன் தன்னால் முடிந்தமட்டும் தன் கையை விடுவித்து, வந்த காரியத்தை முடிக்க முயன் ஞன். சிவன் பற்களைக் கெட்டியாகக் கடித்துக் கொண்டு, ஆவேசத்தோடு காணப்பட்டான். திடீரென்று அவனுக்கு ஒரு யோசனை தோன்றியது. வேகமாக ஒரு கையால் முரடனின் வயிற்றில் ஓங்கிக் குத்தினன். வலிதாங்க முடியாமல் கத்தினன் வந்தவன். உடனே அவன் கையிலிருந்த கத்தி நழுவிக் கீழே விழுந்துவிட்டது. இருவரும், யார் முதலில் கத்தியை எடுப்பது என்ற போராட்டத்தில் ஈடுபட்டனர். மனோரமா, கீழே கிடக்கும் கத்தியை எடுத்து, குளத்தில் எறிந்துவிட வேண்டுமென்று எண்ணினள். எண்ணினளே அன்றி அவளால் ஒன்றும் செய்ய முடியவில்லை! பார்த்துக் கொண்டே பதறும் உள்ளத்தோடு, ஆடாமல் அசையாமல் நின்றிருந்தாள். இருவருக்குமிடையே பலத்த போர் நிகழ்ந்தது. பல குத்துக்களைப் பரிமாறிக்கொண்டனர். முடிவில் முரடன் வெற்றிபெற்ருன். கத்தி அவன் கையில் கிடைத்து விட்டது! இனித்தீர்த்துவிடலாமென்று துள்ளிக் குதித்து, சிவனின்மேல் பாயத் தொடங்கினன். உடனே, அவன் முதுகில் பலமான ஓர் அடி விழுந்ததால் திடுக்கிட்டு, அசைவற்று நின்றுவிட்டான். அவன் கையிலிருந்த கத்தியைக் கண்ணன் வெடுக்கென இழுத்துக்கொண்டான், புதியதாக ஒருவன் வந்துவிட்டான் என்பதை அறிந்ததும்

முரடன் ஓட ஆரம்பித்தான். கண்ணன், அவனைப் பின் தொடர்ந்தான்.

சிவன், மனோரமாவைப் பார்த்தான். அவள் மயக்க முற்றுக் கீழே வீழ்ந்துகிடந்தாள். பதைபதைக்கும் உள்ளத்தோடு அவளை வாரி எடுத்தான்.

"கண்ணா! ஓடாதே! நில், இங்கே வா!" என்று உரக்கக் கூவினான் சிவன். கண்ணன் திரும்பி ஓடி வந்தான். மனோரமாவின் நிலையைக் கண்டு, அவனும் கவலைப்பட்டான்.

"நீ எப்படிக் கண்ணா இங்கு வந்தாய்?"

"சங்கத்தின் சம்பந்தமாகச் சில பேச, வீட்டிற்கு வந்தேன். நீ அங்கு இல்லை. எங்கே என்று அம்மாவைக் கேட்டேன். குளக்கரைக்குச் சென்றிருப்பதாகவும், வேறு வேலை ஏதோ இருப்பதாகவும், உடனே அழைத்துக்கொண்டு வரும்படியும் என்னிடம் சொன்னார்கள். வரும்பொழுதே, குளத்தில் யாரோ கத்துவதைக் கேட்டு வேகமாக ஓடிவந்தேன்......"

"சரி சரி! வீட்டுக்கு உடனே மனோரமாவை எடுத்துச் செல்லவேண்டும்" என்று கூறி, அவளைத் தூக்கித் தன் தோளில் சாய்த்துக்கொண்டு வேகமாக நடக்கத் தொடங்கினான் சிவன்.

"சிவா! யார் அவன்?"

"எனக்கும்தான் தெரியவில்லை"

"இந்த ஊரில் உனக்குமா எதிரி யிருக்கிறான்?"

"எனக்கே புரியவில்லை, கண்ணா!"

மனோரமாவை வீட்டில் கொண்டுபோய், படுக்க வைத்தார்கள். உடனே வைத்தியரை வரவழைத்தனர்.

கண்ணனிடமிருந்து தப்பி ஓடிய முரடன், தோப்பில் புகுந்தான். அங்கு ஒளிந்துகொண்டிருந்த கோடீஸ்வரய்யர், 'முட்டாள்! ஆள் தான் கனமாக இருக்கிறாய், பலம் சிறிது கூடக் கிடையாது! உன்னைப்போய் அழைத்துக்கொண்டு வந்தேனே!'' என்று காளிமுத்துவைத் திட்டினார்.

"நானென்ன சாமி செய்யறது! இரும்புபோல் இருக்குது அவன் கை!'' எப்படியாவது பயலைத் தீர்த்துவிட்டிருப்பேன், அதற்குள் வேறொருவன் எங்கிருந்தோ வந்து தொலைந்தான்!'' என்று பெருமூச்சு விட்டுக்கொண்டே, மிரண்ட விழிகளோடு காளிமுத்து கூறினான்.

"ரொம்பவும் பலசாலிதான் நீ! பொழுது விடிவதற்குள் பழத்தூருக்குப் போய்விடவேண்டும்! நட!'' என்று கூறிக்கொண்டே, அய்யர் வேகமாகக் கால்களை இழுத்துப் போட்டார்!

தன் அன்பு மகள் மனோரமாவைச் சிவன் சொந்த மனைவியாக்கிக்கொண்டான் என்பதை அறிந்த அன்று, எப்படியாவது அவனை வஞ்சம் தீர்த்துக்கொள்வதாகத் தான் செய்த சபதம் நிறைவேறாது போனதற்காக அய்யர் மனம் படாதபாடு பட்டது.

மற்றொரு தடவை கட்டாயம் பார்த்துக்கொள்ளலாம் என்ற தைரியத்தால், மனச்சாந்தி பெற நினைத்தார். ஆனால் முடியவில்லை!

எட்டாவது பகுதி

உரிமைப் போராட்டம்

குமார் பழத்தூருக்கு வந்து ஆறுநாட்களாயின. கோபால், உழவர்கள் தொழிலாளர்கள் ஆகியோரின் குடிசைகளுக்குக் குமாரை அழைத்துச்சென்று, வறுமை நடனம் செய்வதை நேரிலே காணும்படிச் செய்தான். இந்தக் குடிசைகளையும், அவற்றில் வாழ்ந்த மனிதப் பூச்சிகளையும் காணக்காண, "கலையைவிட்டு இவர்களுக்காகத் தொண்டாற்ற வந்ததுதான் சரி, முற்றும் சரி" என்ற எண்ணம் குமாரின் உள்ளத்தில் பலப்பட்டது.

உழவர்கள், தொழிலாளர்கள் அடங்கிய ஒரு பொதுக் கூட்டம் ஒருநாள் கோபாலின் தலைமையில் நடைபெற்றது. அக்கூட்டத்தில் குமார் பேச ஆரம்பித்தான் :—

தலைவர் அவர்களே! தோழர்களே!

உணர்ச்சி ததும்பும் இக் கூட்டத்தில் பேச எழும்போதே என் உள்ளம் ஆநந்தக் கூத்தாடுகிறது. என் மனத்தில் பொங்கி வழியும் மகிழ்ச்சியைப் பேச்சினால் விளக்கிக் காட்டுமளவிற்கு எனக்குப் பேச்சுக்கலையில் பயிர்சி கிடையாது.

இறந்தான் கணவன் என்று கேள்விப்பட்ட இளம் பெண்ணின் காதுகளில், மணந்தவன் மாளவில்லை, உயிரோடே நடமாடுகிறான் என்ற வார்த்தைகள் புகுந்தால், அந்த இளவஞ்சியின் உள்ளம் எவ்வளவு பூரிக்குமோ அவ்வளவு பூரிப்படைகிறேன், உணர்ச்சியற்று நடைப்பிணங்களாக இருந்த ஏழை உழவர்கள் இன்று ஆர்வமும், அஞ்சாமையும் கொண்டு திரண்டிருப்பதைக் காண! வாழ்க, வளர்க இவ்வுணர்ச்சி யென்று வாழ்த்துகிறேன்.

ஏழைகள் நாம்! உழைப்பு நம் தோள்களில்! கவலை யும் ஏக்கமும் நம் இதயத்தில்! இரத்தத்தை வியர்வை யாக்கிச் சிந்துவதும் நாம்! உழைக்கிறோம், ஓய்வின்றி உழைக்கிறோம். நம் உழைப்பில் பிறப்பது செந்நெல், காய் கனிகள், மாடமாளிகைகள், செல்வம், சகலமும்! ஆனால் நம் உடலைத் தழுவுவது, உள்ளத்தில் சுழல்வது வறுமை, வாட்டம்!......கதிரவனின் கொடூரத் தாக்குதலையும் பொறுத்துக்கொண்டு வயல்களில் உடலை மண்ணாக்கி உழைக்கின்றோம்! ஆழத்திலிருக்கும் நீரை அள்ளியள்ளி வார்த்து வயல்களில் தேக்குகிறோம். இவ்வளவு செய் யும் நம குடலைப் பட்டினி நசுக்குவது சரியா? தங்கத் தைச் சுரங்கத்திலிருந்து எடுத்துத் தருகிறோம். தங்கம் தந்த கைகள் "தர்மலட்சுமி" என்று பிச்சை யேற்பது நீதியா? மூச்சையடக்கி முத்தெடுக்கும் நம் முகங்களில் கவலை புன்னகை புரிவது முறையா? கைகளால் விறகைப் பிளந்து தருகிறோம், ஆனால் வேதனை நம் உள்ளத்தைக் கோடரியால் பிளக்கிறதே, இது கொடுமையல்லவா? இவற்றை எல்லாம் சகித்துக்கொண்டு இன்னுமிருப்பது தன்மானமற்ற கோழைத்தன மல்லவா?.........

ஆர்வத்தோடும் ஆவேசத்தோடும், தெளிவோடும் குமார் பேசி முடித்ததும், சிறிது நேரம் கோபால் பேசி னான்.

உரிமைக்காகப் போரிட்ட உத்தமர்கள், வீரர்கள், தியாகிகள் ஆகியோரின் வரலாறுகளையெல்லாம், எடுத்துக் கூறினான் கோபால்.

மார்பில் ஈட்டி பாய்ந்த நேரத்திலும் மனங் கலங்காத மாவீரர்கள், தூக்கு மேடையைக் கண்டு அஞ்சியோடி ஒளி யாமல் அதனைக் கண்டு சிரித்துச் செத்த இளஞ்சிங்கங்கள்,

மன்னனிடமிருந்தும் செல்வச் செருக்கர்களிடமிருந்தும் தூது வந்த நேரங்களில் தூவெனக் காறியுமிழ்ந்துவிட்டு, தன்னை நம்பியிருந்த ஆதரவற்ற மக்களுக்காக அல்லும் பகலும் அயராது தளராது உழைத்த, தலைவர்கள், தளபதிகள்; துப்பாக்கியைக் கண்டு நிலை கலங்காத தீரர்கள்; எதிரி தாள்பணியும் வரைக்கும் போரிடுவேனென்று சூளுரைத்து வெற்றியைக் கண்ட சூரர்கள்—இதுபோல் பற்பல செய்திகளையெல்லாம் உணர்ச்சியோடும், வீரத்தோடும் விளக்கிப் பேசினான் கோபால். அவற்றையெல்லாம் கேட்ட உழவர்கள் உறுதியும் வீரமும் பெற்றார்கள்.

"அடுத்த மாதம் ஐந்தாம் தேதி, வரிகொடா இயக்கத்தை ஆரம்பிக்கலாமா?" என்று கோபால் உரக்கக் கேட்டான்!

"சரி! அப்படியே செய்வோம்!" என்று பதிலளித்தனர் உழவர்கள். 'கோபால் வாழ்க! குமார் வாழ்க!" என்று முழக்கமிட்டனர் மக்கள்.

வரி கொடா இயக்கம் ஆரம்பமாகப்போகிறது என்பதைக் கேள்விப்பட்ட ஜமீன்தார், சுற்றுப்பக்க ஊர்களிலிருந்து குண்டர்களை வரவழைத்தார். போலீஸுக்கும் செய்தியைத் தெரிவித்தார்.

வரி கொடா இயக்கம் ஆரம்பமாயிற்று. வரி கொடுக்க மறுத்த உழவர்களைக் குண்டர்கள் தாக்கினர். பொறுமையோடும், பொருப்போடுமிருந்த ஏழை உழவர்கள் கொதித்தெழுந்தார்கள். குண்டர்களின்மேல் புலியைப்போல் பாய்ந்து போரிட்டனர். கூலிக்கு வந்த குண்டர்கள், உரிமைக்காகப் போரிடும் ஏழைகளின் கனல் கக்கும் கண்களுக்கும், அரிவாள் ஏந்திய கைகளுக்கும் முன் நிற்க தைரியமில்லாமல் ஓடினர்!

செய்தியைச் செவியுற்ற ஜமீன்தார் மிரண்டார்.

"போலீஸ் வந்தால் நிலைமை சரியாய்ப் போய்விடும்! துப்பாக்கியைக் கண்டால் காகங்களைப்போலப் பறந்து விடும் இதுகள்!" என்று ஆறுதல் கூறினார் அய்யர்.

"அய்யரே! நான் ஒன்று சொல்லுகிறேன், அதன் படிச் செய்கிறீரா?"

இவர்கள் செய்யும் ஆர்ப்பாட்டத்தைப் பார்த்தால், நம் வீட்டையும் தாக்கினாலும் தாக்குவார்கள். இரவும் வந்துவிட்டது, போலீஸூம் இன்னும் வரவில்லை. இந்தா ரும்...இப்படி இந்த அறையினுள்ளே வாரும்......இதோ இந்தப் பெட்டி நிறைய நகைகளிருக்கின்றன! இதனை உடனே எடுத்துச்சென்று கோயிலில் பத்திரப்படுத்தி வையும்! கிளர்ச்சி அடங்கியதும் வாங்கிக்கொள் கிறேன்!"

"ஆஹா! அதற்கென்ன! பேஷாச் செய்றேன்! நேக் கும் இதுதான் சரீன்னு படறது!"

இரண்டு நாள் சாப்பிடாதவன் எதிரில் நீண்ட தலைவாழை இலை நிறையச்சோறும், சுவைநிறைந்த பதார்த் தங்களும் படைத்துச் சாப்பிடு என்றால் அவன் கண்களில் எவ்வளவு மகிழ்ச்சி தோன்றுமோ அவ்வளவு மகிழ்ச்சி தோன்றியது அய்யரின் விஷம் கக்கும் கண்களில்! மனோ ரமா அவர் கண்முன் தோன்றி மறைந்தாள்!

மறுநாள் காலை குடியானவர்கள் ஜமீன்தார் வீட்டின் முன் கூட்டம் கூட்டமாகக் கூடினார்கள். வரியைக் குறைக் கும்படி கோஷமிட்டனர். கோபால் அவர்களை அமைதி யாக இருக்கும்படிக் கூறிவிட்டு, ஜமீன்தாரைக் கண்டு நிலைமையை நேரில் விளக்கிக்கூற வீட்டினுள் குமாருடன்

சென்றான். முதலில் காவற்காரன் உள்ளே அனுமதிக்க மறுத்தான். பிறகு கூட்டத்தைக் கண்டு பயந்து பேசாம விருந்து விட்டான். இருவரும் உள்ளே சென்றனர்.

இதற்குள் பல வண்டிகளில் போலீஸ் வந்துவிட்டது. அமைதியாக இருந்த கூட்டத்தைப் பலவந்தமாக விரட்டினர் போலீசார். குடியானவர்கள் கலைய மறுக்கவே தடியடிப் பிரயோகம் நடைபெற்றது! உழவர்கள் பின்னுக்கு ஓடுவதும் திரும்பவும் முன்னுக்கு விரைந்து வருவதுமாக இருந்தனர். இன்ஸ்பெக்டர் இருதய நாதன் ஜமீன்தாரைக் காண உள்ளே சென்றான்.

யாரோ வரும் காலடிச் சப்தத்தைக் கேட்டதும், கோபாலும் குமாரும் ஜமீன்தார் அறையை விட்டுத் தோட்டத்தின் வழியாக ஓடினர். இன்ஸ்பெக்டர் அறையினுள் நுழைந்தார். நுழைந்ததும் அவர் திடுக்கிட்டு அசைவற்று நின்று விட்டார். அவர் கண்கள் விரிந்தன! ஜமீன்தார் கட்டிலின் மேல் கொலை செய்யப்பட்டுக் கிடந்தார்! அறை முழுவதும் இரத்தம் உறைந்திருந்தது!

இன்ஸ்பெக்டர் இருதய நாதன் வெளியே ஓடிவந்தார். "கொலை! கொலை! பிடியுங்கள்!" என்று கத்தினார், சுடும்படி உத்தரவிட்டார். போலீஸார் சுட்டனர். சிலர் இறந்தனர், பலர் கைதியாயினர்!

ஒன்பதாவது பகுதி

கன்னியின் கலக்கம்.

நாற்காலியில் உட்கார்ந்திருந்த வையாபுரி, அன்று காலை வந்த தினசரி யொன்றைக் கையில் வைத்துக் கொண்டு, ஆழ்ந்த யோசனையில் ஈடுபட்டவரைப் போலக் காணப்பட்டார். கண்களை நன்றாகத் திறந்து, பத்திரிகையில் ஒரே இடத்தை அடிக்கடி பார்த்தார். அவர் வாய் ஏதேதோ முணுமுணுத்தது.

"குமுதம்!" என்று தன் மகளை அழைத்தார். அப்பா ஏதோ சொல்ல அழைக்கிறார் என்றெண்ணிய குமுதம் வேகமாக உள்ளேயிருந்து வந்தாள்.

"குமுதம், இன்று பத்திரிகையைப் பார்த்தாயா?" என்று ஆச்சரியம் கலந்த குரலில் வையாபுரி கேட்டார்.

"இல்லை அப்பா! ஏதாவது முக்கியமான செய்தியிருக்கிறதா?" என்று சாதாரணமாக அவள் கேட்டாள்.

வையாபுரி பேசாமல் பத்திரிகையை அவளிடம் கொடுத்துவிட்டு எழுந்து வெளியே சென்று விட்டார்.

தினந்தினம் பத்திரிகையைத் தவறாது பார்க்கும் பழக்கம், குமுதத்தினிடம் கிடையாது. ஏதாவது ஒரு நாள் பொழுது போகவில்லையென்றாலோ அல்லது படிப்பதற்குச் சுவையுள்ள புத்தகங்கள் கிடைக்கவில்லை யென்றாலோ தான் அன்று அவள் பத்திரிகையைப் பார்ப்பது வழக்கம். அப்பொழுதும் அரசியல் சம்பந்தமான செய்திகளைப் படிக்கமாட்டாள். தீப்பற்றியதால் ஏழுபேர் இறந்தனர்; பட்டினியின் கொடுமை தாங்காது, தான் பெற்ற குழந்தைகள் மூவரைக் கிணற்றில் தள்ளிவிட்டுத் தானும் விழுந்து

இறந்தாள் ஒரு பெண்; அமெரிக்காவில் ஒரு மாதுக்கு ஒரே சமயத்தில் ஆறு குழந்தைகள் பிறந்தன; விதவை பொருத்தி தான் கள்ளத்தனமாகப் பெற்ற குழந்தையை; இரவில் கிணற்றில் போட்டுவிட்ட குற்றத்திற்காக ஐந்து மாதச் சிறைத் தண்டனை பெற்றாள்-இவைபோன்ற சிறுசிறு ஆனால் அவளுக்குப் பிடித்தமான செய்திகளை மட்டுந்தான் தினத்தாளில் அவள் படிப்பது வழக்கம்.

நிதானமாகப் படிக்கலாமென்று, பத்திரிகையை எடுத்துக் கொண்டு தன் அறைக்குச் சென்று கட்டிலின் மேல் படுத்தாள்.

கட்டிலில் படுத்ததும் அவளும் குமாரும் ஆனந்தத்தால் மெய்ம் மறந்த இன்ப நேரங்கள் கன்னியின் கவனத்திற்கு வந்தன. தன் கண்களில் தோன்றிய நீரைத் துடைத்துக் கொண்டு, பத்திரிகையைப் பிரித்தாள் படிக்க.

"பழத்தூர் ஜமீன்தார் கொலை" என்று கொட்டை கொட்டையான எழுத்துக்கள் தலை நீட்டி நிற்பது முதலில் அவளது கண்களுக்குத் தென்பட்டன. பழத்தூர் என்ற பெயரைப் பார்த்ததும், அவள் மனத்தில் ஒருவித பயம் தலைதூக்கியது. அவசர அவசரமாக அச்செய்தியைக் கண்களால் விழுங்கத் தொடங்கினாள்.

பழத்தூர் ஜமீன்தார் கொலை.

குடியானவர்களின் ஆர்ப்பாட்டம்.

குமாரும் கோபாலும் மறைந்தனர்.

நேற்று இங்குள்ள குடியானவர்கள் வரி கொடா இயக்கத்தை ஆரம்பித்து, ஜமீன்தார் ஜம்புலிங்கம் பிள்ளைக்கு எதிரிடையாகப் பெருத்த ஆரவாரமும் ஆர்ப்பாட்டமும் செய்த

னர். கிளர்ச்சி செய்த கும்பலைக் கலைந்து போகும்படிப் போலீசார் பல முறை வேண்டிக் கொண்டும், கலைய மறுக்கவே தடியடிப் பிரயோகம் செய்ய நேரிட்டது. இதற்கிடையே இக் கிளர்ச்சியைத் தூண்டிவிட்ட குமாரும் கோபாலும், ஜமீன்தாரைக் கொலை செய்துவிட்டு ஓடி மறைந்தனர், ஜமீன்தார் கொலையுண்டார் என்பதை அறிந்ததும் குடியானவர் போலீசாரைத் தாக்க முயலவே, சுட நேரிட்டது! இதன் விளைவாகச் சிலர் இறந்தனர். பலர் பாதுகாவலில் வைக்கப்பட்டுள்ளனர். போலீஸார் புலன் விசாரித்து வருகின்றனர். (ந. நி.)

இச்செய்தியைப் படித்து முடிப்பதற்கும், கண்ணீரால் அவள் கண்கள் மறைக்கப் படுவதற்கும் சரியாகவிருந்தது. தலையணையில் முகத்தை மூடிக்கொண்டு தேம்பித் தேம்பி அழுதாள்.

"அம்மா, சாப்பிட வில்லையா? நேரமாகிறது" என்று வேலைக்காரி வந்து அழைத்தாள்.

"போடி, இப்பொழுது எனக்கு ஒன்றும் வேண்டாம்" என்று கூறி அறையின் கதவைத் தாளிட்டுக் கொண்டு புத்தகத்தில் ஒளித்து வைத்திருந்த தன் காதலனின் உருவப் படமொன்றை எடுத்தாள். அதனை உற்றுப் பார்த்தாள். நீர் நிறைந்த கண்களோடும், பதை பதைக்கும் உள்ளத்தோடும், சோகம் தோய்ந்த முகத்தோடும் அவள் காணப்பட்டாள். குமார் சுவைத்த கனி இதழ்கள் துடிதுடித்தன; அடிக்கடி "அத்தான், அத்தான்!" என்று முணுமுணுத்தன.

வழிந்தோடிய அவள் கண்ணீர் குமாரின் படத்தை ஈரமாக்கியது.

“இரண்டே வாரங்களில் வந்து விடுவேன்”— இப்படிக் குமாரின் உருவப்படம் அவளிடம் பேசாமல் பேசியது.

அப்படத்தைத் தன் மார்பில் அணைத்துக்கொண்டு கட்டிலில் சாய்ந்தாள். கண்களை இறுக மூடிக்கொண்டு தலையை இப்படியும் அப்படியும் அசைத்தாள், வேதனையைத் தாங்க மாட்டாது.

“ஈரோட்டில் புது முறையில் தயாரிக்கப்பட்டு, காஞ்சியில் சுவையும், மெருகும் தரப்பட்ட மாத்திரை எப்படிப்பட்ட பரம்பரைப் பைத்தியத்தையும் ஓட்டிவிடும்! இன்னும் கொஞ்சம் உனக்குத் தரவேண்டும்! வந்து தருகிறேன்......” குமாரின் இச் சொற்கள் அவள் காதுகளில் வந்து ரீங்காரம் செய்தன.

“வந்து தருகிறேன் என்றீரே, எப்பொழுது அத்தான் வருவீர்?” என்று வாய்விட்டுக் கூறி அழுதாள்.

இரத்தத்தில் தோய்த்தெடுத்த கத்தியைக் கையில் வைத்துக்கொண்டு, கீழ் உதட்டைக் கடித்துக்கொண்டு, கோரமான நிலையில், பார்ப்பதற்கே உள்ளம் நடுங்கும் கொலைகாரனின் உடையில், குமார், அவள் மனக்கண் முன் வந்து நின்றான்.

அவள் உடல் உதற ஆரம்பித்தது. “அத்தான், நீங்களா இப்படி ஆகிவிட்டீர்! என்னால் நம்ப முடியவில்லையே! என் கூந்தலில் மலர் சொருகிய தங்கள் கையிலா வாள்? உமது உடலுக்கு என்னை உடையாக்கிக் களித்த தாங்களா கொலைகாரனின் ஆடையை அணிவது? வெட்கத்தால்

மாட்டேனென்றால், சுவைத்துப்பார் என்று எனக்குத் தந்த தங்கள் இதழா பற்களுக்கிடையில் சிக்குவது?...... அத்தான் இக்காட்சி உண்மையா?......இப்படி ஏதேதோ தனக்குத்தானே வேதனையோடு பேசிக் கொண்டாள்.

அவள் கையிலிருந்த படம் நழுவிக் கீழே விழுந்தது. குமார் தன்னை விட்டுப் பிரிந்தபோது கூட அவள் மனம் அவ்வளவு அதிர்ச்சியடையவில்லை. ஆனால் தரையில் படம் விழுந்து விட்டது என்பதை அறிந்ததும் அவள் மனம் திடுக்கிட்டது.

தரையில் கிடந்த காதலனின் நிழல் படத்தை, ஏக்கத்தோடு நோக்கினாள்.

குமாரின் அழகிய முகம், வாடியது. ஆனால் அதிலிருந்த சாந்தம் சிறிதுகூடக் குறையவில்லை. "குமுதம், நீயுமா இதனை நம்புகிறாய்?" என்று குமாரின் நிழல் அவளிடம் பேசுவதைப்போல அணங்கிற்குத் தோன்றியது.

"இல்லை! இல்லை! நான் இதனை நம்பவில்லை!" என்று உரக்கக் கூவினாள்.

கதவை யாரோ தட்டும் சப்தத்தைக் கேட்டதும் திடுக்கிட்டு, அப்படத்தைப் புத்தகத்திற்குள் மறைத்து விட்டு, நீர் விழிகளைத் துடைத்துக்கொண்டு எழுந்தாள். மெதுவாக நடந்து சென்று கதவைத் திறந்தாள். கதவைத் தட்டியது தன் தந்தை என்பதை அறிந்ததும், பயத்தால் அவள் நெஞ்சம் குலுங்கியது.

"என்ன குமுதம், ஏதேதோ கூறி அழுகிறாய்?" என்று ஒன்றும் தெரியாதவரைப் போல வையாபுரி கேட்டார்.

"ஒன்றுமில்லை அப்பா!" என்று மெதுவாகச் சோகமும் நாணமும் கலந்த குரலில் பெண் கூறினாள். அவள் கண்கள் திரும்பவும் கலங்க ஆரம்பித்தன.

அவள் மனநிலையை நன்கு புரிந்து கொண்டார் வையாபுரி. அன்போடு தன் மகளை நோக்கினார்.

"அழாதே குமுதம்! இதில் ஏதோ சூழ்ச்சி நடந்திருக்கிறது." என்று பரிதாபமாகப் பேசினார் அவர்.

"எதில் அப்பா சூழ்ச்சி? பத்திரிகையிலே செய்தி வந்திருக்கும்போது......"

"நீ குழந்தை அம்மா! உனக்கு ஒன்றும் தெரியாது. பத்திரிகையில் வருவதெல்லாம் உண்மையாக இருக்கும் என்று நம்ப முடியாது! ஒரு செய்தி என்றால் இதில் உண்மையும் இருக்கலாம், பொய்யுமிருக்கலாம். இது பத்திரிகை உலகில் சகஜம்." என்று பத்திரிகைகளின் குணத்தையும் போக்கையும் விளக்கத் தொடங்கினார்.

"அப்படியானால், இது உண்மையாக இருக்காதே அப்பா?" என்று குழந்தையைப் போலக் கேட்டாள். அப்படிக் கேட்பதில் ஒருவித ஆறுதலிருப்பதாக அவளுக்குத் தோன்றியது.

வையாபுரி தலையை அசைத்தார். என்ன சொல்வதென்றே அவருக்குத் தோன்றவில்லை.

பத்தாவது பகுதி

"கண்ணே! மனோரமா!"

வைத்தியர் தந்த மருந்தை வாங்கிச் சாப்பிட்டுவிட்டு, மனோரமா கட்டிலில் சாய்ந்தாள். அவளருகே சிவனும், வைத்தியரும் நின்றுகொண்டிருந்தனர்.

"மனோரமா, இப்பொழுது உடம்பு எப்படி இருக்கிறது?" என்று கவலையோடு கேட்டான் சிவன்.

சோர்வடைந்த கண்களால் அவனைப் பார்த்து "பரவாயில்லை! சுமாராகத்தானிருக்கிறது!" என்று மெதுவாக, பலமற்ற குரலில் கூறினாள் மனோரமா.

வைத்தியரும், சிவனும் அந்த அறையை விட்டு வெளியே வந்தனர். பணத்தை எண்ணி வைத்தியரிடம் கொடுத்துவிட்டு, "குணமாக இன்னும் எத்தனை நாட்களாகும்" என்று ஆவலோடு சிவன் வினவினான்.

"இன்னும் ஒரு வாரத்தில் சரியாகிவிடும்" என்று கூறிப் பணத்தைப் பத்திரப்படுத்திக் கொண்டு வெளியே சென்றார் வைத்தியர்.

கட்டிலில் படுத்துக் கொண்டிருந்த மனோரமாவின் கண்கள் மிரண்டு மிரண்டு கூரையைப் பார்த்தன. அன்றொரு நாள் இரவு குளக்கரையில் ஏற்பட்ட திடீர் சம்பவம் அவள் கண்முன் தோன்றியது.

"யார் நீ?" என்று சிவன் அதட்டிக் கேட்க, "நானு யார்? இதோ இன்னும் சற்று நேரத்தில் தெரிகிறது!" என்று கூறிக்கொண்டே காளிமுத்து கத்தியினால் குத்த விரைந்து வந்த காட்சி அவள் மனதைவிட்டு அகலவே யில்லை. இக்காட்சி அடிக்கடி அவளெதிரே தோன்றி, அவள் மனதைப் பயமுறுத்தியது.

அன்றிரவு, மயக்கமுற்றுக் கீழே சாய்ந்த மனோரமா, அதே கிலியினாலும், திடீர் மன அதிர்ச்சியினாலும், நோய் வாய்ப்பட்டாள். அன்று தொடங்கிய அவள் நோய் நாளுக்கு நாள் வளர்ந்துகொண்டே சென்றது.

படுத்திருந்த மனோரமா கண்களை மூடினாள். திரும்பத்திரும்ப அக் குளக்கரைக் காட்சியே அவளெதிரில் தோன்றிக் கொண்டிருந்தது.

சிவனுக்கும் காளிமுத்துவுக்கும் பலத்த போர் நிகழ்வதைப் போலவும், கீழே வீழ்ந்திருந்த கத்தியை மறுபடியும் முரடன் எடுத்துக் கொண்டதைப் போலவும், முரடனின் கைவாள், தன் காதலனின் இதயத்தில் புகுந்து, இரத்தத்தைப் பீறிடச் செய்வதைப் போலவும், அவள் மனக் கண்முன் தெரிந்தது. இதனைக் கண்டதும் "ஐயோ ஐயோ!" என்று அலறினாள். அறைக்கு வெளியிலிருந்த சிவன் ஓடோடியும் வந்து, "என்ன மனோரமா?" என்று பதைபதைக்கும் உள்ளத்தோடு கேட்டான்.

"இப்படி வாருங்கள்!" என்று சிவனை அழைத்தாள். சிவன் அருகில் வந்ததும், உட்காருங்களென்றாள்! சிவன் அவளருகில் கட்டிலின் மேல் உட்கார்ந்தான். மனோரமா, அவன் பரந்த மார்பைத் தடவிப் பார்த்தாள்.

"மனோரமா! என்ன வேண்டும்?"

"ஒன்றுமில்லை! தங்கள் மார்பில் கத்தி......".

"கண்ணே! வீணாக மனதை ஏன் இப்படியெல்லாம் ஓடவிடுகிறாய்?......பேசாமல் தூங்கு!" என்று அன்போடு கூறி, அவளைப் படுக்கவைத்தான்.

மாதங்கள் பல சென்றும் தன் மனைவி குணமடையவில்லை என்பதை எண்ணி யெண்ணி சிவன் வேதனை அடைந்தான்.

நோயால் பீடிக்கப்பட்ட மனோரமாவின் உடல் நாளுக்கு நாள் இளைத்துக்கொண்டே வந்தது. அவள் உடல் இளைக்கஇளைக்கச் சிவனின் உள்ளம் படாதபாடுபட்டது. பலப்பல வைத்தியர்கள் வந்து நைந்து போனார்கள். ஆனால் அவள் உடலிலிருந்த நோய் மட்டும் போகவில்லை.

கடைசியில் கண்ணனின் யோசனையின்படி அவளை மலர்புரிக்கு எடுத்துச் செல்வது என்று தீர்மானித்தான்.

வைத்தியர் வையாபுரியின் வைத்தியசாலையில் மனோரமா சேர்க்கப்பட்டாள். சிவனின் அன்னை தாயாரம்மாள், மனக் கவலையால் மகனின் உடல் கரைந்துகொண்டே வருவதைக் காணக்காண வேதனைப்பட்டாள். மலர்புரியை அடைந்தும் சிவனின் உள்ளம் சிறிதும் அமைதி பெறவில்லை.

மலர்புரியில் சிவனும் அவள் தாயாரும் வெளியில் தங்க வசதியில்லாமல் போகவே, வைத்தியர் வீட்டிலேயே தங்கினார்கள். அவ்வூரில் அவர்கள் மூன்று மாதங்களுக்கு மேல் தங்கியிருக்க நேரிட்டது.

சிவனின் பெருந்தன்மையும், பேசும் வன்மையும், வையாபுரியை அவனிடம் அன்பும் மதிப்பும் கொள்ளச் செய்தன. பழக்கம் அதிகமாகவே, அவர்கள் வேற்று மனிதர்கள் என்ற வித்தியாசத்தை மறந்து ஒருவரோடொருவர் உறவினர்களைப் போல, அன்யோன்யமாக நெருங்கிப் பழகினார்கள்.

தாயற்ற குமுதத்தினிடம் தாயாரம்மாள், ஆசையோடும், அன்போடும் பழகி வரலானாள்.

மகளில்லா அவள், குமுதத்திற்குப் பின்னல் முதலிய அலங்காரங்களைத் தன் கையினாலே செய்து, அதனைக்

கண்டு அகங் குளிர்வாள். குமுதம் தன் கவலையை மறப்ப தற்காக, வீணையெடுத்து, விரல் அசைத்து இசை யெழுப் புவாள். அந்த இசையைக் கேட்டு மகிழ்வாள் தாயாரம் மாள். நாள் செல்லச் செல்ல, தாயன்பை அறியாத குமு தம் தாயாரம்மாளின் அன்பில் தன் உள்ளத்தைக் கொள்ளை கொடுத்தாள்.

மனோரமாவின் நோயைப் போக்க, வையாபுரியும் எவ்வளவோ கஷ்டப்பட்டுத்தான் பார்த்தார். அவள் தேர்ந்தெழுவாள் என்று அவருக்குத் தோன்றவில்லை.

ஒரு நாள் வைத்தியர் சிவனைத் தன்னருகே அழைத் தார். வையாபுரி என்ன கூறப்போகிறாரோ என்று துடி யாய்த் துடித்தது சிவனின் உள்ளம்.

"சிவா, உண்மையை ஒளிக்காமல் சொன்னால் வருத் தப்பட மாட்டாயே?"

"சொல்லுங்கள்!"

"மனோரமா இனி பிழைப்பது கடினம்!"

சிவனின் தலையில் யாரோ சம்மட்டியால் அடிப்பதைப் போல் தோன்றியது. அவன் மனம் வேதனையால் குழம்பியது.

சிவா, வருநதாதே, நம்மால் ஆவது என்ன இருக் கிறது? முதலிலிருந்தே டைபாய்ட் ஜுரத்தால் அவள் உடல் இளைத்துக்கொண்டே வந்துவிட்டது, இப்பொ ழுது ஜுரம சிறிது குறைந்திருக்கிறது."

சிவனின் முகத்தில் சிறிது தெளிவு காணப்பட்டது. அவன் கண்களில் வழிந்துகொண்டிருந்த நீரைத் துடைத் துக்கொண்டு, திரும்பவும் ஆவலோடு அவரது முகத்தைப் பார்த்தான்.

"டைபாய்ட் ஜுரத்தோடு மட்டும் நின்றிருந்தால் எப்படியாவது பிழைக்கும்படிச் செய்துவிடுவேன். ஆனால்........"

"ஆனால்" என்று அவர் இழுத்தது, அவன் உயிரை யாரோ கயிறு கட்டி இழுப்பதுபோலிருந்தது. அவன் மனதில் வேதனைப் புயல் சுழன்று சுழன்று வீசியது. திரும்பவும் கவலையால் அவன் முகம் வாடியது.

"ஆனால்......?" என்று துடிதுடிக்கும் உள்ளத்தோடு கேட்டான் சிவன்! அவன் கன்னங்களில் கண்ணீர் புரண்டது.

"வருந்தாதே சிவா!" என்று அன்பாக அவனது கண்ணீரைத் துடைத்தார் வையாபுரி.

"ஜுரத்தோடு காசநோயும் கலந்து கொண்டது; உடலிலோ சிறிதும் பலமில்லை. ஆகவே இனி அவள் பிழைப்பது......................சிவா! அழாதே! அவளை ஊருக்கு எடுத்துக்கொண்டுபோய் விடுவதுதான் நல்லது"—வேதனை தாங்கமுடியாமல் வைத்தியர் இப்படி வேகமாகச் செய்தியைக் கூறி முடித்தார். சிவன் அசைவற்று கற்சிலையைப் போல் நின்றுவிட்டான்!

கற்சிலையைப் போல் நின்றிருந்த சிவனுக்கு வையாபுரி ஆறுதல் மொழிகள் பல கூறினார். அவர் தேற்றத் தேற்ற சிவன் குழந்தையைப்போலத் தேம்பித் தேம்பி அழுதான்.

மனோரமா சோலையூருக்கு எடுத்துச் செல்லப்பட்டாள். தாயாரம்மாள், தன் மருமகளுக்கு உயிர்ப் பிச்சை தரும்படி உள்ளூர் வெளியூர்க் கடவுள்களை எல்லாம் வேண்டிக்கொண்டாள். மகன் பேச்சையும் கேட்காமல் கோயில்களுக்கு வித விதமான அபிஷேகங்களைச் செய்தாள். கட

ருள் கண் திறந்தார்! ஊரை அடைந்த ஆறும்நாள் மனோரமா, ஆவி நீத்தாள்!

"கண்ணே மனோரமா!" என்று கண்ணீர் சிந்தி, கதறிக் கதறி அழுதான் சிவன். பலர் எவ்வளவோ தேற்றியும் அவன் மனம் சமாதானம் அடையவில்லை. அவளிடம் ஆழ்ந்த அன்பு கொண்டவனால் அவ்வளவு சுலபத்தில் துக்கத்தைத் துடைத்துக்கொள்ள முடியுமா?

யாருமே இல்லாத இடத்தில் உட்கார்ந்து கொண்டு சிவன் தாங்க முடியாத கவலையினால், வாய்விட்டுக் கதறி அழுதான்.

"கண்ணே! மனோரமா! நீ இன்றி இனி எப்படி வாழ்வேன்? உன்னைப் பிரிந்து வாழும் வாழ்வும் ஒரு வாழ்வா? வண்ண மயில்போல் அன்று ஏன் என் கண்முன் தோன்றி ஆடினாய்? மணந்த என்னைத் தவிக்கவிட்டுத் திடீரென்று மயானம் செல்லத்தானா, என் கண்ணையும் என் நெஞ்சையும் அன்று கவர்ந்தாய்?

"குளத்திற்கழகு தாமரை மலர்ந்திருப்பது என்பது உண்மைதான். ஆனால் மலர்ந்த தாமரை எருமையின் கால்களால் மிதியுண்டு சேற்றில் புதைந்து அழுகுவதை விட, மலராமலே இருந்திருந்தால் அதனால் ஏதாகிலும் நஷ்டமா? வாழ்விற்கு இன்பம் காதல்! மறுப்பார் இல்லை! ஆனால் தோன்றிய காதல் இப்படிக் கருகிவிடுவதை விட, காதலே பிறக்காமல் இருந்திருந்தால் இன்பமும் துன்பமும் ஏது? மனோரமாவைக் கைப்பற்றிய போது எவ்வளவு களிப்புக் கொண்டேன் ஆனால் இன்று..........." இப்படிப் பற்பல கூறிப் புலம்பினான். மனப்புயலில் சிக்கிய மனிதப் படகானான்! அவன் உள்ளத்தில் துன்பப் புயல் ஓயாது ஒழியாது வீசிக்கொண்டே இருந்தது!

மாதங்கள் பல சென்றன. இன்பம் தந்த மனோரமா தான் சாகும் முன்னரே, அவனுக்குத் தீராத துன்பத்தைக் கொடுத்துவிட்டுச் சென்றுள். அன்பின் மிகுதியால் அவனைப் பிடித்திருந்த காசநோயையும் பொருட்படுத்தாது, தானே எந்நேரமும் அவளருகில் இருந்து, அவளுக்கு வேண்டிய உதவிகளைச் செய்துகொண்டிருந்ததினால் அந் நோய் சிவனையும் பற்றிக் கொண்டது!

மனக் கவலையினால் நாளுக்கு நாள் அவன் உடலின் உரம் குறைந்து வரவே, காசநோய் சிறிது சிறிதாக வளர ஆரம்பித்தது. நாளாக நாளாக வளர்ந்து வந்த காசநோய் வேலை செய்யவும் தொடங்கியது. நலம் குறைந்த உடலில் தானே காசநோய் நன்றாக வேலை செய்யும்?

தன் மகனின் நிலையைக் கண்ட தாயாரம்மாள் கண்களில் இரத்தக் கண்ணீர் கசிந்தாள். தன் ஒரே மகனுக்கு மறுமணம் செய்து, அவன் இன்பமாக இருப்பதைக் கண் குளிரப் பார்த்துவிட்டுத்தான் கண்மூட வேண்டுமென்று அவள் ஆசைப்பட்டாள்.

மறுமணம் என்றாலே சீறி விழுவான் சிவன். கல்யாணம் என்ற பேச்சைக் கேட்டதும், சிவனின் அகக்கண் முன்பு அழகும் அகோரமும் நிறைந்த இரண்டு காட்சிகள் தோன்றி, அவனை நிலைகலங்கச் செய்தன.

மலர்த் தோட்டத்தில் அம் மங்கையை அவன் கண்டதும், காளை அனுப்பிய புதுப் பார்வையில் கன்னி கட்டுண்டதும், பின் இசைந்ததும், மின்னல் கொடிபோன்ற அவள் அவன் மார்பில் சாய்ந்ததும், தேனினுமினிய முத்தங்கள் தந்ததும், முல்லை மொக்குகள் போன்ற பல் வரிசை சிறிது வெளித்தெரிய அவள் புன்னகை பூத்ததும்—ஒரு காட்சி! மரணப் படுக்கையிலிருந்த மனோரமாவின் மெலிந்த தோள்

போர்த்த எலும்புக் கூடு, அழகற்ற கன்னங்கள், ஏதேதோ பிதற்றும் வாய், உலர்ந்த உதடுகள், பஞ்சடைந்த கண்கள், வாயினின்று ஒழுகுகிற நீர், பிணம்-இது மற்றொரு காட்சி! இந்த இரண்டு காட்சிகளும் தூங்கினால் கனவாகவும், விழித்தால் நினைவாகவும் மாறி மாறி அவனை வாட்டி வந்தன.

இந்த மன நிலையில் இன்னொருத்தியை மணந்துக் கொள்ள எப்படி இசைவான் அவன்?

"ஏன் என்னை மறுமணம் செய்துகொள்ளும்படித் தொந்தரவு செய்கிறீர்கள்? மனோரமா இறந்தாள்—அவளோடேஎன் உள்ளத்திலிருந்த பெண்ணாசையும் இறந்து விட்டது" என்று மறுமணம் செய்துகொள்ளும்படி வற்புறுத்துபவர்களிடம், வருத்தமான குரலில் பதிலளிப்பான் சிவன்.

"கட்டுள்ள உடலா, மற்றொருத்தியைக் கட்டிக் கொள்ள! அதுவுமில்லையே! காசநோயின் காரணமாக, உடலும் அல்லவா கரைந்துகொண்டே வருகிறது. செல்லரித்து உளுத்துக்கொண்டே வரும் மரம்போலாகி விட்டதே என்னுடல்......" இப்படி எண்ணிப் பெருமூச் செறிவான்.

காலமென்ற மரத்திலிருந்து நாட்களென்ற சருகுகள் உதிர்ந்து கொண்டே இருந்தன. ஒரு நாள் தாயாரம்மாள் சிவனின் அறையினுள் வந்தாள். படுத்திருந்த சிவன் எழுந்து உட்கார்ந்தான்.

"சிவா!"

"ஏனம்மா?"

"நான் சொல்வதை நீ கவனிக்காமலேயே இருந்தால், பிறகு எப்படித்தான்........"

"நான்தான் வேண்டாம், வேண்டாம் என்று கூறுகிறேனே, என்னை ஏன் அபமா தொந்தரவு செய்கிறீர்கள்?"

"சிவா!"

"என்னைத் தன்புறுத்தாதீர்கள் அம்மா!"

"அப்பா! வாழையடி வாழையாக வந்ததடா நம் குடும்பம். யோசித்துப்பார், உன் பெயரைச் சொல்ல ஒரு குழந்தை வேண்டாமா? பழமையான நம் குடும்பம் உன்னுடனேயே முடிந்துவிட வேண்டுமா? நினைத்தாலும் என் நெஞ்சம் நிலை தடுமாறுகிறதே!...சிவா! என் கண்ணே! உன் தந்தை இறந்தாரே, அப்போதே நானும் இறந்திருக்கக் கூடாதா? இந்தத் தள்ளாத வயதிலே தாங்கமுடியாத இவ்வளவு பெரிய துக்கம் வரவேண்டுமா? சிவா, சாந்தியோடு நான் சாவது உனக்கும் சம்மத மில்லையா? பாலூட்டித் தாலாட்டி வளர்த்த என் வயிற்றில் பால் வார்ப்பாய் என்று தானே நம்பினேன். நீ என் பெற்ற வயிற்றில் சோகத்தீ ஏற்றுகிறாயே; ஏற்றதா இது? திடீர் அதிர்ச்சினால் பலர் செத்ததாகச் செய்திகள் படிப்பாயே, நான் ஏன் அப்படி இன்னும் சாகாமலிருக்கிறேன்........"

"போதும், போதும் அம்மா! என் கவலையை இன்னும் அதிகமாக்காதீர். அம்மா, தாங்கள் நன்றாகப் படித்தவர்கள். யோசித்துப் பாருங்கள், காசநோயால் என் உடல் இளைத்துக்கொண்டே வருகிறதே, இந்த நிலைமையில் வேறொரு இளம் பெண்ணை மணந்து அவளது வாழ்க்கையைப் பாழாக்கவேண்டுமா?"

"சிவா! கவலையால் உன் உடல் இளைக்கிறது அதற்குக் காசநோயும் உடந்தையாக இருக்கிறது. மனக் கவலை நீங்கினால், உடலில் உரமேறும், காசநோயின் பலமும் குறையும். நல்ல வைத்தியம் செய்தால் காசநோய் தானே

கப் போய்விடும் பிறகு நீ பழையபடி நல்ல நிலைக்கு வந்து விடுவாய்!"

"கவலை தீர்ந்தால்தானே?"

"அதற்குத்தானே கல்யாணம் செய்துகொள்ளும்படி சொல்வது. மனைவி வந்தால் காலப்போக்கில் உள்ளத்திலிருக்கும் கவலை தானாகவே மறைந்துவிடும். பிறகு சிறிது சிறிதாக மகிழ்ச்சியும் பிறக்கும். இப்படியாக முன் போலவே நீ பழைய சிவனாக மாறிவிடுவாயடா!"

"அம்மா! எனக்கென்னமோ மறுமணமென்றாலே வெறுப்பாகத்தான் இருக்கிறது!"

"கண்ணே! சிவா! எந்த உதிரத்தில் நீ தோன்றினாயோ, எந்த உதிரம் பாலாக மாறி உன்னை வளர்த்ததோ, அதே உதிரம் கண்ணீராய் மாறி உன் எதிரே சிந்துகிறதே, ...கண்ணில்லையா உனக்கு! கல்லா உன் மனம்?'

"அம்மா! அம்மா! போதும் போதும், என்னை மேலும் வாட்டாதீர், வயது சென்ற தங்களை வருத்தத்திற்குள்ளாக்கினேனே! அம்மா......." என்று கூறிக் கொண்டே தன் அன்னையின் பாதங்களில் விழுந்து தேம்பித் தேம்பி அழுதான்! தாயும் அழுதாள், தனயனும் அழுதான்.

தாயாரம்மாள் மகனின் கண்ணீரைத் துடைத்துத் தேறுதல் கூறினாள்! அவளும் தன் கண்களைத் துடைத்துக் கொண்டு மேலும் பேச ஆரம்பித்தாள்.

"அப்பா! சென்றதை எல்லாம் மறந்துவிடு. இனியாகிலும் நல்லபடி இரு. இப்பொழுதாகிலும் கூறு மணம் செய்துகொள்ளுகிறேனென்று! ஏன், சிவா, இன்னுமா பிடிவாதம்? யோசித்துப்பார்!........வாய்திறந்து பேசடா

கண்ணே!" என்று கூறியதும் திரும்பவும் அவள் கண்க ளில் நீர் நிறைந்தது.

தன் தாய் மேலும் அழுவதைக் கண்டு சகிக்க முடியா தவனாய், "சரி அம்மா!" என்று பதிலளித்தான். திடீ ரென்று அவன் முகம் மாறிவிட்டது. அவன் வாய் "கண்ணே, மனோரமா" என்று முணுமுணுத்தது.

"சரி அம்மா!" என்ற சொற்கள், அவளுக்கு இவ் வளவுதான் மகிழ்ச்சியைத் தந்தன என்பதைக் கூறவே முடியாது. அவள் இதயத்தில் மாண்ட மகன் மீண்டது போன்ற ஓர் இன்ப உணர்ச்சி உண்டாயிற்று.

பதினோராவது பகுதி

வேல் பாய்ந்த மான்!

"சரி அம்மா" என்று சிவன் கூறிய நாளிலிருந்து தாயாரம்மாளின் கவலையெல்லாம் மறைந்துவிட்டது. அவள் சித்தம் குளிர்ந்தது. மகனின் திருமணத்திற்கு வேண்டிய ஏற்பாடுகளை மும்முரமாகச் செய்துகொண் டிருந்தாள்.

மலர்புரியை விட்டு வந்ததிலிருந்து குமுதத்தின்மேல் தாயாரம்மாளுக்கு ஏதோ ஒருவிதமான மறக்க முடியாத பாசம் ஏற்பட்டுவிட்டது. குமுதத்தின் அடக்கம், அறிவு நுட்பம், அழகு, வீணைப் பயிற்சி ஆகிய அனைத்தையும் கண்ட தாயாரம்மாள், இவளைப் போன்ற மருமகள் நமக் குக் கிடைக்காமல் போனாளே என்று அப்பொழுது ஏங்கி னாள். கிடைக்காமல் போனாளே என்று முன்பு ஏங்கியவள் மனோரமாவின் மரணத்திற்குப் பிறகு குமுதத்தையே தன் மகனுக்குத் திருமணம் செய்யவேண்டுமென்று ஆசைப்

பட்டாள். அவள் உள்ளத்தில், அந்த இளம் பெண்ணை எப்படியாகிலும் மருமகளாக அடைய வேண்டுமென்ற ஆசை நாளுக்குநாள் வளர்ந்துகொண்டே வந்தது.

இதற்காகவே அவள் மலாபுரிக்கு இரண்டு மூன்று முறை சென்று வந்தாள். வையாபுரியிடம் பேசும் நேரங்களில் ஜாடைமாடையாகத் தன் கருத்தை வெளியிட்டாள். எப்படிக் கேட்பது, எப்படிக் கேட்பது என்று தயங்கித் தயங்கி, ஒரு நாள் துணிந்து, குமுதத்தைச் சிவனுக்குத் தரவேண்டுமென்று வையாபுரியிடம் கேட்டு விட்டாள்.

அவ்வளவு பெரிய இடத்தில் தன் மகளைத் தருவதற்கு உண்மையிலேயே உள்ளூர வையாபுரிக்கு ஆசைதான். ஆனாலும் தன் மகளது எண்ணத்தை மாற்றவேண்டுமே என்றெண்ணித் தயக்கமும் ஏக்கமும் கொண்டார் தாயாரம்மாள் கேட்கும் நேரங்களில் எல்லாம் "பார்க்கலாம்; குழந்தையின் விருப்பத்தையும் அறிந்து சொல்லுகிறேன்" என்று பதிலளித்து வந்தார்.

குமுதம் தன் உயிரினும் மேலாகக் குமாரைக் காதலிப்பதையும், அவன் அரசாங்கத்திற்குப் பயந்து தலைமறைவாய் எங்கேயோ இருப்பதை எண்ணியெண்ணி அவள் உணவை வெறுத்து, உறக்கமற்று உருக்குலைந்து வாழ்வதையும் அவர் கண்கறிந்தவர். எனினும் எப்படியாகிலும் அவளது மனதை மாற்றி, அவளைச் சிவனுக்கே கொடுத்துவிட்டால்தான் நல்லது என்று வைத்தியர் முடிவு செய்து விட்டார்.

குமார் சிறுவனாக இருந்தபொழுது அவனிடம் வையாபுரி மிகவும் அன்பாகவே இருந்தார். குமார் அக்கரை

யோடுபடித்து வந்தால், அவன் படித்து முன்னுக்கு வருவான் என்ற எண்ணத்தால் அவன்மேலிருந்த அன்பும் ஆசையும் நாளுக்கு நாள் வளர்ந்துகொண்டே வந்தது. தன் ஒரே மகளை அவனுக்கு மணஞ்செய்து தரவேண்டுமென்ற அளவு வரைக்கும், அதற்கு மேலும் அவரது அன்பு வளர்ந்தது என்று கூறலாம்!

வையாபுரியின் விருப்பப்படி குமார், வைத்தியத்திற்குப் படிக்காமல், ஓவியக் கலையைப் பயிலச் செல்லவே அவர் சிறிது ஏமாற்றமடைந்தார். அந்த ஏமாற்றம், நாட்களின் வளர்ச்சியிலே வெறுப்புணர்ச்சியாக மாறத் தொடங்கியது. காட்டில் தீப்பற்றிக்கொண்டால், அங்கு இன்பமாக வாழ்ந்த குயிலும் மயிலும் பிறவும் அவ்விடத்தை விட்டு வேகமாகச் சென்று விடுவதைப் போல, வெறுப்புணர்ச்சி அவர் உள்ளத்தில் தோன்றியதும், அங்கு முன்பிருந்த ஆசை அன்பு என்ற உணர்ச்சிகள் மங்கி மறைய ஆரம்பித்தன!

குமார், கிளர்ச்சிக்காரக் கும்பலுடன் சேர்ந்து கொண்டு பழத்தூர் ஜமீன்தாரைக் கொலை செய்துவிட்டானென்ற செய்தியை அறிந்ததும் வையாபுரி முதலில் வருத்தப்பட்டார். முன்பு தோன்றிய வெறுப்புணர்ச்சியோடு, கொலைகாரனுக்குப் பெண் கொடுத்தால் உற்றாரும் ஊராரும் கேவலமாகப் பேசுவார்களே என்ற அச்ச உணர்ச்சியும் சேர்ந்து, குமுதத்தை எந்தக் காரணத்தை முன்னிட்டும் குமாருக்குக் கொடுக்கக் கூடாதென்ற முடிவிற்கு அவரை வரச் செய்துவிட்டது.

சிவனைக் கண்டு, அவனிடம் பழகியதிலிருந்து, அவனுக்குத் தன் மகளைக் கொடுக்கவேண்டுமென்ற ஆசை இவருக்கு உதித்தது. மனோரமா ஒருத்தி அப்பொழுது

இருந்ததால், ஆசை எவ்வளவு வேகத்தில் தோன்றியதோ அவ்வளவு வேகத்தில் மங்கிவிட்டது.

குமாரிடம் அளவுகடந்த அன்புகொண்ட தன் மகளது மனதை எப்படி மாற்றுவது என்று எண்ணும் பொழுதுதான் அவருக்குப் பெருத்த ஏமாற்றமும் வருத்தமும் ஏற்படும்.

ஒருநாள் மாலை நேரம்! வீட்டின் பின்புறமிருந்த பூந் தோட்டத்தில் குமுதம் உட்கார்ந்துகொண்டிருந்தாள். சோலை நறுமலர்களின் மணம் நாலாபக்கங்களிலும் வீசிக் கொண்டிருந்தது. தாமரை போன்ற அவள் முகம் சோகத்தால் வாடி இருந்தது. அவள் உள்ளம் எங்கோ ஒளிந்து வாழும் தன் ஆருயிர்க் காதலனை நாடிச் சென்றது.

“அவசியம் போய்த்தான் ஆகவேண்டுமா?”

“ஆமாம் கண்ணே!”

“திரும்பிவர எத்தனை நாட்கள் பிடிக்கும்?”

“இரண்டே வாரங்களில் வந்து விடுவேன்!”

......தன் காதலன் பிரியும்பொழுது அவனுக்கும் தனக்கும் நடைபெற்ற இந்த உரையாடல் இப்போது அவள் நினைவிற்கு வந்தது! முகத்தைக் கைகளால் தாங்கிக் கொண்டு தேம்பித் தேம்பி அழலானாள். அவள் கன்னங்களில் கண்ணீர் தாரை தாரையாக வழிந்தோடியது. அவள் உள்ளத்தில் ஏதேதோ பயங்கரமான எண்ணங்கள் ஒன்றின்பின் ஒன்றாகத் தோன்றின. மனப்புயலில் மங்கை சிக்கிவிட்டாள்!

அவள் மனதில் ஒரு பயங்கரமான காட்சி தெரிந்தது.

குமாரைப் போலீஸார் கண்டு பிடித்து, இழுத்துச் சென்று நீதி மன்றத்தில் நிற்கவைக்கின்றனர். நீதிபதி

வழக்கை விசாரித்து, "இவனுக்குத் தூக்குத் தண்டனை தந்திருக்கிறேன்" என்று தீர்ப்புக் கூறுகிறார். குமாரைத் தூக்கிட அழைத்துச் செல்கின்றனர். அவன் முகம் வாடி, கண்களில் நீர் நிறைந்திருக்கிறது......இது போன்ற ஓர் உயிர்சிலிர்க்கும் காட்சி அவள் மனக்கண்முன் தோன்றவே, அவள் மேலும் விம்மி விம்மி அழுதாள்.

"ஐயோ! அவரின்றி எப்படி நான் வாழ்வேன்? உயிரற்ற உடல் சுடலைக்குத்தானே செல்லவேண்டும்? மென்மையின் பெட்டகமே, உணர்ச்சியின் ஊற்றே, இன்பத்தின் இருப்பிடமே, கவிதையின் பிறப்பிடமே, கலையின் முதலிடமே என்றெல்லாம் உள்ளததில் ஊறியெழுந்த உரைகளைப் பேசி, என் உடல் முழுதும் இன்பச் சந்தனத்தைப் பூசி என்னை மெய்ம்மறககச் செய்த என் உயிருக்குயிரான காதலர் எங்கே? என் குமார் எங்கே? அன்பு அத்தான் எங்கே? என் இதய ஒலி எங்கே? எவ்விடத்தில் வாடி வதங்குகிறாரோ? நான் தந்த அன்பு முத்தங்களைப் பெற்று அகமகிழ்ந்த அவர் இன்று எங்கு உள்ளம் துடித்து பயந்து பதுங்கி வாழ்கிறாரோ? வீணையில் நான் இசையெழுப்பும்போது, "கண்ணே! உன் வீணையின் நாதம் என் உயிரோடு உயிராகக் கலந்து களிப்பூட்டுகிறதே!" என்று புன்னகை தவழும் முகத்தோடு கூறி, ஆசை முத்தம் பரிசாகத் தந்த என் அன்பர் சித்தம் சோர்ந்து, ஆதரவற்று எங்கு மறைந்து மறைந்து அலைகிறாரோ? ஐயோ! நினைக்க நினைக்க என் இதயம் வெடித்துவிடும்போலிருக்கிறதே! ஒவிய உருவமும், காவிய உள்ளமும் கொண்ட என் உயிர்த்தோழர் தலைமறைவாய்த் தத்தளிக்க, மலர்ச் சோலை சூழ்ந்த மாளிகையில் நான் வாழ்வது தகுமா? மாளிகையா இது? அல்ல; அல்லவே அல்ல! சிறை! ஆம்,

எனக்கு இவ்வீடு சிறைதான்!......" இவ்வாறு பற்பல எண்ணியெண்ணி இளவஞ்சி வேதனையால் துடிதுடித்துக் கண்ணீர் சிந்தினுள்.

வேலைக்காரி தன்னை நாடி வருவதைக் கண்டதும், கண்களைத் துடைத்துக் கொண்டாள். வேலைக்காரி அருகில் வந்து நின்றுள்.

"என்ன வேண்டும் தாயி?"

"அப்பா உங்களை அழைத்து வரச் சொன்னுர்."

"ஏன்?"

"எனக்குத் தெரியாதம்மா?"

"வேறு யாராகிலும் அப்பாவுடன் இருக்கிறுர்களா?"

"இல்லை. தனியாகத்தானிருக்கிறுர்."

"சரி, நான் வருகிறேன்! நீ போ, தாயி."

வேலைக்காரி சென்றதும் தன் முகத்தை நன்றுகத் துடைத்துக் கொண்டு, எழுந்து வீட்டிற்குள் சென்றுள் குமுதம்.

தந்தை அவளை அன்பாக அழைத்து அமரும்படிச் சொன்னுர். அழுது அழுது அவள் கண்கள் சிவந்து, கண்ணிமைகளின் மேற்பாகங்கள் வீங்கி இருப்பதைக் கண்டதும் அவர் திடுக்கிட்டார். தாம் கொண்டுள்ள கருத்தை எப்படி அவளிடம் கூறுவதென்று திகைத்தார்.

"நானென்ன இவள் வாழ்க்கையைக் கெடுக்கவா நினைக்கிறேன்? தந்தை யார்தான் பெற்று வளர்த்த மகளுக்குக் கெடுதி செய்ய இசைவான்? என்னைவிட இவள் நலத்தில் நாட்டமுள்ளவர் வேறு யாரிருக்க முடியும்? அறிவில் மேன்மையும் குணத்தில் பாண்மையும் கொண்ட ஒருவனுக்

குத்தானே இவளை மணமுடிக்க எத்தனித்துள்ளேன். இதிலென்ன தவறு இருக்கிறது?........இவ்வாறு எண்ணித் தன் உள்ளத்தைத் திடப்படுத்திக் கொண்டு, குமுதத்தைத் திரும்பிப் பார்த்துப் பேச ஆரம்பித்தார்.

"குமுதம், உடம்பிற்கென்ன குழந்தாய்? மிகவும் களைத்திருக்கிறாய்?"

"ஒன்றுமில்லை அப்பா!"

"குமுதம், உண்மையைச் சொல்லம்மா!?"

"என்னப்பா சொல்வது?"

"உன் மனதிலிருப்பதை......."

"என் மனதில் ஒன்றுமில்லை அப்பா!"

"குழந்தாய்! நான் சொல்வதைச் சற்று கவனமாகக் கேட்க வேண்டும்."

"சரி அப்பா!"

பல நாட்களாகச் சொல்ல வேண்டுமென்று எண்ணிக் கொண்டிருந்ததை இன்றுதான் உன்னிடம் சொல்கிறேன்........உன் தாய் இறந்து இன்றைக்குப் பத்தாண்டுகளுக்கு மேலாகிறது. அப்பொழுது நீ ஆறு வயது குழந்தை. உன் அம்மா இறந்ததும், அனேகர் என்னைத் திரும்பவும் கல்யாணம் செய்துகொள்ளும்படிக் கட்டாயப் படுத்தினார்கள். இரண்டாம் மனைவியாய் வருபவள், உன்னை அன்பாய் நடத்தாமல் போவாளோ, அன்றி, உன்னை வெறுக்கும் அளவிற்கு என் மனதில் விஷத்தை ஊட்டி விடுவாளோ என்று பயந்து, உன்மேலிருந்த அன்பால், உன் நலத்தில் நான் கொண்டிருந்த பற்றால், மறுமணமே வேண்டாம் என்று மறுத்துவிட்டேன். பத்தாண்டுகளும் பறந்தே விட்டன. எனக்கோ வயதாகிவிட்டது. உனக்கோ

தெரியும் இப்பொழுதெல்லாம் அடிக்கடி எனக்கு மார்பு வலி வருவது. ஆரூடக்காரனும் கூறினன், மார்பு வலியி ஞல்தான் எனக்கு மரணம் ஏற்படுமென்று. ஆகையினல் எந்த நேரத்தில் எவ்விடத்தில் எப்படி நான் இறப்பேனே எனக்கே தெரியாது......"

"இதெல்லாம் இப்பொழுது எதற்கப்பா?"

"சற்று பொறுமையாகக் கேள் அம்மா நான் சொல் வதை! உனக்கும் வயதாகிறது! வயதிற்கு வந்த பெண்ணே உடனே ஒருவனுக்கு மணம் செய்து தருவதுதான் நல்லது. 'குணமறிந்த' பெண்ணை வீட்டில் வைத்துக் கொண்டிருப் பது முறையல்ல, நம் குலத்திற்கும் நல்லதல்ல, அழகல்ல! ஆகவே பணமும், பார்ப்பதற்கு அழகும், சிறந்த குணமும் கொண்ட ஒருவனுக்கு உன்னைத் திருமணம் செய்து கொடுக்க வேண்டுமென்று ஆசைப்படுகிறேன்......"

"யாருக்கப்பா?"

"சொல்கிறேன் குமுதம்! மனம் இருக்கிறதே அது குரங்கைப் போன்றது குழந்தாய்! அடிக்கடி அது மாறினு லும் மாறும், அல்லது ஒன்றையே குரங்குப் பிடியாய்ப் பிடித்துக் கொண்டாலும் கொள்ளும்........"

"சொல்லப்போவதை நேராகவே சொல்லுங்க ளப்பா!"

"குமுதம், ஏனம்மா அவசரப்படுகிருய்! இளம் வயது உனக்கு. உலக அனுபவம் உனக்குக் கிடையாது. உலகம் இப்படிப்பட்டது—இத்தகைய தன்மையது என் பதையும் நீ அறியாய். அறிந்திருக்கவும் நியாயமில்லை!.... குழந்தை இருக்கிறதே அறியாத்தனத்திஞல் எரியும் விளக் கையே பிடிக்கச் செல்லும். அப்பொழுது அதைத் தடுக்க

வேண்டிய பொறுப்பு யாருடையது? பெற்றோர்களுடையதல்லவா? வேண்டாம், செய்யாதே, என்று தடுக்கும் பொழுது குழந்தை வீறிட்டுத்தான் அழும். குழந்தை அழுகிறதே என்று தடுக்காமல் விட்டுவிட்டால் என்ன நேரும்?......நீ செய்யும் காரியத்தை எடை போட்டுப் பார்க்குமளவிற்கு அனுபவம் என்ற அறிவு உன்னிடமில்லை. ......படித்தவள் நீ! பலப்பல உனக்குக் கூறத்தேவை இல்லை!......சோலையூரிலிருந்து வந்திருந்தானே சிவன், அவன் உனக்குப் பிடிக்கிறானா?"

"போதும் போதுமப்பா! எனக்கு மணமே வேண்டாம்!"

"குமுதம்! நான் சொல்வதை யோசித்துப்பார்! குமார் இனி வெளியில் தலைகாட்ட முடியாது. தலைகாட்டினாலும் போலீஸார் பிடித்துவிடுவார்கள்! கொலைக் குற்றத்திற்கு என்ன தண்டனை தெரியுமா?......"

"எனக்குத் தெரியும்! தாங்கள் சொல்ல வேண்டாம்!"

"கோபப்படாதே குழந்தாய்! நன்றாக யோசித்துப் பார்! உன் பிடிவாதத்தால் நல்ல இடத்தில் வாழப்போகும் வாழ்வைப் பாழ்படுத்திக்கொள்ளாதே!"

"கன்னியாகவே நான் காலம் கழிக்க முடியும் அப்பா! அப்படித்தான் இருக்கவும் விரும்புகிறேன்! யாரையும் கல்யாணம் செய்து கொள்ளப் போவதில்லை!"

இவ்வாறு கூறிவிட்டு, வேல் பாய்ந்த மானைப்போல வேதனையுற்று, விரைவாகத் தன் அறைக்குச் சென்றுவிட்டாள். சிவனென்ற சொல் அவள் கன்னி உள்ளத்தைச் சிறகச் சிறகச் சித்திரவதை செய்திடவே, தண்ணீரில் இருந்து கரைமேல் விழுந்த மீனைப்போலத் துடிதுடித்துத் தத்தளித்தாள் அத்தளிர்மேனியாள்!

பன்னிரண்டாவது பகுதி

விஷக் கிண்ணம்

குமுதம் ஒருநாள் தன் அறையில் தனியாக உட்கார்ந்து கொண்டு, மறைந்து வாழும் தன் காதலன் எப்பொழுது வருவானோ என்ற எண்ணச் சுழலில் சிக்கி ஏக்கத்தில் ஆழ்ந்திருந்தாள். "அத்தானிடம் அன்புகொண்ட அப்பாவின் மனம் ஏன் இப்படி மாறிவிட்டது?" என்றெண்ணிக், காரணம் அறியமுடியாமல் கண்ணீர் உகுத்தாள். மனமாற்றம் ஏற்பட்டது ஏன், எதற்கு, என்றெல்லாம் யோசித்து யோசித்துப் பார்த்தாள்! அவளுக்கு ஒன்றும் புரியவில்லை.

இன்று மலர்ந்து, இளம் பெண்ணின் கருங் கூந்தலில் அமர்ந்து மணமும் அழகும் தந்த மலர், நாளை சருகாகிறது; விரும்பி சூடப்பட்ட அதே மலர் பிறகு வீசி எறியப்படுகிறது! தரை முழுதும் சலவைக் கற்கள் பளபளக்க, சுவர்களில் வண்ணச் சித்திரங்கள் கொஞ்ச, தலை நிமிர்ந்து ஆணவத்தோடு நின்றிருந்த பெரிய மாளிகை, காலச் சுழலில் சிக்கி, சலவைக் கற்களின் பளபளப்பு குன்றி, வண்ணச் சித்திரங்கள் மங்கி மறைந்து, சுவர்கள் உதிர்ந்து பிளந்து, மாடி சாய்ந்து மண்மேடாகிவிடுகிறது! அல்லியும் தாமரையும் பூத்துச் சிரித்து, காண்போரின் கண்ணையும் கருத்தையும் இழுத்த நீர் நிறைந்த குளம் நாளா வட்டத்தில் நீர் வற்றி, அல்லியும் தாமரையும் செத்துச், சேறாகி, யாரும் அருகில் நெருங்க முடியாத அளவிற்குத் துர்நாற்றம் வீசத் தொடங்குகிறது! உடலில் பொன்னொளியின் மினு மினுப்பும், வேல்விழிகளில் பொங்கித் ததும்பும் காதலும், இருண்டு சுருண்ட கூந்தலும், இளமை பூரித்துச் சிரிக்கும் உடற் கட்டும் கொடி இடையும் கொண்ட இளம்

குமரி, ஆண்டுகளின் வளர்ச்சியில், கூந்தல் நரைத்து, கன்னம் ஒட்டி, கண்ணொளி மங்கி, கட்டுத் தளர்ந்து வெறுப்புச் சித்திரமாகி விடுகிறாள்!—கால மாற்றத்தில் இயற்கைத் தேவி புரியும் திரு நடனம் இது! பாபம், இதனைக் குமுதம் அறியாள்!

"இளம் வயது உனக்கு. உலக அனுபவம் உனக்குக் கிடையாது. உலகம் இப்படிப்பட்டது, இத்தகைய தன்மையது என்பதையும் நீ அறியாய்!" என்று, அவள் தந்தை அன்று கூறினரே, அது ஒருவிதத்தில் உண்மை தான்.

நீண்ட நாள் தோழனைப்போல் நடிப்பார்கள், கடைசியில் ஒருநாள் நம்பியவனின் உள்ளம் பதை பதைக்கத் துரோகம் செய்துவிடுவார்கள்! உதடுகள் சிரித்துக் கொண்டே இருக்க, உள்ளத்தில் நஞ்சு தளும்பிக்கொண்டே இருக்கும். இது ஒரு வகையினர்! பைத்தியக்காரர்களைப் போல தோற்றமளிப்பார்கள். ஆனால் யாரை எப்படிக் கவிழ்க்கலாம் என்று திட்டங்கள் தீட்டிக்கொண்டிருப்பார்கள்; இது மற்றொரு வகையினர்! இருவரிடமும் அன்யோன்யமாகப் பழகுவதாக வேஷமிட்டு, இருவர் உள்ளங்களிலும் விஷ வித்தைத் தூவி, விஷ வித்து முளைத்துச் செடியாகிப், பூத்துக் காய்த்துக் கனிவதைக் கண்டு களிப்பார்கள், ஒரு சில சுயநலமிகள்! கள்ளங் கபடமற்றுக் கலகல வெனப் பேசும் சிலர், காரணமில்லாமலேயே பிறரது ஐயத்திற்கு ஆளாகித் துன்பப்படுவார்கள்! நல்ல உள்ளம் கொண்ட சிலர் கால மாற்றத்தில் ஒரு சிறிய செய்தியைப் பெரியதாக்கிக்கொள்ளும் காரணத்தால் கெட்ட மனம் படைத்தவர்களாக மாறிவிடுவார்கள்!—இப்படி மக்களில் பலப்பல ரகங்கள்! இவர்களை எல்லாம் குமுதம் கண்ட

தில்லை! அவள் கண்டது உலகில் ஒருவரைத்தான்; அந்த ஒருவர்தான் குமார். குமார்தான் உலகம் என்று அவள் எண்ணினாள். அவளைப் பொருத்தவரையில் அது உண்மைகூட! ஆனால் உண்மையில் உலகம் குமாருடன் முடிந்து விடுவதில்லையே! இது அவளுக்குத் தெரியாது. அவள் உலக மறியாப் பெண்! ஆகையால்தான் தன் தந்தையின் உள்ளம் ஏன் மாறிற்று, எப்படி மாறிற்று, எதற்காக மாறிற்று என்ற காரணங்களைக் கண்டறிய முடியாமல் விழித்து, கண் களில் நீர் கசிய நின்றாள்.

மேற்கூறிய மக்களின் பலரகங்களில் கடைசிரகத்தைச் சேர்ந்தவர் வையாபுரி. அவரது ஆசையின்படி குமார் வைத்தியத்திற்குப் படிக்காமல், ஓவியக் கலையைப் பயிலச் செல்லவே அவர் ஏமாற்றம் அடைந்தார்! இது சிறிய செய்திதான்! அவர் விரும்பினால் இதனை மறந்திருக்க முடியும். ஆனால் அவர் அப்படிச் செய்யவில்லை. இந்தச் சிறிய ஏமாற்றத்தை அடிக்கடி எண்ணலானார். இதன் காரணமாக அவரது நல்ல உள்ளம், கெட்ட மனமாக மாறிற்று! இந்த மாற்றம் குமுதத்திற்குப் புரியவில்லை! அனுபவமில்லாத இளம் பெண்!

மனப்புயலில் சிக்கி, வேதனை அடைந்து கொண்டிருந்த குமுதம், அறையினுள் தந்தை வருவதை அறிந்து முகத்தைச் சேலையின் முனையினால் துடைத்துக்கொண்டு எழுந்து நின்றாள். வையாபுரி அருகில் வந்தார். அவர் கையில் ஒரு கிண்ணம் இருந்தது. அவர் முகம் ஏதோ ஒரு முடிவிற்கு வந்துவிட்டவரைப் போல் தோற்றமளித்தது.

வையாபுரியின் முகத்தைப் பார்க்கவே அவளுக்குப் பயமாக இருந்தது! அந்த அளவிற்கு அவர் முகம் மாறியிருந்தது. மேலும் ஏதாகிலும் விபரீதம் நடக்கப்

போகிறதோ என்றெண்ணி அவள் இளம் உள்ளம் சிலிர்த்தது! அமைதி நிறைந்த அவர் கண்களில் அன்று ஏதோ ஒருவித ஒளி வீசுவதைக்காண அவள் உயிர் பதைபதைத்தது. அவள் மனதில் பெரும் புயல் சுற்றிச் சுற்றி வீசத் தொடங்கியது. அவள் தன் உணர்ச்சிகளை அடக்கிக் கொண்டு "உட்காருங்கள் அப்பா!" என்று நடுநடுங்கும் மெல்லிய குரலில் கூறினள்.

"உட்காரவரவில்லை குமுதம்! உன்னிடம் என் முடிவைச் சொல்ல வந்திருக்கிறேன்" என்று உறுதி நிறைந்த குரலில் உரைத்தார் வைத்தியர்.

தந்தையின் கையில் ஏன் கிண்ணமிருக்கிறது, அதில் என்ன இருக்கிறது என்பதொன்றும் புரியாமல் குமுதம் மிரண்டாள். அவள் கண்கள் அக்கிண்ணத்தையே மிரள மிரளப் பார்த்தன.

இளங்குமரியின் செவ்விய இதழ்கள் அசையத் தொடங்கின.

"கையில் இருப்பது என்ன அப்பா?"

"நம்மிருவர் உள்ளங்களிலுமுள்ள அன்பைப் பரிசோதித்து, இரண்டையும் ஒன்ருக்கவோ, அல்லது பிரிக்கவோ தீர்ப்புக்கூற இடையில் வந்திருக்கும் நீதிபதி."

"ஒன்றும் எனக்குப் புரியவில்லையே!."

"உனக்கு எதுதான் குமுதம் புரிகிறது? உன் பொறுப்பு உனக்குப் புரிகிறதா? உன்னைப் பெற்று வளர்த்த தந்தை ஏன் இப்படியெல்லாம் வேண்டுகிருன் என்பதாவது புரிகிறதா? நான் படும் வேதனை உனக்குத் தெரிகிறதா? நம் குடும்பத்தின் அந்தஸ்தாவது உனக்குத் தெரிகிறதா? கொலைகாரன் ஒருவனை மணப்பது கேவ

லம், உற்றுரும், ஊராரும் மதியார்கள், தூற்றுவார்கள் என்ற விவரம் உனக்குச் சிறிதாவது புரிகிறதா? அல்லது................"

"அப்பா!"

"குமுதம்! இதோ பார்! என் கையிலிருப்பது விஷம்! உன்னை நான் அடிக்கடி தொந்திரவு செய்துகொண்டிருக்க விரும்பவில்லை! நான் திடமான ஒரு முடிவிற்கு வந்து விட்டேன்! குமாரை நீ மணப்பது என்பது முடியாத காரியம்! கொலை செய்துவிட்டுத் தலைமறைந்து வாழும் ஒருவன் என் மருமகனாக வருவதைச் சகித்துக்கொள்ள என்னால் முடியாது! அதைவிட நான் சாவதே நல்லது!.........…"

"அப்பா!"

"இனி, மேலும் மேலும் சொன்னதையே சொல்லிக்கொண்டிருக்க நான் விரும்பவில்லை. நான் பெற்ற ஆசை மகள் நீ! உன் தந்தை நான்! என் விருப்பத்தின்படி சிவனை நீ மணந்துகொண்டால், உன் தந்தையின் உயிரைக் காப்பாற்றியவளாவாய். குமார்தான் உனக்குத் தேவை என்றால், இந்த நொடியே உன்னைப் பெற்ற என்னை மறந்துவிடு! எனக்கு இதோ, இதோ, இந்த விஷக் கிண்ணம் விடுதலை அளிக்கும்!"

"வேண்டாம் அப்பா!"

"என்ன குழந்தாய் வேண்டாம்?"

"விஷம்!"

"தீர யோசித்துத்தான் விஷக் கிண்ணத்தைக் கையில் எடுத்தேன்!"

"அப்பா!"

"ஏனம்மா, உனக்கு யார் வேண்டும்? கொலைகாரன் குமாரா? அல்லது கண்ணீர் சிந்தும் உன் தந்தையா? அதனை விரைவாகக் கூறிவிடு! குமுதம், உன் அன்பில் என் உயிர் ஊசலாடிக் கொண்டிருக்கிறது! சிவன் கட்டும் தாலி உன் கழுத்தில் பிரகாசிக்கவேண்டும், அல்லது கிண்ணத் திருக்கும் விஷம் என் தொண்டையை எரித்துக் கொண்டே உள்ளே ஓடவேண்டும்! இது என்னுடைய முடிவு! குடல் வெந்து துடித்து இறக்கப்போகும் உன் தந்தையை மீட்கப் போகிறாயா? அல்லது குமார்தான் தேவை என்று கூறப் போகிறாயா? இரண்டில் ஒன்றை விரைவாக இப்பொழுதே கூறிவிடு........." இப்படி ஆவேசம் வந்தவரைப் போல வையாபுரி பேசிக்கொண்டே போனார்.

குமுதத்தின் கண்களில் நீர் வடிந்தது; அவள் உடலெல்லாம் நடுங்கியது! அவள் உள்ளம் படபடத்தது! இந்த தர்மசங்கடமான நிலைமையிலிருந்து எப்படிச் சமாளிக்கப் போகிறோம் என்றெண்ணியதும் அவள் இதயத்தின் மெல்லிய சுவர்கள் தூள் தூளாகி விடும்போலாகி விட்டது.

எதிலும் பட்டதும் படாததுமாகவே காலம் கழித்து வருவார் வையாபுரி; ஆனால் சில நேரங்களில் அபூர்வமாக அற்ப செய்திகளுக்கெல்லாம் அடங்காத ஆத்திரம் அடைவார். யோசித்துத்தான் ஒரு முடிவிற்கு வருவார். ஒரு முடிவிற்கு வந்த பிறகு, பிறர் எவ்வளவுதான், நல்ல யோசனைகளைக் கூறினாலும் அதனை மாற்றவேமாட்டார். எப்படிப்பட்ட கஷ்டநஷ்டத்தையும் பொருட்படுத்தாமல் அம்முடிவை நிறைவேற்றிவிடுவார். அவரை விட்டு நீங்காத பிறவிக் குணம் இது!

"உன் தந்தையே சொத்தை என்னிடம் கொண்டு வந்து தருவார். நான் வேண்டாமென்பேன். "அப்படிச் சொல்லாதே! சொத்துக்கு இனி நீதான் சொந்தக்காரன்! கட்டாயம் அது உன்னிடந்தான் இருக்கவேண்டும்! கெஞ்சுகிறேன், மறுக்காதே!" என்று கெஞ்சிக் கூத்தாடி என்னிடம் கொடுத்துவிடுவார்!..........

பழத்தூருக்குச் செல்வதற்கு முன்தினம் குமார் கூறிய இவ் வார்த்தைகள் குமுதத்தின் காதுகளில் வந்து வந்து ஒலித்தன! "ஆமாம் அத்தான்! தாங்கள் மட்டுமா அப்படி நினைத்தீர்? நானும் அப்படித்தான் நடக்குமென்று நம்பி இருந்தேன்! அப்பாவின் மனம் இப்படி திடீரென்று மாறிவிடுமென்று யார்தான் எண்ணி இருக்க முடியும்! அத்தான்! தாங்கள் தொட்ட இவ்வுடல் வேறொருவனுக்கா சொந்தமாவது! முடியாது! நான் சம்மதிக்கவே மாட்டேன்!.......ஆனால் தந்தையின் உயிர்?......" புயலில் சிக்கிய உலர்ந்த இலையைப்போல் ஒரு நிலை இல்லாது அவள் மனம் தத்தளித்தது. யோசித்தாள். நீண்டநேரம் யோசித்தாள்! தந்தையின் கையிலிருந்த விஷக் கிண்ணத்தைப் பார்க்கப பார்க்க அவளுக்குப் பயம் அதிகமாயிற்று.

"தந்தையோ பிடிவாதக்காரர். தாம் சொன்னதை ஆத்திரத்தில் செய்தே காட்டிவிடுவார்! இப்பொழுதோ மனம குழம்பிக் கோபத்தோடு இருக்கிறார், கோபம் தணிந்ததும் எப்படியும் சரிசெய்துவிடலாம்" என்றெண்ணி "அப்பா!" என்று கனிவோடு அழைத்தாள், கண்களைத் துடைத்துக்கொண்டு.

"பதிலென்ன, குமுதம்? அதுதான் எனக்கு வேண்டும்."

"தங்களது விருப்பப்படியே..."

"என் விருப்பப்படியே சிவனை மணந்துகொள்கி றாயா?" என்று ஆர்வத்தோடு கேட்டார்.

கன்னியின் உள்ளத்தில் காதலின் சக்திக்கும் கடமை யின் உணர்ச்சிக்கும் பலத்த போராட்டம் ஆரம்பமாயிற்று. போராட்டம் புயல் வேகத்தில் அதிகமாயிற்று. அதனைச் சமாளித்துக்கொண்டு அவள் உதடுகளிலிருந்து 'சரி அப்பா" என்ற இரண்டே இரண்டு வார்த்தைகள் எப்படியோ கீழே உருண்டுவிட்டன! அவ்வளவுதான்!

ஆத்திரம், அழுகை— உணர்ச்சிகள் கொக்கரிக்கத் தொடங்கிவிட்டன! அசாத்தியமான சக்தியைக் கொண்டு அவற்றை அடக்கிப் அடக்கிப் பார்த்தாள். முடியவில்லை. அணையை உடைத்துக்கொண்டு ஓங்காரத்தோடு உணர்ச்சி கள் பீறிட்டுக்கொண்டு வெளியே வந்தன!

கண்ணீர்த் திரை! அதன் பின்னால் பார்வை இழந்த வேல் விழிகள் இரண்டு! குருடன் தடவித் தடவிப் பார்த்து ஒளியைக் கண்டுபிடிக்க முயற்சிப்பதைப்போல, அந்தத் திரையில் அவ்விழிகள் எதனையோ துளாவித் துளாவிப் பார்த்தன!..................

கோர இடியோசை! எங்கும் ஒரே அதிர்ச்சி. மலை யோடு மலை மோதுண்டு சிதறுகின்றன. பூமி இரண்டாகப் பிளந்துவிட்டது! ஆவென அதன் வாய் அகல விரிந்து கிடக்கிறது! கூட கோபுரங்களும் மாட மாளிகைகளும் இடிந்து பூமியின் திறந்த வாயில் சென்றுகொண்டிருக்கின் றன! எரிமலை தன் பயங்கரச் சிரிப்பைக் காட்டத் தொடங்கிவிட்டது! நெருப்புக் குழம்பு குபுகுபுவெனக் கொட்டுகிறது!

மக்கள் கண்ணிழந்த கபோதிக் கூட்டத்தைப் போல செல்லும் வழி தெரியாது கத்திக் கதறி ஓலமிடுகின்றனர்!

பயந்து அலறி நடுநடுங்கும் பெண்களின் மீது விஷப் பாம்புகள் சீறிப் பாய்ந்து பிடுங்குகின்றன! எட்டுத் திக்கிலும் "அய்யோ அய்யோ" என்ற அழுகுரலின் எதிரொலி!

அவிழ்ந்த கூந்தலும் நெகிழ்ந்த ஆடையும் காற்றில் பறக்கப் பறக்கக் குமுதம் நின்றுகொண்டிருந்தாள்! திடீரெனப் பெரும் புயல் கிளம்பிவிட்டது. குமுதத்தைப் புயல் தள்ளிக்கொண்டே போகிறது. அதனை எதிர்த்துச் செல்லவோ அன்றி ஒதுங்கி ஒரு பக்கம் நிற்கவோ அவளிடம் சிறிதும் சக்தியில்லை!

பூமியின் திறந்த வாய். இதோ, இதோ அதன் அருகே அவளைப் புயல் தள்ளிக்கொண்டே வந்துவிட்டது. இன்னும் சற்று நேரத்தில், சில நொடிகளில், அதனுள்ளே, ஆழந் தெரியாத அந்தப் பயங்கர இருண்ட பள்ளத்திலே அவள் வீழ்ந்து, கால் கைகள் முறிந்து, மண்டை உடைந்து, தசை நார்கள் அறுப்புண்டு, ரத்தம் கொட்டுண்டு இறந்துவிடப் போகிறாள்!

குமார் ஓட்டம் ஓட்டமாக ஓடி வருகிறான், அவளைக் காப்பாற்ற! இறக்கை முளைத்த விஷப் பாம்பு ஒன்று அவனைத் துரத்திக்கொண்டு வேகமாகப் பறந்து வருகிறது!

குமுதம்! குமுதம்!—அவன், உரக்கக் கத்துகிறான்!

அத்தான்! அத்தான்!—அவள் அலறிக் கதறுகிறாள்!

உஸ்! உஸ்—பாம்பு சீறிக்கொண்டே பாய்ந்து வருகிறது!

பாம்புக்கும் குமாருக்கும் போர்! பலத்த போர்! கவர்ச்சி மிக்க குமாரின் இரு கண்கள்! அந்தக் கண்களை உணவாகக் கொண்டு திருப்தி அடையப் பாம்பு விடாது, போராடுகிறது! அதோ, அதோ, அந்த இரு கண்களையும் விஷப் பாம்பு பறித்துக்கொண்டு ஓடுகிறது!

குமுதம் இதயம் பிளந்து அலறினாள்! அடுத்த நொடியில், பூமியின் கர்ப்பத்தை நோக்கி அவள் விரைந்து அதிவேகமாகச் சென்றுகொண்டிருந்தாள்..........

கண்ணீர்த்திரையில் குமுதத்திற்கு இதுபோன்ற ஒரு கோரக் காட்சி தெரிந்தது! அய்யோ என்று அலறினாள்! நினைவிழந்து தரையில் சாய்ந்தாள்!

பதின்மூன்றாவது பகுதி

தென்னந் தோப்பு

இருள் சூழ்ந்த நேரம்! ஆற்றங்கரையோரம்! உயர வளர்ந்திருந்த தென்னந்தோப்பு! குளிர்ந்து வீசும் காற்று! வானில் கண்சிமிட்டும் நட்சத்திரங்கள்!

தென்னந் தோப்பின் மணலில் குமாரும், கோபாலும் சிந்தனையில் ஆழ்ந்த வண்ணம் உட்கார்ந்திருந்தனர். ஒருவரோடொருவர் வெகு நேரம் பேசவில்லை. தென்னை மரங்களின் நீண்ட இலைகள் அசைவதால் ஏற்பட்ட சலசலப்பு ஓசையைத் தவிர அங்கு வேறு ஓசை எதுவுமின்றி முழு அமைதி நிலவியிருந்தது.

கோபாலின் உள்ளத்தில் ஏதேதோ எண்ணங்கள் தோன்றின. தொல்லையொன்றுமில்லாமல் காலம் கழித்து வந்த தனக்கு எல்லா வசதிகள் இருந்தும், இப்படி, தான் ஆபத்தான வேலையில் சிக்கிக் கொண்டது தவறு, மதியீனம் என்று தன் இதயத்தின் ஒரு கோடியில் யாரோ பேசுவதைப்போல் அவனுக்குத் தோன்றியது.

“ஏது தவறு? ஏது மதியீனம்? ஏக்கத்தைப் போக்கி ஏழையப்பரை ஏற்றத்திற்கு அழைத்துச் செல்ல

வேண்டி உறுதி கொண்டு உழைத்தது தவறு? மதியீனமா? மனமே, இன்னும் போதிய பண்பை நீ அடையவில்லை! கஷ்டநஷ்டத்தைக் கண்டு வாடி வருந்துவது இலட்சியத்திற்காக உழைக்கும் தொண்டனுக்கு ஏற்றதல்ல! ஏளனத்திற்குரியது! வருத்தத்தை ஒதுக்கி, தூற்றலைத் துச்சமென்றெண்ணி, சுகத்தை மறந்து, நேர்மையைக் கடைப்பிடித்து, வஞ்சகர் செயலைக் காறி உமிழ்ந்து, உள்ளத்தில் சஞ்சலமோ சலிப்போ ஏற்படாமல் ஓயாது தளராது உறுதி பெற்று உழைத்தால்தான் நம் இலட்சியம் ஓர் உருப்பெறும், வெற்றியும் கிட்டும்———" தளரத் தலைப்பட்ட தன் உள்ளத்திற்கு அப்படி உபதேசம் செய்தான் கோபால்! குமாரைத் திரும்பிப் பார்த்தான். மணலில் அவன் சோர்ந்து படுத்துக் கொண்டிருப்பதைக் கண்டான். காற்றில் அசைந்த இலைகளின் சப்தத்தோடு, பூச்சிகளின் ச்ச்சி—ச்ச்சி—ச்ச்சி என்ற ஓசையும் கலந்தது!

குமாரை இருட்டில் உற்று நோக்கினன் கோபால்.

"கலையில் நன்கு தேர்ச்சி பெற்றவன், இன்பமாக வாழ்க்கையை நடத்திக் கொண்டிருந்தவன், என்னல் அன்றோ இன்னலில் சிக்கி வேதனைப் படுகிறான்," என்றெண்ணிக்கொண்டே அவனும் மணலில் படுத்தான்.

குமார் இருளையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தான். இருளில் திடீரென்று மின்னல் தோன்றியது! மின்னல், ஒளி வீசிவிட்டு மறைய வேண்டியதுதானே? ஆனல் மறையவில்லை! தோன்றி மறையும் மின்னல் அல்லவே அது; ஆம், குமுதந்தான் குமாரின் கண்முன் நின்றாள்! அவள் முகத்தில் புன்னகை தோன்றி மின்னல் வேகத்தில் மறைந்தது. குமார் பார்த்துக் கொண்டிருக்கும் போதே அவன் கண்களின் ஒளி மங்கி, அங்குக், கண்ணீர் அரும்பியது.

குமார் ஒரு பெருமூச்செறிந்தான். "குமுதம்! குமுதம்!" என்று அவன் வாய் முணுமுணுத்தது.

"திரும்பி வர எத்தனை நாட்களாகும்?"

"இரண்டே வாரங்களில் வந்துவிடுவேன்."

"ஆபத்தொன்றுமிருக்காதே அத்தான்?"

"அதிலென்ன ஆபத்து குமுதம்!"

கட்டழகி குமுதமும் தானும் அன்றொரு நாள் பரிமாறிக் கொண்ட இவ்வார்த்தைகள் அவன் காதுகளில் வந்து ஒலித்தன! துன்பக் கேணியில் மூச்சுத் திணற மூழ்கினன். வாடிய வனிதையின் மதிமுகம், வருத்தத்தைச் சிந்தும் வட்டவிழிகள், உதிரும் கண்ணீர் முத்துக்கள், இவை குமாரின் மனக் கண்முன் தெரிந்தன!

"குமுதம்! என் கண்ணே! நீ எவ்வளவு கஷ்டப்படுகிருயோ? துன்பம் உன் அன்பு உள்ளத்தை எப்படி எப்படிக் கசக்குகிறதோ? அழுது அழுது உன் கண் பார்வை மங்கிவிட்டதோ? அய்யோ! எவ்வளவு தொல்லை!—ஜமீன்தாரை நான் கொன்றேனும் கண்ணே! நீயும் தான் நம்புகிருயா? இல்லை, இல்லை, இல்லை குமுதம்! நான் கொல்லவில்லை! கோபாலும் கொல்லவில்லை! யாரோ கொன்றுன்! பழி எங்கள் மேல்!" இப்படி மனக்கண் முன் கண்ணீர் வடித்த காதலியிடம் தான் குற்றமற்றவனென்று குமார் கூறிப் புலம்பினன். அவன் கண்கள் கலங்கின. அதனைத் துடைத்துக் கொண்டு திரும்பிப் படுத்தான். கோபாலும் படுத்துக் கொண்டிருப்பதைக் கண்டு கண்களை மூடிக்கொண்டான்.

"ஆபத்தொன்று மிருக்காதே!" என்ற சொற்கள் மட்டும் திரும்பத் திரும்ப அவன் நினைவிற்கு வந்தன.

"ஆபத்தொன்று மிருக்காது என்றுதான் நினைத்தேன் குமுதம்! ஆபத்து வந்துவிட்டதே!......சுயநலக் கும்பல் நிறைந்த இங்கு சூழ்ச்சிக்காரரால் பழி சுமத்தப்பட்ட எங்களை மீட்க ஆள் ஏது? நாங்கள் நிரபராதிகள் என்று கூற ஒரு குரல் ஏது? துணிவு கொண்ட மனிதன் இங்கு ஏது?——" இப்படித் தன் மனதிற்குள்ளாகவே ஏதேதோ பேசிக் கொண்டான் கலைஞன். கண் திறந்து கோபாலைப் பார்த்தான.

"கலக்கமடையாத இளங்காளை கோபால்! என் மனம் மட்டும் இப்படிக் குழம்புவதேன்? கோழையா நான்! அல்ல, அல்ல, கோழையல்ல நான்!

"உணர்ச்சி பெற்று, சிந்தித்து உறுதி பெற்று உண்மை உழைப்பாளிகள் சிந்திய இரத்தத்தைக் கண்டு வீரம்பெற்று, சமூகசேவை என்னும் தீயில் குதித்தவன் அல்லவா நான், நானெப்படிக் கோழையாக முடியும்?—— மனமென்னும் கடலில், இன்று புயல் வீசிக்கொண்டுதானிருக்கிறது. ஆனால் என்றுமேவா வீசிக்கொண்டிருக்கும்? கடலில் அலை ஓயாததைப் போல், மனப்புயலும் என்றுமே தணியாதா? இல்லையே! இன்று இல்லையேல் நாளை, நாளை இல்லையேல் மற்றோர் நாள், கட்டாயம் இந்தப் புயல் அடங்கியே தீரும். பிறகு, தென்றல் வீசாமலா போகும். நிச்சயம் வீசும். ஆகவே நான் இன்று என்னை அடித்து வீழ்த்தப் பார்க்கும் இம்மனப் புயலைச் சிறிதும் பொருட்படுத்தாமல், அதற்கு அஞ்சி அடங்காமல் தொண்டு என்னும் படகைத் திறமையோடு ஓட்டிச் செல்ல வேண்டும்! ஆமாம், அதுதான் வீரம்!"

இப்படி ஓடிக்கொண்டே இருந்த அவன் சிந்தனை வெள்ளம், "குமார்" என்று கோபால் அழைத்ததும் தடைப்பட்டது!

"என்ன கோபால்?"

"உனக்குக் கேட்கவில்லையா, காலடிச் சப்தம்?"

குமார் உற்றுக் கேட்டான்.

"ஆமாம்! கோபால்!"

"நாம் ஜாக்கிரதையாக இருக்கவேண்டும்! வருவது ஆண்டியாகவும் இருக்கலாம் அல்லது அரசாங்கப் போலீசாகவுமிருக்கலாம்."

இருவரும் எழுந்து உட்கார்ந்துகொண்டு, தம் கண்களை நன்றாகத் திறந்துகொண்டு அத்திக்கை நோக்கிக் கூர்மையாகக் கவனித்தனர்.

தாய் வீடு சென்றிருந்த இளம் பெண், தன் கணவனைக் காண அதிவேகமாய்த் திரும்பி வருவதைப் போல், உலகைக் காண நிலவு மிக வேகமாக இருளைக் கிழித்துக் கொண்டு வெளியில் வந்தது!

வருவது ஆண்டி என்பதை அறிந்ததும் இருவரும் மகிழ்ச்சி அடைந்தனர். ஆண்டியுடன் தன் தங்கை வேணியும் வருவதைக் கண்ட கோபால் முதலில் சிறிது பயந்தான். ஆண்டியும் வேணியும் அருகில் வந்ததும், அவர்கள் கொண்டுவந்த மூட்டையைக் கீழே வைத்துவிட்டு உட்கார்ந்தார்கள்.

"ஆண்டி, வயதான காலத்தில் எங்களால் பாவம் உனக்குக் கஷ்டம்!"

"கஷ்டமா? எனக்கா? எங்களுக்காகப் பாடுபடும் உங்களுக்கு வேலை செய்வதா கஷ்டம்?" என்று கூறிக் கொண்டே மூட்டையை அவிழ்த்தான் ஆண்டி.

"வேணி! ஏம்மா நீ அழறே!" என்று கோபால் பரிவோடு தன் தங்கையைக் கேட்க, அவள் கண்களைத்

துடைத்துக்கொண்டு "ஒன்றுமில்லை அண்ணா' உங்களை ——" என்று பேசத் தொடங்கினாள்.

"பார்த்தால் போலீசார் பிடித்துக் கொள்வார்களே என்று அழுகிறாயா?" என்று சிரித்துக்கொண்டே குமார் கேட்டான்.

"இல்லை! உங்கள் இருவரையும் இந்தத் திக்கற்ற நிலைமையில் பார்த்ததும் என் மனம்——"

"வீரன் கோபாலின் தங்கை இவ்வளவு பெரிய கோழை என்று யாராவது அறிந்து சிரிக்கப்போகிறார்கள் வேணி" என்று குமார் கூறிவிட்டு, மூட்டையிலிருப்பதைப் பார்க்கத் தொடங்கினான்.

வேணி இலை போட்டு இருவருக்கும் சோறு பரிமாறினாள்; உண்ணத் தொடங்கினர். வளையல் சப்தத்தோடு பரிமாறிய உணவைச் சாப்பிடுவதில், குமாரின் உள்ளம் இன்னலை மறந்து சிறிது இன்பத்தில் திளைத்தது.

"இது வேண்டுமா? அது வேண்டுமா?" என்று கேட்டுக்கொண்டே, ஒளிவீசும் கூரிய கண்கள் வீசிய இன்பப் பார்வை குமாருக்குக் களிப்பூட்டின.

"அந்த ஊரில் எங்கேயாகிலும் அழகு இருந்தால், அந்த அழகிலே கலையைக் கண்டு——" என்ற குமுதத்தின் கோவையிதழ்ச் சொற்கள் அவன் காதுகளில் ரீங்காரம் செய்தன.

வேணியின் முகத்தில் குமுதத்தின் முகத்தைக் கண்டு மலர்ந்தது குமாரின் முகம்! குமார் தன்னைப் பார்ப்பதை அறிந்ததும் வேணி நாணத்தோடு தரையைப் பார்த்தாள். வெட்கத்தால் வேல்விழியாளின் தாமரை முகம் சிவந்தது.

அவள் மனமெனும் மான் துள்ளி விளையாடத் தொடங்கி யது! குமாரின் அன்பும் கவர்ச்சியும் நிறைந்த பார்வை கன்னியின் இரத்தத்தின் ஒவ்வொரு துளியிலும் இன்பத் தைச் சேர்த்தது!

குமார், குமுதம் தனக்கு இந்நேரத்தில் உணவிடுவ தாக எண்ணி மகிழ்ந்தான். வேணியைக் குமுதமாக்கிப் பார்த்ததில் வேதனை நிறைந்த அவன் உள்ளம் சிறிதுநேரம் உவப்பிலாழ்ந்தது! வேணியோ, தன்னைக் குமார் காதலிப்ப தாக எண்ணிக் களிப்புக் கடலில் மூழ்கினுள்! இப்படி அந்நேரத்தில் இரு இளம் இதயங்கள் இன்பத்தில் தோய்ந் தன!

சாப்பாடு முடிந்தது, பேசத் தொடங்கினர்.

“ஆண்டி, இப்பொழுது நிலைமை எப்படி இருக் கிறது?”!

“சிறிதுகூட மாறவில்லை. போலீஸார் உங்களைத் தேடித் தேடி அலைகிறார்கள்............”

“ஆமாம் அண்ணு! தினம் தினம் போலீஸார் திடீ ரென்று வீட்டினுள் வந்து, உள்ளே எல்லாம் பார்த்து விட்டுப் போகிறார்கள்!”

“வேணி, உன் அண்ணுகூட இல்லையே, யாராவது உங்களுக்குக் கேடு செய்துவிட்டால் என்ன செய்வது என்று அவர்கள் அடிக்கடி வந்து பார்த்துவிட்டுப் போகி ருர்களே அன்றி எங்களைத்தேடி அங்கு வரவில்லை போலீ ஸார்! பாபம் நல்லவர்கள்! இரக்கமான உள்ளம் கொண் டவர்கள்!” என்று குமார் கூறியதும் அனைவரும் சிரித் தனர்.

“ஐயோ கடவுளே!” என்று திடீரென்று ஓர் அழு குரல் கேட்கவே, அவர்கள் திடுக்கிட்டனர்!

பதினான்காவது பகுதி

ஓயாத அழுகுரல்

"அய்யோ கடவுளே!" என்ற அழுகுரல் வந்த திசையை நோக்கி அவர்களின் கண்களும் காதுகளும் திரும்பின. காற்றினில் மிதந்து வந்த அழுகுரலின் சப்தம் வரவர அதிகமாயிற்று. உட்கார்ந்திருந்தவர் எழுந்து நின்று, ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டனர். பிறகு மெதுவாகப் பேச ஆரம்பித்தனர்.

கோபால் :—எங்கிருந்து வருகிறது அழுகுரல்?

ஆண்டி :—வடக்கிலிருந்து தான் வருகிறது!

வேணி :—பெண் குரல் போல் தெரிகிறதே!

குமார் ;—ஆமாம்! அப்படித்தான் தோன்றுகிறது.

வே :—ஏன் அழுகிறாள்?

கு :—யாருக்குத் தெரியும்? பாபம், என்ன ஆபத்து நேர்ந்ததோ!

வே :— அங்குபோய்ப் பார்க்கலாமே அண்ணா!

ஆ :—வேண்டாமம்மா, வேண்டாம்! நாம் அங்குப் போகக்கூடாது.

கோ :—ஏன் ஆண்டி போகக்கூடாது?

ஆ:—இதில் ஏதோ சூழ்ச்சியிருக்கிறது.

கு :—ஆண்டி! சூழ்ச்சியா? பாபம், பெண் எவளோ கதறுகிறாள், அதிலே என்ன சூழ்ச்சி இருக்கும்?

வே:—ஓயாது அழுகிறாள், நாம் போய்த் தான்பார்க்க வேண்டும்!

ஆ :—நீ சின்னக் குழந்தை அம்மா! உனக்கு ஒன்றும் தெரியாது. போலீஸார் இப்படி யாராவது ஒரு பெண்ணை

ஏற்பாடு செய்து இரவில் அழச் செய்திருப்பார்கள்! அப்படிப் பெண் அழுதால், உன் அண்ணவும், குமாரும் ஓடி வந்து என்ன வென்று கேட்பார்கள்! அப்பொழுது பிடித்துக் கொள்ளலாம் என்று போலீஸார் சூழ்ச்சி செய்திருப்பார்கள்! ஆமாம்! நான் சொல்கிறேன், அப்படித்தான் இருக்கும்!

கு:—சேச்சே! அப்படியொன்று மிருக்காதப்பா! உண்மையாகத்தான் அழுவதாக எனக்குத் தோன்றுகிறது.

வே:—எனக்கும் அப்படித்தான் தெரிகிறது!

கோ:—சரி, போய்த்தான் பார்ப்போமே!

ஆ:—எனக்கென்னமோ பயமாகவே இருக்கிறது.

கோ:—அப்படியானுல் நீயும் வேணியும் வீட்டிற்குப் போய்விடுங்கள்! நாங்கள் இருவர் மட்டும் சென்று பார்க்கிறோம்.

வே:—நான் பார்த்துவிட்டுத்தான் போவேன் அண்ணு!

கு:—போலீஸார் எங்களோடு உன்னையும் பிடித்துக் கொண்டால்?

வே:—நீங்களெல்லாம் சிறைக்குப் போகும்போது நான் மட்டும் வரப் பயப்படுவேனு?

கு:—சபாஷ் வேணி! பார்த்தாயா ஆண்டி! வேணிக்கு இருக்கும் தைரியம்கூட உனக்கில்லையே!

ஆ:—நான் மட்டும் கோழையா? இதோ புறப்பட்டே விட்டேன்!

அழுகுரல் வந்த திக்கை நோக்கி அனைவரும் நடந்தார்கள். அவர்களுக்கு முன்னுல் சந்திரனும் நடந்து கொண்

டிருந்தது. மெல்லிய காற்று இனிமையாகத் தவழ்ந்து வந்தது. ஆற்றின் தண்ணீர் தங்க நிறம் பெற்று, தகதக வெனப் பிரகாசித்தது! வெள்ளிநிற மீன்கள் நீரில் துள்ளிக் குதித்துக் கொண்டிருந்தன!

பெண்ணின் அழுகுரல் ஓயாது கேட்டுக்கொண்டிருந் தது! வேகமாக நடந்தார்கள். அந்தக் குரல் ஒவ்வொரு வர் உள்ளத்திலும் சிறிதாவது பயத்தை உண்டாக்காம லில்லை! ஆனால் ஒருவருக்கொருவர் தங்களது பயத்தை வெளிக்குக் காட்டிக் கொள்ளாமல், தைரியம் கொண்டவர் களைப்போல நடித்தார்கள்! அக்குரல், அந்நேரத்தில் ஒவ் வொருவர் காதிலும் வெவ்வேறு விதமாக ஒலித்தது!

பார்ப்பானுக்கு அடிமையாகி, தர்ப்பை எடுத்துவரக் கானகம் சென்ற தன் அருமை மகன், பாம்பு தீண்டி இறக்க, அவனை நடு இரவில் சுடலையில் வைத்துத் தீ மூட்டிக் கதறி அழுத சந்திரமதியின் ஒப்பாரியைப் போல் கேட்டது, ஆண்டிக்கு!

வறுமையின் கோரப் பற்களுக்கிடையே சிக்கி, கற்பித் கரசியான தன் மனைவியின் காற்சிலம்பை விற்கச் சென்ற கோவலன், பாண்டியனால் கள்வனென்று பழிசுமத்தப் பட்டு, கொலை செய்யப்பட்டான் என்ற செய்தியைச் செவி யுற்ற கண்ணகி கதறி எழுந்தாளே, அந்த அழுகுரலைப் போல் தோன்றியது வேணிக்கு!

அன்னியர் ஆட்சியின் கொடுமைக்கு ஆளாகி, இன்ன லால் துடி துடித்துக்கொண்டிருந்த பிலிப்பைனர்களுக்கு உணர்ச்சியை ஊட்டி, அவர்கள் உள்ளங்களில் குடி கொண்டிருந்த கோழைத்தனத்தையும் அறியாமையையும் ஓட்டி, அவர்களைப் புரட்சி வீரர்களாக்கிய மணிலாவின் மாவீரன் ரிசாலை, ஸ்பானியர் சுட்டுக்கொன்ற நேரத்தில்,

அந்த அக்கிரமத்தைக் கண்டு அலறிக் கதறிய ரிசாலின் இளம் மனைவியின் கூக்குரலைப்போல் ஒலித்தது குமாருக்கு.

"என் தாய்மொழியை, இன்பத் தமிழ் மொழியை அழிக்க இந்தி மொழியா? ஒப்பேன்! ஒருக்காலும் ஒப்பேன்! என் உடலின் கடைசிச் சொட்டு இரத்த மிருக்கும் வரைக்கும் ஒப்பேன்! அன்னிய மொழியின் படை யெடுப்பை எதிர்ப்பேன்! போரிடுவேன்! என்னைப் பெற்று வளர்த்த என்னரும் தந்தையே, என் அன்பு மனைவியே, எனக்கு விடைகொடுத்து அனுப்புங்கள்! அதோ! நம் தமிழ்த்தாய், காப்பாற்றுவார் இல்லையா, நான்பெற்ற மக்க ளெல்லாம் நடமாடும் பிணங்கள்தானா என்று கண்களில் நீர் காட்டிக் கதறி அழுகிறாளே, அது உங்களுக்குக்கேட்க வில்லையா? என்னால் இதனைச் சகிக்க முடியவில்லை! திக்கற்ற என் தாயைக் காப்பாற்ற அனுப்புங்கள்! இதோ, இதோ செல்கிறேன்!" என்று கூறி, மாங்குயில் கூவிடும் பூஞ்சோலை எமை மாட்ட நினைக்கும் சிறைச்சாலை என்று துள்ளி நடந்து, சிறைப்பட்ட தன் உயிர்க் கணவன், பாழும் சிறையில் பிணமானான் என்ற செய்தியைக் கேட்ட, தாலமுத்துவின் மனைவி தமிழ்நாடு அதிரக் கதறி அழுதாளே, அந்தச் சோக ஒலியைப்போல் கேட்டது கோபாலுக்கு!

இப்படியாக, அறிவின் நிலைக்கும், உணர்ச்சியின் எல்லைக்கும் ஏற்றாற்போல் அவரவர்கள் உள்ளத்தில் பற்பல எண்ணங்கள், அந்த அழுகுரலைக் கேட்டதும் எழுந்தன.

அவர்கள் இவ்விதம் சிந்தித்த வண்ணம் நடந்துகொண் டிருக்கையில், எதிரில் சிறிது தூரத்தில் ஒரு குடிசையையும், குடிசையின் கூரையிலிருந்த சிறுசிறு சந்துகளின் வழி

யாக வெளியேவந்த விளக்கின் ஒளியையும் கண்டு, சிறிது தயங்கி நின்றார்கள்!

"குமார், இந்தக் குடிசையிலிருந்துதான் அழுகுரல் வருகிறது" என்று கோபால் கூறி, "ஆமாம்!" என்று குமார் கூறியதும், அக்குடிசையை நோக்கி அனைவரும் கொஞ்சம் தயக்கத்துடனே நடந்தார்கள்.

குடிசையின் அருகே வந்ததும், ஆண்டி கூறியது கவனத்திற்கு வரவே குமாரும், கோபாலும் நாற்றிசையும் ஒருமுறை சுற்றிப் பார்த்தார்கள். மெதுவாகக் குடிசையின் அருகே சென்றார்கள். அவர்களின் காலடிச் சத்தத்தைக் கேட்டதும், அழுதுகொண்டிருந்தவள் தன் அழுகையை நிறுத்திவிட்டாள். திடீரென்று அழுகுரல் நின்று விடவே, அவர்களுக்குப் பலவித சந்தேகம் ஏற்பட்டது. பிறகு அடிமேல் அடிவைத்துக் குடிசையை அடைந்து, உள்ளே எட்டிப் பார்த்தார்கள். அங்கே அவர்கள் கண்ட காட்சி அவர்களைத் தூக்கி வாரிப்போட்டது! வேணி "அய்யோ!" என்று அலறியே விட்டாள்! குமாரும் கோபாலும் கண்களைத் துடைத்துக்கொண்டு, குடிசையினுள்ளே சென்றனர். இவர்களைக் கண்டதும் புலம்பிக் கொண்டிருந்த பெண் திகைத்தாள். இவர்களெல்லாம் யார்? இந்நேரத்தில் இங்கேன் வந்தார்கள்? என்றெண்ணி ஒன்றும் புரியாமல் விழித்தாள்! அவள் கண்களில் ஆற்றின் ஊற்றைப் போல் கண்ணீர் ஓடி வந்துகொண்டே இருந்தது.

அப்பெண்ணின் அருகே, தரையில் ஒரு பிணம் இருந்தது! அந்தப் பிணம் கறுத்தும், வெள்ளைப் பற்கள் வெளியில் தெரிந்த வண்ணமும், வெள்ளைப் பற்களுக்கிடையே கறுத்த நாக்கு சிக்கிக்கொண்டும் இருந்த காட்சி

பார்ப்பதற்கே, அங்கோரத்தில் மிகுந்த பயங்கரமாய் இருந்தது.

எல்லோருடைய கண்களும் அந்தப் பிணத்தின்மேல் மொய்த்துக் கொண்டன. "நீங்கோ யாரு?" என்று பிணத்திற்கருகே இருந்த பெண் திடீரென்று கேட்டதும், அனைவர் உள்ளமும் திடுக்கிட்டன.

"நாங்கள் வழிப்போக்கர்!" என்று ஆண்டி பதிலளித்துவிட்டு, "இவர் யார் அம்மா!" என்று கேட்டான்.

தேம்பும் குரலில் "என் புருஷன்!" என்று கூறினாள்.

ஐயோ பாபம்! எப்படி இறந்துவிட்டார்?" என்று வினவினாள் வேணி.

"பாம்பு கடித்து........" என்று கூறி, கதறிக் கதறி அழுதாள், பிணமானவனின் மனைவி.

"உனக்கு யாரம்மா ஆதரவு?" என்று கோபால் கேட்டதும், "கடவுள் தானுங்கோ!" என்று அழுது கொண்டே பதிலளித்து விட்டுப் பழையபடி அவள் ஓயாது அழ ஆரம்பித்தாள்!

"கடவுள் துணை! அவனொருவன் இருக்கிறானா? அறிவில்லாப் பெண்! அவனொருவன் இருப்பது உண்மையானால், இவளுக்கு இந்த இளம் வயதில் இவ்வளவு பெரிய துன்பமும், துக்கமும் வந்திருக்குமா? கடவுளாம் கடவுள், எவனோ ஒரு மடையனின் கற்பனையில் முளைத்தவனான்!" என்று ஆவேசம் வந்தவனைப்போலக் கூறினான் குமார்.

பதினைந்தாவது பகுதி

படகோட்டி

பிணத்தின் அருகில், மாண்டவனின் மனைவியைத் தவிர மற்றவர்கள் மௌனமாக உட்கார்ந்திருந்தனர். அவள் ஓயாது அழுதுகொண்டே இருந்தாள்.

சிறிது நேரம் சென்றதும், "ஆண்டி! நீயும் வேணியும் பத்திரமாக வீட்டிற்குப் போங்கள். நேரமும் அதிகமாகி விட்டது. இந்தக் குடிசையிலேயே நாங்கள் இருவரும் இருக்கிறோம். நாளை இரவு நீ மட்டும் வா!......வேணி! அழாமல் போய் வாம்மா!" என்று கோபால் கூறினான்.

வேணி தன் கண்களைத் துடைத்துக்கொண்டு, "வருகிறேன் அண்ணா" என்று கூறினாள். சேல்விழிகளை உருட்டி, "சென்று வரட்டுமா?" என்று குமாரிடம் பேசாது பேசி விட்டுப் புறப்பட்டாள். ஆண்டியும் வேணியும் சென்ற திக்கில் கண்கொட்டாது பார்த்துக் கொண்டிருந்தான் குமார்.

"இளம்பெண்! அடிக்கடிப் பார்க்கிறாள். நானும் அவளைக் காதலிப்பதாகவே எண்ணுகிறாள். பாபம், அவள் அறியாள் என் உள்ளம் முன்பே ஒருத்திக்குச் சொந்தமாகி விட்ட தென்ற உண்மையை......உள்ளம் குரங்கைப் போன்றது என்கிறார்களே, அது உண்மைதானோ? இல்லாவிட்டால் அவளை அடிக்கடிப் பார்க்கவேண்டுமென்ற ஆசை எனக்கேன் எழவேண்டும்? அவளைக்காண்பதில் எனக்கேன் இன்பம் பிறக்க வேண்டும்? அவள் கோவை இதழிலிருந்து விழும் வார்த்தைகள் எனக்குப் பலாச்சுளையைப் போல் இனிப்பானேன்? அவள் நீண்ட கண்களும் என் கண்களும் சந்திக்கும்போது உள்ளம் சிலிர்ப்பானேன்? தேன்

கசிகிறதே, அது எதனுல்? ஆணும் வண்டும் ஒரே இனத்தைச் சேர்ந்தவர்கள் என்று பெண் உலகம் குற்றம் சாற்றுமே, அது நிசம்தானே? உண்மை இல்லாவிட்டால், என் உயிர்க் காதலி குமுதம் என் பிரிவால் அங்கு வருந்துவாள் என்பதை அறிந்திருந்தும், வேணியை என் மனம் நாடுகிறதே, அது ஏன்? பள்ளத்தைப்பார்த்துத் தண்ணீர் ஓடுகிறதே அதுபோல அழகைக் கண்டால் வாலிபம் துள்ளிப் பாயுமோ?................இப்படிப்பட்ட கீழ்த்தரமான எண்ணங்களின் பிறப்பிடமாகிவிட்டது என் உள்ளம் என்பதை குமுதம் அறிந்தால் என்ன பாடுபடுவாள்? அவள் மனம் எவ்வளவு பதைக்கும்? அவள் கண்கள் நீர் அருவி ஆகி விடாதா? சேச்சே! இது தகாது! என்போன்ற கலைஞனுக்கு இது அழகல்ல.........கண்ணே! குமுதம்! நீதான் என் இதயராணி. வேணி அல்ல! உண்மையாக வேணிக்கு என் மனதில் இடம் தரமாட்டேன்! நம் காதல்மேல் ஆணையிட்டுக் கூறுகிறேன். இதனை நீ நம்பு. குமார் துரோகி ஆகமாட்டான். கலைஞன், கன்னி ஒருத்தியைக் காததலித்துக் கைவிடான்!.........குமாரின் மனதில் வீசிய எண்ணப் புயல் இது!

ஆண்டியும் வேணியும் கிளைப்பாதை ஒன்றில் நடந்து கொண்டிருந்தார்கள். மேகக் கூட்டங்களுக்குள் புகுந்து புகுந்து நிலாப்பெண் விளையாடிக்கொண்டிருந்தாள். தான் பிரியும்போது குமார் பார்த்தபார்வை, வேணியின் கன்னி உள்ளத்தை ஏதேதோ செய்தது! அந்த இன்பப் பார்வையை நினைக்க நினைக்க அவளுக்குச் சொல்லொணு மகிழ்ச்சி தோன்றியது.

"ஆகா! அந்தக் கண்களுக்குத்தாம் என்ன ஆற்றலிருக்கிறது. அவரைப் பார்க்கவேண்டும், பார்க்கவேண்

மென்று என் உள்ளம் அடிக்கடித் துடிக்கிறதே! அண்ணு இருக்கும்போதே, அவர் என்ன எண்ணுவார் என்பதை யும் கவனிபாது, அதைப்பற்றிக் கவலையும் படாது எவ் வளவு தைரியமாக அவரை அடிக்கடிப் பார்த்துவிட்டேன்! காதல், பயத்தையும் அறியாதா? அவருடைய அன்புப் பார்வை என்னை அடிமையுல்லவா கொண்டுவிட்டது! அவர் இன்சொல் என்னைச் சிறைப்பிடித்து விட்டதே........ அத்தான் என்று நான் அழைக்க, கண்ணே என்று அவர் அருகில் வரும்நாள் எந்நாள்! நீண்ட அவர் தோள்களைத் தழுவி மகிழும் நாள் எந்நாள்? குமாரின் மனைவி வேணி என்று உலகம் கூறும் நாள் எந்நாள்? வாரி எடுத்துச் சேர்த்தணைத்து என் செவ்விதழ்களில் அவர் தரும் முத் தங்களைப் பெற்று மெய்ம்மறந்து ஆனந்த வெள்ளத்தில் நான் மிதக்கும் நாள் எந்நாள்?......" வேணியின் காதல் உள்ளத்தில் இப்படிப் பற்பல ஆசை அலைகள் எழுந்தன.

அன்றிரவு கழிந்தது. மறுநாள் காலை பிணம் அடக் கம் செய்யப்பட்டது. அபலைப் பெண்ணின் வரலாற் றைக் குமார் விசாரித்தான், அழுதுகொண்டே அவள் கூறினுள்.

பிணமானவன் படகோட்டி காத்தான். அருகே இருந்தவள் அவன் மனைவி வேலாயி. படகோட்டுவதால் கிடைத்த சிறிய ஊதியத்தைக் கொண்டு அவர்கள் இருவ ரும் பிழைத்து வரலானுர்கள். சொற்பமாக வரும்படி கிடைததாலும், அவர்களிருவரும் ஒற்றுமையோடு திருப்தி யாகவே வாழ்ந்து வந்தார்கள். திடீரென்று பாம்பு கடித்து காத்தான் இறந்துவிடவே வேலாயி ஆதரவற்றவ ளாகிவிட்டாள். அவளுக்கிருந்த சொத்து ஆற்றின் கரை யோரமாகக் கட்டப்பட்டிருந்த ஒரே ஒரு படகும், பொத்

தல் குடிசையும்தான். தான் இனி வாழ வழியில்லையே என்று கூறி அவள் அழுதாள். அழுத அவளுக்குத் தேறுதல் வார்த்தைகள் கூறிவிட்டு, கோபாலை அழைத்துக் கொண்டு குமார் வெளியில் சென்றான்.

"கோபால், எனக்கு ஒரு யோசனை தோன்றுகிறது."

"என்ன?"

"வேலாயியோ ஆதரவற்று இருக்கிறாள். அத்துடன் பூர்ண கர்ப்பிணியாகவும் காணப்படுகிறாள். இந்த நிலையில் அவளைத் தனியாக விட்டுவிட்டு நாம் செல்வது சரியல்ல என்று எனக்குத் தோன்றுகிறது."

"ஆமாம் குமார், எனக்கும் அவளுக்கு ஏதாகிலும் உதவி புரிய வேண்டுமென்ற எண்ணந்தான் பிறக்கிறது. இந்நிலையில் நாம் என்ன செய்ய முடியும்?

"ஏன் செய்ய முடியாது? நாம் படகோட்டிகளாகி விட்டால்?

"நல்ல யோசனைதான். ஆனால் யாராகிலும் நம்மைப் பார்த்துவிட்டால்?"

"மாறு வேடத்தோடு நாம் இருந்தால், நம்மை யாரும் அவ்வளவு சுலபத்தில் கண்டுபிடிக்க முடியாது. அத்துடன் நம் குரலையும் பேசும் முறையையும் மாற்றிக்கொள்ள வேண்டும்."

"சரி, அப்படியே செய்யலாம்."

"இந்த வழியில் நமக்கு இரண்டு விதத்தில் லாபம். அனாதைப் பெண்ணை ஆதரித்தோம் என்பதில் நமக்கு ஒரு மனஆறுதல். ஊருக்கு அருகேயே இருப்பதால்,

செய்திகள் அடிக்கடிச் சுலபமாகக் கிடைக்கவும் வசதியாக இருக்கும்."

"போலீஸார் கண்ணில் பட்டுவிட்டால்?

"போலீஸார் விஷயம் உனக்குத் தெரியாதா? ஒரு ஊரைச்சேர்ந்த ஒருவன் தலைமறைவாக இருக்கிறான் என்றால், அவன் சொந்த ஊருக்கு அப்பால் தேடுவதுதான் போலீஸாரின் வழக்கம். ஏனென்றால் சொந்த ஊருக்கருகில் அவன் தைரியமாக இருக்க மாட்டான் என்பது அவர்களின் நினைப்பு!" குமார் இப்படிக்கூறியதும் "ஆமாம் ஆமாம்!" என்று தலை ஆட்டிவிட்டு கோபால் சிரித்தான்.

கோபாலும் குமாரும் மாறுவேடம் பூண்டு தினமும் படகோட்டி, அதனால் கிடைத்த சிறிதளவு பணத்தில் மூவரும் நாட்களைக் கழித்துக்கொண்டிருந்தார்கள். அடிக்கடி ஆண்டி வந்து செய்திகளைக் கூறுவான். சில நாட்களில் வேணியும் அவர்களை வந்து பார்த்துவிட்டுச் செல்வாள். மாதங்கள் சில இப்படியே மறைந்தன.

பதினாறாவது பகுதி

ஆரியனின் கண்கள்

குடிசையின் வெளியில் குமாரும் கோபாலும் குந்தியிருந்தனர். இருவரின் முகங்களும் வாடி இருந்தன. படகோட்டி காத்தானின் மனைவி வேலாயி பிரசவ வேதனை பட்டுக் கொண்டிருந்தாள். இரவு நேரமாகையினால் அப்பக்கம் ஜன நடமாட்டமே கிடையாது.

"கோபால், வேலாயி தனியாக இருக்கிறாள்! பாவம்; ஒரு பெண் துணையும் அவள் அருகில் இல்லை. அடுத்த கிராமத்துக்குச் சென்று மருத்துவச்சியை அழைத்துக் கொண்டு வர முடியாத நிலைமையில் நாம் இருக்கிறோம்...."

"ஏன் அழைத்துக்கொண்டு வரமுடியாது?"

"அக்கிராமத்திற்குச் செல்லும்போது நம்மை யாராவது கண்டுபிடித்துவிட்டால்?"

"இங்கு எவ்வளவோ பேர் வருகிறார்கள், போகிறார்கள். அவர்களில் ஒருவரால் கூட இன்னும் நம்மைக் கண்டுபிடிக்க முடியவில்லை. அப்படி இருக்க அக் கிராமத்தில் மட்டும் கண்டுபிடித்துவிட இயலுமா?"

"எனக்கென்னவோ நாம் சென்று அழைத்துக் கொண்டு வருவது சரி என்று படவில்லை."

"வேலாயி படும் வேதனை உன் காதுகளில் கேட்கவில்லையா குமார்?"

"ஆம் கேட்கிறது!"

"அவளுக்கு உதவியளிக்க வேண்டியது நம் கடமை அல்லவா?"

"ஆமாம்! அதனால்! இன்னலில் நாம் சிக்கிக்கொண்டால்?"

"இப்பொழுது இரவு நேரம். போலீஸார் நம்மைத் தேடும் நேரம். இது எனக்குத் தெரியும். இதனால் ஆபத்து நேர்ந்தாலும் நேரும், அதனையும் நான் அறிவேன். இருந்தாலும் அபலை ஒருத்தியின் ஆபத்தில் உதவாத சுயநலம் மிக்க கயவர்கள் என்ற பழிச்சொல் நமக்கு வரக்கூடாது! வேலாயியைப் பத்திரமாக நீ பார்த்துக்கொள். ஒரு நொடியில் நான் சென்று மருத்துவச்சியை அழைத்துக் கொண்டு வருகிறேன்!"

"நானும் உனக்குத் துணையாக வருகிறேன்?"

"இங்கு வேலாயிக்கு யார் துணை?

"சரி கோபால், விரைவில் வந்துவிடு"

கோபால் சென்றதும், குமார் தனியாக உட்கார்ந்து கொண்டு எதை எதைப்பற்றியோ யோசிக்கலானான்.

"காத்தான் இன்று உயிரோடு இருந்தால், மருத்துவச்சி இந்நேரம் வந்துவிட்டிருக்கமாட்டாளா? குடிசையின் வெளியில் உட்கார்ந்துகொண்டு தனக்குப் பிறப்பது ஆண் சிங்கமா அல்லது பெண் அன்னமா என்பதை அறிய அவன் எவ்வளவு துடிதுடிப்போடு இருந்திருப்பான்? குழந்தையின் அழுகுரலைக் கேட்டால் அவன் உள்ளம் எவ்வளவு குளிர்ந்திருக்கும்?" இவ்வாறு காத்தானைப் பற்றி எண்ணிக் கொண்டிருந்த அவன் மனம், மிகமிக வேகமாகக் குமுதத்தை நாடி மலர்புரிக்கு ஓடியது! காலடிச் சத்தம் கேட்கவே கண்களை நன்றாகத் திறந்து பார்த்தான். கோபால் திரும்பி வந்துகொண்டிருப்பதைக் கண்டதும், அவனை நோக்கி நடந்தான்.

"கோபால், மருத்துவச்சியை அழைத்துக்கொண்டு வரவில்லையா?"

"வழியில் ஆண்டி வந்தான், அவனை அழைத்துக் கொண்டு வரும்படிக் கூறிவிட்டு, நீ தனியாக இருப்பாயே என்று நான் வந்துவிட்டேன்."

இருவரும் நீண்ட நேரம் உட்கார்ந்து கொண்டிருந்தனர்.

யாரோ இருவர் வருவதைக் கண்ட அவர்கள், ஆண்டியும் மருத்துவச்சியும் தான் வருகின்றனர் என்று எண்ணினர். ஆனால் ஒரு கிழவனும், ஒரு சிறிய பெண்ணும் குடிசையின் அருகே வந்து, "படகோட்டி இல்லையா?" என்று கேட்டனர்.

"என் சாமி! இதோ இருக்கேனே?" என்று பட கோட்டி பேசுவதைப் போல் குமார் பேசினான். "அக்கரை போகவேண்டும் வருகிறாயா?" என்று கிழவன் வினவினான்.

"எம்பா, பொழுது விடியப் போராப்பலே இருக்கு. நீ போ! நானு இங்கேயே இருக்கிறேன்." என்று கோபால் கூறினதும், படகு தள்ளக் குமார் சென்றான்.

கிழவனையும் பெண்ணையும் அக்கரையில் விட்டுவிட்டுப் படகை வேகமாகத் தள்ளிக் கொண்டு இக்கரைக்கு வந்தான். வேறு இருவர் அக்கரை செல்லவேண்டுமென்று காத்துக் கொண்டிருந்தனர். அவர்களையும் அக்கரையில் கொண்டுபோய்ச் சேர்த்தான். குமார் குடிசைக்குச் செல்ல முடியாதபடி பலர் வந்துகொண்டே இருந்தனர். படகைத் தள்ளித் தள்ளி அவனது கைகள் தளர்ந்து விட்டதால் இக்கரைக்குவந்து சோர்ந்து உட்கார்ந்தான். பொழுது புலர்ந்து விட்டது. கதிரவனும் பவனிவரத் தொடங்கி விட்டான். புல் தரையில் மேய்க்க மாடுகளைச் சிறுவர்கள் ஓட்டிக் கொண்டு வந்தனர்.

வேலாயி குளிகுளித்து விட்டாளா என்பதைப் பார்த்துக்கொண்டு வரலாமென்று எழுந்து நடக்கத் தொடங்கிய குமார், தன்னை யாரோ கைதட்டி அழைப்பதைக் கண்டு திரும்பினான். அழைத்தவரைக் கண்டதும் ஆச்சரியத்தால் அவன் கண்கள் விரிந்தன. பயத்தால் உள்ளம் படபட வென அடித்துக் கொண்டது, உடலில் சிறு நடுக்கம் ஏற்பட்டது. தன்னைச் சமாளித்துக் கொண்டு பரம்பரை படகோட்டியைப் போல நடிக்க ஆரம்பித்தான்.

அங்கு வந்தவர் சாதாரண மனிதரா? அல்ல! அல்ல! அவர் மனிதரே அல்ல! பூதேவர்! ஜாதிக்கெல்லாம் மிக உயர்ந்த ஜாதியைச் சேர்ந்தவரும், பிரம்மாவின் முகத்தி

லிருந்து உதித்தவரும், இந்துமத ரட்சகரும், மார்பில் பூணூலும், கையில் பஞ்சாங்கமும் கொண்டு மக்களை, ரம்பையும் மேனகையும் தம் சிற்றிடை அசைத்துச் சிருங்கார நடனம் செய்யும் மோட்ச லோகத்திற்கு அனுப்பும் அருந்தொண்டைமேற்கொண்டவருமான பிரம்மஸ்ரீகோட்டீஸ்வரய்யர்தான் அங்கு நின்றிருந்தவர்!!

குமாரை அவர் கண்கள் ஏற இறங்கப் பார்த்தன. அவர் கண்களில் ஆநந்த ஒளி வீசியது. ஆனால் அந்த ஆரியனின் கண்களைப் பார்க்கவே குமாருக்குப் பயமாக இருந்தது. அய்யர் அறிந்து கொண்டார், படகோட்டி வேடத்தில் குமார் இருக்கிறான் என்பதை. ஆகவே மெதுவாக அவனிடம் பேச்சுக் கொடுத்தார். குமாரைத் தான் தெரிந்து கொள்ளாததைப் போலவே மிகமிகத் திறமையாக நடித்தார்.

"டே! உன் பெயர் என்ன?" என்றார் அய்யர்.

"என் பேரா சாமி, மாரி!"

"நீ எந்த ஊர்?"

"இங்கேதான் சாமி இருக்கேன்!"

கோட்டீஸ்வர அய்யர் கண்களை உருட்டி ஒரு விதமாகப் பார்த்தார்.

"சோலையூரா நீ?"

"இல்லே சாமி!"

"எப்போதாகிலும் போய் இருக்கிறாயா?"

இல்லேங்களே! என்ன சாமி அங்கு விசேஷம்?"

"ஒன்றுமில்லே. ஐந்து நாட்களுக்கு முன்பு அங்கொரு கல்யாணம் நடந்தது............"

"யாருக்குங்கோ?"

"சிவன் என்ற பணக்காரப் பயலுக்கும், பழத்தூர் வைத்தியர் வையாபுரியின் மகள் குமுதத்திற்கும் கல்யாணம் நடந்தது. அதற்காக............"

"உண்மையாகவா?" என்று திடுக்கிட்டுப் பதறிக் கேட்டான் குமார்.

"ஆமாம் அப்பா, ஆமாம்! வேண்டுமானால் கல்யாணப் பத்திரிகை இதோ இருக்கிறது பாரேன்!" என்று பையிலிருந்து ஒரு திருமண இதழை அவனிடம் நீட்டினான். குமார் அதனை வாங்கினான்.

"டே! உனக்குப் படிக்கக்கூடத் தெரியுமா?"

"கொஞ்சம் கொஞ்சம், அப்படியும் இப்படியும் கூட்டிக்கூட்டிப் படிப்பேனுங்கோ" என்று நடுநடுங்கும் குரலில் கூறினான்.

பிறகு அய்யரைப் படகில் அக்கரைக்குக் கொண்டு போய் விட்டுத் திரும்பினான்.

"தொலைந்தீர்கள் இனிமேல்!" என்று மகிழ்ச்சியோடு கூறிக்கொண்டு வேகமாக நடந்தார் கோட்டீஸ்வர அய்யர்.

போகிற அவசரத்தில் திருமணத்தாளைத் திருப்பி வாங்கிக் கொள்ளாமலே போய்விட்டார் அய்யர். அவர் போனதும், தாளைப் பிரித்தெடுத்துப் படித்தான்; தன் ஆசைக் காதலி குமுதம சிவனுக்கு மனைவியாகிவிட்டாள் என்பதை அழுத்தத் திருத்தமாக அறிவித்தது அந்தத் தாள். அறிவித்ததா, இல்லை, கூரிய ஈட்டி முனை கொண்டு தாக்கிற்று அவன் இதயத்தை. சுருண்டு வீழ்ந்தான் குமார். வீழ்ந்தபோது அவன் உதடுகள் ஏதோ முணுமுணுத்தன.

அது இன்னதென்று தெளிவாகத் தெரியவில்லை. ஆனால் அந்த ஒலி அலைகள் எழுத்துருவம் பெற முடியுமானால் அது கிட்டத்தட்ட இதுபோலிருக்கும்: குமுதினி......ஒரு ......துரோகி!

பதினேழாவது பகுதி

"நான் துரோகியா?"

"குமுதம்....ஒரு...துரோகி! ஆம், உண்மை! உயிருக்குயிராய் நேசித்த என் அத்தானுக்கு மோசம் செய்தேன். நான் ஒரு துரோகிதான்! கண் வீச்சாலும் கற்கண்டு மொழியாலும் கலைஞனின் அமைதியான உள்ளத்தில் காதல் தென்றல் வீசச் செய்து முடிவில் கைவிட்ட காதகி நான்! சொத்து உமதுதான் என்று ஆசை வார்த்தைகளைக் கூறி, மோகனப் புன்னகையில சொக்கச் செய்து இப்பொழுது அவரைத் தவிக்கவிட்ட நான், மோசக்காரிதான்! ஆனால் உண்மையிலேயே நான் துரோகியா? காதகியா? மோசக்காரியா? ஏமாற்றவேண்டுமென்ற எண்ணத்தோடுதானா பாசத்தோடு அவரிடம் பேசினேன்! அத்தான் அத்தான் என்று என் இள மனது அன்றுபோல் இன்றும் துடிதுடிக்கிறதே! துரோகிக்கு அந்தத் துடிதுடிப்பு இருக்குமா? அல்ல, அல்ல நான் துரோகி அல்ல!......சிவனை மணந்தாயே அது துரோகம் அல்லாமல வேறென்ன? உன்னையே நம்பி இருக்கும் குமாரைக் கைவிட்டாயே அது துரோகம் அல்லவா?...... மனமே! தந்தையின் பாசத்தையும் அத்தானின் காதலையும் தராசில எடை பார்த்து, நல்ல முடிவு அன்று கூறத் தவறியது நீதானே? மேலும் என்னை ஏன் வாட்டுகிறாய்? ......"—அறைக்கு வெளியில் கையில் பால் கோப்பை

யுடன் நின்றுகொண்டிருந்த குமுதத்தின் மனதில் தோன்றிய எண்ணப்புயல் இது.

"ஏனம்மா, உனக்கு யார் வேண்டும்? கொலைகாரன் குமாரா அல்லது கண்ணீர் சிந்தும் உன் தந்தையா? அதனை விரைவாகக் கூறிவிடு! குமுதம், உன் அன்பில் என் உயிர் ஊசலாடிக்கொண்டிருக்கிறது! சிவன் கட்டும் தாலி உன் கழுத்தில் பிரகாசிக்கவேண்டும் அல்லது கிண்ணத்திலிருக்கும் விஷம் என் தொண்டையை எரித்துக்கொண்டே உள்ளே ஓடவேண்டும்! இது என்னுடைய முடிபு!" என்று அன்றொருநாள் வையாபுரி கையில் விஷக் கிண்ணத்தோடு குமுதத்தைப் பயமுறுத்திக் கேட்டார். கோபத்தால் குழம்பிய மனதோடு பேசும் தந்தையைப் பிறகு தன் விருப்பப்படி மாற்றிக்கொள்ள முடியும் என்ற நம்பிக்கையினால், குமுதம் அன்று அவரது கருத்துப்படியே நடப்பதாக ஒத்துக்கொண்டாள்.

அவள் எண்ணியபடி வையாபுரியின் மனதை அவளால் மாற்ற முடியவில்லை. அவளது நம்பிக்கை தேய்ந்துகொண்டே வந்தது. வைத்தியரின் வற்புறுத்தல் நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே சென்றது. காதல் வாழ்வு விரும்பி மகள், தன் தந்தையைக் கொன்றாள் என்ற பழிச்சொல்லுக்குப் பயந்து தன்னைப் பெற்றவரின் கொடூர விருப்பத்திற்கு அர்ப்பணித்துக்கொண்டாள், குமுதம்.

குமுதம், சிவனின் மனைவியாக்கப்பட்டாள்! அந்த மணத்தில் இருவருக்கும் பிடித்தமில்லை. இருவரின் உள்ளங்களும் இரு துருவங்களாக இருந்தன. மனோரமாவை எண்ணி எண்ணி சிவனின் உள்ளம் வேதனைப்பட்டது. அத்துடன் காசநோயும் அவன் உடலை வாட்ட ஆரம்பித்தது.

குமாரை நினைந்து நினைந்து குமுதம் கண்ணீர் வடித்தாள். தந்தைக்காக அவள் தன்னைத்தானே தியாகம் செய்துகொண்டாள். ஆனால் தியாகத்தின் பலனை அனுபவிக்குமளவிற்கு அவளிடத்தில் மனதிடமில்லை!

கையில் பால் கோப்பையோடு அறைக்கு வெளியில் நின்றிருந்த குமுதம் கதவைத் திறந்துகொண்டு, சோக நடை நடந்து உள்ளே சென்றாள்.

அறையினுள் கட்டிலின்மேல் சிவன் உட்கார்ந்து கொண்டிருந்தான்.

இரவு நேரத்தில், புது மனைவி கட்டிலறையில் நுழையும்போது, காளையின் உணர்ச்சிமிக்க உள்ளம் களிப்பினால் எவ்வண்ணம் கூத்தாடும்? வாரி அணைத்து, வஞ்சியும் தானும் வானமண்டலத்தில் பறக்க வலிமைமிக்க அவனது தோள்கள் எவ்வளவு துடிதுடிக்கும்?

உடன் பிறந்தாள் அறையினுள் வரும்போது ஏற்படும் உள்ள உணர்ச்சிதான், சிவனுக்கு இருந்தது. அழகி ஒருத்தியின் வாழ்வைப் பாழாக்குகிறோமே என்ற நினைப்பு அவனை வேதனைக்குள்ளாக்கியது. தன்னைப் பிடித்துள்ள நோய், தளிர் மேனியாளுக்கும் தொத்திக்கொள்ளப் போகிறதென்றெண்ணி, அவளிடம் அதிகமாக நெருங்கிப் பேசவும் அவன் அஞ்சினான்.

"வா, குமுதம்" என்று அன்பாக அழைத்தான். குமுதம் அருகில் வந்து பால் கோப்பையை அவனிடம் கொடுத்துவிட்டு நின்றாள்.

சிவன் இளம் பெண்ணின் முகத்தை உற்றுப் பார்த்தான். அவன் கண்கள் கலங்கின.

"ஏன் அழுகிறீர்?" என்று பரிவாகக் குமுதம் வினவினாள்.

"உன் வாழ்வைப் பாழாக்கப் பிறந்தேனே என்றெண்ணி..."

"வேண்டாம்! நோயால் வாடியுள்ள உடல், கவலையால் மேலும் பாதிக்கப்படும்!"

"குமுதம், உன் முகம் எப்பொழுதும் கவலையில் மூழ்கி இருக்கிறதே, அது ஏன்?....நோயாளியைக் கணவனாகப் பெற்றோமே என்ற கவலையினலா?........குமுதம்! என்னை மன்னித்துவிடு! இது நான் செய்த தவறல்ல! என் தாயின் பலவந்தத்தால் ஏற்பட்ட விபரீத மணம் இது!....'

"சென்றதை எல்லாம் நினைத்து வருத்தப்படுவது பயனுள்ளதா? உண்மையிலேயே எனக்கு என் வாழ்வைப் பற்றிய கவலையே இல்லை! தங்கள் உடல் நாளுக்குநாள் இளைக்கிறதே என்ற வருத்தந்தான் எனக்கு."

கண்ணீரைத் துடைத்துக்கொண்டு, சிவன் கட்டிலில் சாய்ந்து பெருமூச்சுவிட்டான். அறையின் மற்றொரு பக்கத்திலிருந்த வேறொரு கட்டிலில் குமுதம் படுத்தாள் வேதனை அலைமோதும் உள்ளத்தோடு.

மகனுக்கு மறுமணம் செய்து பார்த்துவிட்டுத்தான் கண்மூடுவேன் என்ற பிடிவாதத்தோடு இருந்த தாயாரம்மாள், சிவனுக்கு மணமான சில மாதங்களில் உயிர் நீத்தாள்! அமைதியாக அவள் இறந்தாள்; ஆனல் இரு இளம் உள்ளங்களின் அமைதி அவளால் பாழ்படுத்தப் பட்டுவிட்டது.

காதலி மனோரமாவின் மறைவு, அன்பு அன்னையின் பிரிவு இவைகளால் ஏற்பட்ட கவலை அவனை மிகமிகப் பாதித்தது. சுற்றிச்சுற்றி புயல் வீசும் கடலில் சிக்கிய படகாளுன் அவன்.

வைத்தியர் வையாபுரி சிவஞையும், குமுதத்தையும் சோலையூரிலிருந்து மலர்புரிக்கு அழைத்துச்சென்று விட்டார்.

மருமகனின் உடலைச் சீர் குலைக்கும் நோயைப் போக்க வையாபுரி எவ்வளவோ பாடுபட்டார்.

நோயாளியின் படுக்கையில் படுத்துக்கொண்டிருந்த சிவன், புரட்சிக் கவிஞரின் கவிதைத் திரட்டைக் கையில் வைத்துக் கொண்டு, அதிலுள்ள ஒரு பாட்டின் சில வரிகளை மட்டும் அடிக்கடி மனத்திற்குள்ளாகவே படித்துக்கொண்டிருந்தான். அந்த வரிகளைத்தான், வாய்விட்டு வெளிச் சொல்ல நாள் நெருங்கி விட்டதே என்றெண்ணி வருத்தமும் மகிழ்ச்சியும் அடைந்தான்.

பதினெட்டாவது பகுதி

சிக்கிய இரு பறவைகள்

ஆற்றின் நீரில் அயர்வு இன்றிக் கோபால் படகு தள்ளிக் கொண்டிருந்தான். கரையிலிருந்த ஓர் ஆலமரத்தின் அடியில் கவலை நிறைந்த உள்ளத்தோடு குமார் சோர்ந்து உட்கார்ந்திருந்தான். இழக்கக் கூடாத தொன்றை இழந்து விட்டால் ஏற்படும் ஏமாற்றமும் ஏக்கமும் அவன் முகத்தில் நிழலாடின. சுருள் சுருளாக இருந்த அவனது தலைமயிர் காற்றில் அசைந்தாடிக்கொண்டிருந்தது. மயானத்தில், இறந்தவரின் கல்லறையின் மீது கட்டப்படும் ஸ்தூபியைப் போன்றதோர் சித்திரத்தைச் சிறு குச்சுக் கொண்டு அவன் கை, தரையில் வரைந்தது.

தனிமையில் தளிர்மேனி குமுதம் தன்னிடம் இன்பமாக விளையாடியதெல்லாம் அவன் நினைவிற்கு வந்தது.

இன்று அன்னியன் ஒருவனிடமும் அப்படித்தானே அவள் விளையாடிக்கொண்டிருப்பாள் என்றெண்ணியதும் அவன் இதயம் பிளந்து விடும்போல ஆகியது. "துரோகம்........ ஒரு ....துரோகி!" என்று திரும்பத் திரும்ப அவனது உலர்ந்த உதடுகள் முணுமுணுத்தன!

படகை ஆற்றின் ஓரமாகக் கட்டிவிட்டு, கோபால் குமாரின் அருகில் வந்தான். உணர்ச்சி அற்ற கண்களோடு ஏறிட்டு கோபாலைப் பார்த்தான் குமார். குமார் தீட்டிய மயானச் சித்திரத்தை, அப்பக்கமாக வாலை ஆட்டிக் கொண்டோடிய ஓர் அணில் அழித்து விட்டது. கோபால் தரையில் உட்கார்ந்தான்.

"குமார், சில நாட்களாக ஏன் மிகுந்த கவலையில் ஆழ்ந்தவனைப்போல காணப்படுகிறாய்?"

"கவலையில் ஆழ்ந்தவனைப்போல அல்ல கோபால், கவலையிலேயே மூழ்கிவிட்டேன். மூச்சுத்திணறிச் சாகப் போகிறேன்" என்று வெறுப்புக் கலந்த குரலில் குமார் பதிலளித்துவிட்டு, கோபாலைப் பார்த்தான்.

"என்னால் உனக்கு இவ்வளவு தொல்லைகளும் வந்து விட்டன!"

"இல்லை கோபால், உன்னால் எனக்கு யாதொரு தொல்லையும் வரவில்லை. எனக்கு நானே தொல்லைகளைத் தேடிக்கொண்டேன். இன்றைக்கில்லாவிட்டாலும் பிறி தொருநாள் அதன் விஷப் பற்களுக்குப் பலியாவோம் என்பதை அறியாமல், பளபளப்பாக இருக்கிறதே என்றெண்ணி அதன் அழகில் ஏமாற்றமடைந்து நல்லபாம்பைத் தடவித்தடவிக் கொடுத்தேன். தேன் இனிமையானது, அதனை விரும்பிப் பருகவரும் வண்டும் நல்ல குணம்

கொண்டதாகத்தான் இருக்க வேண்டுமென்று நம்பி, அதனைப் பிடித்து விளையாடினேன்!......"

"குமார், நீ சொல்வது எனக்கொன்றும் புரியவில்லையே!"

"என் வாழ்வு இன்று எனக்கே புரியாமல் இருக்கிறது கோபால்!"

"தெளிவாகக் கூறினால் நான் ஏதாகிலும் உதவி புரியலாம்."

"அதற்கு இனி யாருடைய உதவியும் வேண்டாம். சாவு என்னை அணைக்க வேண்டும். அதுதான் இப்பொழுது வேண்டும்!" என்று கூறியதும் குமாரின் கன்னங்களில் நீர்த்துளிகள் உருண்டன.

"கோபால், ஒன்றைமட்டும் ஒத்துக்கொள். அது போதும் எனக்கு!"

"சொல், குமார்!"

"பெண்களைப் பற்றிப் பரிந்து பரிந்து பேசுவாய் அல்லவா? நானும் அப்படித்தான் பிதற்றிக்கொண்டிருந்தேன். உண்மையின் ஒளியை இப்பொழுதுதான் கண்டேன். பளபளப்பான தோல் போர்த்த நல்ல பாம்புக் கூட்டம், பெண்கள்! உடல் இன்பம் என்னும் தேனைப் பருக வரும் விஷக் கொடுக்குகளைக் கொண்ட வண்டுகள், பெண்கள்! திடமனமற்ற, சஞ்சல குணம் கொண்ட மோசக்காரிகள், பெண்கள்! உடலை ஒருவனுக்கும், கழுத்தை மற்றொருவனுக்கும் சொந்தமாக்கும் காதகிகள், பெண்கள்!......"

"குமார், வேண்டாம்! தாய்மார் கூட்டத்தைப் பழிக்காதே."

"தாய்மார் கூட்டமா? ஆ ஆ! தாசிமார் கூட்டமென்று கூறு! மிக மிகப் பொருத்தமாக இருக்கும்!"

"யாரோ ஒருவரிடம் கொண்ட கோபத்திற்காகப் பெண்மையைப் பழிக்காதே. அறிவுலகம் இதனைக் கேட்டால், உன்னைத் தூற்றும்."

"உன் வாய் வேதாந்தத்தை நெருப்பில் போட்டுப் பொசுக்கு. அறிவுலகத்திற்கு அனுபவமே கிடையாது! நான் அனுபவத்தில் கண்டதைக் கூறுகிறேன், இதுதான் உண்மை!"

"செய்தியை விளக்கமாக உரைத்தால்தானே, நான் ஏதாகிலும் பேசமுடியும்!"

"செய்தியை நீ அறியவேண்டியதுமில்லை, அதன் பிறகு பேசவேண்டியதுமில்லை. முதலில் நீ தப்பித்துக் கொள்ள வழிதேடு!"

"என்ன?"

"ஆமாம், போலீஸார் நம்மைத் தேடிக்கொண்டு இங்கு வரப்போகிறார்கள். ஆகவே விரைவாக எங்கேயாகிலும் நீ போய் ஒளிந்துகொள்!"

"நீ மட்டும்!"

"என்னைப்பற்றிய கவலை இனி உனக்கு வேண்டாம். இனி நான் வாழத் தகுதி அற்றவன்! வாழ்ந்தாலும் பயனற்றவன்!"

"அது இருக்கட்டும், போலீஸார் நம்மைத் தேடிக்கொண்டு இங்குவருவார்களென்று உனக்குயார் கூறியது!"

"யார் கூறியதா? அந்தக் கண்கள் கூறின! ஓகோ! கோபால், உனக்கு நான் சொல்லவே இல்லையா?" என்று குமார் கூறிக்கொண்டே ஆச்சரியத்தோடு கோபாலைப் பார்த்தான்.

ஆம், குமுதத்திற்கு மணமாகிவிட்டதென்ற செய்தியைக் கேள்விப்பட்டது முதல் உலகையே அவன் மறந்துவிட்டான். ஆரியனின் கண்களில் தான் சிக்கிவிட்டதையும், "பயல்களே, உங்களைப் பழிவாங்காமல் விடமாட்டேன்!" என்று வஞ்சகனின் கண்கள் அவனிடம் உரைத்ததையும் கோபாலிடம் அவன் கூறவில்லை.

கோடீஸ்வரய்யரைத் தற்செயலாகத் தான் சந்தித்ததையும், படகோட்டியைப்போல் நடித்தும் அந்தப் பார்ப்பனன் அடையாளத்தைக் கண்டுபிடித்துவிட்டதையும் தன்னை யார் என்று கண்டுகொண்ட பிறகும், நடிப்பையே பிறவிக்குணமாகவும், பிழைப்புத் தொழிலாகவும் கொண்ட இனத்தில் வந்த அவன் யாதும் அறியாதவனைப்போல சென்றுவிட்டதையும், விளக்கமாகக் குமார், கோபாலுக்குக் கூறினன். இதனைக்கேட்ட கோபால் பெருமூச்சு விட்டான்.

"கோபால், இக்கோரம் கோடீஸ்வரய்யர் எவ்வளவோ வேலைகளைச் செய்துவிட்டிருப்பான். நம் இனத்தை ஒழித்துக் கட்ட அவன் கங்கணம் கட்டிக்கொண்டிருக்கிறான். இதனை நீ நன்கு அறிவாய், ஓடு, ஓடு, விரைவாக. எங்கேயாகிலும் சென்று தப்பித்துக்கொள்."

"நீ!"

'நானு, வாழப்பிறந்தவனல்ல, கோபால், நான்; சாகப் பிறந்தவன். அதிலும் இதயம் சிறுகச் சிறுக அழுகி அழுகி மாளப்பிறந்தவன்.!' அவன் கண்களில் நீர் நிறைந்தது.

"உன்னை விட்டு, நான் செல்வதா? ஒருபோதும் முடியாது! தப்பினல் இருவரும் தப்புவோம், சிக்கினல் இருவரும் சிக்குவோம்" என்று கோபால் கூறியதும், "தப்புவதா? இனி எது?" என்று கூறி, இடியோசை

யைப்போல ஓர் குரல் உரக்கச் சிரித்தது. திடுக்கிட்டு இரு வரும் எழுந்து பார்த்தனர். சிவன் கோயில் பொதிமாட் டைப்போல கோட்டீஸ்வரய்யர் நின்றுகொண்டிருந்தார். அவரருகே காளிமுத்து இருந்தான்.

குமாரை இழுத்துக்கொண்டு கோபால் ஓட முயற்சித் தான். 'ஓடினால் தப்பமுடியாது! எப்பக்கமும் போலீஸ்!'' என்று கூறி, அய்யர், வீட்டின் சுவர் இடிந்து சரிவதைப் போல கல கல வென்று உரக்கச் சிரித்தார்.

குனிந்த தலையோடு குமார் நின்றிருந்தான். கனல் கக் கும் விழிகளால் கோபால் அய்யரைப் பார்த்தான். சூழ்ச்சி யையே பிறப்புரிமையாய்க் கொண்ட வஞ்சகன் ஆணவத் தோடு கேலிப்பார்வையைக் கோபால் மீது வீசினான்.

போலீஸார் என்னும் வேடுவர்கள் விரைந்து ஓடிவந்த னர். சிறகொடிந்த இருபறவைகளைப்போல, கோபாலும் குமாரும் அவர்களிடம் சிக்கினர்.

தன் அண்ணனும், இதய வீணையை மீட்டிவிட்ட காதலனும் போலீஸாரிடம் சிக்கி, சிறையில் வாடுகின்றனர் என்பதை அறிந்ததும், வேணி கண்ணீர் உகுத்துக் கதறி அழுதாள். அவள் கன்னி உள்ளம் கரைகாணாத் துக்கத் தால் தவியாய்த் தவித்தது! அழுது அழுது நாட்களை விரட்டி அடித்தாள்.

நோயால் படுத்த படுக்கையாய்க் கிடந்த சிவனுக்கு வேண்டிய பணிகளைச் செய்துகொண்டிருந்த குமுதம் குமார் போலிசில் பிடிபட்டான், சிறையில் அடைபட் டான் என்பதைப் பத்திரிகையில் கண்டதும், அவள் உள் ளம தீயில் சிக்கிய புழுப்போல் துடிதுடித்தது. கதறி அவள அழவில்லை. ஆனால் கண்ணீர் அவள் கன்னங்களில் வழிந்தோடுவதினின்றும் ஒரு கணமும் ஓயவில்லை. மனப் புயலில் சிக்கிய படகானாள் மங்கை.

பத்தொன்பதாம் பகுதி

துன்பக்கேணி

படுத்த படுக்கையாய் இருந்த சிவனின் அருகில் ஒரு கிண்ணத்தில் கஞ்சியை எடுத்துக்கொண்டு குமுதம் வந்தாள். கிண்ணத்தை அருகிலிருந்த ஒரு பலகையின் மீது வைத்துவிட்டு, மெள்ள அவனைத் தூக்கி உட்கார வைத்தாள். கட்டிலில் சிவன் சாய்ந்துகொண்டு உட்கார்ந்த பிறகு, "கஞ்சி ஆறிப்போகிறது, கொஞ்சம் சாப்பிடுங்கள்" என்று கூறி, அவனிடம் அந்தச் சிறிய கிண்ணத்தைக் கொடுத்தாள். அவன் கஞ்சியைக் குடித்தான்; அவள் ஈரத் துணிகொண்டு அவனது வாயைத் துடைத்தாள்.

குமுதத்தின் பக்கத்தில் வைத்தியர் வையாபுரி வாடிய முகத்துடன் நின்றுகொண்டிருந்தார். அவர் மனம், தன் மகளின் எதிர்காலத்தைப்பற்றிச் சிந்திக்கத் தொடங்கியது. கண்கள் கக்கிய நீர்த்துளிகளைக் குமுதம் எங்கு பார்த்துவிடப் போகிறாளோ என்று அஞ்சி அவசரமாகக் கண்களைத் துடைத்துக்கொண்டு அறையை விட்டு வெளியே சென்றார்.

குமுதம் தன் வேலைகளை வழக்கப்படிச் செய்துகொண்டிருந்தாள். அவள் முகத்தில எந்தவிதமான உணர்ச்சியும் பிரதிபலிப்பதாகத் தெரியவில்லை. முடுக்கி விட்ட யந்திரம் வேலை செய்வதைப் போல, யாதொரு உணர்ச்சியும் இல்லாமல் தன் கடமைகளை அணங்கு செய்துகொண்டிருந்தாள். அவள் பெண் உள்ளத்தில் பலப்பலவித உணர்ச்சிகள் தலைவிரித்துக் கோர நடனம் புரிந்துவிட்டு ஓய்ந்த நேரம் அது!

தன் தந்தையாருடன், வேறொரு புதிய மனிதர் வருவதைக் கண்டதும் குமுதம் அறையின் ஒரு பக்கமாகச்

சென்றாள். வந்தவரும், வைத்தியரும் இரு நாற்காலிகளில் சிவனின் அருகே உட்கார்ந்தார்கள்.

“ சிவா! இவர்தான் இப்பக்கத்தில் பிரசித்திபெற்ற போலீஸ் இன்ஸ்பெக்டர் பூர்ணலிங்கம் என்பவர்” என்று புதியதாக வந்தவரைச் சிவனுக்கு வைபாபுரி அறிமுகம் செய்துவைத்தார். இருவரும் வணக்கம் தெரிவித்துக் கொண்டனர்.

“தாங்கள் என்னை ஏன் தேடிக்கொண்டு வந்திருக்கிறீர்? ஏதாவது முக்கியமா?” என்று மெதுவான குரலில் சிவன் கேட்டான்.

“ ஆமாம்! ஒரு உயிரைக் காப்பாற்றுவதற்காகத் தாங்கள் சிறிது நேரம் செலவழித்தால் மிகவும் நல்லதென்று கருதுகிறேன். தாங்கள் யாது கூறுவீரோ?” என்றார் போலீஸ் இன்ஸ்பெக்டர்.

“யார் உயிரைக் காப்பாற்ற?”

“இது மிகவும் ரகசியமான செய்தி! பிறகு கூறுகிறேன். முதலில் நான் கேட்கும் கேள்விகளுக்கு மட்டும் பதில் அளித்தால் போதும்”

“ அப்படியே செய்கிறேன்!”

அறையின் ஒரு மூலையிலிருந்த குமுதமும், போலீஸ் அதிகாரியின் அருகே உட்கார்ந்திருந்த அவள் தந்தையும் ஆச்சரியத்தோடு பேசாமல் மௌனமாய் இருந்தனர்.

போலீஸ் அதிகாரி பேச ஆரம்பித்தார்.

“கோட்டீஸ்வர அய்யரைத் தாங்கள் அறிவீர்களா?”

“ அறிவேன்.”

“எத்தனை ஆண்டுகளாக ”

"சிறு வயதிலிருந்தே......."

"அவர் மகள் மனோரமாவைத்தான் தாங்கள் மணந்து கொண்டீர்களா ?"

"ஆம்!"

"தாங்கள் என்ன ஜாதி"

"ஜாதியை மறந்தவன் நான். திராவிட இனத்தைச் சேர்ந்தவன்"

மிகுந்த சோர்வு கொண்டவனைப்போல சிவன் காணப்படவே, வைத்தியர் தன் மருமகனுக்குக் காபி கொடுத்தார். பிறகு பூர்ணலிங்கம் தன் கேள்விகளைத் தொடர்ந்தார்.

"மனோரமாவை மணந்ததனால், அய்யருக்கும் உமக்கும் விரோதம் ஏற்பட்டதா ?"

"நான் அவரை விரோதியாகக் கருதவில்லை. ஆனால் அவர் என்னைப் பரம விரோதியாகப் பாவித்தார்."

"சரி! ஓர் நாள் இரவு மனோரமாவுடன் தாங்கள் குளக்கரையில் உட்கார்ந்துகொண்டிருக்கும்போது, ஒருவன் உம்மைக் கத்தியால் குத்தவந்தானா ?"

"ஆமாம்! இதனைத் தாங்கள் எப்படி அறிவீர் ?"

"அறிந்த விதத்தை வழக்கு நடக்கும்போது தெரிந்து கொள்வீர்! குத்தவந்தவன் யார் என்பதையோ அல்லது யாரால் ஏவப்பட்டவன் என்பதையோ தாங்கள் விசாரித்தீர்களா ?"

"இல்லை!"

"தாங்கள் எந்தக் கட்சியையாகிலும் சேர்ந்திருக்கிறீர்களா ?"

“திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவன் யான்.”

“உம் கழகத்தைச் சேர்ந்தவர்களை அய்யர் வெறுத்து வந்தாரா?”

“ஒழித்துக் கட்டுவதாகவும் பல முறை கூறியிருக்கிறார்!”

“இவ்வூரைச் சேர்ந்த குமாரோடு தங்களுக்குப் பழக்கமுண்டா?”

குமுதம், வையாபுரி ஆகிய இருவரின் கண்களும் அகலவிரிந்தன. ஏன் இந்தக் கேள்வி இங்கு எழுகிறதென்பதை அறிய முடியாமல் திகைத்தனர்.

“பழக்கம் கிடையாது, பார்த்ததுமில்லை. ஆனால் அவரது உயிரோவியங்களை எம் கட்சுப் பத்திரிகைகளில் பார்த்து மகிழ்ந்திருக்கின்றேன்!”

“குமாருக்கும் அய்யருக்கும் ஏதாகிலும் விரோதம் உண்டா?”

“எனக்குத் தெரியாது!”

இருவருக்குமிடையே நடைபெற்ற பேச்சைப் பூர்ணலிங்கம் எழுதிக்கொண்டே வந்தார். கடைசியில் இதனைப் படித்துவிட்டுக் கையெழுத்துப் போடுங்கள் என்று சிவனைக் கேட்டுக்கொண்டார். படித்துப்பார்த்துவிட்டுக் கையொப்பமிட்டான் சிவன். பிறகு போலீஸ் இன்ஸ்பெக்டர் சென்றுவிட்டார்.

ஒரு மாதம் சென்றது. சிவனின் உடல் மிகவும் மோசமான நிலையை அடைந்துவிட்டது.

சிவனின் உடல் கட்டிலில் சாய்ந்துகொண்டிருந்தது. வாழ்வும் சரிந்து சாய்ந்துவிட்டதே என்று அவனது உள்

ளம் எண்ணி வேதனை அடைந்தது இளம் வயதில் கட்சிக் கொள்கைகளைப் பரப்பத்தான் எடுத்துக் கொண்ட முயற்சிகளையும், அவற்றால் கிடைத்த சிறுசிறு வெற்றிகளைக் கண்டு மனம் மகிழ்ந்ததையும் நினைந்துநினைந்து கண்ணீர் விட்டான். அதுபோன்ற இன்ப நாட்களை இனித்தான் காணப்போவதில்லையே என்று நீண்டதொரு பெருமூச்சு விட்டான்.

அறையினுள் குமுதம் வருவதைக் கண்ட சிவன் தன் கண்களைத் துடைத்துக் கொண்டான். அருகிலிருந்த "பாரதிதாசன் கவிதைகள்" என்ற பலவித உணர்ச்சிகளின் தொகுப்பு நூலை மெதுவாக எடுத்தான். கவிதைப் புதையலின் ஏடுகளை மெள்ளத் தன் விரல்களால் தள்ளினான். அவனது உயிருக்குயிரான கவிதையின் ஏடு வந்ததும் சோர்ந்த அவனது விழிகள் அங்கேயே மொய்க்கத் தொடங்கிவிட்டன. குமுதம் அவனது செயல்களைக் கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்தாள். தலை நிமிர்ந்து தன் மனைவியைப் பார்த்தான். கண்கள் கலங்கின! குமுதத்தின் கண்களில் நீர் கசியவில்லை! அழுது அழுது கண்ணீர் ஊற்று வற்றிவிட்டதா? அல்லது துக்கத்தையும் தாண்டிய நிலையை அவள் உள்ளம் பெற்றுவிட்டதா? யாரும் அறியார்!

"குமுதம்! உடனே வீணையைக் கொண்டுவா!" என்றான் சிவன். குமுதம் சென்று வீணையைக் கொண்டுவந்தாள்.

சிவன் புரட்சிக் கவிஞரின் நூலை அவளிடம் கொடுத்து ஒரு பாடலைக் காட்டி, "குமுதம்! இந்தப் பாடலில் கோடிட்டிருக்கும் சில வரிகளை மட்டும் உணர்ச்சி கலந்த உரத்த குரலில் பாடு!" என்று கெஞ்சும் குரலில் கூறினான்.

குமுதம் அந்த வரிகளை மேலோடு பார்த்தாள், அவள் உள்ளத்தில் ஒரு திடீர் அதிர்ச்சி ஏற்பட்டது.

"ஏன் இதனைப் பாடும்படிக் கூறுகிறீர்? இது வேண்டாம்! கவிஞரின் வேறு கவிதைகளைப் பாடுகிறேனே?"

"வேறு கவிதைகள் வேண்டாம் எனக்கு! என் கடைசி வேண்டுகோள். மறுக்காதே! வீணையின் நாதத்தையும் உன் 'நாவின் இனிமையையும் ஒன்றாகக் குழைத்து இந்தப் பாடலுக்கு மெருகு கொடு! விரைவாக............"

வீணையை விரல்களால் மீட்டி, கவிதையைப் பாடத் தொடங்கினாள்.

கடும் பிணி யாளன் நான் இறந்த பின் மாதே!
  கைம் பெண்ணாய் வருந்தாதே, பழி என்றன் மீதே.
அடஞ்செய்யும் வைதிகம் பொருட்படுத் தாதே!
  ஆசைக் குரியவனை நாடு-மகிழ்வோடு தார்சூடு—நலம் [தேடு!
கற்கண்டு போன்ற பெண் கணவனை இழந்தால்
  கசந்த பெண் ஆவது விந்தைதான் புவி மேல்!
சொற் கண்டு மலைக்காதே உன் பகுத் தறிவால்
  தோஷம், குணம் அறிந்து நடப்பாய்-துயர்கடப்பாய்-
துணைபிடிப்பாய்—பயம் விடுப்பாய்!"

இப்பாடலை வேதனையோடு குமுதம் பாடிமுடித்தாள். சிவனின் கண்களில் ஒளி வீசியது.

"குமுதம், இந்தப் பாடலைப் பலமுறை படித்திருக்கிறேன். மாளப்போகும் நேரத்தில் தன் மனைவியிடத்தில் அதுபோன்ற கருத்தைத் தெரிவிக்கத் துணிவு கொண்ட கணவன்—புரட்சி மனிதன்—இருப்பானா என்று நான் முன்பெல்லாம் எண்ணியதுண்டு. நானே அந்த மாதிரியான நிலைமைக்கு வந்து விட்டதால், மனத் திருப்தியோடு

இதனை உன்னிடம் தெரிவிக்கிறேன். என் இதய ஆசை இதுதான், கூறிவிட்டேன்! இதன்படி நடந்துகொள்!''

"ஏதேதோ கூறுகிறீரே!" என்று கண்களைத் துடைத்துக் கொண்டே கேட்டாள் குமுதம். அதுவரைக்கும் கண்ணீரை மறந்திருந்த கண்கள், கண்ணீர்க் கடலாயின!

மூன்று நாட்களுக்குப் பிறகு சிவன் கண்களை மூடினான்! குமுதம் கைம்பெண்ணானாள்!

குமுதமும் அவள் தந்தையும் மீளாத் துன்பக் கேணியில் ஆழ்ந்தனர். நாட்கள், மாதங்கள் சென்று கொண்டே இருந்தன. குமுதம் பத்திரிகைகளில் வெளிவரும் ஜமீந்தார் கொலை வழக்கை மிகுந்த கவனத்தோடும் ஆவத்தோடும் உள்ளத் துடிதுடிப்போடும் வாசித்துக் கொண்டு வந்தாள்.

குமார் தன்னிடம் விடை பெற்றுப் பழத்தூருக்குச் சென்றதும், ஜமீந்தாரின் கொலைக்குப் பிறகு பதுங்கி அவன் வாழ்ந்ததும், சிவனைத் தான் மணந்ததும், குமார் பிடிபட்டதும், தான் விதவையானதுமான ஓர் ஆண்டிற்குள் நடைபெற்ற நிகழ்ச்சிகள் எல்லாம் குமுதத்திற்குக் கனவு போல் தோன்றின.

பழையபடி அவள் உள்ளம் அடிக்கடிக் குமாரை நாடிச் சென்றது. சிறையிலிருந்து அச் சுகுமாரன் என்று வருவானென்றெண்ணி எண்ணிக் கண்ணீர் உகுப்பாள் குமுதம்.

இருபதாவது பகுதி

"பயம் வேண்டாம்"

மாந்தோப்பு! அதன் மத்தியில் செந்தாமரை மலர்கள் பூத்துச் சிரிக்கும் புதுப் புனல் தடாகம்! மாலை நேரம்! சிறகடித்துப் பறக்கும் சிறுசிறு பறவைகளின் இனிய இசை! மாந்தேன் அருந்தும் வண்டுகளின் ரீங்காரம்!

வாடைக்காற்று வீசிக்கொண்டிருக்கையில் வருத்தம் கப்பிய முகத்தோடு குமார் தோப்பினுள் நுழைந்தான். அசைந்தசைந்து மெள்ள வந்து அருகிலிருந்த குளக்கரையில் ஆயாசத்தோடு அமர்ந்தான்.

நீரில் சலசலப்பு ஒலி கேட்கவே தலை நிமிர்ந்து அப்பக்கம் பார்த்தான். இளைப்போடு இருந்தவனின் உடலில் இரத்தம் வேகமாக ஓடி, ஓர் புத்துணர்ச்சியைத் தந்தது. கண்கள், தம் இமைகளை, "இன்னும், இன்னும் மேலே போங்கள்." என்று விரட்டி அடித்தன! தண்ணீரில் குளித்துக் கொண்டிருந்த தளிர்மேனியாளின் அருகில் தான் செல்ல எழுந்தான் அதற்குள் அவளே நீரைவிட்டு, மெல்லிய ஈரப்புடவையைத் தன் தங்க உடலில் சுற்றிக்கொண்டு மேலே வந்தாள். இமைகொட்டாத கண்களால் ஒருவரை ஒருவர் உண்ணத் தொடங்கினார்கள்.

"வாடைக்காற்று வீசும் நேரத்தில், குளிர்ந்த நீரில் குளிக்கிறாயே, உனக்குக் குளிரெடுக்க வில்லையா, வேணி?" என்று குமார் தன் பேச்சை ஆரம்பித்தான். வேணி நனைந்த சேலையைச் சரிசெய்து கொண்டு, நாணமும் குறும்பும் கலந்த பார்வையை அவன் மேல் வீசினாள்.

"வாடைக்காற்று? அனல் காற்று அல்லவா, அத்தான் வீசுகிறது?" என்று புன்னகையோடு வேணி கூறி

விட்டு, நடக்கத் தொடங்கினாள். குமாரும் அவளைப் பின் தொடர்ந்தான்.

"குளத்திற்கு வந்து குளிக்காமல் ஏன் அத்தான் திரும்பிவிட்டீர்?" என்று கேட்டுக் கொண்டே வேணி நின்றாள். என்ன பதில் கூறுவதென்றே குமாருக்குத் தோன்றவில்லை அவளைப் பார்த்துக் குறுநகை செய்தான். அதுதான் அவனால் அந்நேரத்தில் சுலபத்தில் செய்ய முடிந்தது! வேணி அடி எடுத்துவைக்க ஆரம்பித்தாள்.

"வேணி! ஒரு சொல், கேட்டுவிட்டுப் போயேன்." என்றான், கம்மலான குரலில்!

"என்ன, அத்தான்?" என்று சிற்றிடையாள் திரும்பினாள். குமார் வானத்தையும் தரையையும் மாறி மாறிப் பார்க்கலானான்! தன் தாகத்தைத் தையலிடம் கூற அவனுக்குத் தைரியம் வரவில்லை. அந்நேரத்தில் இருவரும் மௌனமாகவே சிறிது நேர மிருந்தார்கள்.

"சரி அத்தான், நேரமாகிறது, நான் போய் வருகிறேன்!.........................யோசித்துக் கொண்டு வீட்டிற்கு வாருங்கள்! அண்ணாவும் இருப்பார், அப்பொழுது கூறினால் நாங்கள் இருவரும் கேட்போம்!" என்று குறும்பு நிறைந்த குரலில் கூறினாள்.

"இது உன் அண்ணாவிற்குத் தெரியக் கூடாது!"

"ரகசியமா?"

"ஆமாம்! இப்பொழுது சொல்லட்டுமா?"

"ஹூம்!"

"இதோ, இதோ, இப்படி வாயேன்!.........சொல்கிறேன்" என்று கூறிக்கொண்டே அவளருகில், மிகவும் அருகில் சென்றான்!

வேணி வெட்கத்தோடு தலை குனிந்தாள். தன் கையால் அவள் தலையை நிமிர்த்தி, பயப்படுகிறாயா, என்றான். அவள் உடல் குலுங்கியது! காளையின் மார்பில் கன்னி சாய்ந்தாள்!

"வே............ணி............" என்று அவனது உதடுகளின் அசைவிலிருந்து ஒலி எழ அவனது கைகள் அழகியை அணைத்தன.

"வேணி" என்று குமார் பிதற்றியதைக் கேட்ட கோபால், அவனைத் தட்டி எழுப்பினான். குமார் திடுக்கிட்டு எழுந்தான். கண்டது கனவுதான் என்பதை அறிந்ததும் ஏமாற்றமும் வருத்தமுமடைந்தான்.

"குமார், என்ன ஏதேதோ தூக்கத்தில் பேசுகிறாய்?" என்று கோபால் கேட்டதும், குமார் மௌனமாக இருக்கவே "ஏதாகிலும் கனவு கண்டாயா?" என்று திரும்பவும் கோபால் வினவினான்.

"ஆமாம்!" என்றான் குமார், சாமர்த்தியமாக! எப்படியோ தப்பித்து விட்டோமே என்பதிலே அவனுக்கோர் திருப்தி ஏற்பட்டது.

"என்ன கனவு குமார்?" கோபாலின் இக் கேள்வி குமாரை ஆபத்தில் கொண்டு வந்து நிறுத்திவிட்டது.

தாமரைக் குளத்தில், ஈர ஆடையுடன், பொங்கும் இளமை வழிந்தோட வேணி நின்ற காட்சியைக் கூறுவதா? மாலைப் பொன் வெய்யிலில் மாந்தோப்பில் மலர் முகத்தாளோடு வழி நடந்ததை உரைப்பதா? "ஒரு சொல்" என்று அவளைக் கெஞ்சினனே, அதனைச் சொல்வதா? பரவசத்தால் பாவை தன் மார்பில் சாய்ந்தாளே, அதனைப் பகர்வதா? எதனைச் சொல்வது? உன் தங்கையும் நானும் தழுவி

மகிழ்ந்தோம் கனவில், என்று அவள் அண்ணனிடமே சொல்ல முடியுமா? சங்கடமான நிலையில் குமார் சிக்கிக் கொண்டான். யோசித்தான். நிலைமையைச் சமாளிப்பது எப்படி என்று அவனுக்குப் புரியவில்லை. திடீரென்று மின்னல் வேகத்தில் ஒரு யோசனை தோன்றியது!

ஆபத்து எனும் ஆற்றைக் கடக்க, பொய்ப்படகு ஏறித் தான் ஆகவேண்டும் என்ற முடிவிற்கு வந்தான். இவ்வளவும் ஓர் கணநேரத்தில் அவன் மனத்திரையில் தோன்றி மறைந்தன. தைரியம் பெற்றுப் பேச ஆரம்பித்தான்.

"கோபால், ஒரு பயங்கரமான கனவு கண்டேன். நீயும் நானும் இரவில் போலீசாருக்குப் பயந்துகொண்டு சுற்று முற்றும் பார்த்த வண்ணம் உன் வீட்டின் அருகில் செல்கிறோம். அப்போது வீட்டினுள் இருந்து வேணியின் கதறல் குரல் கேட்கவே, இருவரும் உள்ளே ஓடுகிறோம். 'உன் அண்ணனும், குமாரும் எங்கே ஒளிந்துகொண்டிருக்கிறார்கள், உண்மையைச் சொல்'' என்று கூறிக் கொண்டே ஒரு போலீஸ் சப்-இன்ஸ்பெக்டர் வேணியைச் சாட்டையால் அடித்துக்கொண்டிருக்கிறான். வேணியின் கைகளிலிருந்து இரத்தம் கசிவதைக் கண்ட நான் பதறி வேணி என்று கதறிவிட்டேன்.........."

"ஓகோ! அதனால்தான் வேணி என்று உண்மையிலேயே அலறிவிட்டாயா? சரி.... தூங்கு..." என்று கோபால் கூறியதும் இருவரும் படுத்துக்கொண்டார்கள். குமாரின் உடல் தரையில் கிடந்ததே ஒழிய அவனது மனம் எழுந்து நின்று பல வேறு திசைகளில் ஓடத்தொடங்கியது!

பொழுது புலர்ந்தது. கதிரவனின் செங்கிரணங்கள் சிறைச் சாலையினுள் நுழைந்து, குமாரையும் கோபாலையும் தூக்கத்திலிருந்து தட்டி எழுப்பின. சிறை வார்டன்,

சிறை அறையைத் திறந்து அவர்களை வெளியே அழைத்துச் சென்றான். காலைக் கஞ்சி குடித்துவிட்டு, வழக்கப்படி கம்பிகளுக் கிடையில் அடைக்கப்பட்டார்கள்.

"கோபால், இன்ஸ்பெக்டர் பூர்ணலிங்கத்தைப்பற்றி நீ என்ன நினைக்கிறாய்" என்று குமார் கேட்டான்.

"அடிக்கடி நம்மை வந்து அவர் பார்ப்பதிலிருந்தும், பேசும் முறையிலிருந்தும் அவர் நல்லவராகத்தான் தோன்றுகிறார்."

"அவர் நல்லவரா, கெட்டவரா என்பதைப்பற்றி நான் கேட்கவில்லை. அவரால் நமக்கு ஏதாகிலும் நன்மை ஏற்படுமா?"

"உபகாரம் செய்யவேண்டுமென்ற உத்தேசத்தின் பேரில்தானே, நம் விரோதிகளைப்பற்றி எல்லாம் இரண்டு நாட்களுக்கு முன்னர் விசாரித்துக் குறித்துக்கொண்டார்.........."

'எனக்கென்னமோ, நாம் விடுதலையடைந்து வீடு திரும்புவோம் என்ற நம்பிக்கையே இல்லை!"

கோபால் இதற்கொரு பதிலும் கூறவில்லை. என்ன பதில் கூறமுடியும்? எதிர் காலத்தில் இன்ன இன்ன நிகழ்ச்சிகள் நடைபெறப் போகின்றன என்று முன்கூட்டியே அறியும் ஆற்றல் எவரிடம் உள்ளது?

காதலி குமுதத்தினிடம் விடைபெற்றுப் பிரிந்த நேரத்தில் கம்பிகளுக்கிடையில் சிக்கிக் கண்ணீர் வடிக்கப் போகிறோம் என்ற செய்தி குமாருக்குத் தெரியுமா? ஏழை விவசாயிகளின் கூட்டத்தில் அன்று சிங்க ஏறுபோல் முழக்கமிட்டானே, அப்பொழுது கோபால் அறிவானா கொலைகாரன் என்ற பழிச்சொல் ஏற்று, சிறையில் சிக்கி வாடப்

போகிறோம் என்பதை? மை இருட்டில் முன் பின் கண்டறியாத இடத்தில் நடப்பன போன்றவை, மனிதனின் எதிர்கால சம்பவங்கள்!

சிறைச்சாலைத் தாழ்வாரத்தில் யாரோ வரும் பூட்ஸ் சப்தம் கேட்கவே இருவரும் கம்பிகளின் பக்கமாகத் தம் கண்களைத் திருப்பினார்கள்.

பூர்ணலிங்கம் வருவதைக் கண்டதும் அவர்கள் எழுந்து கம்பிகளின் அருகே சென்றார்கள். இன்ஸ்பெக்டர் அறையின் முன்வந்து நின்றார். அவர் முகம், முன் தடவைகளை விட இப்பொழுது சிறிது மகிழ்ச்சி நிறைந்ததாகக் காணப்பட்டது.

"உங்களுடைய வழக்கின் சம்பந்தமாக இன்று நான் பழத்தூருக்குச் செல்லப்போகிறேன்." என்று பூர்ணலிங்கம் கூறினார்.

"ஏதாகிலும் தகவல் கிடைத்திருக்கிறதா?" என்று குமார் வினவினான்.

"ஆமாம், சம்பந்தகுந்த இடத்திலிருந்து உண்மை வெளிவந்திருக்கிறது!"

"விவரமாகச் சொல்ல முடியுமா?"

"எனக்கு நேரமில்லை. இன்னும் ஒரு வாரத்தில் திரும்பிவிடுவேன். பிறகு வந்து சந்திக்கும்போது தெரிவிக்கிறேன்."

குமாரும் கோபாலும் ஒன்றும் பேசவில்லை. ஆனால் பூர்ணலிங்கத்தை அவர்கள் பார்த்த பார்வையில் பரிதாபம் வழிந்தது.

பரிவோடு இன்ஸ்பெக்டர் அவர்களைப் பார்த்து, "பயம் வேண்டாம்! உங்களுக்கு நிச்சயம் நான் உதவியாக இருப்பேன்! வருந்தாமல் இருங்கள். வந்த பிறகு பார்க்கிறேன்." என்று அவர்களுக்குத் தைரியம் சொல்லிவிட்டு, அவ்விடத்தை விட்டு வெளியே சென்றார்.

இருபத்தோராவது பகுதி

திரை விலகியது.

பழத்தூரில் காளிமுத்துவின் சிறிய குடிசையினுள் போலீஸ் இன்ஸ்பெக்டர் பூர்ணலிங்கமும் நான்கு போலீஸ்காரர்களும் நுழைந்தார்கள். அந்நேரத்தில் வெங்காயத்தைக் கடித்துக்கொண்டு சிறிய மொந்தையில் காளிமுத்து கஞ்சி குடித்துக்கொண்டிருந்தான். போலீஸ்காரர்கள் வருவதைக் கண்டதும் கூழ் மொந்தையைக் கீழே வைத்துவிட்டு, அவன் எழுந்து நின்றான். தன்னைத் தேடிக் கொண்டு போலீஸார் வந்திருப்பதன் காரணம் புரியாமல் விழிக்க விழிக்கப் பார்த்தான் அவன்!

"நீதானே காளிமுத்து?" என்று அதிகாரமும் அதட்டலும் கலந்த குரலில் பூர்ணலிங்கம் கேட்டார்.

அடக்கமான முறையில் "ஆமாம்" என்று அவன் பதிலளித்தான்.

"நீ கைது செய்யப்பட்டிருக்கிறாய்!" என்று இன்ஸ்பெக்டர் சொன்னதும், ஒரு போலீஸ்காரன் காளிமுத்துவின் அருகில் சென்றான்.

"எதற்காக?" என்று வினவிக்கொண்டே விலங்கைப் பூட்டிக்கொள்ள தயக்கத்தோடு தன் கைகளை நீட்டினான்

"ஜமீன்தாரைக் கொலை செய்ததற்காக" என்று பூர்ணலிங்கம் சொல்லிமுடிப்பதற்கும், போலீஸ்காரன் காளிமுத்துவின் கைகளில் விலங்கைப் பூட்டிமுடிப்பதற்கும் சரியாக இருந்தது.

இரட்டை மாட்டு வண்டி ஒன்றில் காளிமுத்துவை ஏற்றிக்கொண்டு பழத்தூரை விட்டுப், பூர்ணலிங்கம் புறப் பட்டார். மாடுகளின் கழுத்தில் கட்டப்பட்டிருந்த மணி கள் "கல கல" வென ஒலித்தன! காற்குளம்புகளிலிருந்து மண் தூசி புகைபோல் புறப்பட்டது! சக்கரங்கள் அச்சாணி களில் உராய்ந்து உராய்ந்து "கிரீச் கிரீச்" என்று சப்தம் செய்தன. "போலீஸ் ஐயா" உட்கார்ந்து வருகிறார்கள் என்ற பயத்தில் வண்டிக்காரனும் மாடுகளை அதட்டியும் அடித்தும் வேகமாகப் போகும்படித் தூண்டினன்.

உண்மையான கொலைகாரனைப் பிடித்துவிட்டோம் என்ற உற்சாகத்தினால் ஒன்றன்பின் ஒன்றாகச் சிகரெட்டை ஊதிக்கொண்டிருந்தார் இன்ஸ்பெக்டர். அவர் கண்களில் வெற்றியின் ஒளி பிரகாசித்துக் கொண்டிருந்தது.

பக்த சிரோன்மணிகள் விழுந்து விழுந்து எழுவத னால் கலங்கிச்சேறாகும் மாமாங்க குளத்தைப்போல், காளி முத்துவின் உள்ளமும் குழம்பி இருந்தது. அவன் மனதில் எவ்வளவோ நினைவுகள் தோன்றித் தோன்றி மறைந்தன. உண்மையை இனி உரைத்தால் பயன் ஏற்படுமா என்ற ஐயம் அவனுக்கேற்பட்டது. "பயன் ஏற்படுமோ ஏற்ப டாதோ அதைக் குறித்துக் கவலை இல்லை. உண்மையைச் சொல்லிவிடுவோம், அதுபோதும் நம் மனத்திருப்திக்கு!" என்று தனக்குத்தானே கூறிக்கொண்டான். இன்ஸ்பெக் டரைப் பார்த்து தைரியத்தோடு பேச ஆரம்பித்தான்.

"ஐயா! நான் தங்களிடம் சிறிது நேரம் பேச வேண்டும்!"

"எதற்காக?"

"உண்மையைத் தாங்கள் அறிவதற்காக!"

"தாராளமாகப் பேசிக்கொண்டு வா!"

"வண்டியில் பிறர் இருப்பதால் தனியான இடத்தில் தான் என் மனதில் உள்ளதைக் கூற முடியும்"

"ஓடித் தப்பித்துக்கொள்ள உத்தேசமா?"

"இல்லவே இல்லை! என் குழந்தைகளின் மேல் ஆணை யிட்டுக் கூறுகிறேன், அந்த எண்ணமே எனக்கில்லை. என் கைகளில் விலங்கு இருக்கிறது. மற்ற போலீஸ்காரர்களு டனே ஒரு தனியான இடத்திற்குச் செல்லலாம். என் கால்களையும் விலங்குகளினால் பிணைத்துவிடும்படிக் கட்டளை இடுங்கள். பிறகு போலீஸ்காரர்கள் அவ்விதமே செய்து விட்டு, அவர்கள் சிறிது தூரத்தில் நாலாபக்கங்களிலும் நிற்கட்டும். அதன் பிறகு என் மனதிலுள்ளதைச் சொல்கி றேன். விருப்பந்தானா ஐயா? தங்களை வேண்டிக்கொள்ளு கிறேன், எனக்கு இந்த வசதியை மட்டும் அளியுங்கள்..."

"சரி" என்று பூர்ணலிங்கம் கூறினார். காளிமுத்து சொல்லியவண்ணமே, கால்களுக்கு விலங்கிடுவதைத் தவிர்த்து மற்றவை யாவும் செய்யப்பட்டன.

ஒரு பெரிய கல்லின்மீது பூர்ணலிங்கமும், அவர் காலடியில் புல் தரையில் காளிமுத்துவும் உட்கார்ந்தார் கள்.

"என்னைப்பற்றித் தங்கள் உள்ளத்தில் முன்னரே உரு வாகி இருக்கும் அபிப்பிராயத்தை ஒருபுறமாக ஒதுக்கி

விட்டு, நான் சொல்லப்போவதைத் தயவுசெய்து கேட்க வேண்டும்.........''

''சரி கேட்கிறேன்! பீடிகையை நீட்டாமல், செய்தியை மட்டும் விரைவாகக் கூறு! இரவிற்குமுன் நகர் போய்ச் சேரவேண்டும்'' என்று இயம்பியதும் காளிமுத்து தன் உள்ளத்தில் அடைத்து வைத்திருந்ததை வெளியில் கொட்டலானான்.

''நான ஜமீன்தார் வீட்டில் வேலை செய்துகொண்டிருந்தேன். கோட்டீஸ்வர ஐயர் கணக்கெழுதும் வேலைக்கு அங்கு வந்து சேர்ந்தார். அய்யர் நாளுக்கு நாள் ஜமீன்தாரரைத் தன் வசப்படுத்திக்கொண்டு வந்தார். பலவித ஆசைகளைத் தூண்டி, அதிவிரைவில் அய்யர், தன் வலையில் சிக்க வைத்துவிட்டார். என்னிடத்திலும் அய்யர் அன்பாகவே நடந்துவந்தார். எனக்குத் தேவையான நேரங்களில் எல்லாம் பண உதவி அளித்தும் வந்தார்......ஒரு நாள் அய்யர் தனியாகக் கூப்பிட்டு ஒரு ரகசியத்தைத் தெரிவித்தார். சோலையூரிலிருக்கும் சிவனைக் கொலை செய்ய வேண்டுமென்றும், அதற்கு வெகுமதியாக நூறு ரூபாய் எனக்களிப்பதாகவும் கூறி அவர் சத்தியம் செய்தார். வறுமையில் வதைந்து கொண்டிருந்த நான் பணத்தாசையினால் கொலைகாரனாக மாறவும் துணிந்தேன். எனினும் சிவனைக் கொலை செய்ய முடியாமல் போயிற்று, வேறொருவன் அங்கு வந்துவிட்டதனால்! பிறகு அய்யர் முன்னைவிட அதிக அன்பாக இருப்பவரைப்போல் நடித்தார் என்பதைப் பிறகுதான் தெரிந்துகொண்டேன். அப்பொழுது உண்மையாகவே அன்பு கொண்டுள்ளார் என்றெண்ணி மகிழ்ந்து, அவருக்காக எதையும் செய்யத் தயாராக இருந்தேன். ஊரில் ''உரிமைப் போராட்டம்'' ஆரம்பமாகப்

போகிறதென்று செய்தி கிடைத்தது. அன்று அய்யர் தன் வீட்டில் சுவையான சாப்பாடு போட்டார். இரவு என்னைத் தன் வீட்டிலேயே தங்கும்படிக் கேட்டுக்கொண்டார். எனக்குப் பரம சந்தோஷமாகிவிட்டது அந்நேரத்தில்! அவ்விதமே நான் செய்தேன். அய்யர், "காளிமுத்து, ஒரு பெரிய காரியம் உன்னால் ஆகவேண்டியிருக்கிறது, அதனை நாம் செய்துவிட்டால், நாளைய தினத்திலிருந்து பணக்காரர்கள் நாம்" என்று கூறினார். என்னவென்று கேட்டேன். மக்கள் கிளர்ச்சி செய்யும் நேரத்தில் துணிந்து ஜமீன்தாரைக் கொலை செய்துவிட வேண்டுமென்றும், பழி, யார் மேலாகிலும் போய்விடுமென்றும் தெரிவித்தார். அவர் கூறியதைக் கேட்டதும் எனக்குத் தூக்கிவாரிப்போட்டது. என் குடும்பத்தைக் காப்பாற்றி வருபவரையா கொலை செய்வது? என்னைத் தன் உடற்காவலனாக நம்பிக்கை கொண்டிருக்கும் ஜமீன்தாருக்கா துரோகம் செய்வது? என்றெண்ணினேன். சேச்சே ஒருக்காலும் நாம் இணங்கவே கூடாது என்று தீர்மானித்துக் கொண்டு அய்யரைப் பார்த்து, "இதனைத் தவிர வேறெது தாங்கள் கூறினாலும் செய்ய நான் சித்தமாக இருக்கிறேன்" என்றேன். அய்யர் எப்படி யெப்படியோ சாகச வார்த்தைகளைச் சொல்லிப் பார்த்தார். கடைசிவரைக்கும் நான் ஒத்துக்கொள்ளவே இல்லை. அய்யரும் அந்த யோசனையை அத்துடன் விட்டு விட்டார்.......

"ஊரில் மக்களின உரிமைப் போராட்டம் நடக்கத் தொடங்கியது. ஜமீன்தார், என்னைச் சுற்றுப்புற ஊர்களிலிருந்து குண்டர்களை விரைவாக அழைத்துக் கொண்டு வரும்படிப் பணம் தந்தார். அவ்விதமே நான் செய்தேன். வந்த குண்டர்களுடன் சேர்ந்து கொண்டு நானும் கிளர்ச்சிக்காரர்களைத் தாக்கினேன்.........ஜமீன்தாரின் அறையி

விருந்து ஒரு சிறிய மூட்டையுடன் அய்யர் வெளியே வந்தார். வந்தவர் என்னை ரகசியமாக அழைத்தார். தனியான இடத்திற்குச் சென்றோம். தன் கையிலிருந்த மூட்டையை அவிழ்த்துக் காட்டினார். ஆச்சரியத்தால் என் கண்கள் விரிந்தன! அவ்வளவும் வைர நகைகள்! எப்படி எடுத்துக் கொண்டு வந்துவிட்டீர் என்று நான் கேட்டேன். அய்யர் சிரித்துவிட்டு, "நானா எடுத்துக்கொண்டு வந்தேன்! அந்த முட்டாளே என்னிடம் தந்தான், பத்திரப்படுத்தி வைக்கும்படி" என்று கூறினார்.

"இதுதான் தக்க சமயம்! அவனைக் கொலை செய்து விட்டால், இவ்வளவு நகைகளும் நமக்கே சொந்தமாகி விடும். இன்னும் அதிகமான பணத்தையும் கொள்ளை அடித்துவிடலாம்" என்று பேராசை பிடித்த அவன் கூறினான். முடியவே முடியாது என்று மறுத்துவிட்டேன். என்னிடமிருந்த கத்தியை வாங்கிக் கொண்டு, "இந்த நகைகளைப் பத்திரமாகக் கோயிலுக்கு எடுத்துக் கொண்டு போ! விஷயத்தை நானே முடித்துவிட்டு விரைவாக அங்கு வந்து சேர்கிறேன்" என்று சொல்லிவிட்டு அய்யர் ஜமீன்தாரின் அறையினுள் நுழைந்தார். நான் மூட்டையை எடுத்துக் கொண்டு கோயிலுக்குச் சென்றேன். அய்யரின் கைவாளுக்கு ஜமீன்தார் பலியானார்................" என்று கூறிக் காளிமுத்து பெருமூச்சுவிட்டான். அவன் கண்களில் நீர்த்துளிகள் புறப்பட்டன.

"பார்ப்பனன் ஒருவனுக்குக் கொலை செய்யும் மனத் தைரியமிருக்கிறதா?........" என்று பூர்ணலிங்கம் கேட்டு முடிப்பதற்குள் "உலகப் பெரியார் காந்தியின் உயிரைக் குடித்தது யார் என்பதை மறந்து விட்டீரோ?" என்று காளிமுத்து கூறினான்.

"ஆமாம்! ஆமாம்! உண்மைதான்!" என்று இன்ஸ் பெக்டர் கூறினர்.

"குமாரும் கோபாலும் ஜமீன்தாரைக் கொலைசெய்து விட்டார்கள் என்ற செய்தி பத்திரிகைகளில் வெளிவந் தது. நகைகள் அவ்வளவையும் அய்யரே எடுத்துக் கொண்டு கொஞ்சம் பணம் மட்டும் எனக்குக் கொடுத்தார். ....அந்தப் பணமும கரைந்து விட்டது. அடிக்கடி நான் அய்யரைப் பணம் கேட்டுக் கொண்டிருந்தேன். அவ ரும் தந்துகொண்டுதான் வந்தார். இதற்கிடையில் பழத் தூரில் ஒரு கல்யாணம் நடந்தது!"

"யாருக்கு?"

"சோலையூரைச் சேர்ந்த சிவனின் நண்பன் கண்ணன் என்பவருக்கு. எங்களூரில் பெண் கட்டிக்கொண்ட பிறகு கண்ணன் பழத்தூரிலேயே வந்து தங்கிவிட்டார். அவர் சுயமரியாதைச் சங்கம் ஒன்றை ஏற்படுத்தி அதில் பல இளைஞர்களைச் சேர்த்துக்கொண்டு அடிக்கடி கூட் டங்களைப் போட்டுச் சொற்பொழிவுகள் ஆற்றி வந்தார். அடிக்கடி அக்கூட்டங்களுக்கு நான் சென்றுகொண்டிருந் ததனல் நாளாவட்டத்தில் என்னையும் அறியாமல் அச்சங் கத்தினிடத்தில் ஒருவித பற்றுதல் எனக்கேற்பட்டுவிட்டது. சில மாதங்களில் அச்சங்கத்தின் உறுப்பினனுகச் சேர்ந் தேன். அதன் பிறகு அய்யரிடத்தில் எனக்கு வெறுப்பேற் பட்டு வந்தது. அவரும் என்னை ஒருவிதமாகப் பார்க்க ஆரம்பித்தார்.........அச்சங்கத்தில் சேர்வதற்கு முன்னர் எனக்குச் சரியாகவே பேசத் தெரியாது. பேசினலும் கொச்சையாகத்தானிருக்கும்..........ஜமீன்தாரிடமிருந்து கொள்ளையடித்த பணததைக் கொண்டு அய்யர் ஊரில் பெரிய மனிதராகி விட்டார். ஜமீன்தார் இறந்து விட்ட

பிறகு அவருக்கு வார்சு யாருமில்லாதபடியினால், கலெக்டர் அதிகாரத்தின்கீழ் எங்கள் ஊர் வந்துவிட்டது. அதனால் ஏழை விவசாயிகளின் குறைகளில் ஒரு பகுதி தீர்ந்துவிட்டதென்றே சொல்லலாம்......கண்ணன் எழுப்பிய சுயமரியாதைச் சூறாவளி, தன் உயரிய அந்தஸ்தை ஆட்டம் கொடுக்கச் செய்துவிடுமோ என்று அய்யர் அஞ்சினார். ஆகவே கண்ணனிடத்தில் அடிக்கடிச் சென்று அவரை வலையில் வீழ்த்த முயன்றார்—முடியவில்லை. கடைசியில் ஓர் ஆசையை எழுப்பினார். அதனால் அய்யரைக் குறித்தும் அவர் மகளைக் குறித்தும் கூட்டங்களில் ஒன்றும் கூறுவதில்லை என்று கண்ணன் சத்தியம் செய்து கொடுத்தாராம். அந்த ஆசை பூர்த்தியாக வேண்டித்தான் நான் இப்பொழுது கைது செய்யப்பட்டிருப்பது....''

"ஒன்றும் புரியவில்லையே! விளக்கமாகக் கூறு" என்று பூர்ணலிங்கம் கேட்க அந்தக் குரலில் ஏதோ ஒரு வித மாற்றம் ஏற்பட்டிருப்பதை நுணுக்கமாகக் காளிமுத்து அறிந்து கொண்டு விவரமாகக் கூறத்தொடங்கினான்.

"குமார் நல்ல கலைஞன். கோபால் ஏழைகளுக்காக உழைத்தவன். அவர்களிருவரும் பத்தரைமாற்று சுயமரியாதைக்காரர்கள். அவர்கள் சிறையில் வாடுவது கண்ணனுக்கு வருத்தத்தை அளித்து வந்தது. அய்யர் தம்மால் அவர்களை விடுவிக்க முடியும் என்று ஆசை காட்டினாராம்! அதன் படியே, நான்தான் கொலை செய்தவன் என்று அதிகாரியிடம் அய்யர் என்னைப் பற்றிக் கூறியிருக்க வேண்டும்........................"

"ஆமாம்! என்னிடம் அவர்தான் கூறினார்!"

பார்த்தீர்களா ஆரியனின் சூழ்ச்சியை! அதற்கு முன்னேற்பாடாக, எனக்கும் தனக்கும் விரோதமென்

றும் நான் அவரை அடிப்பதாகவும் கொலைசெய்து விடுவ தாக பயமுறுத்துவதாகவும் போலீஸுக்கு முறையிட்டுக் கொண்டு வந்தார். அப்பொழுது நினைத்தேன், சுயமரி யாதைக்காரனுக நான் மாறிவிட்டதனுல் கோபங் கொண்டு இப்படியெல்லாம் எனக்குத் தொல்லைகள் தருகிறுர் என்று. என்னை இந்தக் கதிக்குக் கொண்டுவர அது பார்ப்பனனின் முன்னேற்பாடு என்று இப்பொழுதுதான் எனக்குப் புரிகிறது. இனி நான் அய்யர்தான் கொலை செய்தார் என்று உண்மையை உரைத்தால், "இவனுக் கும் எனக்கும் நீண்ட நாட்களாக விரோதம். அதற்கு ஆதாரம் பல நாட்களாகப் போலீஸாரிடம் முறையிட்டுக் கொண்ட தஸ்தாவேஜிகள் இதோ பாருங்கள்! அந்த விரோதத்தின் பேரிலதான் வீணுக என்மேல் இவன் இந்தப் பழியைச் சுமத்துகிறுன்" என்று கூறி, உண்மை யைப் பொய்யாக்கித் தன்னைத் தப்பித்துக் கொள்ள வழி தேடிவைத்துத்துக் கொண்டிருக்கிறுர். தாங்களும் அய்யர் கூறுவதை ஆதார பூர்வமாக இருப்பதால் நம்புவீர்கள், அல்லவா?" என்று கூறி நீர் நிறைந்த கண்களோடு இன்ஸ் பெக்டரைக் காளிமுத்து பார்த்தான்.

கேட்டுக் கொண்டே, யோசித்துவந்த பூர்ணலிங்கம், "அப்படியொன்றுமில்லை. எவ்வளவோ ஆதாரவற்றவர் களை நான் காப்பாற்றி இருக்கிறேன்....அது இருக்கட்டும். அய்யர்தான் கொலை செய்தார் என்பதற்கு இப்பொழுது ஏதாகிலும் ஆதாரமிருக்கிறதா?" என்று கேட்டார்.

"இருக்கிறது! ஜமீன்தாரிடமிருந்து வாங்கி வந்த நகைகளும், அவரைக் கொலை செய்த கத்தியும் இப் பொழுதும் அவரிடந்தான் இருக்கின்றன!"

"கத்தியுமா வைத்திருக்கிறுர்?"

"நகைகளை மட்டும் வீட்டில் வைத்திருக்கிறார்! கத்தியைக் கொலை நடந்த அன்றே அவர் தோட்டத்துக் கிணற்றில் போட்டுவிட்டார். அநேகமாகக் கத்தி கிணற்றில் தான் இருக்கும். தேடினால் கிடைக்கும்.........."

"சரி! இரு சுயமரியாதைக்காரர்கள் சிறையில் சிக்கி ஆதரவற்றுத் தவிப்பதைக் கண்டு, நீ ஏன் ஒரு சுயமரியாதைக்காரனாக இருந்தும், உண்மையை இவ்வளவு நாட்களாகக் கூறாமல் மறைத்து வைத்திருந்தாய்?"

"உண்மையைக் கூறினால், கொலைக்கு உடந்தையாக இருந்தோம் என்ற குற்றத்திற்கு எங்கே ஆளாகித் தண்டனை பெற்றுவிடுவோமோ என்ற பயத்தினால்தான் கூறாமல் இருந்துவிட்டேன்" என்று கூறிக் கோவெனக் கதறி அழுதான்.

"புறப்படு! பிறகு இது சம்பந்தமாக யோசிக்கிறேன்!" என்று கூறி, பூர்ணலிங்கம் எழுந்தார். வண்டியில் இருவரும் ஏறிக்கொண்டார்கள். வண்டி சிறிது வேகமாகவே சென்று, குமாரும் கோபாலும் சிறை பட்டுக் கிடக்கும் சிங்கார நகரத்தைச் சேர்ந்தது!

இருபது நாட்கள் சென்றன. சிறையில் குமார் கம்பிகளைப் பிடித்துக்கொண்டு நின்றுகொண்டிருந்தான். ஒரு மூலையில் கோபால் உட்கார்ந்திருந்தான். விடுதலை அடைவது நிச்சயம் என்ற நம்பிக்கையில் இருவரின் முகமும் அமைதி நிறைந்ததாகக் காணப்பட்டது. எதிர்காலத்தில் ஏழைகளுக்காக எப்படி எப்படித் தொண்டாற்றினால், அவர்களின் வாழ்க்கையை உயர்த்த முடியுமென்று கோபால் யோசித்துக்கொண்டிருந்தான்.

கலைஞன் குமார், காதல் துறை ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்தான். "வேணியின் நினைவு அடிக்கடி வருகிறதே.

.........என்? கனவில் அவளும் நானும்..............அது ஏன்? உண்மையிலேயே என் மனதை என்னையும் அறியாது வேணி கொள்ளை கொண்டுவிட்டாளே?.......அவள் காதலை எப்படி நம்புவது? குமுதம்! குமுதமும் உண்மையாகக் காதலிப்பதாக உரைத்து, உல்லாசத்திற்காக என்னைப் பயன்படுத்திக்கொண்டு கடைசியில் துரோகம் செய்துவிட்டாள்! வேணியும் குமுதமாகிவிட்டால்? நானென்னுவது?...........சேச்சே! வேணி ஒரு நாளும் அப்படியாக மாட்டாள்!.........ஏன் ஆக மாட்டாள், குமார்?.........மனமே! காரணம் கூற எனக்குத் தெரியாது! கோபால் களங்கமற்ற மாணிக்கம்! அவன் தங்கை வேணியும் அப்படித்தானே இருக்கவேண்டும்? ....' இப்படிக் குமாரின் மனதில் காதல் போராட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கையில் பூர்ணலிங்கம் அங்கு வந்தார்.

குமாரும் கோபாலும் அவருக்கு வணக்கம் செய்தார்கள்.

"குமார்! ஒரு புதுச் செய்தி! சொன்னால் ஆச்சரியப் பட மாட்டீர்களே? இன்று கோட்டீஸ்வரய்யர் கைது செய்யப்பட்டிருக்கிறார். அவர்தான் உண்மையில் கொலை செய்தவர்......... ......"

"அவரா கொலை செய்தார்? எப்படி?"

குமார்! விசாரணை விரைவில் நடைபெறப் போகிறது! அப்பொழுது அவன் விவரத்தை நீங்கள் அறிந்துகொள்வீர்கள். நிச்சயம் உங்களுக்கு விடுதலை! பயமே இனி வேண்டாம்! நான் வருகிறேன்" என்று கூறிவிட்டுப் பூர்ணலிங்கம் வெளியே சென்றார்.

இருவரின் உள்ளங்களும் மகிழ்ச்சியினால் துள்ளித் துள்ளிக் குதித்தன! தன் தொண்டால் முன்னேற்றமும் மகிழ்ச்சியும் அடையப் போகும் ஆதரவற்ற ஏழையப்பரின் கூட்டம் கோபாலின் மனக்கண் முன் வந்து நின்றது! தன் அணைப்பாலும் தித்திக்கும் முத்தங்களாலும் உடலும் உள்ளமும் பூரிக்கப் போகும் களிப்பின் களஞ்சியமான வேணி, குமாரின் எதிரில் நின்று தென்றல் விலக்கிய ஆடையைச் சரி செய்துகொண்டு புன்னகை புரிந்தாள்!

இருபத்திரண்டாவது பகுதி

சீறும் புலி

குமுதம் கைம்பெண்ணான மூன்று மாதங்களுக்குப் பிறகு ஒரு நாள் மாலை தன் அறையிலிருந்த கட்டிலில் உட்கார்ந்து கொண்டிருந்தாள். மாலைக் கதிரவனின் பொன்னிறக் கதிர்கள் திறந்த பலகணியின் வழியாக உள்ளே வந்து நங்கையின் பொன்னுடலின் மினுமினுப்பை அதிகரிக்கச் செய்தன. அவள் கண்கள் கலங்கி இருந்தன எழுந்து சுவற்றில் மாட்டப்பட்டிருந்த கண்ணாடியைக் கையில் எடுத்தாள். தன் முகத்தை அதில் பார்த்த வண்ணம் உணர்ச்சியற்ற மரம்போல் சிறிது நேரம் நின்றிருந்தாள். கீகீ............கீகீ............என்று கத்திக் கொண்டு ஒரு கிளி பறந்து வந்து பலகணியின் கதவின் மேல் உட்கார்ந்தது. கண்ணாடியில் பதிந்திருந்த தன் விழிகளைக் கிளியின் பக்கம் செலுத்தினாள். உற்று உற்றுப் பார்த்தாள் அந்தக் கிளியின் அழகை! பளபளப்பான கன்னத்தில் முத்து முத்தாகக் கண்ணீர் ஒன்றின்பின் ஒன்றாக உருண்டோடியது. கோவெனக் கதறி அழ வேண்டும்போல் அவளுக்குத் தோன்றியது. அழுகையை அடக்கிக் கொண்டு சுற்றுமுற்றும் பார்த்தாள். தான் செய்யப் போவதை எண்ணியதும் பாவையின் முகத்தில் பயம் வந்து கப்பியது! ஏதோ ஒரு பெரிய அநீதியை—அடாத

செயலைச்—செய்யப் போவதாக அவள் இதயம் வேகமாக அடித்துக் கொண்டது. அவள் கண்கள் மிரண்டு மிரண்டு விழித்தன! மெதுவாக நடந்து அலமாரியின அருகில் சென்றாள். கையைச் தூக்கி அலமாரியில் வைத்ததும், அது நடுநடுங்கியது! ஒரு சிறிய வெள்ளிச் சிமிழியை எடுத்ததும், அவள் உள்ளத்தில் ஒரு பெரிய பாராங்கல்லைத் தூக்கி வைத்ததுபோல் இருந்தது. சிமிழியை உள்ளங் கையில் அடக்கிக்கொண்டு, பலகணியின் அருகில் சென்றாள். உட்கார்ந்துகொண்டிருந்த கிளி பறந்தோடியது! சிமிழியைத் திறந்தாள். அவள் கண்களில் நீர் நிறைந்து விட்டதினால் அதனுள் இருந்தது அவள் கண்களுக்குத் தெரியவே இல்லை.

விழிகளைத் துடைத்துக்கொண்டு, விசாலமாகத் திறந்து சிமிழினுள் பார்த்தாள். அதனுள் இருந்த குங்குமம் அவளைப் பார்த்து ஏளனச் சிரிப்புச் சிரித்தது! வேகமாகச் சென்று அறையின் கதவைத் தாளிட்டு விட்டு, கண்ணாடியை எடுத்தாள். அவிழ்ந்திருந்த கூந்தலைச் சுற்றி முடித்துக்கொண்டாள்! வழிந்திருந்த கண்ணீரைத் துடைத்துக்கொண்டாள்! பொங்கிக்கொண்டுவந்த அழுகையை அடக்கிக்கொண்டு, பயந்த உள்ளத்திற்குத் தைரியம் ஏற்றிக்கொண்டாள். பாண்டிய மன்னனின் முன்பு கண்ணகி நின்றதைப்போல் உறுதி நிறைந்த மனத்தோடு மங்கை நின்றாள்.

சிமிழியைப் பலகணியின்மேல் வைத்துவிட்டு, கண்ணாடியை எடுத்துத் தன் முகத்தைப் பார்த்தாள். விரல்களால் சிறிது குங்குமம் எடுத்து நெற்றியில் வைத்தாள்! குங்குமமிட்ட முகத்தைக் கண்ணாடியில் பார்த்ததும் அவள் உள்ளத்தில் மகிழ்ச்சிக் கடல் பொங்கியது!

அவள் அடைந்த களிப்பிற்கு எல்லையே இல்லை. மிக உயர்ந்த மலை உச்சியில் நின்று கொண்டிருந்தவள், திடீரென்று மலையின் அருகிலிருந்த கிணற்றின் அடியில் இருக்கக் கண்டால், அவள் உள்ளத்தில் எந்தவிதமான உணர்ச்சி ஏற்படுமோ அதேபோன்ற உணர்ச்சி ஏற்பட்டது. கண்ணாடியில் காணும் இக் காட்சி கானல் நீர் போன்றது என்ற உண்மை அவள் நினைவிற்கு வந்ததும் ஆத்திரமும் அழுகையும் பீறிட்டுக்கொண்டு வந்தது! அவள் கண்கள் பார்வையற்று விட்டன, குபுகுபுவெனச் சுரந்த கண்ணீர் அருவியினால்! குங்குமச் சிமிழினை எறிந்தாள்! கண்ணாடி கைநழுவிக் கீழே விழுந்தது! அசைவற்றுச் சிறிது நேரம் நின்றிருந்தாள்.

பிறகு கதவைத் திறந்துகொண்டு அறையை விட்டு வெளியே செல்லக் காலடி எடுத்துவைத்தாள். உடனே தன் உயிருக்குச் சமமான நூல் நினைவிற்கு வர, உள்ளே வந்து அதனை எடுத்துக்கொண்டு, தோட்டத்திற்கு வேகமாக நடந்தாள்.

சோலையில், பல வர்ணங்களில் பூத்திருந்த மலர்கள் கைம்பெண் குமுதத்தைப் பார்த்துச் சிரித்தன! அவைகள் செய்த ஏளனத்தை அவள் பொருட்படுத்தாது, ஒரு சிறிய மேடையின் மீது அமர்ந்தாள். பாரதிதாசன் கவிதைகளைத் திறந்தாள்! அதிலிருந்த தேன் கவிதைகளின் மீது விழி வண்டுகள் மொய்த்தன! அவள் கற்கண்டு இதழ்கள் அசைந்து, ஒரு பாடலுக்கு உயிரளித்தன! காற்றில் அக் கீதம் மிதந்து சென்றது!

காதல் சுரக்கின்ற நெஞ்சத்திலே கெட்ட
கைம்மையைத் தூக்காதீர்—ஒரு
கட்டழகன் திருத்தோளினைச் சேர்த்திடச்
சாத்திரம் பார்க்காதீர்!

இந்த வரிகளையே அவள் திரும்பத் திரும்ப முணு முணுத்தாள்.

"குமுதம்! குமுதம்" என்று உரக்கக் கூப்பிட்டுக் கொண்டே வையாபுரி வேகமாகத் தோட்டத்திற்கு வந்தார். அவர் வந்த வேகத்தையும் அவர் முகம் மலர்ந்திருந்த விதத்தையும் கண்டு குமுதம் ஆச்சரியமடைந்தாள். எழுந்து "என்னப்பா!" என்று கேட்டுக்கொண்டே அவரை நோக்கி அவளும் நடந்தாள்.

"அம்மா!" என்று மகிழ்ச்சியோடு கிழவர் கூறி, தன் கண்களைத் துடைத்துக் கொண்டார்.

"செய்தி என்ன அப்பா?" என்று குமுதம் ஆச்சரியமும் கொஞ்சுதலும் நிறைந்த குரலில் கேட்டாள்.

"எப்படி அம்மா சொல்வேன்? உனக்கிருப்பதோ ஒரே ஒரு இதயம்! இந்தக் களிப்பைத் தாங்க கோடானு கோடி இதயங்கள் வேண்டுமே அம்மா!"

"விரைவாகச் செய்தியைச் சொல்லுங்கள் அப்பா!"

"நம் குமார் விடுதலை ஆகிவிட்டான் கண்மணி!"

"உண்மையாகவா! உண்மையாகவா அப்பா!"

"ஆமாம் அம்மா!"

"எப்போ அப்பா!"

"இன்று பிற்பகல்! இந்தா, இந்தப் பத்திரிகையில் பாரேன், விவரமாக இருக்கிறது!" என்று கூறி அன்று மாலை வெளியான தினசரி ஒன்றை அவளிடம் தந்தார்.

வேகமாக அதனை மனதிற்குள்ளாகவே படிக்க ஆரம்பித்தாள். "உன் வாயால் ஒரு தரம் அந்தச் சந்தோஷமான செய்தியை உரக்கப் படியேன், நான் கேட்டுப் பூரிக்

கிறேன்!'' என்றார் வையாபுரி. குமுதம் உரத்த குரலில் படிக்கத் தொடங்கினாள்.

கோபால்—குமார் விடுதலை

ஜமீன்தார் கொலை வழக்குத் தீர்ப்பு

சிங்காரநகர், நவ 23—

பழத்தூர் ஜமீன்தார் கொலை வழக்கில் இன்று பிரதான நீதிபதி நீலகண்டன் தீர்ப்புக் கூறினார்.

சென்ற ஆண்டு மே மாதம் ட—ந் தேதி பழத்தூரில் விவசாயிகள் உரிமைப் போராட்டம் நடத்தியபோது ஜமீன்தார் ஜம்புலிங்கம் பிள்ளை கொலை செய்யப்பட்டார். அது சம்பந்தமாகத் தோழர்கள் குமாரும், கோபாலும் கைது செய்யப்பட்டார்கள்.

போலீஸ் இன்ஸ்பெக்டர் பூர்ணலிங்கம் பல நாட்கள் கஷ்டப்பட்டு உண்மையைக் கண்டுபிடித்தார். ஜமீன்தாரிடம் கணக்கெழுதிக் கொண்டிருந்தவரும், பழத்தூர் பிரமுகருமான கோட்டீஸ்வர அய்யர், பணத்தாசையினால் ஜமீன்தாரைக் கொலை செய்துவிட்ட செய்தியைக் காளிமுத்துவின் மூலமாக இன்ஸ்பெக்டர் கேள்விப்பட்டார். காளிமுத்துவை அப்ரூவராகப் போட்டு வழக்கு நடந்து வந்தது.

அதன் தீர்ப்பு இன்று சொல்லப் பட்டது. தீர்ப்பின் படி, குமாரும் கோபாலும் விடுதலை அடைந்தனர். அப்ரூவர் காளிமுத்துவும் விடுதலை அடைந்தார். கொலைகாரன் கோட்டீஸ்வர அய்யர் ஆயுள் தண்டனை பெற்றான்.

(க. கி.)

சிறிது நேரம் தந்தையும் மகளும் மௌனமாக இருந்தார்கள்.

"அப்பா!"

"ஏன் குமுதம்"

"என் மனதில் இருப்பதை இப்பொழுது கூறினால், தாங்கள் தற்பொழுது அடையும் மகிழ்ச்சி குன்றி விடாதே?"

"என்ன அம்மா, வினோதமான கேள்வியாக இருக்கிறது! என்ன கேட்கப் போகிறாய், சொல்லேன்!" என்று வையாபுரி சொல்லிவிட்டுத் தன் மகளின் முகத்தைப் பார்த்தார். குமுதம் சிறிது நேரம் எப்படிக் கூறுவதென்று புரியாமல் பேசாமல் இருந்தாள். பிறகு தைரியம் கொண்டு பேச ஆரம்பித்தாள்.

"அப்பா! இந்தச் செய்தியை வாசிப்பதற்கு முன்பு நான் கைம்பெண்!........."

"இப்பொழுது?"

"கன்னி! ஆம் அப்பா! கன்னிதான்! இன்னும் எனக்கு மணமாகவில்லை, அப்பா!........."

வையாபுரி மௌனத்தில் ஆழ்ந்தார். சிறிது நேரம் சென்று பேச ஆரம்பித்தார்.

"குமுதம்! நீ கவலைப்படாதே குழந்தாய்! நான் மனிதன்தான்! எனக்கும் உணர்ச்சிகளின் தன்மையை அறியும் அறிவு இருக்கிறது..."

"அப்பா! கோபமாகவா பேசுகிறீர்?"

"இல்லை அம்மா! உணர்ச்சியின் மிகுதியினால் பேசுகிறேன். எனக்கு ஏன் அம்மா கோபம் வரப்போகிறது? கோபம் ஒரு முறை வந்துதான், உன் வாழ்க்கையைப் பாலைவன மாக்கினேனே...பாலைவனம், பூங்காவனமாக

மாறப்போகும் நேரத்தில், கோபமா வரும்?....குமுதம்! சமுதாயம் பழிக்குமே என்று ஆரம்பத்தில் நினைத்தேன்! உற்றார் உறவினர்கள் கண்டிப்பார்களே என்று அஞ்சினேன்! இந்த மூன்று மாதங்களில் நீ பட்ட கஷ்டம், வடித்த கண்ணீர் இவற்றைப் பார்த்துப் பார்த்து என் உள்ளம் புண்ணாகிறது! சேற்றில் செந்தாமரை பூப்பதுபோல, புண்ணான என் உள்ளத்தில் புரட்சி மலர்ந்தது!......உன் மனதை நான் நன்கறிவேன்! ஆனால் குமார் இதற்கு இசையவேண்டுமே, அம்மா!"

"அப்பா! அவர் சீர்திருத்தக்காரர்! புரட்சி மனப்பான்மை கொண்ட கலைஞர்! என்னை அவர் உயிரென நேசிப்பவர்........."

"சரி அம்மா! மிகுந்த மகிழ்ச்சி!" என்று கூறிவிட்டு, வீட்டினுள் சென்றார். அவளும் சென்றாள். அறையிலிருந்த தன் காதலன் குமாரின் புகைப்படத்தை எடுத்துக் கொண்டு மகிழ்ச்சி கூத்தாடும் உள்ளத்தோடு திரும்பவும் பூஞ்சோலையினுள் புகுந்தாள்! தன்னிரு கண்களால் குமாரைப் பார்த்தாள்!

"பைந்தமிழைச் சீராக்கக் கைமை என்னுஞ் சொல் நீக்கப் பறந்துவாடி அழகிய மயிலே!"

என்று குமார் தன்னைப் பார்த்து இருகை நீட்டி அழைத்த வண்ணம் பாடுவதாக அவளுக்குத் தோன்றியது! புகைப்படத்தைக் கண்களில் ஒற்றிக்கொண்டாள், மார்பில் அணைத்துக் கொண்டு ஆனந்தத்தோடு பாடினாள். தோட்டத்திலிருந்த மலர்களைக் கொய்து கூந்தலில் சூட்டிக் கொண்டாள்!

கன்னி குமுதத்தின் உடலில் இன்ப ஊற்று கசிந்தது. தன் அத்தானைத் தழுவி மகிழ அவள் கைகள் துடித்தன!

குமாருக்காக அவள் செவ்விய இதழ்களில் தேன் கசிந்தது! தென்றல் எனும் கொடிய புலி அழகியின்மேல் சீறிச் சீறிப் பாய்ந்தது!

"நான் தனித்திருக்கையில் புலி போலச் சீறும் தென்றலே! என் ஆசை அத்தான் வரட்டும் சொல்கிறேன்!" என்று குமுதம் கோபம் கொண்டவளைப்போலக் கூறிக் கொண்டே வீட்டிற்குள் சென்றாள்.

சிறிது நேரத்தில் தன்னை நன்றாக அலங்கரித்துக் கொண்டு, தன் தந்தைக்குக் காபி எடுத்துச் சென்றாள். அவள் நெற்றியில் குங்குமமும், கரிய நீண்ட கூந்தலில் மலர்ச் செண்டும் அழகுக்கு அழகு செய்வதைக் கண்ட வைத்தியர் வையாபுரி ஒரு பெருமூச்சு விட்டு, பிறகு ஆறுதலும் பூரிப்புமடைந்தார்.

இருபத்திமூன்றாவது பகுதி

"அப்பா! வேணியா"?

மூன்று நாட்கள் சென்றன. விடுதலை அடைந்த தன் அத்தான் ஏன் இன்னும் வீடு திரும்பவில்லை என்றெண்ணியதும் குமுதத்துக்குச் சிறிது அச்சம் தோன்றியது. அந்தப் பயம் நொடிக்குநொடி வளர்ந்துகொண்டே சென்றது. அவள் ஏதேதோ எண்ணத் தொடங்கினாள். மங்கையின் மகிழ்ச்சி மங்கிக் கொண்டே வந்து, மனப்புயல் வீசத் தொடங்கியது. என்மீது ஆசை இருந்தால், அவர் மூன்று நாட்களாக இங்கு வாாமலிருந்திருக்க முடியுமா? ஒரு வேளை என்னை மறந்து விட்டாரோ? உண்மை அதுவானால் என் மனக்கோட்டை என்னாவது? வாழ்வு என்னாவது?" என்று அவள் எண்ணியதும், உள்ளத்தில் இடி விழுந்தது போன்ற உணர்ச்சி ஏற்பட்டது! என்ன செய்வதென்று

புரியாத நிலையில், ஏக்கமும் ஏமாற்றமும் நிறைந்தவளாக அவள் மௌனமாக உட்கார்ந்திருந்தாள்.

பத்திரிகையும் கையுமாக வையாபுரி அங்கு வந்தார். முகம் வாடி சோகத்தோடு குமுதம் அமர்ந்திருந்ததைக் கண்டதும் சிரித்துக்கொண்டே பேச ஆரம்பித்தார்.

"இன்னுமா குமுதம் உனக்கும் சோகத்திற்கும் தொடர்பு இருக்கிறது?"

"விடுதலையாகி மூன்று நாட்களாகியும் இன்னும் ஏன் அப்பா, அத்தான் வரவில்லை?"

"குமுதம், இன்னும் குழந்தையாகவே இருக்கிறாய் அம்மா நீ!.... குற்றமற்ற மணிகளான இரு இளந்தலைவர்கள் விடுதலை அடைந்தால் உடனே வீட்டிற்கு வரவிடுவார்களா மக்கள்! எவ்வளவு ஆரவாரம் செய்வார்கள்! எத்தனை பாராட்டுக் கூட்டங்களிருக்கும்!.... இதனை நீ கொஞ்சம்கூடத் தெரிந்துகொள்ளாது அழ உட்கார்ந்துகொண்டாய்! இதோ பாரேன், பத்திரிகையை" என்று வைத்தியர் கூறிப் பத்திரிகையை மகளிடம் தந்தார். குமுதம் அதிலிருந்த செய்தியை அவசர அவசரமாகப் படித்துப் பார்த்தாள்.

"இன்று பழத்தூரில் அத்தானுக்கும் கோபாலுக்கும் வரவேற்புக் கூட்டம் என்றல்லவா இருக்கிறது?"

"ஆமாம், ஆமாம், ஆமாம்!"

"என்ன அப்பா ஆமாம்! முதலில் வரவேற்க இந்த நாம் காத்திருப்போம் என்பது தெரிந்திருந்தும், ஊரார் வரவேற்புக்கு அவர் எப்படி அப்பா ஒத்துக்கொள்ளலாம்?"

"அவன் வந்ததும் அதனைக் கேள் அம்மா! என்னைக் கேட்டால்?............"

குமுதத்தின் முகத்தில் திரும்பவும் மகிழ்ச்சி தோன்றியது. இருவரும் சிறிது நேரம் மௌனமாகவே உட்கார்ந்திருந்தனர். சிந்தனையிலிருந்து விடுபட்ட சிற்றிடையாள் பேச ஆரம்பித்தாள்.

"அப்பா எனக்கொரு யோசனை தோன்றுகிறது!"

"சொல் அம்மா!"

"சிறையிலிருந்து வெளியில் வந்ததும், சிங்கார நகருக்கே சென்று அவரை வரவேற்கவில்லை என்று அத்தான் கோபித்துக்கொண்டிருப்பாரோ?"

வையாபுரி சிரித்துக்கொண்டே, 'குமுதம்' உன் மனதில் இன்னும் என்னென்ன சந்தேகங்கள் தோன்றுகின்றன, சொல் பார்க்கலாம்!" என்று கூறிவிட்டுப் புறப்படத் தயாரானார்.

"அப்பா நீங்கள் ஒன்று செய்தால் நல்லதென்று எனக்குப் படுகிறது!"

"உம், அதனையும் சொல் அம்மா, கேட்கிறேன்"

"நீங்கள் இப்பொழுதே பழத்தூருக்குச் சென்றால் கூடவே இருந்து அவரை அழைத்துக்கொண்டு வந்துவிடலாம்"

"கூட்டம் முடிந்ததும், நாளைய தினமே அவன் வரப்போகிறான். நான் வேறு எதற்குப் போகவேண்டும்?"

"விடுதலையாகி மூன்று நாட்களாகியும் நாம் அவரைப் போய்ப் பார்க்காவிட்டால் அவர் என்ன எண்ணிக் கொள்வார்? அன்பில்லை என்றுதானே நினைத்துக்கொள்வார்?"

குமுதம் சிறிது நேரம் கெஞ்சிய பிறகு, வையாபுரி அதற்கு இசைந்து அன்று பிற்பகல் பழத்தூருக்குப் புறப்பட்டார்.

பழத்தூருக்கு அவர் போய்ச் சேர்வதற்கும் வரவேற்புக் கூட்டம் ஆரம்பமாவதற்கும் ஏறத்தாழச் சரியாக இருந்தது.

சுமார் முப்பதாயிரத்திற்கு மேற்பட்ட மக்கள் கூடியிருந்த கூட்டத்தின் மத்தியில் அமைக்கப்பட்டிருந்த உயரமான மேடையின்மீது குமாரும் கோபாலும் ஏறி நின்றதும், வான் அதிர வாழ்த்தொலி எழும்பியது! விடாது கைதட்டி ஆரவாரம் செய்துகொண்டிருந்தனர் மக்கள்! குமாருக்கும் கோபாலுக்கும் மலர் மாலைகள் பல சூட்டப்பட்டன. வாழ்த்திதழ்கள் வாசித்தளிக்கப் பட்டன! சொற்பொழிவுகள் நிகழ்ந்தன! நன்றியறிதல் தெரிவிக்கும்போது, ஏழைகளின் ஏற்றத்திற்காகவே தன் வாழ் நாளைச் செலவிட முடிவு செய்திருப்பதாக கோபாலும், கலையையும் மக்கள் தொண்டினையும் தன் இரு கண்களைப் போல் பாவித்து வாழ்வை நடத்தப் போவதாகக் குமாரும் உறுதிமொழி கூறினார்கள்.

கூட்டம் முடிவுற்றதும் குமார், கோபால் வேணி இவர்களோடு வீட்டிற்குச் செல்லப் புறப்பட்டான்.

"குமார்" என்று பழக்கமான ஒரு குரல் அழைப்பதைக் கேட்டதும் குமார் திரும்பிப் பார்த்தான். அழைத்தது வைத்தியர் வையாபுரி என்பதை அறிந்ததும் அவன் ஆச்சரியம் அடைந்தான். அவரைப் பார்த்து "எப்பொழுது மாமா வந்தீர்கள்?" என்று கேட்டான்.

"சிறிது நேரம் ஆகிறது வந்து!" என்று வையாபுரி கூறியதும், அவரைக் கோபாலுக்கும் வேணிக்கும் அவன்

அறிமுகம் செய்து வைத்தான். பிறகு நால்வருமாக கோபாலின் வீட்டிற்குச் சென்றார்கள்.

வீட்டில் குமார் வேணியிடம் பேசியதையும் வேணி வேல்விழியை அவன்மீது வீசினதையும் கண்ட வையாபுரிக்குக் கோபமும் வருத்தமும் ஏற்பட்டன. எனினும் தம் மாற்றத்தை அவர் வெளியில் காட்டிக்கொள்ளாது குமாரோடும் மற்றவர்களோடும் சகஜமாகவே பேசிக் கொண்டிருந்தார்.

இரவு உணவு முடிந்ததும், மாடிக்கு வைத்தியரும் குமாரும் சென்றார்கள். தான் சிறைப்பட்டதையும், போலீஸ் இன்ஸ்பெக்டர் பூர்ணலிங்கம் செய்த உதவிகளையும், அவரது துப்பறியும் திறமையையும், காளிமுத்துவின் வரலாற்றையும், ஆரியனின் சூழ்ச்சியையும், விடுதலை அடைந்த விதத்தையும் குமார் ஒன்றுவிடாது விவரமாக வைத்தியரிடம் கூறிக்கொண்டு வந்தான்.

வையாபுரியின் காதுகளில் அவன் சொல்லிக்கொண்டு வந்த வார்த்தைகள் விழுந்தனவே ஒழிய அவரது உள்ளத்தில் பற்பல எண்ணங்கள் உருண்டுகொண்டிருந்தன! குமார், குமுதத்தைப் பற்றி ஒரு வார்த்தைகூடக் கேட்காதது அவருக்கு எரிச்சலை மட்டுமல்ல, மனவேதனையையும் தந்தது. வேணியின் மோகவலையில் குமார் வீழ்ந்து விட்டான் என்று அவர் முடிவு செய்துகொண்டார். தன் மகளின் எதிர் காலம் என்னவது என்பதை எண்ணியதும் அவர் உள்ளம் நடுங்கியது. முகத்தில் சோகமும் ஏமாற்றமும் பிரதிபலித்தன.

அவரது முகம் மாறியதைக் கண்டதும் குமார் தான் கூறிவந்த "கந்தபுராணத்தை" நிறுத்திவிட்டு "ஏன் மாமா ஒரு மாதிரி இருக்கிறீர்கள்?" என்று கேட்டான்.

வைத்தியர் தன்னைச் சமாளித்துக்கொண்டு "ஒன்று மில்லை, இன்றிரவே திரும்பி வந்து விடுவதாகக் குமுதத்தி னிடம் சொல்லிவிட்டு வந்தேன். குழந்தை எதிர்பார்த்துக் கொண்டிருப்பாள்.........நான் இங்கு நின்றுவிட்டேன்" என்று தயங்கித் தயங்கிக் கூறினர்.

வையாபுரி குமுதத்தைப் பற்றி நினைவு படுத்திய பிற கும் அவளைக் குறித்து ஒன்றும் கேட்காமலிருப்பது அழ கல்ல என்று நினைத்து, குமார் அவளைப் பற்றி விசாரிக்க ஆரம்பித்தான்.

"மாமா" குமுதமும் அவள் கணவனும் சவுக்கியமா? குழந்தை ஏதாகிலுமிருக்கிறதா?" என்று உணர்ச்சியற்ற குரலில் குமார் வினவினன்.

குமுதம் விதவையானது இவனுக்குத் தெரியாது போலிருக்கிறதே என்றெண்ணி, அதனுல் தான் இவன் வேணியைக் காதலிக்க ஆரம்பித்திருப்பான் என்ற தீர்மா னத்திற்கு வந்தார் வையாபுரி.

குமாரை வைத்தியர் நிமிர்ந்து பார்த்ததும், அவர் கண்களில் நீர் தத்தளிக்க ஆரம்பித்தது.

"என்ன மாமா செய்தி?" என்று அச்சத்தோடு குமார் கேட்டான்.

"குமுதத்தின் கணவன் இறந்துவிட்டான், குமுதம் விதவையாகி வீட்டில் தான் இருக்கிறுள்! என்று வையா புரி கூறியதும்" "துரோகி! கணவனையும் இழந்து விட் டாயா? வஞ்சகி! நீ எங்கிருந்து வாழப்போகிறுய்?" என்று குமாரின் உள்ளம் பேசியது. மேலும் வருத்தமடைப வனைப்போல அவன் நடிக்க ஆரம்பித்தான். நடிப்பு பூர்ண வெற்றியைத் தந்தது என்று சொல்ல முடியாது!

"குமுதம் உன்னை அழைத்துக் கொண்டு வரும்படிக் கூறினள்" என்று வைத்தியர் சிறிது நேர தயக்கத்திற்குப் பிறகு, மகளுக்காக மானத்தையும் விட்டுக் கூறினர்.

அந்நேரத்தில் வேணி இரண்டு கிண்ணங்களில் பால் எடுத்துக் கொண்டு, அங்கு வந்து சேர்ந்தாள். ஒரு கிண்ணத்தை வையாபுரியிடம் கொடுத்துவிட்டு, "அத்தான், பால் சாப்பிடுங்கள்!" என்று புன்னகையோடும் பரிவோடும் கூறி மற்றொரு கிண்ணத்தைக் குமாரிடம் தந்தாள். "வேணி, நீ சாப்பிட்டாயா?" என்று அன்பு நிறைந்த குரலில் குமார் அழகியைக் கேட்டுவிட்டுப் பால் குடித்தான். இவற்றையெல்லாம் கண்ட குமுதத்தின் தந்தை வயிறு பற்றி எரிந்தது! வேணி சென்றுவிட்டாள்.

"எப்பொழுது குமார் நீ வருகிருய்?" என்று வைத்தியர் மறுபடியும் கேட்டார்.

"நானு?........" என்று கூறி குமார் தயங்கினன். கடைசியாகத் தன் மனதிற்குள் ஒரு முடிவிற்கு வந்து,

"இன்னும் சில நாட்களுக்கு எனக்கிங்கு வேலை இருக்கிறது! பிறகு வருகிறேன்" என்ருன்.

"அப்படியானல் இன்னும் எத்தனை நாட்கள் கழித்துத்தான் வருகிருய்?"—வையாபுரி வேதனை நிறைந்த குரலில் வினவினர்.

"அதனை எப்படிச் சொல்ல முடியும்? ஓய்விருக்கும் போது வருகிறேன்"—குமார் ஆசையற்ற சலிப்பான குரலில் கூறினன்.

வையாபுரியின் தலை சுற்றியது! இந்தத் துக்கச் செய்தியை, ஏமாற்றச் செய்தியை எப்படிக் குமுதத்தினிடம் போய்க் கூறுவதென்றே அவருக்குப் புரியவில்லை. இதனைப்

போய்ச் சொல்லி அவன் மனக்கோட்டையைத் தூள் தூளாக்குவதைவிட இப்பொழுதே தன் இதயத் துடிப்பு நின்றுவிட்டால் நல்லதென்று அவர் எண்ணினர்.

பொழுது புலர்ந்ததும் வைத்தியர் சோலையூருக்குத் திரும்பினர். அத்தானும் அப்பாவும் வருவார்கள் என்று மிகுந்த ஆவலோடு குமுதம் விநாடிக்கு விநாடி எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள்.

அவள் தந்தை வருவதைக் கண்டதும் அவளுக்கு ஆறுதல் ஏற்பட்டது. அத்தான் உடன் வராததனால் வருத்தமும் அடைந்தாள். வையாபுரி அருகில் வந்ததும், அவர் முகம் அடைந்திருந்த விகாரமான கோலத்தைக் கண்டதும் அவள் உள்ளம் நடுநடுங்கியது.

“அப்பா, ஏன், அத்தான் வரவில்லையா?” என்று அவசரமாகக் கேட்டாள். வையாபுரி மௌனமாக இருக்கவே, வாய்திறந்து பேசும்படி அவள் மன்றாடினாள்.

சோர்ந்து அவர் உட்கார்ந்தார். அவளும் உட்கார்ந்தாள்.

“என்ன நடந்தது சொல்லுங்களேன் அப்பா”
என்று கெஞ்சினாள்.

“ஏமாந்தோம் அம்மா!” என்று சுருக்கமாக அவர் பதிலளித்தார்.

“என்ன? பத்திரிகைச் செப்தி பொய்யா?”

“அது உண்மைதான் அம்மா! குமாரைப் பற்றி நாம் நினைத்துக் கொண்டிருந்த தெல்லாம் பொய்” என்று வெறுப்பான குரலில் அவர் கூறியதைக் கேட்ட குமுதம் ஒன்றும் புரியாமல் விழித்தாள்.

"அப்பா! விளக்கமாகக் கூறுங்களேன்!"

"எதனை அம்மா நான் கூறுவது?....குமார் இனி இங்கு வருவது கஷ்டந்தான்"

"திரும்பவும் கைது செய்யப்பட்டுவிட்டாரா?"

"ஆமாம்! வேணி என்ற ஒரு பெண்ணால் கைது செய்யப்பட்டுவிட்டான்!" என்று திடீரென்று ஆத்திரமாக அவர் கூறியதும், ஏன் இதனைக் கூறினேம் என்று தன்னைத்தானே பிறகு நொந்துகொண்டார்.

"அப்பா! வேணியா?" என்று கூறியதும், தனக்கு எதிரிலிருந்த எல்லாச் சாமான்களும், பூமியும் ஆடுவதைப் போல அவளுக்குத் தோன்றியது. அவள் தன் நினைவு இழந்தாள்! தரையில் சாய்ந்தாள்! வைத்தியர் கண்களில் நீர் சிந்தச் சிந்த ஓடித் தண்ணீர் கொண்டுவந்து அவள் முகத்தில் தெளித்து அவளைச் சுயநினைவுக்கு வரச்செய்தார்.

மெதுவாக அவளை அழைத்துச் சென்று கட்டிலில் படுக்கவைத்துவிட்டு வையாபுரி அறையைவிட்டு வெளியே வந்து, கண்களைத் துடைத்துக்கொண்டு உடைந்த உள்ளத் தேடு ஓர் இடத்தில் உட்கார்ந்துகொண்டார்.

கட்டிலிலிருந்த பெண்ணின் உள்ளத்தில் சூறாவளி சுழன்று சுழன்று வீசியது! தேம்பித் தேம்பி அழுதாள்! எண்ணியதெல்லாம் பொய்யாயிற்றே என்று நினைந்து புலம்பினள்! சீரழிந்த என் வாழ்விற்குச் செங்கரும்பாய் அத்தான் இருப்பாரென்றெண்ணினேனே" என்று கதறி அழுது கண்ணீர் மல்கினள்.

கட்டிலைவிட்டு அவள் கீழே இறங்கி அறையில் சிறிது நேரம் உலவினள்; வழிந்து கொண்டே இருந்த கண்ணீரை அடிக்கடி துடைத்துக் கொண்டாள்! கட்டிலில் திரும்பவும்

உட்கார்ந்தாள். நீண்ட நேரம் சிந்தனையில் ஆழ்ந்தாள். கடைசியில் கண்களைத் துடைத்துக் கொண்டு புன்னகையை வரவழைத்துக் கொண்டு "அத்தான்; என் அத்தான்!" என்று முணுமுணுத்தாள்!

இருபத்திநான்காவது பகுதி
சுட்டுப் பொசுக்கினான்

பழத்தூரில் நடைபெற்ற சுயமரியாதைப் பொருட்காட்சிக்குச் சுற்றுப் பக்க ஊர்களிலிருந்து மக்கள் ஏராளமாக வந்திருந்தார்கள். விஞ்ஞான அபிவிருத்திக் கருவிகள், உலகநாடுகள் ஒவ்வொன்றின் தனித்தனிப் படங்கள், குரங்கிலிருந்து மனிதன் தோன்றிப் படிப்படியாக நாகரிகமடைந்த விதத்தைச் சித்தரித்துக் காட்டும் சித்திரங்கள், பழைய உலக அமைப்பைத் தலைகீழாக மாற்றிய புரட்சி வீரர்கள், நாட்டு விடுதலைக்காகத் தம் உயிரைத் தியாகம் செய்த தன்னலம் கருதாச் சிங்க ஏறுகள், முடியரசைத் தொலைத்துக் குடியரசை ஏற்படுத்தப் போராடிப் போராடி வெற்றிவாகை சூடிய தலைவர்கள், அற்புதமான கருவிகளைச் செய்துதந்த விஞ்ஞானிகள், அறிவு ஒளி பரப்பிய அறிஞர்கள், மக்களைத் தட்டியெழுப்பிய கவிஞர்கள் முதலியோரின் உருவப் படங்கள், மக்கள் அறிவு வளர்ச்சிக்கு இன்றியமையாத இன்ன பிற பொருள் அத்தனையும் அந்தப் பொருட்காட்சியில் முக்கிய இடம் பெற்றிருந்தன!

வந்திருந்த மக்களுக்கு ஓவியங்களைக் காட்டி குமார் விளக்கம் கூறினான். விஞ்ஞானக் கருவிகளைக் காண்பித்து, ஒவ்வொன்றையும் கண்டுபிடித்த விஞ்ஞானியைக் குறித்தும், கண்டுபிடிக்கப்பட்ட வழி, பயன் ஆகியவற்றைப் பற்றியும் கோபால் சோர்வில்லாமல் சொல்லிக்கொண்

டிருந்தான். பல்வேறு நாடுகளின் அமைப்பு, ஓடும் நதிகள், உயரமான மலைகள், உற்பத்தியாகும் பொருள்கள், ஜனத் தொகை, அவர்கள் பேசும் மொழிகள், சமுதாய அமைப்பு முதலிய விவரங்களை உலகப் படத்தைக் காட்டிக் கண்ணன் சுட்டிச் சொற்பொழிவுகள் ஆற்றிக் கொண்டிருந்தான். பிற நாடுகளில் விஞ்ஞான முறையில் விவசாயம் முன்னேற்ற மடையும் வழிவகைகளைப் பற்றி விளக்க உரை ஆற்றுதல், வந்திருந்த மக்களுக்கு வசதிகள் செய்து தருதல், ஆகிய வேலைகளில் காளிமுத்து ஈடுபட்டிருந்தான். மாதர்களை அன்பாக வரவேற்று அவர்களின் தேவைகளைத் தானே அறிந்து பூர்த்தி செய்தல், இடை இடையே குட்டிச் சுயமரி யாதைப் பிரசங்கங்கள் செய்தல் ஆகிய பணியில் வேணி தன்னை மறந்திருந்தாள். கல்லூரி மாணவர்களும் மாணவி களும் அதிக பங்கு எடுத்துக்கொண்டு பொருட்காட்சி சிறப்பாக நடைபெறப் பெரும் உதவியளித்தார்கள்.

தாசி வீடு சென்று திரும்பிய கடவுளைக் கட்டையால் அடிக்கும் மட்டை அடி திருவிழாக்கள், மூடத்தனத்தின் மூடை நாற்றம் வீசுகின்ற சத்கதா காலட்சேபங்கள், பாரதக் கூத்துக்கள் முதலிய கண்ணறுவிக் காட்சிகள் முக்கிய மாக கிராமங்களில் நடைபெறுவதை நிறுத்தி, அறிவு வளர இத்தகு பொருட்காட்சிகளை நடத்தவேண்டுமென்று ஒரு நாள் குமார் யோசனை கூறினன். ஆமாம், மக்களை நல்ல வழி யில் அழைத்துச் செல்லப் பயிற்சியளிக்கும் சிறிய முறை இது என்றான் கோபால். திட்டமெங்கே திட்டமெங்கே என்று துடிதுடித்துக் கேட்கும் வாலிபர்கள் ஒவ்வொரு ஊரிலும் செய்யவேண்டிய பயனுள்ள முக்கிய வேலை இது எனக் கூறினன் கண்ணன். நம்மூரிலேயே சுயமரியாதைப் பொருட்காட்சியை நடத்தி முடிக்கும் வரை நான் தூங்கப்

போவதில்லை என்ற சபதம் செய்தான் காளிமுத்து! சிறிது நாட்களுக்குப் பிறகு அனைவரின் கூட்டுமுயற்சியினால் பழத்தூரில் அந்தப் பொருட்காட்சி நடைபெற்றது.

குமாரும் வேணியும் ஒருவரை ஒருவர் அன்பாக நேசிப்பதைக் கோபால் அறிந்துகொள்ளாமலில்லை. அவர்கள் தனக்குப் பயந்து கள்ளத்தனமாகப் பார்வைகளைப் பரிமாறிக் கொள்வதை அவன் கண்டுகொள்ளாமலுமிருக்கவில்லை. ஒத்த உள்ளம் கொண்ட அவ்விருவரும் வாழ்க்கையில் ஒன்றாகப்பிணைவதில் அவனுக்கு அதிகப்பிரியமிருப்பதாகச் சொல்லவும் முடியாது! ஆற்றங் கரையோரத்தில் அன்றொரு நாள் பெண் குலத்தைக் குறித்து மிகக் கேவலமாகக் குமார் திட்டியது கோபாலின் நினைவில் அழியாத ஒலிப்பதிவு ஆகிவிட்டது! மணமாகா வாலிபன் மாதர் இனத்தை மனம் அருவருக்கும் முறையில் திட்டவேண்டியதன் காரணமென்ன, ஒரு வேளை யாரையாகிலும் காதலித்து, அக் காதல் கைகூடாமல் போய்விட்டிருக்குமோ என்று பல நாட்கள் கோபால் ஓய்ந்த நேரங்களில் தன் சிந்தனைக்கு வேலை கொடுத்துத் தெளிவுபெற முயற்சித்திருக்கிறான். அவ்வளவு சஞ்சல மனப்பான்மை கொண்டவனோடு தன் தங்கை வேணி தாராளமாகப் பழகுவது அவனுக்கு அவ்வளவு திருப்தியளிக்கவில்லை. எனினும் அவர்கள் உள்ளத்தில் ஊற்றெடுக்கும் அன்பை அவனால் அணைகட்டித் தடுக்கவும் முடியவில்லை!

சிவன் விட்டுச் சென்ற பணியைத் தொடர்ந்து நடத்தி ஆதரவு காட்டவும், சொற்பொழிவுகளாற்றவும், பொருட்காட்சி நடைபெற்ற ஒரு வாரத்திற்குப் பின்னர், கோபாலும் கண்ணனும் சோலையூர் சென்றனர். வீட்டிலிருந்து கொண்டு பலவித வண்ணங்களின் சேர்க்கைகளைக்கொண்டு-

பேசும் ஓவியங்கள் பல தீட்டிக்கொண்டிருந்தான், குமார். வேணி அவனுக்கு வேண்டிய பணிகளை இன்பம் பெருக்கெடுத்தோடும் உள்ளத்தோடு செய்துவந்தாள்!

ஒரு நாள் மாலை வேணியும் குமாரும் ஊரின் புறத்தே இருந்த மண்கோட்டைக்குச் சென்றார்கள். கோட்டையின் மீது இருவரும் ஏறி நின்றதும், பழத்தூர் வந்த முதல் நாள் கோபால் தனக்குக் காட்டிய தாசித்தோப்பு, யானை மேடு, புலவர் காடு ஆகிய இடங்களின் பக்கம் குமார் ஒரு முறை தன் பார்வையைத் திருப்பினான்! தாசித் தோப்பில் பார்வை பட்டதும் அவ்வளவு விரைவாக அதனைத் திருப்ப அவனால் இயலவில்லை! அன்று அதனைக் கண்டபோது ஏள னச் சிரிப்புச் சிரித்தான்! ஆனால் இன்று அதனுள் குமுதம் நிற்பதுபோல் அவனுக்குத் தோன்றி உள்ளத்தில் வேதனையை உண்டாக்கியது! சீ, நீயும் ஒரு பெண்ணா என்று தனக்குத்தானே வெறுப்பாகக் கூறிக்கொண்டான். அவன் முகமடைந்த மாற்றத்தை வேணி கண்டதும்,

"மகிழ்ச்சி நிறைந்த தங்கள் முகத்தில் ஏன் அத்தான் மாற்றம்?" என்று பயந்த குரலில் வினவினாள்.

"ஒன்றுமில்லை வேணி!"

"பரவாயில்லை! தங்கள் மனதிலுள்ளதைத் தாராளமாகக் கூறினால் யாராவது தடுத்துவிடுவார்களா என்ன?"

"கோபமோ ஐயமோ நீ கொள்வதில்லை என்று உறுதி கூறினால் உன்னைச் சில கேட்கிறேன்!"

"அப்படியே, அத்தான்!"

"சரி! பெண்களுக்குச் சஞ்சல புத்தி யிருக்குமோ?"

"இக் கேள்வி எழுக் காரணம், அத்தான்?"

"பார்த்தாயா! கேட்ட கேள்விகளுக்கு பட்டுந்தான் நீ பதில் கூற வேண்டும்!"

"அப்படியே! புயலடித்து மலைவளைந்து கொடுத்ததைக் கண்டீர்களா?"

"மலை பிளந்ததைப் பார்த்திருக்கிறேன்!"

"அதுதான் அத்தான் பெண்களின் இயற்கையான உள்ளப் பண்பு! புரிகிறதா?"

"தெரிகிறது. விட்டுப்பிரிந்தால் வேறொருவனை மணந்துகொள்கிறார்களே, அது ஏன்?"

"இக் கேள்வியே எனக்குப் புரியவில்லையே! விளக்கிக் கூறுங்கள். பதில் கூறுகிறேன்!"

"வேண்டாம்! இதற்கு விளக்கமும் வேண்டாம், உன் பதிலும் வேண்டாம்!"

"தங்கள் குரல் வேறுவிதமாகக் கேட்கிறதே!"

"உன் காதில் பழுதிருக்கும்!" என்று கிண்டல் செய்பவனைப் போலக்கூறி, தீவிர பலவந்தத்தால் தன் உணர்ச்சிகள் வெளியில் தெரியாதபடி மறைத்துக்கொண்டு, அன்போடு அவள் கையைப் பற்றினான்!

எதனையோ கூற அவன் மறைக்கிறான் என்பதை வேணி அறிந்துகொண்டாள். எனினும், அதைக் குறித்து மேலும் மேலும் கேட்டால், எங்கு வருத்தமடைந்துவிடுவானோ என்று அஞ்சி கேட்காமல் அதனை விட்டுவிட்டாள்.

"வேணி இந்த இன்பம் மாறியோ குறைந்தோ விடாதே!"

"கடலில் தண்ணீர் வற்றிவிடுமா என்று கேளுங்கள், அதுதான் பொருத்தமான கேள்வி!"

"எப்படியோ உன் கண் வலை வீசி என்னைப் பிடித்து விட்டாய் வேணி!"

"என்ன என்ன? நானு வலைவீசினேன்? இங்குவந்த முதல் நாள் இரவு நான் சோறுபடைத்தேனே, அப்பொழுது புன்னகை செய்தது யார் அத்தான்?"

"கவனமில்லையே எனக்கு........."

"மறைக்கப்பார்க்கிறீர்கள்!" சரி! தலைமறைவாக இருந்தபோது, தென்னந்தோப்பில் வெண்ணிலா ஒளியில் இலை போட்டு உணவுபரிமாறினேனே, அப்பொழுது இன்பமான பார்வையை என்மேல் வீசியதாவது நினைவிருக்கிறதா?"

"என் காதலி குமுதத்தை யெண்ணி அல்லவா அப்பொழுது நான் மகிழ்ந்தது! உன்னை அவளாக மாற்றி அன்றி, உன்னை நீயாகவே பார்த்து நான் ஆனந்தமடையவில்லையே?" என்று குமார் கூறவில்லை! எப்படிக் கூற முடியும்? ஆகவே "ஆமாம்!" என்று ஒத்துக்கொண்டான்!

"இப்படியெல்லாம் சிறிது சிறிதாக வலைபோட்டு என்னைத் தாங்கள் பிடித்துவிட்டு, இப்பொழுது கூறுகிறீர் நான் தங்களை மயக்கிவிட்டதாக!"

கோபம் கொண்டவளைப்போல அவள் நடித்தாள்! கொஞ்சுமொழி பேசி கோபத்தை அவன் தணித்தான்! நேரமாகி விட்டதனால் இருவரும் வீட்டிற்குப் புறப்பட்டார்கள்!

வீடுவந்து சேர்ந்ததும், காளிமுத்து குமாருக்கு வந்த ஒரு கடிதத்தைக் கொண்டுவந்து தந்தான். குமார் அக் கடிதத்தின் உறையின்மீது இருந்த கையெழுத்தைப்பார்த்து விட்டு அதனைப் பிரிக்காமலேயே பெட்டியில் கொண்டு போய் வைத்தான். இதுபோல் அடிக்கடி வந்த அநேக கடி

தங்களை, அவன் பிரித்துப் படித்துப் பார்க்காமல் பெட்டியில் வெறுப்போடு கொண்டுபோய் வைத்ததை வேணி கவனித்துக் கொண்டு வந்திருக்கிறாள். இத்தனை நாட்களாக அதனைக் குறித்து விசாரிக்க அவள் அஞ்சினாள். இன்று இருவரும் இன்பத் தென்றலில் மிதந்தோடிக்கொண்டிருந்த காரணத்தால் அதனைக் குறித்து விசாரித்து அறிய அவள் விரும்பினாள்.

" அத்தான் "

" என்ன வேணி ?"

" ஒன்று கேட்கப்போகிறேன்! அதனால் தங்களுக்கு வருத்தமேற்படாதே !"

"எனக்குத் தெரியும் நீ கேட்கப்போவது !"

" ஜோசியம்கூட தங்களுக்குத் தெரியுமா ?"

ஜோசியம் என்று அவன் கூறியதற்கு, அவள் மனநிலை சரியாக விருந்திருந்தால் அந்த வார்த்தையை வைத்துக்கொண்டே அவளிடம் நீண்ட நேரம் விளையாடியிருப்பான்! ஆனால் அவன் மனமோ குழம்பிய நிலையில் அப்பொழுதிருந்தது. ஆகவே மௌனமாகச் சிறிது நேரமிருந்துவிட்டுப் பெட்டியிலிருந்த, உடைத்துப் பார்க்காத கடிதங்கள் அத்தனையையும் வெளியில் எடுத்தான்.

" யார் எழுதிய கடிதம் அத்தான் இவை !"

" வேணி, அழுகிய இதயத்திலிருந்து முளைத்த காளான்கள் இவை !"

" புரியும்படிக் கூறுங்கள் அத்தான் !"

" கண்ணே! எனக்கு ஒரு பெண் துரோகம் செய்தாள்! அந்தத் துரோகத்தை மறைப்பதற்காக உயிரற்ற

வெறுங் காகிதக் கடிதங்களை விடாது தூது அனுப்பிக் கொண்டிருக்கிறாள்!"

"ஒரு பெண்"—வேணியின் இதழ்கள் முணுமுணுத்தன! அத்தானுக்கும் வேறொரு பெண்ணிற்கும் முன்னரே தொடர்பு இருக்கிறதா என்று அவள் இதயத்தில் ஓர் ஐயம் ஏற்பட்டது! ஆண் பெண் தொடர்பு என்றால் அது காதலாகத்தானா இருக்க வேண்டும், ஏன் அது அவர் கலைத்துறை சார்பானதாக இருக்கக் கூடாது என்று எண்ணித் தன் உள்ளத்தைத் தைரியப்படுத்த முயன்றாள். அந்தக் கடிதங்களில் ஒன்றைப் பிரித்துப் பார்க்க வேண்டுமென்று விரும்பி, ஒன்றை எடுக்கப் போனாள்!"

"வேணி! வேணி! தொடாதே! அதனைத் தொடுவதன் மூலம் தூய உன் கையில் களங்கமேற்பட்டுவிடும்!"

வேணி அசைவற்று நின்று விட்டாள். அவள் ஐயம் வளரத் தொடங்கியது. அவள் முகமும் மாறியது! இதயத்தில் வேதனைத் துளிகள் சிறிது சிறிதாகச் சிந்த ஆரம்பித்தன. தைரியம் கொண்டு திரும்பவும் பேச ஆரம்பித்தாள்.

"அத்தான்! இக்கடிதங்கள் எதற்காக எழுதப்படுகின்றன என்பதையாகிலும் நான் அறியலாமா?"

"வேண்டாம்! வேணி! என் உள்ளம் வருத்தமடைய வேண்டுமானால் மேலும் மேலும் கேள்!"

"இல்லை, இல்லை அத்தான்! இனி நான் இதைக் குறித்துக் கேட்கவில்லை!............ஆனால் ஒன்று, அதனை ஏன் தாங்கள் பிரித்துப் படித்துப் பார்க்கவில்லை?"

"அதில் என்ன எழுதப்பட்டிருக்கிறது என்பது எனக்கு நன்கு தெரியும்!"

வேணி பேசாதிருந்தாள். குமார் தன் நெற்றியைத் தடவிக் கொண்டே சிந்தனையில் ஆழ்ந்தான்.

"வேணி"

"சொல்லுங்கள் அத்தான்!"

"விரைவாகச் சென்று தீப்பெட்டி கொண்டுவா"

ஏன் என்று அவள் கேட்கவில்லை. எழுந்து சென்று தீப்பெட்டியோடு திரும்பினாள்;

குமார் அக் கடிதங்கள் அத்தனையும் ஒன்றாகச் சேர்த்தான்! தீக்குச்சியைக் கிழித்து, அவற்றிற்கு நெருப்பிட்டான். புகைவிட்டு அவை எரிந்து கருகிக்கொண்டிருந்தன! சுட்டுப் பொசுக்கி விட்டேன் என்று வாய்விட்டுக் கூறினான் குமார்.

வேணி வியப்போடு அவன் செயலைப் பார்த்துக் கொண்டிருந்தாள். கோபத்தோடு கடிதங்களுக்குத் தீயிட்ட குமார், அது எரிந்து சாம்பலாவதைக் கண்டதும் ஏனோ மனம் வருந்தத் தொடங்கினான்.

"வேணி! இந்தப் புகை உன் உடலில் பட்டால், பளிங்கு போன்ற உன் உள்ளத்திலும் பாழும் கறைபடிந்து விடும்! வேண்டாம், வேண்டாம் வேணி, இந்தப் புகையைப் பார்த்துக்கொண்டு இங்கு நிற்கவேண்டாம். வா, வா, வேறு அறைக்குச் சென்றுவிடலாம்!" என்றுகூறி, குமார், வேணியை அழைத்துக்கொண்டு வேகமாக வேறு அறைக்குச் சென்றான்.

அங்குச் சென்றதும் அந்த அறையும் குமாருக்குப் பிடிக்கவில்லை. "என்ன வேணி! ஏதோ துர்நாற்றம் வருகிறது" என்று சொல்ல வாயெடுத்தான், ஆனால் சொல்லவில்லை. வார்த்தைகள் வெளியே புறப்படும் நேரத்தில்தான்

அவனுக்குத் தெரிய வந்தது தர்காற்றம் அறையிலே யில்லை தன் உள்ளத்திலே இருக்கிறது என்று! குமுதம் அவன் மனத்திரையிலே வந்து நின்றாள் கசங்கிய கண்களோடு— அவன் முகம் சுருங்கிற்று.

அத்தான் என்று சொல்ல வாயெடுத்தாள் வேணி, அவளுக்கும் வார்த்தை வரவில்லை! நாக்கிலே ஏதோ ஒரு வித பசை இருந்துகொண்டு பேச்சை மறிப்பதுபோல் தென்பட்டது அவளுக்கு!

கொஞ்ச நேரத்திற்கு முன்னால் இன்பபுரிப் பயணம் செய்துகொண்டிருந்த இருவர் உள்ளத்திலும் இப்போது பற்பல எண்ணப் புயல் வீசத் தொடங்கிற்று.

அவன் பேசவில்லை!

அவளும் பேசவில்லை!

ஏதோ ஒருவித பயங்கரமான அமைதி நிலவிற்று அந்த அறையில்! எங்கும் நிறைந்த அகண்ட வெளியில் பாதாள உலகை நோக்கி வேகமாக ஓடிக்கொண்டிருக்கும் ஒரு ரயில் வண்டியில் இரண்டே இரண்டு பிரயாணிகள் மௌனமாகப் பயணம் செய்வது போன்ற உணர்ச்சி ஏககாலத்தில் இருவருக்கும் ஏற்பட்டது!

இருபத்தி ஐந்தாவது பகுதி

மனப் புயல்

பயங்கரமான அமைதி நிலவிய அன்றிரவின் பிற்பகுதியில் ஆரம்பித்த தூறல் பிறகு பெருமழையாக மாறி, விடாது பெய்துகொண்டே இருந்தது. ஒரு வாரம் சென்றது! பொழுது புலர்ந்தது! சோவென மழை விடாது கொட்டிக்கொண்டே இருந்தது.

வேணி தெருக்கதவைத் திறந்துகொண்டு, வெளியில் வந்து எட்டிப் பார்த்தாள். கிளைபொடிந்து, இலை உதிர்ந்து, வேர் பெயர்ந்து உருமாறிக்கிடந்த மரஞ் செடிகளைக் கண்டதும் அவள் உள்ளம் திடுக்கிட்டது. அந்த கோரமான காட்சிக்கும் வேணியின் வாழ்விற்கும் என்ன தொடர்பு? தொடர்பு இல்லையென்றால் அவள் உள்ளம் நடுநடுங்கியதே அது ஏன்?

வேணி, கதவை மூடிவிட்டுக் குமார் இருந்த அறையினுள் சென்றாள். குமாரின் முகத்தில் மகிழ்ச்சியில்லை, அவளைக் கண்டதும் வழக்கப்படி அவன் செய்யும் வரவேற்பில்லை! தீட்டிக் கொண்டிருந்த ஓவியத்திலேயே தன் கருத்தையும் கண்ணையும் அவன் பூர்ணமாகச் செலுத்திவிட்டான். ஆகவே வேணி அருகே வந்து நின்றதையும் அவனால் அறிந்து கொள்ள முடியவில்லை. சித்தத்தில் வருத்தம் நிறைந்திருந்தது எனினும், 'சிந்தனை அலைகள் அவன் முகத்தில் பரவியிருந்தன! ஓவியக் கோலின் உதவியைக் கொண்டு கற்பனைக்கு உயிரளித்துக் கொண்டிருந்தான் கலைஞன்.

வர்ண ஓவியத்தில் வேணியின் வண்டு விழிகள் மொய்க்கத் தொடங்கின. உயிரோவியத்தைக் காணக்

காண உள்ளத்தில் ஏதோ ஒருவித பயங்கரமான உருவந் தோன்றி அவளைக் கிடுகிடுக்கச் செய்தது!

அலைகடலுக்கருகே ஆகாயத்தை முட்ட வளர்ந்திருந்த மரங்கள் நிறைந்த காடு! மரங்களும் செடிகளும் சுழன்று சுழன்று வீசும் சூறுவளியினால் நிலைபெயர்ந்து வாழ்விழந்து காணப்படுகின்றன! செத்துக் கிடக்கிறது சிங்கம்! உயிர் பிரியும் தறுவாயில் தரையில் வீழ்ந்து புரளுகிறது சிறுத்தை! ஒடிந்து சாய்ந்த மரக்கிளைக் கடியில் கூழாகிவிட்ட புள்ளிமான்! முயலை வாயில் கவ்விக் கொண்டே பிணமான நரி! சிறகொடிந்த பறவைகள்! காலொடிந்து நகரமுடியாமலிருந்த மயில்கள்! வீசும் புயலால் கடலில் ஒரே கொந்தளிப்பு! அலையோடு அலை மோதிச் சிதறி வீழ்கின்றன! படகொன்று மூழ்கிக் கொண்டே இருக்கிறது! ஒரு இளம் பெண் உயிருக்காக அலைகளோடு போராடிக் கொண்டிருக்கிறாள்! கடற்கரை எங்கும் சூறுவளியின் கோரத்தாண்டவம்! மணல் மேடு! அதன் மீது ஒரு வாலிபன்! அவன் தலைமயிர் காற்றில் பறந்துகொண்டிருக்கிறது. முகத்தில் எண்ணங்களின் கீறல்கள் ஏராளம். கன்னத்தில் கை வைத்துக் கொண்டு ஆழ்ந்த யோசனையில் மூழ்கியிருக்கிறான்!

—இதுதான் குமார் தீட்டிக்கொண்டிருந்த உயிர் சிலிர்க்கும் ஓவியம்! அந்தப் பயங்கரமான சித்திரத்தைச் சிற்றிடையாள் மிரள மிரளப் பார்த்துக்கொண்டிருந்தாள். "அத்தான்" என்று மெதுவாக அழைத்தாள். அவனுக்கு அது கேட்கவே இல்லை. அவளுக்கே ஐயமேற்பட்டது, தன் வாயிலிருந்து ஒலி வெளியில் சென்றதா இல்லையா என்று! "அத்தான்" என்றாள் திரும்பவும், சிறிது உரத்த குரலில். கற்பனை உலகத்தின் ஏதோ ஒரு

கோடியில் சுற்றியலேந்து கொண்டிருந்த அவன் காதிலா அவ்வார்த்தை புகப் போகிறது? மௌனமாகவிருந்தான். சிறிது நேரத்திற்குப் பிறகு அவன் பெருத்த தோள்களைப் பிடித்து அசைத்து, "அத்தான்" என்றாள் பயம் கலந்த குரலில். கனவுலகத்திலிருந்து விடுபட்டுத் திடுக்கிட்டு அவளைப் பார்த்தான்.

"வேணி, என்னையா அழைத்தாய்?"—கலங்கிய குரலில் கேட்டான். அவன் முகமும் கண்களும் ஏதோ ஒரு விதமாக அவளுக்குத் தோன்றின.

"அத்தான், எனக்குப் பயமாகவிருக்கிறது?"

"ஏன் வேணி?"

"இதுவென்ன சித்திரம்? இதிலேன் இவ்வளவு கோரம்?"

"உனக்குப் புரியாது வேணி!"

"புரியும்படி விவரித்துக் கூறுங்களேன்!"

"முற்றுப் பெறாத சித்திரம் இது! முடித்துவிட்டு விளக்குகிறேன்!"

"முதலில் ஒன்றே ஒன்றை மட்டும் கூறுங்கள், அத்தான், அது போதும் எனக்கு. அழகிய ஓவியங்களைத் தீட்டிக் கொண்டிருந்த தங்களை, இந்த அகோரமான படைப்பைச் சிருஷ்டிக்கத் தூண்டியது எது?"

"மனப்புயல்!"

"என்ன?........மனப்புயல்......"

"ஆம், மனப்புயல்! மனப்புயல்!"

"தங்களுக்குமா?"

"எனக்கு மட்டுமென்ன, உனக்கும் கூடத்தான்! ஆண்டியானாலும், அரசிளங்குமரனானாலும் வேலைக்காரியானாலும் வேந்தனின் திருமகளானாலும்—அனைவருக்கும் பொதுச்சொத்து, வேணி, மனப்புயல!

"இதனை மூடிவைத்து விடுகிறீர்களா, அத்தான்?"

"மூடி வைப்பதேன், கிழித்தே எரித்துவிடப் போகிறேன்............இப்பொழுதல்ல, தீட்டிமுடித்து, என் மனதில் வீசும் புயல் ஓயும் மட்டும் இதனைப் பார்த்து ரசித்து, பிறகு........."

வேணி பேசாதிருந்தாள். திரும்பவும் தன் வேலையில் ஈடுபட்டான். பெண் அறையைவிட்டு வெளியே வந்தாள். திரும்பவும் தெருக்கதவைத் திறந்து வெளிக்காட்சியில் தன் நாட்டத்தைப் பாய்ச்சினாள்! மழை பெய்து கொண்டே இருந்தது. பழத்தூர் பாழடைந்து விட்டது போல் அவளுக்குத் தோன்றிற்று.

மழையில் நனைந்துகொண்டு தன் வீடு நோக்கி காளிமுத்து வருவதைக் கண்டதும் வெலவெலத்துப் போனாள். மழையில் நனைந்துவரவேண்டிய அவ்வளவு அவசரமான வேலை இப்பொழுது என்ன வந்துவிட்டதென்றெண்ணினாள். அவளுக்கு ஒன்றுமே புரியவில்லை. காளிமுத்து அருகில் வந்தானோ இல்லையோ, அவசரமாகக் "காளிமுத்து, என்ன செய்தி?" என்று கேட்டாள். அப்படி வினவி முடித்ததும் அவள் உள்ளத்திலிருந்த பாரமிறங்கியது போல அவளுக்குத் தோன்றியது.

"கடிதம் வந்திருக்கிறது அம்மா. இதுவந்து இரண்டு நாட்களாகின்றன. முக்கியமான செய்தி ஏதாகிலுமிருக்கப் போகிறதென்றெண்ணி எடுத்துக்கொண்டு ஓடி வந்தேன்!" என்று காளிமுத்து கூறி, அக்கடிதத்தை அவளிடம் தந்

தான் அக்கடிதத்தின் மீதிருந்த கையெழுத்தைக் கண்டதும், அவள் உள்ளமும் உடலும் சிலிர்த்தன!

"அம்மா! நான் வருகிறேன்!" என்று கூறிக்கொண்டே திரும்பவும் மழையில் புகுந்து காளிமுத்து மறைந்தான்.

கையெழுத்தைவிரைக்கவிரைக்கப்பார்த்தாள்! ஆம் அதே கையெழுத்துதான்! அன்று தீயில்போட்டுப் பொசுக்கிய அதே கையெழுத்துதான்! இன்பத்தென்றல் குளிர்ந்து வீசிக்கொண்டிருந்த கன்னியின் உள்ளத்தில் கடும்புயல் எழும்பியது அதேதான்! ஐயமில்லை! திரும்பத் திரும்பப் பார்த்தாள். அதனை எடுத்துக்கொண்டு அத்தானிருந்த அறையினுள் நுழைந்து "அத்தான், கடிதம்" என்றாள். அவன் இவ்வுலகத்திலா இருந்தான் அவள் கூறியதைக் கேட்க? கலைஞன் தனியொரு உலகில் அல்லவா சஞ்சரித்துக் கொண்டிருந்தான்!

மௌனமாக வேணி அறையைவிட்டு வெளியே வந்தாள். மறுபடியும் மறுபடியும் அவள் அக் கையெழுத்தையே பார்த்தாள். அவள உள்ளத்தில் பற்பல எண்ணங்கள் எழுந்து தலைவிரித்தாடின. "இரகசியம்! இரகசியம்" அவள வாய் முணுமுணுத்தது. "என் அமைதியைப் பாழாக்க வந்த இரகசியம்!" என்று வாய்விட்டு வார்த்தைகளை உதிர்த்தாள். தன் அறையில் சென்று உட்கார்ந்தாள்! யோசித்தாள்; கடைசியில் ஒரு முடிவிற்கு வந்தாள்.

அக்கடிதத்தின் உறையைக் கிழிக்க ஆரம்பித்தாள். அவள் கைகள் நடுங்கின. தைரியங்கொண்டு கிழித்தேவிட்டாள், உள்ளிருந்த கடிதத்தை எடுத்தாள், விரித்தாள், படித்தாள்!

படித்துக்கொண்டே வரும்பொழுது, அவள் முகத்தில் பற்பலவித மாற்றங்கள் ஏற்பட்டன! வெறுப்பு, கோபம்,

ஆச்சரியம், ஏமாற்றம், சோகம் இன்னபிற உணர்ச்சிகள் அவள் மதிமுகத்தில் நிழலாடின!

படித்து முடித்தாள். சோர்ந்து கட்டிலில் சாய்ந்தாள். "துரோகம்! துரோகம்" என்று தனக்குத்தானே சொல்லிக் கொண்டாள்! "நானா கெடுத்தேன்? அல்ல! அல்லவே அல்ல! ...நான் ஒப்பேன்! ஆம்! நிச்சயம் இசையேன்!" ஏதேதோ பிதற்றினாள் வாடியிருந்த அழகியின் முகம் மாறிக் கொண்டே வந்தது! தெளிவான முகமும் ஒளிவீசும் கண்களும் பெற்றாள். கட்டிலைவிட்டு எழுந்தாள். குமாரின் அறையை நாடி நடந்தாள்.

குமார் கலையிலேயே மெய்ம்மறந்திருந்தான். அவளுக்கு ஆத்திரமும் அழுகையும் பிறிட்டுக்கொண்டு வந்தன. ஆவேசமான குரலில் "அத்தான்" என்றாள். அவன் பேசாதிருந்தான். அவன் தோளைப்பிடித்துப் பலமாக ஆட்டி "துரோகம்! துரோகம்" என்று கத்தினாள்.

விழிக்க விழிக்க வேணியை அவன் பார்த்தான்!

"துரோகம்! துரோகம்!" என்றாள் திரும்பத் திரும்ப அவள்.

"துரோகம்! மனப்புயல்!" குமார் மெதுவாகக்கூறினான்.

"அத்தான், அத்தான், என்னைப்பாருங்கள்! நான் சொல்வதைக் கேளுங்கள்.......என்ன, என்ன இன்னுமா கற்பனையில் ஆழ்ந்திருக்கிறீர்கள்?...... அய்யோ! துடிதுடித்துப்பேசுகிறேனே? சற்றுக்கேளுங்களேன்!....அத்தான்?" ஆத்திரத்தைவிட அழுகைதான் அவள் குரலில் மிக அதிகமாகக் கலந்திருந்தது.

குமாரின் எதிரிலிருந்த பொருள்கள் எல்லாம் ஆடி அசைந்தன—அவன் கண்களுக்குமட்டுந்தான் இந்த நிலை

—ஒரு நிலைக்கு வந்தன. குமார் எழுந்தான், வேணியும் எழுந்து "துரோகம்?" என்று கூறினாள்.

"துரோகமா? உனக்கா?". என்று கூறி, வேணியின் கண்களில் வழிந்த கண்ணீரைக் குமார் துடைத்தான்.

"இருவருக்குத் துரோகம்!"

"என்ன? இருவருக்கா?"

"ஆமாம் அத்தான்; எனக்கும் என் சகோதரியான மற்றொருத்திக்கும்!"

"பித்தம் கொண்டவளைப்போல ஏதேதோ பேசுகிறாயே, வேணி!"

"நானா ஏதேதோ பேசுகிறேன்?.. இதைப்பாருங்கள்!" என்று தன் கையிலிருந்த கடிதத்தை அவனிடம் நீட்டினாள்.

கருநாகத்தைக் கண்டவன்கூட அவ்வளவு அலறியிருக்கமாட்டான், அதைவிட இன்னும் அதிகமாக அலறினான் அக்கடிதத்தைக்கண்டதும் குமார்.

"இது எப்படி உன்னிடம் கிடைத்தது?" அதிகாரமும் கோபமும் கலந்த குரலில் குமார் வினவினான்.

"காளிமுத்து தந்தான்!" சாந்தமாகப் பதிலளித்தாள் வேணி.

இருவரும் சிறிதுநேரம் மௌனமாக இருந்தார்கள்.

"அத்தான்! ஆபத்து!"

"ஆபத்தா? யாருக்கு?"

"இதனைப் படித்துப்பாருங்கள்!" என்று கூறி நடுங்கும் காத்தோடு, கடிதத்தை அவனிடம் தந்தாள். அதனைத்

தரையில் வீசியெறிந்தான் குமார். "துரோகம்"—அவனும் கூறினான் வெறுப்போடு.

தரையில் வீழ்ந்த கடிதத்தை விரைவாக எடுத்து அவனிடம் தந்து வாசித்துப் பார்க்கும்படி மன்றாடினாள். மறுத்தான்! அழுதாள்! கெஞ்சினாள்! இசைந்தான்! மேற்போக்காக ஒப்புக்கு அதனைப்பார்த்தான். "விஷம்" என்ற வார்த்தை அவன் கண்ணில் பட்டதும், திடுக்கிட்டு அப்பதத்தை உற்றுப்பார்த்தான். ஆம், விஷந்தான் அவன் உள்ளம் குலுங்கியது.

"விஷம்!" உறுதியான குரலில் மெதுவாகக் கூறினான்.

"ஆமாம், ஆமாம், விஷமேதான்!....விரைவாகப் படியுங்கள்' என்று அவசரப்படுத்தினாள் வேணி.

கடிதத்தை, நன்றாக விரித்துப் பிடித்துக்கொண்டு, ஆரம்பத்திலிருந்து, தன் விழிகளால் வார்த்தைகளை உண்ணத் தொடங்கினான், குமார்!

ஆருயிர் அத்தான், வணக்கம். இதுதான் நான் எழுதும் கடைசிகடிதம். அல்ல, அல்ல; இது கடிதமல்ல! என் இதயக்குரலின் கடைசியொலி! பலகடிதங்கள் எழுதினேன். தினம்தினம் பதில் வருமென்று எதிர்பார்த்த வண்ணமுமிருந்தேன். ஏமாற்றமும் ஏக்கமு மடைந்தேன்.

அத்தான், தாங்கள் இப்படி முழுதும் மாறிவிடுவீர்கள் அல்லது மாற்றப்பட்டு விடுவீர்கள் என்று கனவில்கூட நான் நினைத்ததில்லை.

எனக்குக் கலியாணமான செய்தியைக் கேட்டதும் துரோகி, காதகி, ஆசைமொழிபேசியவஞ்சகிஎன்றெல்லாம் என்னைப்பற்றி முடிவு செய்துவிட்டிருப்பீர்கள். கோபமும் வெறுப்பும் கொண்டு பலப்பல திட்டியிருப்பீர்கள்

சோகமும் தங்கள் உள்ளத்தை வாட்டியிருக்கும். இல்லை என்று கூறவில்லை. குமுதம் ஏன் இப்படி மாறினாள் என்று அறிய முயற்சி செய்தீர்களா? இல்லை, அதை விளக்கவே—நான் அபலை என்பதைத் தாங்கள் அறியவே—இக்கடிதம் எழுதுகிறேன். பசப்புகிறாள், பாசாங்குக்காரி என்று படிக்காமல் வீசியெறிந்துவிடாதீர்கள். படியுங்கள், பிறகு உங்கள் உள்ளம் குமுதம் துரோகிதான் என்று கூறினால், நான் உண்மையிலேயே துரோகிதான்.

வெண்ணிலா வீசிய இரவில் என்னைச் சந்தித்து, இன்பமாகப் பேசி, களிப்புக் கடலில் என்னை ஆழ்த்தினீர்கள். பரவசத்தால் மலர்ந்திருந்த என் உள்ளம் வாட, பழத்தூர் செல்லப் போவதாகக் கூறி விடைகேட்டீர்கள். போக வேண்டாம் என்று வேண்டினேன். ஆபத்து ஏதாகிலும் வருமோ என்று அஞ்சி அழுதேன். கண்ணீரைத் துடைத்து ஆறுதல் கூறினீர்கள்! என் உள்ளம் துடிதுடிக்க விட்டுப் பிரிந்தீர்கள் என்று தங்களைப் பிரிந்தேனோ அன்று முதல் என் வாழ்க்கையில் புயல் வீச ஆரம்பித்துவிட்டது. என் சொல்லைத் தட்டி தாங்கள் பழத்தூர் செல்லாதிருந்தால், இவ்வளவு தொல்லைகள் வந்திருக்குமா? நம் காதற் சித்திரக் கோட்டை சிதறிச் சின்னாபின்னமாகித் தரைமட்டமாகியிருக்குமா?

ஒருநாள், "பார் அம்மா இதனை" என்று பத்திரிகையை என்னிடம் அப்பா கொடுத்துவிட்டு வெளியே சென்றார். செய்திகளை அங்குமிங்குமாகப் படித்தேன். என் இதயத் துடிப்பே நின்றுவிடும்போல் ஆகிவிட்டது, தாங்கள் ஜமீன்தாரைக் கொலை செய்துவிட்டு மறைந்துவிட்டீர் என்ற செய்தியைக்கண்டதும். என்ன செய்வதென்றே புரியாது கண்ணீர்விட்டேன், அழுதேன், கதறினேன். நாட்கள் ஓடிக்கொண்டே இருந்தன. தங்களிட

யிருந்து ஏதாகிலும் தகவல் கிடைக்காதா என்று துடிதுடிக்கும் உள்ளத்தோடு காத்துக் கொண்டிருந்தேன்.

சோலையூரிலிருந்து வந்திருந்தசிவனிடம்பழகியதிலிருந்து, அப்பாவின் மனம் புதியமாற்றத்தை அடைந்துவிட்டது. என்னை அவருக்கு மனைவியாக்கிவிட வேண்டுமென்று முடிவு செய்துகொண்டார். அதற்கேற்றாற்போல, சிவன் மனைவி மனோரமாவும் இறந்தாள். சிவன் காசநோயால் பிடிக்கப் பட்டிருந்தும், அவரை மறுமணம் செய்துகொள்ளும்படி அவர் தாய் பலவந்தப்படுத்தினள். பெண் தருவதாகவும் என் தந்தை இசைந்தார். நான் மறுத்தேன். அவர் கால் களைக் கட்டிக்கொண்டு அழுதேன். அவர்மனம் சிறிதும் இளகவே இல்லை. ஒருநாள் விஷக்கிண்ணத்தைக் கையில் எடுத்துக்கொண்டுவந்து "ஏனம்மா உனக்குயார் வேண்டுமே கொலைகாரன் குமாரா அல்லது கண்ணீர் சிந்தும் உன் தந்தையா?. குடல்வெந்து துடித்து இறக்கப்போகும் உன் தந்தையை மீட்கப்போகிறாயா? அல்லது குமார்தான் தேவை என்று கூறப்போகிறாயா? இரண்டில் ஒன்றை விரை வாக இப்பொழுதே கூறிவிடு...." என்று என் தந்தை கண் களில் நீர் ததும்ப, ஆத்திரமும் ஆவேசமும் கொண்ட குரலில் வினவினர். என் உடலும் உள்ளமும் நடுங்கின. என்ன செய்வதென்றே தோன்றாது தத்தளித்தேன். 'தந்தையோ பிடிவாதக்காரர். தாம் சொன்னதை ஆத்திரத் தில் செய்து காட்டிவிடுவார்! கோபம் தணிந்ததும் எப்படி யும் சரிசெய்து விடலாம்" என்று நம்பி அப்பொழுது "சரி" என்றேன். கடைசிவரைக்கும் அவர் பிடிவாதம் தளரவே இல்லை. வேறுவழி இல்லாமல் சிவனுக்கு மனைவி யானேன். மனப்புயலில் சிக்கி நான் உருக்குலைந்து கொண்

டிருந்த நேரத்தில் அவர் இறந்தார். நான் விதவையா னேன்.

ஜமீன்தார் கொலைவழக்கைப் பத்திரிகையில் விடாது ஆவலோடு படித்து வந்தேன். தாங்கள் விடுதலையான செய் தியை அறிந்ததும், அத்தான், என் உள்ளம் உவகையால் எவ்வளவு துள்ளியது தெரியுமா? "குமுதம்" என்று ஓடோடியும் வந்து என்னை அணைத்து, ஒளி இழந்த என் வாழ்விற்கு ஒளிசேர்ப்பீர் என்று நம்பினேன்; அதே நினை வால் நொடிக்கு நொடி என்மனம் பூரித்துப் பருத்தது!

மூன்று நாட்களாகியும் தாங்கள் என்னை நாடி வராத தனல் ஏக்கமும் திகிலுமடைந்தேன். நம் காதற்கோட்டை இடிந்து விழும்படிச் செய்தவர் என்தந்தை. இடிந்த கோட்டையைப் புதுப்பித்து, அழகுபடுத்த அவரே முன் வந்தார். தங்களைத் தேடிக்கொண்டு பழத்தூர் வந்தார். ஏமாற்றமும் அவமானமும் அடைந்து சோகத்தோடு வீடு திரும்பினர். உடைந்த உள்ளத்தோடு, வேணியின் காதல் வலையில் தாங்கள் வீழ்ந்துவிட்டதாகத் தயங்கித்தயங்கிக் கூறினர். வேணி என்ற பெயரைக் கேட்டதும் என்தலை சுற்றியது. நிலை தடுமாறிக் கீழே சாய்ந்தேன்.

சோகச் செய்தியைக் கேட்டதுமுதல் சொல்லொணுத் துக்கத்தில் ஆழ்ந்தேன். இரவும் பகலும் எந்நேரமும் என் கண்கள் நீரின் ஊற்றாகவே இருந்தன. நானே கடிதம் எழு தினல் தாங்கள் நிச்சயம் வருவீர்கள் என்றெண்ணிக் கடி தம் எழுதினேன். பல கடிதங்கள் அனுப்பினேன். வேணி யால் கவரப்பட்ட தாங்கள் இனித் திரும்ப மாட்டீர்கள் என்று பிறகுதான் அறிந்துகொண்டேன். அறிந்த பிறகும் நான் ஏன் வாழவேண்டும், அத்தான்?

இறப்பதற்கு முன்பு தங்களை ஒருமுறை கண்ணாரக் கண்டு மன ஆறுதல் பெறவேண்டுமென்று நினைத்தேன். அதைக் குறிப்பிடும் முடங்கல் விடுத்தேன். அந்தக் கடிதமும் தங்கள் உள்ளத்தைத் தொட்டதாகத் தெரியவில்லை.

நான் உடல், நீங்கள் உயிர்; நான் வீணை, நீங்கள் மேவும்விரல்; நான் நிழல், நீங்கள் ஒளி; நான் மலர், நீங்கள் மணம் என்றெல்லாம் எண்ணினேன். தேனும்—பாலும், கனிரசமும்—கற்கண்டும் சேர்ந்தாற்போல் இன்ப வாழ்வு நடத்தலாமென்று ஆசையோடு எதிர்பார்த்தேன். என்னைக் கட்டியணைத்து முத்தம்தந்து மெய்ம்மறக்கச் செய்த இன்பஇரவுகள் திரும்பவரும் என்று காத்திருந்தேன். மணப்பந்தலின் கீழ் தாங்களும் நானும் கணவனும் மனைவியுமாவோம் என்று நம்பினேன். ஆவியைக்கொள்ளை கொண்ட ஆருயிர் அத்தான், இன்று நம்பிக்கை இழந்து, இதயம் பிளந்து, ஆதரவற்ற அனாதையாக நிற்கிறேன். சிறகொடிந்த பறவையாக, குரலிழந்த குயிலாக, காலொடிந்த மயிலாக ஆகிவிட்டேன் நான்.

வாட்டம்நிறைந்த வாழ்வு இனி எனக்கு வேண்டாம். எந்த விஷக்கிண்ணத்தைக் காட்டி என் தந்தை என் வாழ்வைப் பாலைவனமாக்கினாரோ, அதே விஷக் கிண்ணத்தினிடம் தஞ்சம் புக முடிவு செய்துவிட்டேன். ஆம், நஞ்சுண்டு இறக்க நிச்சயித்து விட்டேன். இக்கடிதம் தங்கள் கையில் சேர்வதற்கும் ஆவி உடலை விட்டுப் பிரிவதற்கும் சரியாகவிருக்கும்.

என் நெஞ்சம்—பேதைப்பெண்ணின் நெஞ்சம்—இந்தக் கடைசி நேரத்திலும் தங்கள் முகத்தை ஒருமுறை காணத் துடியாய்த் துடிக்கிறது.

கண்ணின் ஒளியே, நான் பிரிகிறேன். நான் அபலை, அதனை மட்டும் தாங்கள் நம்புங்கள் அத்தான்; அது

போதும் எனக்கு. என்னைத் தாங்கள் உதாசீனம் செய்து விட்ட போதிலும் தங்களிடம் நான் கொண்டுள்ள ஆசையில் அணுவளவும் குறையவில்லை. விஷமருந்தி என் வாய் ரத்தத்தைக் கக்கும்போதும் அத்தான் அத்தான் என்று சொல்லிக் கொண்டேதான் இருக்கும். ஓவியம் உயிர் பெற்றுலாவுவதைப் போல என் உள்ளத்தில் உலாவிக் கொண்டிருக்கும் தங்கள் திரு உருவை மனக் கண்முன் கண்டு ரசித்துக்கொண்டேதான் என் உயிர் பிரியும்.

எழுத கை நடுங்குகிறது. நினைவு தடுமாறுகிறது. தாங்களும் தங்கை வேணியும் ஒன்றாக நன்றாக வாழ்ந்திருங்கள்! வேணிக்கு என் ஆசி! தங்களுக்கு என் கடைசி வணக்கம்!

கனவிலும்—நினைவிலும்
தங்களை மறவாத
குமுதம்.

குமுதத்தின் பிளந்த இதயத்திலிருந்து கொட்டிய இந்த இரத்தத்துளிகளைக் கண்டதும், குமாரின் கண்களிலிருந்து இரத்தக் கண்ணீர் தாரை தாரையாக வழிந்தோடியது! தூரத்திலிருந்த தன் தீட்டிய பயங்கரமான ஓவியத்தை எட்டி எடுத்தான், கொட்டும் கண்ணீரைத் துடைத்துக் கொண்டு, உள்ளத்தை வேதனை கசக்க, உடல்தளர்ந்து தட்டுத் தடுமாறிக் கீழே உட்கார்ந்தான்.

சோர்ந்து அமர்ந்தவனின் கண்கள் அச்சித்திரத்தைக் கூர்ந்து கவனித்தன!..........சூறாவளியின் கோரத்தாண்டவத்தால் பொங்கியெழும் பெரும் பெரும் அலைகள்! மலையென உயர்ந்தெழுந்து வீழ்ந்த அலைகளின் கொடூரக் கொந்தளிப்பில் சிக்கி உயிருக்காகப் போராடிக் கொண்டிருந்த இளம்பெண்!..........ஓவியத்தின் இப்பகுதியைக் கலைஞ

ளின் விழிகள் மிரள மிரளப் பார்த்தன. "குமு—தம்! குமு—தம்—! துரோ—கி." என வார்த்தைகள் உடைந்து சிதறி இவன் உதடுகளிலிருந்து நழுவிக் கீழே உதிர்ந்தன!

வேல்விழிகளில் கசிந்து ஓடிக்கொண்டிருந்த கண்ணீரைப் பொன் விரல்களால் துடைத்துக்கொண்டு வண்ண இதழ் திறந்து "அத்தான்" என்றாள், தழ தழத்த குரலில் வேணி. ஏக்கத்தோடு தையலைத் தலைநிமிர்ந்து நோக்கினான், குமார். குமுதம்—வேணி இரு உருவங்கள் ஒன்றோடு ஒன்று மோதி மோதிப் போரிட்டுக்கொண்டிருந்தன, குமாரின் உள்ளத்தில்! குமுதம்—வேணி இரு பெண்களில் எவள் வேண்டும்?—அதுதான் அவனால் முடிவு செய்ய முடியவில்லை. பற்களைக்கடித்துக் கொண்டு தலையை இப்படியும் அப்படியும் அசைத்துப்பார்த்தான்! இருவரில் எவளையும் விட அவன் மனம் ஒப்பவில்லை, சகிக்கவில்லை! வெளியில் சோவென மழை விடாது பெய்துகொண்டிருந்தது! வானத்திலிருந்து பொழிந்த தண்ணீர் அதிகமா? அவன் கண்களிலிருந்து கொட்டிய கண்ணீர் அதிகமா? சொல்ல முடியாது. புயலில் சிக்கி, நிலைதடுமாறி அழிவு நோக்கி அந்நேரத்தில், நகர்ந்து கொண்டிருந்தது உலகம்! மனப்புயலில் சிக்கி, தெளிவு இழந்து குழப்பமடைந்து, பயங்கரமான படு பாதாளத்தில் வீழ்ந்து கொண்டிருந்தான் குமார்!

"உன்னிடம் இன்பம் பெற்று, இயற்கை தேவியின் திருநடனத்தால் நிகழ்ந்து விட்ட சிலநிகழ்ச்சிகளால் துன்பமடைந்து, உன் சஞ்சல மனமறிந்து உள்ளம் உடைந்து பாழும் விஷம் அருந்தி ஆவி நீக்கப்போகும் அபலை குமுதம் தேவையா, அமைதியான கன்னி உள்ளத்தில் நீ காதல் விதை தூவ, பெண்மை எனும் உரத்தையும் இளமை எனும் நீரையும் அன்பு எனும் சூரிய ஒளியையும் துணை

கொண்டு அது முளைத்துச் செடியாகிக் கனியாகும் நேரத்தில், உரிமையோடு அதனை உண்டு சுவைத்து இன்புற, கொடிபோல் இதோ நிற்கும் இளங்குமரி, வேணி வேண்டுமா?''—அவன் மனத்திலெழுந்த புயலோடு புயலாக இந்தக் கேள்வி ஒலியும் திரும்பத் திரும்ப இடி இடித்தாற் போல் அதிகக் கூச்சலிட்டு எழுந்தது!

“அத்தான்?” வேணி அழைத்தாள். நீர் நிறைந்த கண்களால்; கூர்வேல்விழியாளைப் பார்த்தான்.

“என்ன யோசிக்கிறீர்கள் இன்னும்?'

“மனப்புயல்!”—மெள்ள கூறினான்.

“மனப்புயல்!”—ஆத்திரத்தோடு கேட்டாள்.

“குமுதம்—வேணி!' முணு முணுத்தான்.

“வேணி இறந்துவிட்டாள்! குமுதம் இறந்துகொண்டிருக்கிறாள்! அவளைத்தான் தாங்கள் காப்பாற்ற வேண்டும்! அதுதான் தங்கள் கடமை!”

“கண்ணே..............”

“நான் கன்னி! என் வாழ்நாள் முழுவதும் கன்னி! கன்னி நிலையிலிருந்து தங்கள் கண்மணி நிலைக்குப் பறந்து உயரவேண்டுமென்ற என் ஆசைப் பறவையின் சிறகுகள் ஓடிந்துவிட்டன. அத்தான்! ஒருத்தியின் வாழ்வைப் பாழாக்கி, உள்ளத்தில் இடிவிழச் செய்து அதனால் கிடைக்கும் அற்பமான அந்த இன்ப வாழ்வு எனக்கு வேண்டாம்! நான் கண்ட இன்பக் கனவுகள் கலைந்துவிட்டன! நான் கட்டிய மனக்கோட்டைகள் சரிந்துவிட்டன! தீட்டிய எதிர்காலத் திட்டங்கள் மறைந்துவிட்டன! அத்தான், அதற்காக நான் வருந்துகிறேன். ஆனால் குமுதத்தின் வாட்டத்தைவிட இது அதிகமல்ல! நான் ஏக்கமடை

கிறேன், ஆனால் குமுதத்தின் ஏமாற்றத்தைவிட இது பெரிதல்ல!.....................'.

"கண்ணே!"

"வேண்டாம், வேண்டாம், இனி அன்போடு அழைக்கவேண்டாம்! என்னை அடையலாம் என்ற ஆசையும் இனிக் கொள்ளவேண்டாம்! கண்ணே என்று கனிவாகப் பேசி என் முடிவைக் கலைக்க வேண்டாம்! அத்தான், நான் வாழப் பிறந்தவள் அல்ல! என்னை மறந்துவிடுங்கள்! உயிரோடு போராடிக் கொண்டுள்ள அக்காவின் உயிரைக் காப்பாற்றி அவளை ஏற்று, என் மேல் ஏற்பட்டுள்ள பழிச் சொல்லைத் துடைத்து விடுங்கள்! அத்தான், அத்தான், இன்னுமென்ன தாமதம்? புறப்படுங்கள் மலர்புரிக்கு!"

"இந்நேரம் குமுதம்........"

"தாங்கள் நினைப்பது தவறு! குமுதம் இறந்திருக்க மாட்டாள்............என் நெஞ்சம்—பேதைப் பெண்ணின் நெஞ்சம்—இந்தக் கடைசி நேரத்திலும் தங்கள் முகத்தை ஒருமுறை காணத் துடியாய்த் துடிக்கிறது!"........என்று குமுதம் எழுதியிருப்பதிலிருந்து அவள் இறப்பதற்கு முன் தங்களை ஒரு முறையாகிலும் பார்க்க வேண்டுமென்ற ஆசையை மிக அதிகமாகக் கொண்டிருக்கிறாள், என்பது தெரியவருகிறது. இறப்பதானாலும் தங்களைப் பார்த்து விட்டுத்தான் இறப்பாள்! அதற்குத் தாங்கள் தடையாக இருக்கக்கூடாது! மலர்புரிக்குப் புறப்படுங்கள்! புறப்படுங்கள்!" என்று அவசர அவசரமாகக் கண்ணில் நீர் ஒழுக ஒழுகக் கூறினாள் வேணி!

குமார் எழுந்தான்! அறையைவிட்டு வெளியே வந்தான்! தெருக்கதவைத் திறந்தான்! வேகமாக மழை

யில் புகுந்து பைத்தியம் பிடித்தவனைப்போல் ஓடினான்! வாயிற்படியில் சோகமே உருக்கொண்டதுபோல வேணி நின்றுவிட்டாள்! எதுவும் சொல்லாது எங்கே குமார் போகிறான் என்றெண்ணி ஒன்றும் புரியாது அழுதாள்!

சிறிது நேரத்தில் காளிமுத்துவை அழைத்துக் கொண்டு அவர் வருவதைக் கண்டதும், குழம்பிய அவள் உள்ளத்திலும் சிறிது மகிழ்ச்சி உண்டாயிற்று. குமாரின் முகம் பார்ப்பதற்கே மிகவும் பயங்கரமாக விருந்தது. வாயிற்படியில் ஏறியதும் அவன் சோர்ந்து சுயநினைவு அற்று விழுந்துவிட்டான். வேணி கதறினாள். என்ன ஆபத்து இனி நேர இருக்கிறதோ என்றெண்ணி நடுநடுங்கினாள்! காளிமுத்து உள்ளே ஓடித் தண்ணீர் கொண்டுவந்து நனைந்திருந்த அவன் முகத்தில் மேலும் தெளித்தாள். குமார் கண்களைத் திறந்து பார்த்துவிட்டுத் திரும்பவும் மூடிக்கொண்டான்.

"காளிமுத்து, என்ன கூறி உன்னை இங்கு அழைத்துக்கொண்டு வந்தார்?"

"ஓடிவா காளிமுத்து என்று கூறினார் அம்மா! நான் அவர் பின்னாடியே ஓடோடியும் வந்தேன்! அவ்வளவு தான்!"

வேணி யோசனை செய்தாள். "ஆமாம், அதற்காகத் தான் இவனை அழைத்துக்கொண்டு வந்திருப்பார்" என்று தனக்குத்தானே கூறிக்கொண்டாள்.

"காளிமுத்து! சிங்கார......நகருக்குச் சென்று உடனே ஒரு வாடகைக் காரை அழைத்துக்கொண்டுவா! இப்போதே மலர்புரிக்குப் புறப்படவேண்டும்! வேகமாக ஓடு! மிக விரைவாகத் திரும்பிவா! புறப்படு' என்று வேணி கூறியதும், காளிமுத்து கொட்டும் மழையில் நனைந்து கொண்டே ஓடினான்.

சிங்கார நகரிலிருந்து சிறியதான ஒரு கார் வேணியின் வீட்டின்முன் வந்து நின்றது! காளிமுத்து உள்ளே சென்றான்.

"காளிமுத்து! அத்தானை மெதுவாகத் தூக்கிக்கொண்டுபோய் காரில் படுக்கவை! இதோ நானும் வந்துவிடுகிறேன்" என்று வேணி கூறியதும், காளிமுத்து கட்டிலில் சோர்ந்து படுத்துக்கொண்டிருந்த குமாரைத் தூக்கப்போனான்.

"காளி! என் மயக்கம் தெளிந்துவிட்டது! நடந்தே வருகிறேன்!" என்று குமார் கூறிக்கொண்டே தள்ளாடித் தள்ளாடி நடந்து காரில் ஏறினான். வேணியும் ஏறினாள்! கார் காற்று வேகத்தில் பறந்தது! அன்று மாலை மலர் புரியை அடைந்தது!

படுத்த படுக்கையாகக் கட்டிலில் கிடந்தாள் குமுதம். அவளருகே நீர் ஒழுகும் கண்களோடும், தேம்பும் குரலொலியோடும் வையாபுரி நின்றுகொண்டிருந்தார். வைத்தியர்கள் தங்களாலான சிகிச்சைகளைச் செய்துகொண்டிருந்தார்கள். விஷமும் வேகமாக அவள் உடலில் வேலை செய்துகொண்டிருந்தது!

"குமுதம்! குமுதம்!" என்று துக்கம் நிறைந்த குரலில் அழைத்துக்கொண்டே குமார் ஓடோடியும் அறையினுள் வந்தான். குமுதமிருந்த கோரமான நிலையைக் கண்டதும் கோவெனக் கதறி அழுதான். வேணியும் தேம்பி அழுதாள். குமுதம் கண்களை மூடிக்கொண்டே இருந்தாள்!

"குமுதம்! குமுதம்! உன் அத்தான் வந்திருக்கிறேனே! என்னைப்பார்! கண்ணே! ஒரு தரம் கண்திறந்து பார்! இந்த வஞ்சகனின் முகத்தில் விழிக்கக் கூடா

தென்று இறுக உன் இரு கண்களையும் மூடிக்கொண்டாயா? அய்யோ!" என்று குமார் தேம்பித் தேம்பி அழுதுகொண்டே கூறினான்.

குமுதம் மெதுவாகக் கண்களைத் திறந்து பார்த்தாள். "வந்துவிட்டீர்களா, அத்தான்?" என்று ஈனக்குரலால் ஆவலோடு அழைத்தாள். அவள் கண்களில் கண்ணீர் நிறைந்தது. அதனை அன்போடு வேணி துடைத்தாள்.

"ஆமாம்! ஆமாம்! வந்துவிட்டேன்! குமுதம், உன் அன்பின் உயர்வை அறியாமல் போன அற்பன் நான்! காதலின் புனிதத் தன்மையை அறியத் தவறிய கசடன்!"

"வேண்டாம் அத்தான்!.........அத்தான், என்னை நம்புங்கள், அபலை!"

"உண்மை, உண்மை, முற்றும் உண்மை, நீ அபலைதான்! தூய உன் உள்ளத்தைப் புண்படுத்திய நானே மோசக்காரன்! நானே துரோகி!.............

"நான் அபலை என்றீர், அதுபோதும் என் மன ஆறுதலுக்கு! இப்பொழுதுதான் அத்தான் என் மனப் புயல் ஓய்ந்து மனத்தென்றல் வீசுகிறது......."

"என் மனப்புயல் தணியவில்லையே கண்ணே!........"

"அத்தான், இவள் வேணியா?"

"ஆமாம், அக்கா, நான்தான் வேணி! உங்கள் காதலை வெட்டிப் பிரிக்கவந்த காதகி........"

"அல்ல! நீயல்ல வெட்டிப்பிரித்தது.......வேணி! அத்தானை நீ மணந்து......" இதற்குமேல் குமுதம் பேச முடியாமல் தத்தளித்தாள்! அவள் நாகுளறியது! கண்கள் மூடிக்கொண்டன! வாயினின்றும் குபுகுபுவென இரத்தம் வெளியே கொட்டியது! உதடுகள் "அத்தான்

அத்தான்" என்று இரண்டு முறை முணுமுணுத்துவிட்டு அசைவற்று நின்றுவிட்டன! "குமுதம் குமுதம்" என்று தலையில் அடித்துக்கொண்டு கதறினர் வையாபுரி!

"அய்யோ! அய்யோ! கண்ணே! கண்ணே!" என்று கதறி அழுதான் குமார்! "அக்கா அக்கா" என்று தேம்பித் தேம்பி அழுதாள் வேணி!

இரவு! உலகை இருள் கவ்விக்கொண்டிருந்தது! அறையில் குமுதத்தின் பிணம் கிடந்தது! அறையைவிட்டுத் துக்கம் தாங்கமாட்டாது வெளியில் சென்றான் குமார். தேம்பும் குரலில் அத்தான் என்று அழைத்துக்கொண்டே பின்தொடர்ந்தாள் வேணி!

"மனப்புயல்! மனப்புயல்!" என்று வாய்விட்டு வெறுப்பும் மிதமிஞ்சிய சோகமும் கலந்த குரலில் குமார் கூறினன். கால் சிலம்பும் சோகத்துடன் ஒலிக்க, கன்னி அருகில் சென்றாள்.

"ஆசைக் குமுதத்தைக் கொன்றேனே பாவி!"— கவலை தோய்ந்த அவன் நெஞ்சிலிருந்து வெளிவந்த வார்த்தைகள் இவை.

"அத்தான்! அக்காவைக் கொன்றது நீங்களல்ல, நான்!"—வேணி கூறினள் மெதுவான குரலில்.

"வேணி!"

"அத்தான்!"

"குமுதம் மட்டும் செத்துப் போகவில்லை வேணி, நானும்தான் செத்துவிட்டேன்......"

"அத்தான்! நான்மட்டுமென்ன வாழ்கிறேன் என்று எண்ணிக்கொண்டிருக்கிறீர்கள்! அக்காவின் கடிதத்தைப் பார்த்தபோதே என் வாழ்வு செத்துப் போய்விட்டதே!"

பதில் கூறவில்லை குமார். என்ன இருக்கிறது கூற!